1915-17.



# அர்ச். அந்தோனியார் தூதன்.

# THE ST. ANTHONY'S MESSENGER.

OF THE REGISTRAR OF ... 21 JUL 1915 MADRAS.

நம்பர் 6. FIDES AC ROBUR. 1—7—1915.

## 1. Catholic Attitude.

## கத்தோலிக்க நிலைமை.

வன் தன்னை கத்தோலிக்கனென்று சொல்லிக்கொள்ளுகிறானோ அவன் தனக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் எப்போதும் மற்றவர்களுடைய பரிசோதனையிலிருக்கிறான். தங்கள் மதக்கொள்கைகளின் பிரகாரம் நடக்கிறதற்கு சற்றாவது முயற்சியெடுத்துக் கொள்ளுகிறார்களாவென்று கத்தோலிக்கரை உலகம் நுண்மையோடு கவனிக்கிறது. ஒரு வஞ்சகன், அதாவது தான் தன்னை அறிக்கையிட்டுக்கொள்வதுபோல் ஒழுகாதவன் சகலராலும் இகழப்படுவான்.

உலகத்தார் முன்பாக நாம் நம்மை கத்தோலிக்கராகக் காட்டிக்கொள்ள வேண்டும். கத்தோலிக்க மதத்திற்கு நம் மனதையும், இருதயத்தையும், சரீரத்தையும், ஆத்துமத்தையும் சுதந்தரமாக்கிக் கொள்வதுதான் நிலைமை. ஆனால் ஒரு மதக்கொள்கையைப்பற்றி தர்க்கம் இருந்தாலோ நம்முடைய ஊக்கம் பொறுமையுள்ளதாயிருந்தாலும் பயமற்றதாயும், அன்புள்ளதாயிருந்தாலும் இணக்கமற்றதாயும் இருக்கவேண்டியது.

இம்மாதிரி கத்தோலிக்க நிலைமை அனுசரித்து வரும் மனிதனாவது ஸ்திரீயாவது, உலகத்தில் தங்கள் மதத்தை வார்த்தைகளால் மாத்திரமல்ல, தங்கள் அனுதின நடபடிக்கைகளாலும் அனுஷ்டித்துக் காட்டுகிறார்கள். அப்பேர்ப்பட்ட மனிதனாவது ஸ்திரீயாவது கோவிலில் மாத்திரமல்ல, வீட்டிலும், உத்தியோகசாலையிலும், தெருவிலும், பொதுக்கூட்டங்களிலும், அதாவது, எப்பொழுதும் எவ்விடத்திலும் கத்தோலிக்கராக காட்டிக்கொள்ளுகிறார்கள்.

தொழிலாளியாவது, குமாஸ்தாவாவது, ஆயாளாவது, தனி வீட்டு வேலைக்காரனாவது, அடக்கமுள்ளதும் ஆனால் நிர்ணயித்ததுமான கத்தோலிக்க நிலைமையை அனுசரித்தால், சீக்கிரத்தில் சகலரும் அப்பேர்ப்பட்டவன் கபடமற்ற மெய்யான கத்தோலிக்கனென்று அறிவார்கள்.

உண்மையான இருதயத்தையுடைய ஒரு கத்தோலிக்கனைச் சூழ்ந்திருக்கும் பரிசுத்ததன்மையானது அயலாருக்கு அந்த மதத்தை விளம்பத்தகும் ஓர் மேலான சாதுரியத்தை உடையதாயிருக்கிறது. (தூதன்.)

162003



## 2. Dare to be a Daniel.

### தனியேலைப்போல் துணிவுள்ளவனாயிரு.

ஒருகாலத்தில் ஒரு சிறிய பையன் இருந்தான். அவனுடைய பெற்றோர் தங்கள் வேதகற்பனைகளின் ஒழுக்கத்தை எவ்வளவுக்கு மறந்திருந்தார்களென்றால் அவர்கள் சகல நாட்களிலும் மாமிசம் உபயோகித்து வந்தார்கள். ஒருநாள் அச்சிறுவன் ஞானோபதேசக்கூடத்தில் குருவானவர் சொன்ன புத்திமதிகளைக் கேட்டு சுத்தபோசன நாட்களை எவ்விதத்திலாவது அனுசரிக்கவேண்டும் என்று தீர்மானித்தான். அடுத்த வெள்ளிக்கிழமை வழக்கம்போல் வீட்டில் பிரதான போசனத்திற்கு மாமிசத்தைத் தவிர வேறொன்றுமில்லை. பையனோவெனில் திருச்சபை, வெள்ளிக்கிழமைகளில் மாமிச உபயோகத்தை விலக்கியிருப்பதால் தான் மாமிசம் சாப்பிடாதபடி மன்னிக்கக் கெஞ்சினான். மேலும் தான் மரக்கறிகளையும் ரொட்டியையும் மாத்திரம் சாப்பிடுவதாகவும் சொன்னான். அவன் தகப்பனார் மிகவும் கோபித்துக்கொண்டு அவனை பந்தியிலிருந்து அப்புறப்படுத்தி ஒரு தனி அறையில் விட்டுச் சாத்தி மறுநாள் வரையிலும் பட்டினியாயிருக்கும்படி கண்டித்துவிட்டார். சிறுவனும் முணுமுணுக்காமல் தகப்பன் சித்தத்துக் கமைந்தான். அன்று சாயந்திரம் மகன் அவஸ்தையைப் பொறுக்கமாட்டாமல் அவன் தாய் கொஞ்சம் ஆகாரம் கொண்டு வந்தாள். ஆனால் பையனோ, தன் தகப்பனார் தன்னை மறுதினம் வரையிலும் பட்டினியாயிருக்கும்படி கண்டித்திருப்பதாலும் தான் அவ்விஷயத்தில் பாவமில்லாமல் அவருக்குக் கீழ்ப்படியக் கூடியாதலாலும், தாய் தயவுடன் கொண்டுவந்ததை சாப்பிட மனமில்லையென்று சொல்லிவிட்டான். தாய் மிகவும் மனமுருகி கணவனிடம் போய் நடந்தவற்றைச் சொன்னாள். இருவரும் இதனால் மிகவும் ஆச்சரியப்பட்டு தங்கள் பிள்ளையின் நடக்கையினால் படிப்பினையடைந்து உத்தம கிறீஸ்துவர்களாகி அது துவக்கி திருச்சபை கற்பனைப்பிரகாரம் சுத்தபோசன நாட்களை அனுசரித்து வந்தார்கள். (ஞானி.)

## 3. Our Church News.

### நமது கோவில் வர்த்தமானம்.

திவ்விய நற்கருணைத் திருநாள் ஜூன்-மீ 6-உ ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது. அன்று பகல் முழுவதும் பரிசுத்த நற்கருணையை விசுவாசிகள் ஆராதிக்கும்படி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சாயந்திரம் பரலோக அரசரின் விஜய சுற்றுப்பிரகாரம் அநேகரால் சூழப்பட்டு மிகப் பத்தி வினயத்துடனும், மெச்சத்தகும் ஆடம்பரத்துடனும் நடைபெற்றது.

ஆனாலும் அப்படி திவ்வியநற்கருணை ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நாட்களில் பரிசுத்த பரம நற்கருணை சந்திப்பிற்கு விசுவாசிகள் இன்னும் அநேகர் வரவேண்டுமென்று விரும்புகிறோம். "என்ன? என்னோடு உங்களால் ஒரு மணிநேரம் விழித்திருக்கக்கூடவில்லையா?" என்று ஒலிவெத் தோட்டத்தில் தமது அப்போஸ்தலர்களுக்கும் நம் ஆண்டவர் கூறிய குறை வெகுபேருக்குச் செல்லும்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை அர்ச். அந்தோனியார் உற்சவமும் சரிசமான ஆடம்பரத்துடன் நிறைபெற்றது. கடலூர் அர்ச். சூசையப்பர் கலாசாலை தலைவ



ராகிய சங். வெர்ஜூர் சாமியார் பாட்டுப்பூசை நடத்தினார். அவருக்கு சங். பிளேஸ் சாமியார் டீக்கனாகவும், சங். நோயேல் சாமியார் சப் டீக்கனாகவும் உதவிபுரிந்தார்கள். பூசைக்குப்பிறகு சங். லெஸ்போன் சாமியார் அர்ச். அந்தோனியார்பேரில் நேர்த்தியாக பிரசங்கித்தார். சாயந்திர சுற்றுப்பிரகாரத்தை திரளான ஜனங்கள் தொடர்ந்து சென்றனர். இங்கேயும் சுற்றுப்பிரகாரத்தின்போது இன்னும் ஒழுங்கு இருப்பது நலமென்று தெரிவிக்கிறோம். சிறுவர்களும், ஸ்திரீபுமான்களும் சுற்றுப்பிரகாரத்தின்போது தனித்தனியாயும், ஒழுங்குடனும், மௌனத்துடனும், ஜெபம் செய்துகொண்டும் செல்வது உத்தமம்.

## 4. An appeal from the Sister of the King of Belgium.

### பெல்ஜிய நாட்டரசரின் சகோதரியிடமிருந்து ஓர் விண்ணப்பம்.

பின்வரும் விண்ணப்பம் நமக்கு கோயம்புத்தூர் மேற்றிராணியாராண்டவரால் அறிவிக்கப்பட்டது:—

"தற்கால யுத்தத்தின் கொடூரங்களினாலும் பெல்ஜியநாடு முழுவதையும் எதிரியின் ராணுவங்கள் கைப்பற்றிக்கொண்டதாலும், தேசமானது மனதை புண்படுத்தத்தக்க நிர்ப்பாக்கிய அந்தஸ்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. முன்னம் அதிக வளம்பொருந்தியிருந்த நாடு, நகரம், தேவாலயங்களெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டும் போயின. சகலரும் தங்கள் ஜீவனம்சத்திற்கு வேண்டியவைகளை இழந்து தவிக்கிறார்கள்.

அவ்வளவு கொடிய ஸ்திதியிலிருக்கும் அவர்களுக்கு சற்றே சகாயம் அருளும்பொருட்டு பெல்ஜியதேசத்தரசரின் சகோதரியாகிய நான் கர்தினால் மெர்சியர் பேராலும், நம்முடைய மேற்றிராணிமார்களின் பேராலும் உம்மை மிக்க ஆவலுடன் உம்முடைய மேற்றிராசனக் கோவில்களில் கத்தோலிக்க பெல்ஜியத்திற்காக ஓர் தண்டல் செய்யும்படி பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்."

ஹென்ரியேத்,
வெண்டோம் நாட்டு டச்செஸ்.

அத்துடன் நம் ஆண்டவர் கூறுவது: உம்முடைய பங்கினர்கள் தற்பொழுது நிர்ப்பாக்கிய அந்தஸ்திலிருக்கும் தங்கள் உபகாரிகளாகிய சிலருக்கு நன்றியறிதலையும் தங்கள் உதாரகுணத்தையும் காட்ட இச்சமயத்தை உதவிக்கொள்வார்களென்று நாம் நிச்சயமாய் எண்ணியிருக்கிறோம்.

## 5. What is the use of going to Confession?

### பாவசங்கீர்த்தனம் செய்வதனால் பிரயோஜனம் என்ன?

ஒருநாள் கத்தரீனாளுக்கும் மார்கரீத்துக்கும் நடந்த சம்பாஷணை:—

கத்தரீனாள்: "பாவசங்கீர்த்தனத்திற்குப் போவதனால் என்ன பிரயோசனம்? தெரசாளைப்பார்! அவள் வாரத்துக்கு ஒருவிசை பாவசங்கீர்த்தனம் செய்கிறாள். அதனால் அவள் உத்தமியாகிவிடவில்லை. புறத்தியாரைப்பற்றி எப்போதும் அவள் அவதூறாய்த்தான் பேசுகிறாள். மேலும் அவள் கோபக்காரியாகவே தானிருக்கிறாள்.

மார்கரீத்: "சில வாரங்களுக்கு முன்பாக நீ வைத்தியனிடம் போகவில்லையா? சொல்!"

கத்தரீனாள்: "ஆம்! நான் போனேன். ஏனிந்தக் கேள்வி"

மார்கரீத்: "ஆயினும் நீ தலைவலியாலும் வாதரோகத்தாலும் உபத்திரவப்படுவதில்லையா?"

கத்தரீனாள்: "ஐயோ! ஆம் நான் அடிக்கடி வைத்தியனிடம் போனபோதிலும் இன்னும் அவஸ்தைப்படுகிறேன்."

மார்கரீத்: "சரி, இதோ! பிரிய தோழி! நீ உன்னுடைய பல வியாதிகளைத் தொலைப்பதற்கும், அல்லது அவைகளினின்று கொஞ்சம் சுகமாவது அடைவதற்கும் வைத்தியனை நாடி அடிக்கடி போவதுபோலவே, தங்கள் ஆத்துமக்கறைக உணர்வோர்கள் தங்களை திருத்திக்கொள்ளும் பொருட்டும், தங்கள் குறைக போக்கிக்கொள்ளும்பொருட்டும் பாவசங்கீர்த்தனத்திற்குச் செல்லுகிறார்கள்."

## 6. Little Chronicle of the Parish.
## இப்பங்கின் சரித்திரச் சுருக்கம். (தொடர்ச்சி.)

1870-ம் வருஷம் ஜூன்-மீ அவ்வளவு நாளாய் ஆசிக்கப்பட்ட பள்ளிக்கூ ஒன்று ஏற்படுத்தப்பட்டது. முதல் 15 நாட்களில் 25 மாணாக்கர் சேர்ந்தார் இரண்டு மாதங்களுக்குள் மாணாக்கர் தொகை இரட்டித்தது அதன் பிறகு ஒரு உ தியாயர் போதாமையாயிருந்தபடியால் பங்குசுவாமியார் கொஞ்சம் படித்தி தன் வேலைக்காரனையே உதவி உபாத்தியாயராக நியமித்தார்.

1873-ம் வருஷத்தில் பள்ளிக்கூடத்தில் 80 மாணாக்கர்களாயிருக்கும்போ அக்காலத்தில் கோயம்புத்தூர் மேற்றிராணியாராயிருந்த, தெப்போமியோ ஆண்ட வர் அனுமதியின் பேரில் 10 ரூபாய் சம்பளத்தில் இன்னமொரு உபாத்தியாயர் வைக்கப்பட்டார்.

அப்பொழுது பள்ளிக்கூடம் கத்தோலிக்கர், பதிதர், இதர மதஸ்தராகிய சகலராலும் நன்கு மதிக்கப்படத் துவக்கிற்று.

## 7. St. Anthony's Church Calendar.
## அர்ச். அந்தோனியார் கோவில் பஞ்சாங்கம்.

1915-ம் வருஷம் ஜூலை-மீ.

2-ம் தேதி மாதத்தின் வெள்ளிக்கிழமையும், தேவமாதா அர்ச். எலிசபெத்தம்மாளை மினவிக்கொண்ட திருநாளும். சாயந்திரம் 5½ மணிக்கு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்.

16-ம் தேதி வெள்ளிக்கிழமை உத்தரீயமாதாத் திருநாள். பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

**முக்கிய கவனிப்பு**:—கர்மேல் மாதா உத்தரீயச் சபையில் சேர விரும்புவோர்கள் திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்திற்குப் பின் சேரலாம்.

L. BECHU,
*Paris Priest*
St. Anthony's Church, Coonoor.

*Imprimatur*
† AUGUSTIN,
*Bishop of Coimbatore*

St. Joseph's Industrial School Press, Trichinopoly.






# அர்ச். அந்தோனியார் தூதன்.
# THE ST. ANTHONY'S MESSENGER.

நம்பர் 7. FIDES AC ROBUR. 1—8—1915.


## 1. The sins of the tongue.
## நாவினால் செய்யும் பாவங்கள்.

வேத வாக்கியத்தில் பாம்புகளின் வாயிலிருந்து விஷம் கக்கப்படுவது போலவே மனிதர் வாயிலிருந்தும் விஷம் வெளிப்படுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி பாம்புகளின் விஷம் தேகத்தைச் சேதமாக்குகிறதோ அதே மாதிரியாக நாவிலிருந்து வரும் விஷம் மனிதர் ஆத்துமத்தை பங்கப்படுத்துகிறது.

அசுசியான வார்த்தை கெட்ட இருதயத்தைக் காண்பிப்பதால் அதைச் சொல்லுவோருக்கு அபகீர்த்தியை உண்டாக்கும். "மனது எப்படியோ அப்படியே வார்த்தைகளும்." —அசுத்த இருதயமானது விஷ வாய்வுக்கள் எழும்பும்படியான சதுப்புநிலம் என்று சொல்லலாம்.

மற்றவர்கள் அடாதது என்று நினைக்கும்பொழுதுகூட, அப்பேர்ப்பட்ட கெட்ட சமாச்சாரங்களைப்பற்றி பேசுவது தங்களுக்கு ஓர் பெருமையென்று எண்ணுகிறார்கள் சிலர். கெட்ட சமாச்சாரங்களைப்பற்றி பேசாவிட்டால் தங்கள் சம்பாஷணையில் மகிழ்ச்சி அடையக்கூடாது என்று நினைக்கிறவர்களும் சிலருண்டு. சிலருக்கு கெட்ட பேச்சு பேசுவது எவ்வளவு சகஜமாகி விடுகிறதென்றால் அவர்களுக்கு அது தங்கள் தாய்ப்பாஷையைப்போலாகிவிடுகிறது. நீங்கள் வீதியில் போம்போது அவ்வழி செல்லுவோர்கள் தமிழாவது, மலையாளமாவது, ஆங்கிலமாவது, பிராஞ்சுப் பாஷையாவது பேசுவதைக் கேட்கும்போது அப்பாஷைகள் எந்த நாடுகளில் பொதுவென்று நினைப்பூட்டப்படுகிறீர்கள். அசங்கிதமான பாஷை எந்த ஸ்தலத்திலிருந்து உண்டாகிறது? நரகமே அதற்கு உற்பத்தி ஸ்தானம். ஆம், ஆகாதபேச்சு, சாபமிடுதல், ஆணையிடுதல், அபதூறு பேசுதல் இவையெல்லாம் நரகத்திலிருந்தே இயல்பாக புறப்படுகின்றன.

சந்தேகமில்லாமல் நரக வேதனையும், உத்தரிப்பு ஸ்தலத்தில் பாவ நிவிர்த்திக்காகப் படும் ஆக்கினைகளும், பெரும்பாலும் நாவினால் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்காகவே அனுபவிக்கிறார்கள். (தூதன்.)

## 2. Great things have small beginnings.
## அற்பமாய்த் துவக்கி பிரமாதமாய் முடிதல்.

ஒரு குடியானவன் தன் கொல்லைப்புறத்தில் ஆடுமாடுகளையும், கோழிகளையும் அடைத்து வைத்திருந்தான். அந்த கொல்லைக் கதவின் தாழ்ப்பாள் கெட்டுப்போயிருந்ததால் எப்போதும் திறந்தே கிடந்தது. சிறிது பணம் செலவு

செய்து அந்த தாழ்ப்பாளைச் சரிப்படுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாததால் அநேகம் கோழிகள் திருட்டுப்போயின. ஒருநாள் மாலைப்பொழுதில் ஒரு கொழுத்த பன்றி காணமற் போய்விட்டது. உடனே உடமைக்காரன், தன் தோட்டக்காரன், சமையல்காரன், சமையல்காரி சகிதமாய் காணமற்போன பன்றியை தேடச்சென்றான். தோட்டக்காரன் முதலில் பன்றியைக் கண்டு அதன் ஓட்டத்தைத் தடுப்பதற்காக ஒரு பாறையின்மீது குதித்தான். கால் சுளுக்கிக்கொண்டது. இரண்டு வாரங்கள் படுக்கையில் கிடக்கவேண்டியதாயிற்று. சுயம்பாகி வீட்டுக்குத் திரும்பி வந்ததும் நெருப்பிற்கு முன்பாக உலரும்படியாக தொங்கவிடப்பட்டிருந்த துணிகள் வெந்து கரிந்துபோயிருந்ததையும், சமையல்காரி அவசரத்தில் ஆடுமாடுகளடைக்குமிடத்தை பூட்ட மறந்துவிட்டமையால் பசுக்களில் ஒன்று அறுத்துக்கொண்டு இங்குமங்குமாயோடி அதே கொட்டகையிலிருந்த ஒரு குதிரைக்குட்டியின் காலை மிதித்து முறித்துவிட்டதையும் கிலியுடன் கண்டார்கள். இந்த சேதங்களெல்லாம் ஒரு சிறிய தாழ்ப்பாளை சரிப்படுத்தாததால் விளைந்தன.

துர்ப்பழக்கங்களை, துவக்கத்திலேயே சீர்ப்படுத்தாவிட்டால், அதனால் விளையும் தீங்குகள் பயங்கரத்துக்குரியவையாயிருக்கும். (ஞானி.)

## 3. Losses through drinking.
## குடியினால் விளையும் கேடுகள்.

பாடல்.

குடியினால் விளையும் கொடுமையைக் கேளும்
நொடியினி லுங்கள் நினைவுகள் மாறும்
வேலையை நீங்கள் விரும்பிட மாட்டீர்
சாலவே யுங்கள் சக்தியும் குன்றும்
உடலதின் சுகமும் ஒழிந்துபோம் உண்மை
அடுத்தவர் மதியார் அன்புடன் பேணார்
பரகதி அடையும் பாக்கியம் ஒழியும்
நரகதி யாவும் நைந்துநீர் மெலிவீர்
வாழ்வது குன்றும் ஆத்துமம் மடிந்து
வீழ்வது நரகில் மேதினி யோரோ
குணங்களைக் கெடுக்கும் குடியினை விரும்பி
பணங்களைத் தந்தென் பலன்களை பெறுவீர்?

(நேசன்.)

## 4. A word of Pius X.
## பத்தாம் பத்திநாதரின் அமிர்த வாக்கு.

"நீங்கள் கோவில்களைக் கட்டலாம், பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தலாம். தியான ஒடுக்கங்களைத் தரலாம். ஆயினும் பிரதிவாதம், சுய எதிர்வாதம் இவற்றை ஒருங்கே பொருந்தியிருக்கும் உறுதியும் உண்மையுமுள்ள கத்தோலிக் நல்ல வாசகங்களைத் துணைக்கருவியாக உபயோகிக்க அறியாவிட்டால் உங்கள் வேலைகள், உங்கள் முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாகிவிடும்."

இதை நன்றாய் யூகித்தறிந்தே உதகமண்டல பங்கு சுவாமியாரான சங். சீ. பியோலி சுவாமியார், தமது உதவிக்குருவாகிய சங். கிரோஜாக் சுவாமியார் ஒத்தாசையினால் அர்ச். மரியாயின் நாமம் பூண்ட தேவாலயத்தில் கத்தோலிக் வாலி



பர் சங்கம் ஒன்று ஏற்படுத்தினார். விளையாட்டுச் சாமான்களும், பத்திரிகைகளும் புத்தகங்களும் நிறைந்துள்ள ஓர் வாசகசாலை (ரீடிங் ரூம்) உண்டாக்கினார். பூரண திருப்திகர விதமாய் சங்கம் ஒழுங்கேறிவருகிறது. மேற்படி சங்கம் அனுகூலத்துடனும் செழிப்புடனும் தழைத்தோங்க வேணுமென்பதே எமது விருப்பம். உற்சாகத்துடனுழைக்கும் சபை ஸ்தாபகர்களுக்கு எமது வாழ்த்துதலைக் கூறுகிறோம்.

## 5. Diocesan News.
## மேற்றிராசன வர்த்தமானம்.

கோயம்புத்தூர் மிஷன் புரோக்கியூரேட்டராயிருந்த சங். அ. பனேத் சுவாமியார் போர்முகம்செல்ல ஜூலை-மீ 1-உ கோயம்புத்தூரைவிட்டு புறப்பட்டார். கொளும்பில் ஜூலை-மீ 5உ கப்பலேறினார். கடவுள் அவரைக் காப்பாற்றி சீக்கிரத்தில் க்ஷேமத்துடன் திரும்பும்படி அருள்வாராக.

கோயம்புத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த பெலவேந்திரம், அம்புரோஸ், சவேரியார் ஆகிய மூன்று குருமடத்து வாலிபர், புதுச்சேரி பெரிய குருமடத்தில் (கிராண்டு செமினெரி) சேர்த்துக்கொள்ளப்பட்டார்களென்பதைக் கேள்வியுற்று சந்தோஷமடைகிறோம்.

ஸ்காட்லாந்து மிஷனைச் சேர்ந்த ஜீ. ஏ. பைரீ (G. A. Pirie) என்ற ஓர் ஐரோப்பிய கனவான் கத்தோலிக் திருச்சபையில் ஜூலை-மீ 1-உ ஏற்றுக்கொள்ளப்பட்டு, மறு ஞாயிற்றுக்கிழமை புது நன்மை வாங்கினார். அவர் சப்பலுத்தியோகஸ்தர். தன் ஆயுட் கடலில் இதுதான் மகா பெரிய சம்பவமென்றும், தன் வாழ்நாட்களில் மகா பாக்கியதினம் அதுதானென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்.

## 6. Why Rethinam was not Promoted?
## இரத்தினம் மேல் வகுப்புக்கு ஏன் அனுப்பப்படவில்லை?

விடுமுறைநாள் கழிந்து பாடசாலை திறக்கப்படும்போது இரத்தினத்தை உயர்தர வகுப்புக்கு அனுப்பவில்லை. அவன் தந்தை கோபாக்கிராந்தனாகி, உபாத்தியாயர்களை ஓரவஞ்சனையுள்ளவர்களென்றும், இன்னும் பலவிதமான வசைச்சொற்களையும் கூறினான். பிள்ளையின் தகப்பன் கூறின முறைப்பாட்டிற்கெல்லாம், தலைமை உபாத்தியாயர் பிரிதொன்றும் பதில் கூறாமல், ஒரு கட்டு கடுதாசித்துண்டுகளை எடுத்து அவனிடம் நீட்டினார். அவையெல்லாம் இரத்தினம் தன் தகப்பனாரிடமிருந்து பள்ளிக்கூடத்துக்கு வராச்சமயங்களில் மன்னிப்பு அடையும்படி வாங்கிவந்த விண்ணப்பங்களாயிருந்தன. அக்காகிதங்களில் சில பின்வருமாறு வரையப்பட்டிருந்தன. "தயவுசெய்து இரத்தினத்தை 3 மணிக்கு வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்." "தயவுசெய்து இரத்தினம் நேற்று பாடசாலைக்கு வாராததை க்ஷமித்தருளவும், நான் அவனை தையற்காரனிடம் கூட்டிச் சென்றிருந்தேன்; தயவுசெய்து இன்று காலை பள்ளிக்கு தாமதப்பட்டுப்போனதை மன்னிக்கவும்; நேற்று அவன் தன் பாட்டனாரிடம் போயிருந்தான்; காலையில் அதிக களைப்பு மீறியிருந்ததால் சற்று இளைப்பாறட்டுமென்றிருந்தேன்." இன்று இரத்தினம் பள்ளிக்கூடத்திற்கு வராததை மன்னித்துக்கொள்ளுங்கள்; நான் கடைக்குச் செல்லவேண்டியிருப்பதால், வீட்டில் கைக்குழந்தையை கவனித்துக்கொள்ளுகிறதற்காக அவனை நிறுத்திக்கொள்ளுகிறேன்." இதே மாதிரியாக சுமார் பத்து கடுதாசிகள் இருந்தன. இரண்டு மாதங்கள் இவ்வாறாக விழுங்கப்பட்டிருந்தன.

காலந்தவறாமல் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்கு வருவது எவ்வளவு மு கியமென்பது ஒவ்வொரு உபாத்தியாயரும் அறிந்த விஷயம். ஆனால் சில சமய களில் அறியாத்தனத்தாலாவது, அல்லது அசட்டையாலாவது, இவ்விஷயத்தி தாய் தந்தையர் பராமுகமாயிருப்பதால் பாடசாலையின் சத்துவத்தை குறைத் விடுகிறார்கள்.

பெற்றோரில் அனேகர் ஒழுங்குடன் செல்லுவதின் அவசியத்தை உணராத தால், தங்கள் பிள்ளைகள் பாடசாலையிலிருக்கும்போதும், மற்ற நாட்களிலும் மேன் மை அல்லது விர்த்தி அடைவதை பங்கப்படுத்திவிடுகிறார்கள்.

## 7. Terms for the Messenger.

### தூதனுக்குச் சந்தா விபரம்.

தபால் மார்க்கமாக வருஷம் ஒன்றுக்கு முன் பணமாக அணா 12.
நேரில் பெற்றுக்கொண்டால் வருஷம் ஒன்றுக்கு முன் பணமாக அணா 6.
நேரில் பெற்றுக்கொண்டால் பிரதி நம்பர் பைசா 6.

**முக்கிய கவனிப்பு:**--குன்னூர் பங்கினர்க்கும் நம் சிறிய தூதன் இலவசமாய் கொடுக்கப்படுகிறது.

தர்மசிந்தையுள்ள கனவான்களால் கொடுக்கப்படும் பொருளுதவியை நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்.

## St. Anthony's Church Calendar.

### அர்ச். அந்தோனியார் கோவில் பஞ்சாங்கம்.

1915-ம் ௵ ஆகஸ்டு-௴

6-௳ வெள்ளிக்கிழமை, முதல் வெள்ளி. இரண்டாவது பூசை 7 மணிக்கு; சாயந்திரம் 5½ மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

8-௳ ஞாயிற்றுக்கிழமை போர்சியுங்குலா என்னும் பரிபூரணபலன். இந்த பரிபூரணபலனை ஞாயிற்றுக்கிழமையாவது, அதற்கு முந்தினநாள் சாயந்திரத்திலாவது, பாவசங்கீர்த்தனம்பண்ணி நன்மை வாங்கி எத்தனைதரம் கோவிலைச் சந்தித்து அர்ச். பாப்பானவரின் சுகிர்த கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்களோ அத்தனை தடவை பரிபூரண பலன் அடையலாம்.

15-௳ ஞாயிற்றுக்கிழமை தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள். 9 மணிக்கு பாட்டுப்பூசை, சாயந்திரம் 5½ மணிக்கு தேவசங்கீத பிரார்த்தனைக்குப்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

17-௳ செவ்வாய்க்கிழமை காலை 6¼ மணிக்கு, முன்னம் குன்னூர் பங்கு குருவாயும். கோயம்புத்தூர் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டிருந்தவருமான வந்திக்கத்தக்க தெனீஸ் பரமால் ஆண்டவருடைய ஆத்துமத்திற்காக பாடல் பூசை.

28-௳ சனிக்கிழமை கோயம்புத்தூர் மேற்றிராணியாராக இருக்கும் வந்திக்கத்தக்க அ. ரூவா ஆண்டவரின் பாதுகாவலரான அர்ச். அகுஸ்தீன் திருநாள்.

---

L. BÉCHU,
*Parish Priest,*
St. Anthony's Church, Coonoor.

*Imprimatur*
✠ AUGUSTIN,
*Bishop of Coimbatore.*

St. J. I. S. Press, Trichy.

803




# அர்ச். அந்தோனியார் தூதன்.

# THE ST. ANTHONY'S MESSENGER.

நம்பர் 8. FIDES AC ROBUR. 1—9—1915.


## 1. The sins of the tongue.

### நாவினால் செய்யும் பாவங்கள். (தொடர்ச்சி.)

நாம் நாவினால் கட்டிக்கொள்ளும் பாவங்களில் பொய் சொல்லுவதே மகா அருவருப்பான செய்கை. உலகத்தில் அனைவரும் பொய்யனையே மிகவும் இகழுகிறார்கள். அப்படியிருந்தும் இயற்கையில் பொய் சொல்லும் வாடிக்கையே மற்றப் பாவங்களைவிடப் பெருத்திருக்கிறதென்பது வியப்புக்குரியதே.

எடுத்ததற்கெல்லாம் பொய் சொல்லுவதும், உண்மை பேசுவதில் அஜாக்கிரதையாயிருப்பதுமான துர்ப்பழக்கங்கள் சிறுபத்தில் பெற்றோரின் துர்ப்போதனையினாலும், துர்மாதிரிகையினாலும், அதன்பிறகு, சில சமயங்களில் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் அதைப்பற்றிச் சரியானபடி கவனியாததாலுமே விர்த்திக்கு வருகின்றன. ஆயினும் தீர்க்க அனுபோகமுள்ள ஒரு உபாத்தியாயர் கூறுவதாவது: "பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகும் வயது அமைவதற்கு முன்னமேயே பொய் சொல்லக் கற்றுக்கொள்ளுகிறார்களென்று நான் சந்தேகமின்றிச் சொல்லுவேன்." ஆனால் தாய் தகப்பன்மார்கள் இந்த வாக்கியத்தை மறுத்து "எங்கள் பிள்ளைகள் வீட்டிலேயே பொய் சொல்லக் கற்றுக்கொள்ளுகிறார்களோ, வீட்டிலேயாவது, பொய் சொல்லக் கற்றுக்கொள்வதாவது" என்று எதிர்த்துப் பேசுவார்கள். ஆனால் சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் வீடுகளிலேயே நடக்கும் சம்பவங்களில் சில உபாத்தியாயர் சொன்ன வாக்கியம் உண்மைதானென்று காட்டுகிறதில்லையா? உதாரணமாக, ஒரு தாயார் தன் குழந்தை ஆவலோடு மிட்டாய் கேட்கையில், அதைப் பார்த்து "அப்பா மிட்டாய் இல்லையே" என்று சொல்லுகிறாள். அவள் இவ்வார்த்தைகளைச் சொல்லும் சமயத்திலேயே, பையன் தன் தாயார் ஓரிடத்தில் ஒரு பெட்டி நிறைய மிட்டாய் வைத்திருக்கிறதைக் கண்டுகொள்ளுகிறான். பிறகு பையன் அழுதுகொண்டாவது தான் விரும்பிய மிட்டாய்களை தாயாரிடம் பெறும்போது தன் தாயார் பொய் சொல்லுகிறாள் என்னும் எண்ணம் அவன் மனதில் பதிந்துவிடுகிறது. இப்படிச் செய்வதைவிட, அப்பொழுது மிட்டாய் அவனுக்கு ஆகாதது என்றும், ஆகையால் கொடுப்பதில்லையென்றும் மறுத்திருப்பாளானால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும். அப்படிச் செய்திருந்தால் ஒருவேளை பையன் அழுதிருப்பான். ஆனால் கடைசியில் அதன் பயனோ, தன் தாயாரின்மேல் சங்கையும் மெய் பேசுவதினாலாகும் சிலாக்கியமும் சிறுவன் மனதில் படிந்துவிடுவதுவே.

## 2. "But the marks are there."

### "காயமாறினாலும் தழும்புகள் காணப்படும்."

ஒரு தகப்பனார் தன் மகனிடம் அவன் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும், ஒவ்வொரு ஆணி, குடிசைக் கதவில் அடிக்கச்சொல்லியிருந்தார். அதனால் அதிக ஆணிகள் சீக்கிரத்தில் செலவானது. கதவே நிறைந்துவிடும்போலிருந்தது. சிறு

வனோ ஆணிகள் அறையப்பட்டிருந்த கதவைப் பார்க்க விருப்பமில்லாதவனாய் தன் தந்தையிடம்போய் சொன்னான். "சரி, அப்படியானால் நீ கீழ்ப்படிதலாயிருக்கும் ஒவ்வொரு தடவைக்கும், பக்ஷவார்த்தை பேசும் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு ஆணி பிடுங்கிவிடுகிறேன்" என்றார் அவன் தந்தை.—இவ்வாறு சில காலம் கழிந்தது. கடைசியாக பையன் சந்தோஷத்துடன், தன் தகப்பனாரிடம், கடைசி ஆணியையும் பிடுங்கிவிடச்சொன்னான். அப்படியே ஆயிற்று. "ஆ! எனக்கு இப்போது எவ்வளவு சந்தோஷம்" என்று சொன்னான். ஆனால் ஆணிகள் உண்டான வடுக்கள் நிறைந்த பரிதாபக் கோலத்தைக் கண்டதும் அவன் முகத்தில் விசனக்குறி தோன்றி "காயமாறினபோதும் தழும்புகள் இருக்கின்றனவே என்று சொன்னான்." அதற்கு அவன் தகப்பனார் "ஆம்! அதேமாதிரியாகத்தான் நம் துர்ச்செய்கைகளும், அவைகளின் வடுக்கள் நமது ஜீவிய நாட்களிலும், நமது குணநடக்கைகளிலும் காணமற்போவதில்லை. ஆகையால் நமது காயங்களினின்று மாத்திரம் தப்பித்தால் போதுமென்றிராமல், அவைகள் ஆறினபின் நின்றுவிடும் தழும்புகளும் மறைந்துவிடச் செய்ய நாம் முயற்சி செய்ய வேண்டும்." (ஞானி.)

## 3. Correct things at Mass.

## பூசை நேரத்தில் அனுசரிக்கவேண்டிய கிரமங்கள்.

ஆண் பெண் ஆகிய இருபாலாரும் ஆஸ்பெர்ஜஸ் என்னும் பாடல் ஆரம்பிக்கும்போது எழுந்து நின்று தீர்த்தந் தெளிக்கும்போது சிலுவை வரைந்துகொள்ள வேண்டும்.

பூசைத் துவக்கத்திலிருந்து சுவிசேஷம் வரையிலும் முழங்காலிலிருக்கவும்.

குருவானவர் சுவிசேஷம் வாசிக்கும்போதும், விசுவாச மந்திரம் சொல்லும்போதும் எழுந்து நின்றுகொண்டிருக்கவேண்டும்.

விசுவாச மந்திரத்துக்குப் பின், குரு பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்னும் திருப்புகழ் கூறுகிறவரையிலும் உட்கார்ந்திருக்கவேண்டும்.

பரிசுத்தர் என்கிற மந்திரஞ் சொன்ன பிறகு திவ்விய நன்மை கொடுத்து முடிக்கிறமட்டும் முழந்தாளிலிருக்கவேண்டும்.

நன்மை கொடுத்தபின் கடைசி ஆசீர்வாதம் வரையில் உட்கார்ந்திருக்க வேண்டும்.

முழந்தாள்படியிட்டு சிலுவை அடையாளம் வரைந்து குரு அருளும் ஆசீர்வாதத்தை பக்தியுடன் பெறவேண்டும்.

கடைசி சுவிசேஷம் வாசிக்கையில் எழுந்து நிற்கவேண்டும்.

பாட்டுப் பூசையின்போது: பூசை சிறப்பிக்கும் குருவானவர் 'குளோரியா, கிரேதோ" இவை பாடும்போது உட்கார்ந்திருக்கையில் விசுவாசிகளும் உட்கார்ந்திருக்கவேண்டும்.

எல்லாத்துக்கு மேலாக, கோவில் கர்த்தரின் வீடு என்றும், மோட்சவாசல் என்றும் நினைத்திருக்கவும்.

பக்தியையும், ஒடுக்கத்தையும் வருத்துவிக்கக் கூடியதுமான மேற்சொன்ன ஒழுங்குகளை அனுசரிக்கும்படியாக குன்னூர் பங்கினரை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## 4. St. Antony's Secondary School, School-fees.

## சம்பளம் வசூலிக்கும் ஒழுங்குகள்.

பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டர் அவர்களால் அடிக்கடி சொல்லியபடி, பின் காட்டியிருக்கும் கவர்ண்மெண்ட் ஸ்டாண்டர்ட் விதிப்படி இப்பள்ளிக்கூடத்தில் இனிமேல் சம்பள வசூல் செய்யப்படும்.



| | நீண்ட டேர்ம். | ஷார்ட் டேர்ம். | ஒவ்வொரு தவணை. |
|---|---|---|---|
| 3-வது பாரம்<br>2 ,, ,,<br>1 ,, ,, | ரூ. 13-12—0 | ரூ. 8—4—0 | ரூ. 2-12—0 |
| 4-வது வகுப்பு<br>3 ,, ,, | ரூ. 6—4—0 | ரூ. 3-12—0 | ரூ. 1—4—0 |
| 2-வது வகுப்பு<br>1 ,, ,,<br>பாலர் வகுப்பு | ரூ. 3—2—0 | ரூ. 1-14—0 | ரூ. 0-10—0 |

பாக்வர்ட் (கல்வி தேர்ச்சி அடையாத) ஜாதிகளைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கு மேற்கூறிய கவர்ண்மெண்ட் ஸ்டாண்டர்ட் ரேட்டில் பாதி கொடுத்தால் போதுமென உத்தரவு அளிக்கப்படும். பாக்வர்ட் வகுப்பைச் சேர்ந்த யாதொரு மாணாக்கன் தனக்கு பாதி ரேட் வீதம் சம்பளம் கொடுக்க பிரீதியிருந்தால் சங். மானேஜர் சுவாமியார் அவர்களுக்கு எழுத்து மூலியமாய், தான் எந்த பாக்வர்ட் ஜாதியைச் சேர்ந்தவனென்று சொல்லி மேற்படி உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டியது.

இந்த ஒழுங்குகளில் குறிக்கப்பட்ட தேதியில் யாதொரு மாணாக்கன் தன்னுடைய சம்பளம் அல்லது தவணையை செலுத்தத் தவறினால், செலுத்தவேண்டிய ஒவ்வொரு ரூபாய்க்கும் அணா ஒன்றுக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படலாம். சம்பளம் அல்லது தவணை விதிக்கப்பட்டிருக்கும் அபராதத்தோடு குறித்த தேதி முதல் பத்து தினங்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் மாணாக்கனுடைய பெயர் டாப்பிலிருந்து அடித்துவிடப்படும் அவன் திரும்பி சேர்க்கப்படுவானேயாகில் அவன் பெயர் அடிக்கப்பட்ட தேதியில் அவனால் செலுத்தப்படவேண்டிய தொகையுடன் மேற்படி தொகையில் ஒவ்வொரு ரூபாய்க்கும் அணா இரண்டுக்கு மேற்படாமல் அபராதமும் செலுத்தவேண்டும்.

## 5. பழய கருப்பன் கருப்பனே

## பழய மண் கிண்ணி மண் கிண்ணியே என்றது.

ஓர் மலையடிவாரத்தில் கருப்பனென்னும் ஒரு சிறுவன் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு கல்லைப் பிரட்டினான். அதன்கீழ் ஒரு தவலை நிறைய பொன் காசுகளிருந்தன. இதைக் கண்டதும் அவன் உள்ளம் பூரித்து, மறுபடியும் தவலையின்மேல் கல்லை வைத்து மூடிவிட்டு, இச்சங்கதியை ஒருவரிடமும் தெரிவிக்காமலிருந்தான். அன்று சாயங்காலம் அவன் எஜமான், "அடே கருப்பா மாடுகளையெல்லாம் வயிறு நிரம்ப மேய்த்துவந்தாயா?" என்றான். இவன் கோபித்துக்கொண்டு, "அடா என்று அவமரியாதையாக என்னை அழைக்காமல், கருப்பாவென்று கூப்பிடுங்கள்" என்றான். இதைக்கண்டு எஜமான் ஏதோ ஒரு அதிசயமிருக்கிறது, இதை அறிவோமென்று மனதிற்குள்ளே எண்ணிக்கொண்டு பேசாமலிருந்தான். மறுநாளும், சிறுவன் புதையல் இருப்பதைக்கண்டு, களிப்புடன் வீட்டுக்குத் திரும்பினான். எஜமான் கருப்பா என்று அழைக்கவும், "என்னை கருப்பண்ணவென்று கூப்பிடலாகாதா" என்று சிறுவன் வினவினான். அப்படியே, மறுதினம் எசமான் 'கருப்பண்ணபிள்ளை' யென்று அழைக்கும்போது, சிறுவன் "அதென்ன எனக்கு மண் கிண்ணியிலே சாப்பாடு போடுகிறது, வாழையிலையிலே போடலாகாதா?" என்றான். அப்படியே வாழையிலையில் அவனுக்கு போசனம் படைத்து, இதன் மர்மத்தை அறியவேண்டுமென்று மறுநாட் காலை கருப்பன் மாடோட்டிச் செல்லும்போது அவன் பின்னே ரகசியமாய் தொடர்ந்து சென்றான். சிறுவன் புதையலைத் திறந்து பார்த்துவிட்டு அப்புறம் சென்றுவிடவும், எஜமான் அதைத் திறந்து பார்த்து, தவலை நிறையவிருக்கும் தங்கக் காசுகளை கண்ணுறவும், இதனாலேயே கருப்பனுக்கு அவ்வளவு தைரியமும், கர்வமும் உண்டாயிருந்தது

என்று நினைத்துக்கொண்டு, தவலையைத் தூக்கிக்கொண்டு வீடு வந்துவிட்டான். கருப்பன் சாயந்திரம் கல்லைப் பிரட்டிப்பார்த்து புதையலைக் காணாமல் ஏக்கம் பிடித்தவனாகி ஒன்றுந் தோன்றாமல் விசனத்துடனே மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்து அசதியாக படுத்துக்கொண்டிருந்தான். எஜமான் "கருப்பண்ணப் பிள்ளையவர்களே, இன்றைக்கு வெள்ளிக்கிண்ணி வைத்திருக்குது சாப்பிட வாரும்," என்று அதிக மரியாதையாக அழைத்தான். அப்போது சிறுவன் "பழைய கருப்பன் கருப்பனே பழைய மண்கிண்ணி மண்கிண்ணியே" என்றான். ஆதலால் அதுவே ஓர் பழமொழியாக வழங்கியது.

## 6. The Pope loves France.

### பாப்பானவருக்கு பிராஞ்சு தேசத்தின் மட்டிலுள்ள நேசம்.

15-ம் ஆசீர்வாதப்பனென்னும் நமது பாப்பானவர் லாதெத் (Laudet) என்னும் பத்திரிகாலிகிதனொருவனிடம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், "நான் 15 வருஷகாலமாக பிராஞ்சு நாட்டை நேசித்துவருகிறேன். இன்னும் நான் அந்நாட்டை நேசிக்கிறேன். நான் கத்தோலிக் பிராஞ்சை நேசிக்கிறேன். அம்மாத்திரமல்ல, என் அன்பு பிராஞ்சு நாட்டின்மீதே யிருக்கிறது.

ஜெர்மனி அகாத பாவக்கொடூரங்களைச் செய்திருக்கிறதென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் வேண்டிய வரலாறுகளில்லாததால் என் தீர்ப்பு இவ்வளவு என்று நான் நிர்ணயிக்கக்கூடாது. எப்படியிருந்தாலும், பெல்ஜிய குருக்களின் கொலையையும், இப்போது பகிரங்கத்திற்கு வரும் மற்ற அக்கிரமச் செயல்களையும் மிகவாய் கண்டனம் செய்தேன்" என்று கூறி, மேலும் பாப்பரசர், "பிராஞ்சு நாட்டின் மீதிருக்கும் என் அநுதாபத்தைக் காட்டத்தக்க சமயத்தை எதிர்பார்த்திருக்கிறேன்" என்று சொன்னதாகவும் தெரியவருகிறது.

## 7. Temperance Notes.

### மதுவிலக்குக்கான புத்திமதிகள்.

நீங்கள் உங்கள் விசனத்தைக் குடியில் மறக்க மதுபானம் உபயோகித்தால், அவ்வளவுக்கவ்வளவு விசனமதிகரிக்கும். நீங்கள் அதிகமான வேலை செய்யக்கூடுமென்று குடித்தால், உங்களுக்கே வேலை செய்ய மற்றவர்கள் வேண்டியிருக்கும். உங்கள் ஜீரண சக்தியை யதிகரிக்குமென்று மதுபானம் உபயோகித்தால், அது குறைக்கப்படுமேயன்றி மற்றப்படியல்ல. மதுபானம் உங்களுக்கு நன்மையைப் பயக்குகிறதென்று நினைத்தால், நீங்கள் மோசம் போவீர்களென்பது உறுதி. அறிவைப் போக்கி புத்தியையும் ஞாபக சக்தியையும் எவ்வளவு மந்தப்படுத்துகிறதென்றும், அது உங்களை எவ்வளவு ஆபத்துக்காளாக்குகிறதென்றும் நீங்கள் உணருகிறதில்லை.

## 8. St. Anthony's Church Calendar.

**SEPTEMBER, 1915.**

### அர்ச். அந்தோனியார் கோவில் பஞ்சாங்கம்.

செப்டெம்பர்-மீ 3-ம் உ மாதத்தின் முதல் வெள்ளி—இரண்டாவது பூசை 7 மணிக்கு—சாயந்திரம் $5\frac{1}{2}$ மணிக்கு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

8-ம் உ புதன்கிழமை தேவமாதா பிறந்த திருநாள். 2-ம் பூசை $6\frac{3}{4}$ மணிக்கு. பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.

---

L. BÉCHU,
*Parish Priest,*
St. Anthony's Church, Coonoor.

*Imprimatur :*
✠ AUGUSTIN,
*Bishop of Coimbatore.*

# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

வருஷப்பிறப்பு. FIDES AC ROBUR. 1—1—1916.

## A Happy New Year.

### பாக்கியமான புதுவருஷம்.

இப்பத்திரிகையை வாசிப்பவர்களாகிய உங்களுக்கும் இப்பங்கைச் சேர்ந்த இதர கிறீஸ்துவர்களுக்கும் பாக்கியமான புது வருஷம் உண்டாகும்படி ஆசிக்கிறோம். உங்கள் வீட்டிலும் உங்கள் உள்ளத்திலும் உங்கள் அலுவல்களிலும் நீங்கள் பாக்கியசாலிகளாய் இருக்கும்படி கடவுள் அருள்செய்வாராக!

நீங்கள் உங்கள் அநுதின வேலைக்குப் போகவேண்டியவர்களாயிருப்பதால், உங்கள் பங்கு சுவாமியார் உங்களைச் சந்தித்து உங்களுக்குத் தம்முடைய ஆசீர்வாதம் கொடுக்க வரும்போது உங்களை வீட்டில் காணாமலிருக்கக்கூடும். கோவிலுக்கு வெகு தூரத்திலுள்ள ஓர் தோட்டத்தில் குடியிருப்பதினிமித்தம் பலமுறை ஞாயிற்றுக்கிழமைகளில் பூசைக்கு நீங்கள் வரக்கூடாமலிருக்கலாம். ஆதலால் உங்கள் பங்கு சுவாமியார் இத்தூதன் மூலமாக "உங்களுக்குப் பாக்கியமான புது வருஷம் உண்டாக!" என்று வாழ்த்தித் தமது ஆசீர்வாதத்தை அன்புடன் அனுப்புகிறார்.

பெரியோரும் சிறியோருமாகிய நீங்கள் யாவரும் தேவபயத்தோடு கற்பனைகளின் சுகிர்த நெறியில் நடந்துவரவேண்டுமென்று உங்கள் பங்கு சுவாமியார் விரும்புகிறார். ஞாயிற்றுக்கிழமைதோறும் உங்களைக் கோவிலில் காணவேண்டுமென்பது அவருடைய மேலான ஆவல். பிரசங்கத்தொட்டியிலிருந்து அல்லது மேல் மெத்தையிலிருந்து தேவாலயமானது பக்தியுள்ள எண்ணிறந்த கிறீஸ்துவர்களால் நிறைந்திருப்பதையும், மோட்சத்தினின்று இறங்கிய ஜீவிய அப்பத்தைப் புசிக்க அநேக கிறீஸ்துவர்கள் பரிசுத்த பந்திக்குச் செல்வதையும் காணும்பொழுது அவருக்கு உண்டாகும் மனச்சந்தோஷத்திற்கு அளவில்லை.

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கிறீஸ்துவக் கல்வியைக் கொடுக்க வேண்டுமென்றும், இதற்காக நீங்கள் அவர்களைக் கத்தோலிக் பாடசாலைக்கு அனுப்பவேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்.

உங்கள் குடும்பக்ஷேத்திரத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

ஆயினும், தாழ்ந்த இவ்வுலகத்தின் பரிபூரண ஆசிர்வாதத்தையும் பாக்கியத்தையும் நீங்கள் விரும்பவேண்டாம். இவ்வுலகமானது பரதீஸ் என்னும் மோட்சானந்த ஸ்தலமாகாது. நீங்கள் உங்களை யடக்கவும், வேலைசெய்யவும், சிற்சில சமயங்களில் துன்பம் அநுபவிக்கவும் வேண்டியிருக்கிறது. தேவசித்தத்துக்கமைந்து துன்பங்களைப் பொறுமையோடு அநுபவிப்பதும் ஒருவித ஆசிர்வாதந்தான்.

உலகத்தின் ஆஸ்திபாஸ்திகளாலும் இன்ப சுகங்களாலும் உங்களுக்கு மெய்யான பாக்கியம் உண்டாகாமல், உங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதாலும் உத்தம தூய மனச்சாட்சி கொடுக்கும் சமாதானத்தாலுமே உண்டாகுமென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

கடவுள் உங்களை ஆசிர்வதிப்பாராக! (தூதன்.)

## The Legend of the Lamb.
## ஆட்டுக்குட்டியின் சரிதை.

பெத்திலேம் பட்டணத்தில் குழந்தை சேசுவைக் காணவந்த இடையர்களில் ஆஸ்திக்காரனொருவன் திவ்விய பாலகனுக்குக் காணிக்கையாக ஓர் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்தான்.

அவ்வாட்டுக்குட்டி மாட்டுத்தொழுவத்தில் சாதுவாய் நுழைந்து சேசு பாலகனுடைய கையை நக்கத் துவக்கிற்று. குழந்தை சேசு இதனால் விழித்துக்கொண்டு ஆட்டுக்குட்டியைப் பரிவுடன் தழுவிக்கொடுத்தார்.

துஷ்டனான ஏரோதரசனுடைய கொடுமைக்குத் தப்பும்படி திருக்குடும்பம் எஜிப்து தேசத்திற்குச் சென்றபொழுது அதைக் கொண்டுவந்து கொடுத்த இடையனுடைய பராமரிப்பிலேயே அவ்வாட்டுக்குட்டி விட்டு வைக்கப்பட்டது. ஆனால் திருக்குடும்பம் நசரேத்தூருக்குத் திரும்பிவந்தபோது அவ்விடையன் அவ்வாட்டுக்குட்டியை மறுபடியும் கொண்டுவந்



தான். அப்பொழுது அதற்குண்டாயிருந்த சந்தோஷம் எவ்வளவென்றால், அது ஆநந்தத்தால் துள்ளிக் குதித்துக்கொண்டு வந்தது. சேசுநாதசுவாமி அவ்விடையனை ஆசீர்வதித்து, "மனத்தரித்திரர் பாக்கியவான்கள், தூய இருதயமுடையவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார்.

அர்ச். ஸ்நாபக அருளப்பர் தமது தாயாரோடு திருக்குடும்பத்தைச் சந்திக்கவந்தபோது அவர் சேசுநாதசுவாமியோடு விளையாடிக்கொண்டிருப்பார். ஒருநாள் அர்ச். அருளப்பர் அர்ச். சூசையப்பர் வேலை செய்யும் சாலைக்குள் பிரவேசித்து இரண்டு மரத்துண்டுகளை யெடுத்துச் சிலுவை வடிவமாய் வைத்து ஆணியறைந்தார். பிறகு அர்ச். அருளப்பர் சிலுவையைச் சுமந்துகொண்டு ஆட்டுக்குட்டிக்கு முன்னும் சேசுநாதசுவாமி அதற்குப் பின்னுமாகச் சுற்றுப்பிரகாரம்போல் வீட்டைச் சுற்றி வந்தார்கள். இக்காட்சியைக் கண்ட பரிசுத்த கன்னிகையின் திருவிழிகளினின்று கண்ணீர் பெருகியோடிற்று. அப்போது சேசுநாதசுவாமி அர்ச். அருளப்பரைப் பார்த்து, "நானே ஆட்டுக்குட்டி, நீர் எனக்கு முன்னால் போகவேண்டியவர்" என்று உரைத்தார். கடைசியில் சேசுநாதசுவாமி அச்சிறிய ஆட்டுக்குட்டியை அர்ச். அருளப்பருக்குக் கொடுக்க, அவர் அதைத் தமது வீட்டுக்கு நடத்திக்கொண்டு போகும் சமயத்தில், "உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவை இதோ" என்று தூரத்தில் பாடுகிற இனிய குரலோசை கேட்கப்பட்டது. (ஞானி.)

## Honour to God.
## சர்வேசுரனுக்குச் சங்கை.

இராஜாதி இராஜனாகிய நமது கர்த்தர் உங்கள் மரணப்படுக்கையில் உங்களைச் சந்தித்து நீங்கள் இந்தச் சீவியத்தை விட்டு நீங்குமுன்னே உங்களுக்குத் தமது வரப்பிரசாதங்களைக் கொடுக்கவரும்பொழுது, குருவானவர் கடைசித் தேவதிரவிய அநுமானங்களாகிய, அவஸ்தைப் பூசுதல், திவ்விய நற்கருணை இவற்றை உங்களுக்குக் கொண்டுவரும் சமயத்தில், அநேக விஷயங்களில் உங்கள் வீடு ஆயத்தமற்றதாயும் அசுசியுள்ளதாயும் காணப்படுகிறது. மரிக்கிறவருடைய இருதயமானது அத் தேவதிரவிய அநுமானங்களைத் தக்க மேரையாய்ப் பெற்றுக்கொள்ளும்படி பரிசுத்தமாயும் ஆயத்தமாயும் இருக்க வேண்டியதே முக்கியமான காரியமென்பது வாஸ்தவந்தான். ஆனபோதிலும், பரிசுத்த திவ்விய நற்கருணையில் பிரசன்னரா

யிருக்கும் நமதாண்டவருக்குச் சங்கையாக உங்கள் வீட்டை ஆயத்தம் பண்ணவும், சுசிகரமாய் வைத்திருக்கவும்வேண்டியதே. பூலோக இராஜா ஒருவர் உங்கள்வீட்டுக்கு வருவதாயிருந்தால் உங்கள் வீட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கையும் பெருக்கிச் சுத்தம்பண்ணவும், வீட்டின் ஒவ்வொரு பொருளையும் அதனதன் சரியான இடத்தில் வைக்கவும் எவ்வளவோ ஜாக்கிரதை எடுத்துக்கொள்வீர்கள் அல்லவா? நமதாண்டவர் இராஜாதி இராஜனாயிருக்கிறாரே! மாட்டுக்கொட்டகையில் பிறந்து தலைசாய்க்க ஓர் கல்முதலாய் இல்லாதிருக்கத் திருவுளமான நமதாண்டவர் மெய்யாகவே உங்கள் தரித்திரத்தைப் பற்றி உங்களை ஒருபோதும் அவமதிப்பதில்லை. நீங்கள் எவ்வளவு தரித்திரர்களாயிருந்தபோதிலும் உங்கள் தரித்திர அந்தஸ்தானது சுசிகரமற்றதனத்துக்குக் காரணமாகாது.

நீங்கள் கேவலமான ஏழைகளாயிருந்தபோதிலும் விசேஷமாய் நமதாண்டவர் தேவநற்கருணை வழியாய்த் தம்மைத் தாமே திவ்வியபோசனமாகக் கொடுக்கவருகையில் உங்கள் வீட்டை ஒழுங்குள்ள மேரையாய் வைத்திருங்கள்.

ஒரு சிறுமேசையையாவது மணையையாவது சுத்தமும் சீருமுள்ள வஸ்திரத்தால்மூடி அதின்மேல் ஒரு பாடுபட்ட சுரூபத்தைவைத்து இரண்டு மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி வைத்திருங்கள். வேறு அதிக செலவொன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. இது நீங்கள் உங்கள் வீட்டுப்பொருள்களைக்கொண்டு செய்யக்கூடியதே! வியாதிஸ்தருக்குத் தேவதிரவிய அநுமானங்கள் நிறைவேற்றப்படும்பொழுது வீட்டிலுள்ள உறவின்முறையாரும் மற்றக் கிறீஸ்துவர்களும் முழந்தாளிலிருந்து ஜெபம்பண்ணவேண்டியது.

இப்படிச் செய்வதினால், உங்கள் வீட்டுக்குவரத் திருவுளமான பரலோக இராஜாவுக்குச் சங்கையும் அவருடைய பிரதிநிதியாகிய குருவானவருக்கு மரியாதையும் உங்களால் உண்டாகும்.

## A Conversion on the Battle-field.

### போர்க்களத்தில் மனந்திரும்புதல்.

யுத்தத்தில் காயம்பட்ட ஓர் ஆங்கிலேய போர்வீரன் பாவசங்கீர்த்தனம்பண்ணி கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பி கத்தோலிக் குரு ஒருவனை அழைத்தான். ஆனால் வந்த குருவானவர் பிராஞ்சுக்காரர். இவர் இங்கிலீஷ்பாஷை தெரியாதவராயும் போர்வீரன் பிராஞ்சுப்பாஷை தெரியாதவனாயும் இருந்தபடியால் பாவசங்கீர்த்தனம் நிறைவேற்றப்படக்கூடாமலிருந்தது. போர்வீரனுக்கருகில் பிராஞ்சுப்பாஷை தெரிந்த ஓர் ஆங்கிலேய உத்தியோகஸ்தன் நின்றுகொண்டிருந்தான். போர்வீரன் உத்தியோகஸ்தனை நோக்கி, "ஐயா! என் பாவசங்கீர்த்தனத்தைக்கேட்டு, தயவுசெய்து குருவானவருக்கு மொழிபெயர்த்துச்சொல்லும்" என்று மரியாதையாய்க்கூறினான். அதற்கு உத்தியோகஸ்தன், "நான் உன் பாவசங்கீர்த்தனத்தை எப்படிக் கேட்கலாம். நான் குருவானவர் அல்ல. அன்றியும் நான் பதித மதஸ்தனாயிற்றே!" என்று ஆட்சேபித்தான். "ஆயினும் பரவாயில்லை. நான் என் பாவங்களை உம்மிடத்தில் சொல்வேன்" என்றான் போர்வீரன். பிறகு குருவானவர் செய்த தீர்மானத்தால் உத்தியோகஸ்தன் இணங்கி, போர்வீரனுடைய பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டு, குருவானவருக்கு பிராஞ்சுப் பாஷையில் மொழிபெயர்த்துச்சொல்லி முடிந்தபின் குருவானவர் பாவப்பொறுத்தலாசீர்வாதங் கொடுத்துக் கடைசித் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றினார். கத்தோலிக் போர்வீரனுடைய தாழ்ச்சியையும், கத்தோலிக் வேதத்தின் சுகிர்த மாதிரிகையையும் கண்ணுற்ற உத்தியோகஸ்தன் மனந்திரும்பி கத்தோலிக் திருச்சபையில் சேர ஆசைகொண்டு, தன்னை உடனே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மன்றாடினான். போர் நெருங்கிவிட்டபடியால் தாமதிக்கக்கூடாமலிருந்ததைக் கண்ட குருவானவர் பிரதான வேதசத்தியங்களைச் சுருக்கமாய்ப் போதித்து உத்தியோகஸ்தனுடைய நேர்மைத்தனத்தினால் திருப்தியடைந்து ஞானஸ்நானம் கொடுத்து அவனை கத்தோலிக் திருச்சபையில் ஏற்றுக்கொண்டார்.

## Train to Heaven.

### மோட்சத்திற்குச் செல்லும் வண்டித்தொடர்.

மோட்சத்திற்குப் போக விரும்பும் பிரயாணிகளுக்கு வழிகாட்டி:—
வண்டித் தொடர் புறப்படும் நேரம்: **எந்நேரமும்.**
„ போய்ச்சேரும் நேரம்: **கடவுளுக்குச் சித்தமான சமயம்.**

வண்டித் தொடர்ச் சேவை:
- விசேஷித்த வண்டித்தொடர்: தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல்.]
- தபால் வண்டித்தொடர்: பக்தி, வணக்கம், தேவதிரவிய அநுமானங்கள்.]
- நாளுழி வண்டித்தொடர்: கற்பனைகள், அந்தஸ்தின் கடமைகள்.]

செலுத்த வேண்டிய பயணக் கூலி.

1-வது வகுப்பு : தேவசிநேகம், சிலுவை.
2-வது வகுப்பு : விசுவாசம், நற்கருத்து.
3-வது வகுப்பு : தேவபயம், தபம்.

கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

1. திரும்பிவரப் பயணச் சீட்டுகள் கொடுக்கப் படா.
2. சந்தைகள், உற்சவங்கள், விநோத ஸ்தலங்கள் இவைகளுக்காகப் பயணச் சீட்டுகள் கிடைக்க மாட்டா.
3. புத்தி விவரம் அறியாத குழந்தைகள் தங்கள் தாயாகிய திருச்சபையின் மடியில் சேர்க்கப் பட்டிருந்தால் பயணக்கூலி செலுத்தாமலே இலவசமாய் ஏற்றிக்கொள்ளப்படுவார்கள்.
4. வண்டித்தொடர் தப்பிப்போகாமலும், கடைசி ஸ்டேஷனில் தாமதம் நேரிடாமலும் இருக்கும்படி பிரயாணிகள் தங்கள் நற்கிரிகைகளைத் தவிர வேறே சாமான்களைக் கொண்டுபோகக் கூடாது.
5. வண்டித்தொடர் செல்லும் மார்க்கத்தில் எல்லா இடங்களிலும் பிரயாணிகள் ஏற்றிக் கொள்ளப்படுவார்கள்.

மிக்கேல் அதிதூதன்,
டிராபிக் மானேஜர்.

## Higher Education.

### உயர்தரக் கல்வி.

*"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறு மறிவு."* — குறள்.

"விடிமீன்" என்றழைக்கப்படுகிற பத்திரிகை பின் வருமாறு சொல்வது உண்மையே.

"கத்தோலிக் கிறீஸ்துவர்கள் தத்தம் பிள்ளைகளுக்கு அரை நூற்றாண்டுக்கு மேலாய் தயவாய்க் கொடுக்கப்பட்டு வருகிற கல்வி கற்பதற்குரிய உதவிகளை அவர்கள் சரிவர அநுபவியாமல் இருக்கிறதைக் கண்டறிவதற்குக் காலஹாரணமாயிராவிடில் இதுவே தக்க காலமென்று நாம் நினைக்கிறோம்.



ஐம்பது வருடங்களுக்குமேலாய்ப் பற்பல பங்குகளில் ஏற்படுத்தப்பட்ட கத்தோலிக் பள்ளிக்கூடங்கள், கத்தோலிக் கிறீஸ்துவர்களின் பிள்ளைகளுக்கு முக்கியமாய்க் கைம்மாறின்றிக் கல்வி பயில்வித்து வந்தன. அப்பாடசாலைகளில் நடந்தேறிய உயிர்ப்பரித்தியாகங்களையும், தேக சிரமங்களையும், பணச் செலவுகளையும் அவைகளால் உண்டான பலாபலன்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கின், இப்பலாபலன்கள் மிகவும் அற்பமே.

"உயர் கல்விக்கு வழியாயிருக்கும் ஸெக்கன்டரி ஸ்கூல்களில் பிள்ளைகள் படிக்கவேண்டுமானால் கத்தோலிக் கிராமங்களில் நல்ல பிரைமரி ஸ்கூல்களிருக்கவேண்டியது அத்யாவஸ்யம். மேல்நாட்டிலிருந்து வேதம் போதிக்க இந்தியாவிற்கு வந்த மிஷனெரிகளின் பிரயாசை எவ்வளவாயிருந்தபோதிலும் ஜனங்களின் அறியாமையாலும் அசட்டையாலும் அநேக கிறீஸ்துவ கிராமங்களில் பிரைமரி ஸ்கூல்கள் ஏற்படுத்தப் படவேயில்லை. கல்வி கற்கக் கிறீஸ்துவப் பிள்ளைகள் இல்லாதபடியால், பங்கு சுவாமிமார்கள் மூடவேண்டியதாயுள்ள கிராமப் பள்ளிக்கூடங்கள் அநந்தம்.

"கத்தோலிக் ஹைஸ்கூலில் படிக்கின்ற கிறீஸ்துவப் பிள்ளைகள் வெகு சொற்பமாயிருக்கும் விஷயத்தை, கிறீஸ்துவப் பிள்ளைகளைப் பார்க்கிலும் மற்ற மதத்துப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க அதிக கருத்துடையவர்களாய்ச் சில மிஷனெரிகள் இருந்தார்களென்பதற்குச் சான்றாக, சிலர் யோசியாமலும் நன்கு ஆராயாமலும் பகருவதுண்டு. அங்ஙனம் யாதொரு காரணமுமின்றிப் பகருவது அவதூறேயன்றி வேறன்று. ஜனங்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளைப் பற்றிச் சிறிதேனும் கவனியாத ஜனங்களே காரணமன்றி, மிஷனெரிகள் காரணம் அன்றாம்."

## Temperance Notes. Beer Drinker.

### மதுபானம் விலக்கும் குறிப்புகள். பீர் உண்போன்.

"பீர்" என்னும் மதுபானம் சாமானியமாய்க் குடிக்கக் கூடியதென்றும், மற்றைய மதுபானங்களைப்போல் இஃது அத்துணை தீமை பயக்கக்கூடியதன்றென்றும் அநேகர் தப்பறையாய்க் கருதுகின்றனர். "பீர்" அருந்துவது "விஸ்கி" என்னும் மதுவை யுண்பதைப்பார்க்கிலும் மனிதர்களுக்கு அதிக கெடுதியை விளைவித்து அவர்களை அதிகமாய் மிருகங்

களுக்கு ஒப்பாக்குகின்றதென்று சாஸ்திரங்களை விளக்குகிற ஓர் பத்திரிகை கூறுகின்றது. உலகின்கண்ணே நாம் பார்க்கும் கொடிய துட்டர்களில் பீர் குடிக்கும் வழக்கமுள்ளவர்கள் முக்கியமானவர்களும் அதிக அபாயகரமுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள். கொலைபுரிந்தவனுக்கு உண்டாகும் வெறியைப்போன்ற ஓர் விதமான மதிமயக்கத்தைப் பீருண்பது உண்டுபண்ணும். வழக்கமாய்ப் பீர் குடிப்பவனுக்குத் தேக சுகம் இருப்பதாகத் தோன்றினும், உண்மையாகவே அவன் பலவீனனாயும், வியாதி வருங்கால் அதைத் தடுக்க முடியாதவனாயும், வந்தபின் தீர்க்க முடியாத தன்மையுள்ளவனாயும் இருக்கின்றான்.

## The Lesson of the Nations.

### தேசாபிப்பிராயம்.

குளிரைப் போக்கி உஷ்ணத்தை யுண்டுபண்ணவும், களைப்பை மாற்றி உற்சாகத்தைக் கொடுக்கவும் சிற்சில மதி மயக்கும் மதுபானங்களுக்கு வல்லமையுண்டென்பது சிலருடைய கொள்கை. அஃது உண்மையாயின் மழையிலும், குளிரிலும், இரவிலும், பகலிலும் போர்புரியும் யுத்த வீரர்களுக்கு அவ்வித மதுபானங்கள் மெத்த ஆவஸீகம். ஆனால் பிரான்சு தேசத்தில், இப்பொழுது ஐரோப்பாவில் மூண்டு கொண்டிருக்கும் யுத்தமுதற்கொண்டு, ஒலேசின்த் (Olesinthe) என்னும் மதுபானத்தை அந்தத் தேசத்தில் விற்பனைசெய்யக் கூடாதென்றும், ருஷியாவிலோ அத்தேசத்திலுள்ள இலட்சக்கணக்கான யுத்த வீரர்கள் எவ்விதமான மதுவையும் உட்கொள்ளக் கூடாதென்றும், இங்கிலாண்டிலோ நமது பிரிட்டிஷ் யுத்த வீரர்களுக்கு மது கொடுக்குமுன் வைத்தியர்களால் பார்வையிடப்படவேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தாலும் மிகவும் கொஞ்சமாய்க் கொடுக்கவேண்டுமென்றும், மயக்கங் கொடுக்கக்கூடிய எவ்வித மதுவையும் பரிசாக யுத்த வீரர்களுக்குத் தரக்கூடாதென்றும் மேற்கண்ட தேசத்தரசர்கள் ஆக்யாபித்திருக்கின்றனர். ஷை தேசத்தரசர்கள் தங்கள் இராணுவங்களின் பலத்தையும் சுகத்தையும் காப்பாற்றும் பொருட்டு யுத்த வீரர்கள் மது உண்பதை விலக்கி வைப்பது நன்மையென்றே கருதியிருக்கிறார்களென்று நாம் இதனால் அறிகிறோம்.

"உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்." குறள்.



## Hints to the Sodalists of the Sacred Heart of Jesus.

### சேசுநாதருடைய திரு இருதய சபையோர் கவனிக்கவேண்டுவன.

சேசுவின் திரு இருதய சபை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் சபையோர் செய்யவேண்டிய பக்திக்கிருத்தியங்கள் பின்வருமாறு:—

1-ம் வகுப்பு:—காலையில் எழுந்தவுடனே செபிக்கவேண்டிய செபமாவது:—

சேசுவின் திரு இருதயமே! நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும் தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாக ஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்று செய்யும் செபங்களையும் கிரிகைகளையும் படும் துன்பவருத்தங்களையும் அர்ச். கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்த மாதத்துக்கும் இந்த நாளுக்கும் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காக விசேஷமாய் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென்சேசு.

2-ம் வகுப்பு:—நாடோறும் பத்து மணிச்செபம் செபித்தல்:—

சேசுவின் திரு இருதயத் தூதனில் விவரித்ததும், அர்ச். பாப்பானவரால் அங்கீகரிக்கப்பட்டதுமான அந்தந்த மாதத்தின் பொதுக்கருத்துகளுக்காக 1-பர. 10-பிரி தினந்தோறும் செபிக்கவேண்டியது.

3-ம் வகுப்பு: பரிகார நன்மை வாங்குதல்:—

இந்த வகுப்பைச் சேர்ந்த சபையோர் வாரம் அல்லது மாதத்துக்கு ஒருமுறை திவ்விய நன்மை வாங்கி, பரமதிவ்விய நற்கருணையிலிருக்கிற நம்முடைய ஆண்டவராகிய சேசுநாதருக்கு மனுமக்கள் செய்யும் நன்றியற்ற துரோக அவமான நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்யவேண்டியது கடமை. பரிகார நன்மைவாங்க யாதொருநாள் குறிக்கப்படாவிடிலோ, சபையோரின் பிரியப்படி மாதத்தின் முதல் வெள்ளி, ஞாயிறு, அல்லது எந்தக் கிழமையிலும் பரிகார நன்மைவாங்கி, அந்நாளில் சபையோர் பரிபூரண பலன் அடையலாம்.

## Far and Near.

### நானா சங்கதிகள்.

அர்ச். பாப்பு அவர்கள் தம்முடைய திருச்சபையின் நியாயசபையில், யுத்தம் புரியும் அரசர்களை நியாய நீதியோடும் இராஜமுறையோடும் சமாதானமாகும்படி மீண்டும் வற்புறுத்திக் கேட்டிருக்கின்றனர்.

போர்புரியும் நேசவரசர்கள் ஒவ்வாத நிபந்தனைகளோடு ஜெர்மனி சமாதானம் கூறுகிறதாக வதந்தி. அங்ஙனம் கூறுவது நேயவரசர்களை ஏமாற்றும் சூழ்ச்சியென்பது அநேகரின் அபிப்பிராயம்.

ஒத்தையிலும், கோயம்புத்தூரிலும் கொள்ளை நோய் இன்னும் மூர்க்கமாயிருக்கிறதாம். புதுக்கடையில் சில மஹமாரிகள் நடந்தனவென அறிக்கை.

திருவருளே! பஞ்சம், படை, கொள்ளைநோய், பெருவாரியினின்று எமை மீட்டாளுக!

கோயம்புத்தூர் சென்ட் மைக்கேல் ஹைஸ்கூலைச் சேர்ந்த சங். ஜாம்போ சுவாமியார் (Rev. Fr. P. Jambeau.) போர் முனைக்கு சென்ற டிசம்பர்-௴ 15-௳ **கோவையைவிட்டு ஏகினார்.**

**மரணங்கள்:** (நவம்பர்-௴ 15-௳ முதல் டிசம்பர்-௴ 15-௳ வரையில்.)

மரியசூசை. 6-மாதம். ஆரோக்கியம் என்பவரின் மகன் குலக்கும்பை.

ஆர்த்தர் டிஸில்வா. 6-வருஷம், டிஸில்வா துரை மகன்.

மிக்கேல். 70-வருஷம், உளிக்கல்.

சின்னையன். 80-வருஷம், ஆள்வார்ப்பேட்டை.

பொன்னுச்சியம்மாள். 42 வருஷம், மிக்கேல் ஸ்வாமி பிள்ளையின் மைத்துனி.

சமாதானத்தில் **இளைப்பாறுவார்களாக!**

**ஞானஸ்நானம்:** (நவம்பர்-௴ 15-௳ முதல் டிசம்பர்-௴ 15-௳ வரையில்.)



ஆரோக்கியசாமி: ஞானப்பிரகாசம், ஞானப்பூ என்பவர்கள் மகன், காட்டேரி.

இராயப்பன்; சவுல், பர்னர்து என்பவர்கள் மகன், குன்னூர்.

ஞானசுந்திரம்; அந்தோனி, எமிலியா என்பவர்கள் மகள், குன்னூர்.

லூர்துமரி; பெரியநாயகம், சவரியம்மாள் என்பவர்கள் மகள், குன்னூர்.

சின்னப்பன்; முத்து, மரியம்மாள் என்பவர்கள் மகன், குன்னூர்.

அன்னமரி; குருஸ், அற்புதமரி என்பவர்கள் மகள், க்ளன்டேல்.

## St. Anthony's Church Calendar. January 1916.

### அர்ச். அந்தோனியார் கோவில் பஞ்சாங்கம்.

1916-௵ ஜனவரி-௴

1-௳ சனிக்கிழமை. வருஷப்பிறப்பின் பண்டிகை. காலை $6\frac{1}{2}$ மணிக்கு முதல் பூசை. 8 மணிக்குப் பாட்டுப்பூசை. மாலை $5\frac{1}{2}$ மணிக்குத் தேவநற்கருணை ஆசீர்வாதம்.

6-௳ வியாழக்கிழமை. மூன்றிராசாக்கள் திருநாள். காலை $6\frac{1}{2}$ மணிக்கு முதல் பூசை. 8-மணிக்கு இரண்டாவது பூசை, தேவ நற்கருணை ஆசீர்வாதம்.

7-௳ வெள்ளிக்கிழமை. மாதத்தின் முதல் வெள்ளி. காலை 7 மணிக்கு இரண்டாவது பூசை. மாலை $5\frac{1}{2}$ மணிக்குத் தேவ நற்கருணை ஆசீர்வாதம்.

L. BÉCHU,
*Parish Priest,*
St. Anthony's Church, Coonoor.

*Imprimatur:*
✠ AUGUSTIN,
*Bishop of Coimbatore.*

# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

புத்தகம் II.] FIDES AC ROBUR. 1-2-1916. [நம்பர் 2.


## Woe to the World for its Scandals !

## இடறலினிமித்தம் உலகத்துக்கு ஐயோ !

உலகமுடியுமட்டும் இடறல்களுண்டாகிறது அவசியமாமென்று யேசுக்கிறீஸ்துநாதர் நமக்கு எச்சரித்திருக்கிறார். இவ்வுலகத்தில் கத்தோலிக் திருச்சபை தன்னுடைய பிள்ளைகளைத் தீமையைவிட்டு விலக்க எவ்வித பிரயாசை எடுத்தபோதிலும், அப்பிள்ளைகளில் சிலர் நல்வழியைவிட்டுத் துர்மார்க்கத்தில் பிரவேசித்து நடக்கும் விஷயத்தைப்பற்றி எக்காலத்திலும் விசனிக்கவேண்டியதாகவே இருக்கின்றது. கோதும்பையோடு பதரும் எப்போதும் கலந்தேயிருக்கும். நல்ல தானியம் விளையுமிடத்தில் களைகளும் கூடவே காணப்படும். ஆனால் அறுப்புக் காலத்தில் நல்ல தானியங்களிலிருந்து களைகள் பிரிக்கப்பட்டு எரிக்கப்படுவதுபோலவே, தீர்வை நாளில் பாவாக்கிரமிகள் நீதிமான்களிலிருந்து பிரிக்கப்பட்டு ஆக்கினையிடப்படுவார்கள்.

சில கத்தோலிக் கிறீஸ்துவர்களுடைய துர் நடக்கையினால் கடவுளின் பரிசுத்த நாமம் அவமதிக்கப்படுகின்றது. அர்ச். சின்னப்பர் சொல்லியபடி இவர்களாலே சர்வேசுரனுடைய திருநாமம் அஞ்ஞானிகளாலே தூஷணிக்கப்படுகின்றது. இடறல்தவிர மற்றைய பாவங்கள், கத்தோலிக் திருச்சபையின் பிரகாசத்தையும் அழகையும் மங்கச்செய்து, கடவுளுடைய மகிமைப் பிரதாபத்துக்கு விரோதமாய் இருக்கின்றன. ஆனால் இடறலோ, அர்ச். சின்னப்பர் சொல்லியவண்ணம், சாவைப்போன்றதாயும், கிறீஸ்து வேதத்தின் இலக்ஷணத்தை மாற்றக்கூடிய ஓர் கொள்ளைநோய்க்கொப்பானதாயும், அவ்வேதத்தை எதிரிகள் முன்னிலையில் கேவலப்படுத்திப் பரிகாசத்துக்குள்ளாக்கக்கூடியதாயும் இருக்கிறது.

இடறலோ நரகப் பசாசு திருச்சபைக்கு விரோதமாய்ப் போர்புரிவதற்குரிய ஓர் ஆயுதமாயிருக்கிறது. ஆகையால்

பாவ வழியில் நடந்து மற்றவர்களுக்குத் துர்மாதிரிகையாயிருக்கிற கத்தோலிக் கிறீஸ்துவர்கள் கத்தோலிக் வேதத்துக்கு வருவிக்கிற தீமை எவ்வளவென்று நாம் சொல்லிமுடியாது. இடறல் எந்த மனிதனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ!

சிற்சில சமயங்களில் நேரிடுகிற இடறல்களினால் நாம் அவதைரியப்படலாகாது. கத்தோலிக் திருச்சபையின் விரோதிகள் இவ்விடறல்களைக்கொண்டு திருச்சபைக்கும் அதிலுள்ள குருமாருக்கும் விரோதமாய்க் குற்றஞ்சாட்டி அவதூறு பேசலாம். ஆனால் நமதாண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் பரிசேயரை நோக்கி, "உங்களில் பாவமில்லாதவன் முதல் கல்லை இவள்பேரில் எறியக்கடவான்" என்று சொல்லி அவர்கள் வாயை அடைத்த மாதிரி, அவ்வாறு அவதூறு பேசுகிற விரோதிகளுடைய வாயை அடைத்து, அப்பரிசேயரைப்போல் இவர்களும் வெட்கி நாணும்படி அவர் செய்ய வல்லவர். வெண்ணிறமுள்ள சுத்த வஸ்திரத்தில் ஒட்டிய மண்துளி உடனே யாவர் கண்ணுக்கும் தோன்றுவதுபோல், அழகு பொருந்திய கத்தோலிக் திருச்சபையைச் சேர்ந்தோர் யாதாமொரு சொற்பக் குற்றம் செய்தபோதிலும் அக்குற்றம் மற்ற மதத்தார்களுடைய குற்றங்களைவிட எளிதாய் வெளியில் காணப்படுகிறது. மேகங்களால் மூடப்பட்ட சூரியப் பிரகாசம் மங்கலாய்த் தோன்றினும், அம்மேகங்கள் அகன்றபின் தன் ஒளி மங்காமல் சூரியன் பிரகாசிப்பதுபோலவே, கத்தோலிக் கிறீஸ்துவர்களுடைய இடறல்களால் அத்திருச்சபையின் உண்மையும் பரிசுத்தத்தனமும் மாறாமலே பிரத்தியட்சமாய்த் துலங்குகின்றன.

திருச்சபையைச் சேர்ந்தவர்களில் சிலர் நடக்கவேண்டியபடி நடவாமலிருப்பதுபற்றி, திருச்சபை எப்பொழுதும் சத்தியமாயும் பரிசுத்தமாயும் இருப்பதற்கு யாதோர் விக்கினமும் இல்லை. கத்தோலிக் கிறீஸ்துவர்கள் அனைவரும் அர்ச்சியசிஷ்டவர்கள் அல்ல. ஆகிலும் கத்தோலிக் திருச்சபையிலுள்ள அர்ச்சியசிஷ்டவர்களைப்போல் அத்திருச்சபையைத் தவிர மற்றெவ்விடத்திலும் நாம் காணமுடியாது. (தூதன்.)

## The Happy Shepherd boy.

## பாக்கியசாலியான இடைப் பையன்.

முன்னொரு காலத்தில் பாரஸீகதேசத்தை ஆண்டுவந்த மன்னவன் கடின வியாதியடைந்தான். மறுபடியும் ஆரோக்கியமடைவதற்கு என்ன செய்யவேண்டியதென்று அவன்

OFFICE ... FEB 1915 M



தன் வைத்தியர்களைக் கேட்டான். அதற்கவர்கள், "நீர் ஓர் பாக்கியசாலியுடைய உள் அங்கியை வாங்கித் தரித்துக்கொண்டால்தான் உமக்குச் சுகமுண்டாகும்" என்று சொன்னார்கள். உடனே அவ்வேந்தன் பாக்கியசாலியான ஓர் மனிதனைக் கண்டுபிடித்து அவனுடைய உள் அங்கியை வாங்கி வரும்படி தன் இராச்சியத்தின் நாலாதிக்கிலும் தூதர்களை அனுப்பினான். அவ்வரசனுடைய அரண்மனையிலும் மற்றிடங்களிலும் தேடியும் பாக்கியசாலி ஒருவனும் தூதர்கள் கண்ணிற் படவில்லை. ஆயினும் கடைசியில் தூதர்களிலொருவன் ஏகாந்தமான ஒரு பள்ளத்தாக்கின் வழியாய்ச் செல்லுகையில் ஏழை இடைப் பையனொருவன் உல்லாசமாய்ப் புல்லாங்குழலூதிக் கொண்டு புல் நிலத்தில் படுத்திருக்கக் கண்டான். கண்டதும் அவனோடு செய்த சம்பாஷணையினால் அவன் பாக்கியசாலியென்று தூதன் கண்டுகொண்டான். ஆனால் அவனுடைய உள் அங்கியைக் கொடுக்கும்படி தூதன் கேட்கவே, அவன் அஃதில்லாதவனென்பது வெளியாயிற்று. சுகஜீவியான அவ்வேழை இடைச் சிறுவன் மட்டசன மருந்திக்கொண்டு தனக்குக் கிடைத்த மட்டில் திருப்தியோடிருந்தமையால், இவ்வுலகத்திலிருந்த மன்னரும் பெரியோருமாகிய அனைவரினும் அதிக பாக்கியசாலியாயிருந்தானென்பது நிச்சயம்

மெய்யான பாக்கியம் உங்களாலேயே உங்களுக்கு உண்டாகவேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் பாக்கியத்தைத் தாமே தமக்கு வருவித்துக் கொள்ளுகின்றனர். புண்ணியத்தின் நன்னெறியில் தைரியத்தோடு நடந்து வருவீர்களானால் மெய்யான பாக்கியம் உங்களுக்கு வந்தடைந்து நீங்கள் சந்தோஷமாய் வாழ்வீர்கள்.

(ஞானி)

## The Ten Duties Of a Husband.

## புருஷனுடைய பத்துக் கடமைகள்.

1-வது. உன் பெண்சாதியை ஓர் அடிமையாக எண்ணாமல், அவளை உனக்குத் துணைவியும் மனைவியுமாக மதித்து நேசிப்பாயாக.

2-வது. அவளுக்கு வரும் சகல நன்மை தீமைகளும் உனக்கே வந்தனவாக எண்ணிக்கொள்வாயாக.

3-வது. உன் பெண்சாதியுடைய வேலையினாலேயும்

கஷ்டத்தினாலேயும் நீ பிழைக்க விரும்பாமல், நீயே உன் பெண்சாதி பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கு வேலை செய்து சம்பாதிக்கப் பிரயாசப்படுவாயாக.

4-வது. உன் பெண்சாதிக்குச் சரீர விஷயத்திலாவது ஆத்தும விஷயத்திலாவது எவ்வித நஷ்டமும் வராதபடி கவனித்து அவளுக்குக் காவலாளியாய் இருப்பாயாக.

5-வது. உன் பெண்சாதியுடைய வியாதி முதலிய துன்பங்களில் அவளுக்கு ஆதரவும் தேற்றரவுமாய் இருப்பாயாக.

6-வது. உன் பெண்சாதிபேரில் நியாயமில்லாமல் வீண் சந்தேகப்படாதிருப்பாயாக.

7-வது. நியாயமான சந்தேகம் இருக்கும்பட்சத்தில், விவேகத்தோடு அவளை விசாரித்து நீதி செலுத்துவாயாக.

8-வது. உன் பெண்சாதி தவறிப்போனால் நீ அவளுடைய குற்றத்தைப் பொறுமையோடு மன்னித்துப் பட்சத்தோடு கண்டித்து நடத்துவாயாக.

9-வது. உன் பெண்சாதிக்குப் பிரமாணிக்கமும் முன்மாதிரிகையுமாய் இருப்பாயாக.

10-வது. உன் ஆத்துமமும் மானமும் ஆஸ்தியும் கெட்டுப்போகாவண்ணம், அந்நிய ஸ்திரீகளிடத்தில் துர்நேசம் வைக்காதிருப்பாயாக.

இந்தப் பத்துக் கடமைகளும் ஒரே கடமையில் அடங்கும். அதாவது:—உன்னைப்போல் உன் பெண்சாதியையும் நேசிப்பாயாக.

(சத்திய நேசன்.)

## Train to Hell.

### நரகத்திற்குச் செல்லும் வண்டித்தொடர்.

நரகத்திற்குப் போக விரும்பும் பிரயாணிகளுக்கு வழிகாட்டி.

வண்டித்தொடர் புறப்படும் நேரம்:—பிரயாணிகளுக்கு இஷ்டமான **எந்நேரமும்.**

,, போய்ச்சேரும் நேரம்:—பிரயாணிகள் நினையாத நேரத்திலே முதலாய், **எந்த நிமிஷமும்.**

வண்டித் தொடர்ச் சேவை:
- விசேஷித்த வண்டித்தொடர்: அவிசுவாசம், தேவ அநுக்கிரகத்தை நிராகரித்தல், பாவத்தில் பிடிவாதம்.
- தபால் வண்டித்தொடர்: சிற்றின்பப்பிரியம், பண ஆசை.
- நாளுழி வண்டித்தொடர்: முகதாட்சண்ணியம், அசமந்தம்.



செலுத்த வேண்டிய பயணக் கூலி.
- 1-வது வகுப்பு: தேவதுரோகம், சாவான பாவங்கள், கற்புக்கு விரோதமான குற்றங்கள்.
- 2-வது வகுப்பு: போசனப்பிரியம், மதுபானம், துர்மாதிரிகை, கெட்ட கதைப்புத்தகங்கள், தகாத சம்பாஷணை.
- 3-வது வகுப்பு: அற்பப்பாவப் பழக்கம், வேதக் கடமைகளை அசட்டை செய்தல், அந்தஸ்தின் கடமைகளைப் புறக்கணித்தல்.

கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

1. இத்தொடரிலுள்ள வண்டிகள் யாவும் மெத்த வசதியாயும் மனரம்மியமாயும் இருக்கும்.
2. வாங்கிய பயணச்சீட்டுகள் விக்கிரயஞ் செய்யத்தக்கவையல்ல.
3. இத்தொடர் செல்லும் மார்க்கத்தில் சேவிக்கிற அல்லது எவ்விதத்திலாயினும் ஊழியம் பண்ணுகிற சகலருக்கும் முதல் வகுப்பு பயணச் சீட்டு இலவசமாய்க் கொடுக்கப்படும்.
4. பிரயாணிகள் தங்களோடு மட்டுத்திட்டமின்றிச் சாமான்களைக் கொண்டுபோகலாமென்றாலும், "**மரணம்**" என்னும் கடைசி ஸ்டேஷனில் அவர்கள் தங்கள் ஆத்துமாவைத்தவிர மற்றனைத்தையும் விட்டுச்செல்ல வேண்டும்.
5. "**மரணம்**" என்னும் சந்திஸ்டேஷனில் கத்தோலிக் குருவானவர் ஒருவருடைய கையெழுத்தைப் பயணச்சீட்டில் பெறாத பிரயாணிகள் மாறி மோட்சத்திற்குச் செல்லும் வண்டித்தொடரில் ஏறிக்கொள்ள அநுமதி கொடுக்கப்படமாட்டார்கள்.

**லூசிப்பேர்,**
டிராபிக் மானேஜர்.

## Support Your Pastors.

### உங்கள் ஞான மேய்ப்பருக்கு உதவி செய்யுங்கள்.

அநேக பங்குகளில் மகா ஐரோப்பிய யுத்தத்தின் பலாபலன் தெரிய வந்திருக்கிறது. பல சங்கடங்களுக்கிடையில் பங்குக் குருமார்கள் முறைப்படாமல் தங்கள் பங்கு விசாரணையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆயுதபாணிகளாய் நிற்கையிலும், யுத்தத்தின் கொடுமையால் வெளியரங்கமாய்க் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய சகலருடைய கண்

களும் அதிக நியாயத்தோடு அவர்கள் பக்கம் சாய்ந்திருக்கும் இச்சமயத்திலும் குருமாருடைய முறைப்பாடுகளைக் கேட்பவர் யார்? ஒருவரும் இரார் என்பதினால், இந்த மேற்றிராசனத்தைச் சேர்ந்த கத்தோலிக் கிறீஸ்துவர்கள் தங்கள் குருமார் அநுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களைக் கண்டுணர்ந்து பின் வரும் திருச்சபைக் கற்பனையை நினைவுகூறவேண்டிய தருணம் வந்திருக்கின்றது அக்கற்பனையாவது: 1905-ம் ௵ டிசம்பர் ௴ 8-௳ கோயம்புத்தூர் மேற்றிராணியார் கற்பித்தவண்ணம், "அவர்கள் தங்கள் ஞான மேய்ப்பர்களையும், கோவில்களையும், பள்ளிக்கூடங்களையும் தங்கள் சக்திக்கியன்றவாறு ஆதரித்து வரவேண்டும்" என்பதே. அதிகமாய்க் கொடுக்காவிடினும் அவர்கள் செலுத்த வேண்டிய மிராசு, தலைக்கட்டுப் பணம், கோவில் வரி இவற்றையேனும் முறையிடாமல் கொடுப்பார்களாக.

## Far and Near.

### நாநா சங்கதிகள்.

இராஜ சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சிறிது காலத்திற்கு முன் போர்க்களத்தில் தைரியத்திற்கும் சுயபரித்தியாகத்திற்கும் முன் மாதிரிகையாயுள்ள கத்தோலிக் குருமாரைப் புகழ்ந்து வாழ்த்தினார்.

பிரான்சிய இராணுவங்களுக்கு அதிபதியாகிய ஜெனரல் ஜோபர் (Joffre) ஜெனரலிஸிமோ என்னும் தளகர்த்தர். ஜெனரல் தெ காஸ்ல்னோ (de Casteluan) என்பவரை இராணுவ உத்தியோகஸ்தர்களுள் முதல்வராக ஏற்படுத்தியிருக்கிறார். ஜெனரல் காஸ்தல்னோ என்பவர் உத்தம கத்தோலிக்கர், அடிக்கடி திவ்விய சற்பிரசாதம் அருந்துகிறவர்.

போத்தனூரில் 1915-ம் ௵ டிசம்பர்-௴ 19-௳ கோயம்புத்தூர் மேற்றிராணியார் 104 பிள்ளைகளுக்கு உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானச் சடங்கை நிறைவேற்றினார்.

கொடிவெரி பங்குசுவாமியாராயிருந்து போர் முனைக்குச் சென்றிருக்குஞ் சங். பெத்தித் சுவாமியார் (Rev. Fr. J. B. Petit) தமது பங்குக் கிறீஸ்துவர்களுடையவும் சுகாசுகங்களை அதிக ஆவலோடு கடித மூலமாய் விசாரித்துக்கொண்டிருக்கிறார்.

சங். பாரன் சுவாமியார் (Rev. Fr. A. Baron) போரிலடைந்த குண்டுக்காயம் கொஞ்சம் கொஞ்சமாய் ஆறிவரு



கின்றதாயினும் அவர் திவ்விய பூசைப்பலியை நிறைவேற்ற அசக்தராயிருக்கிறார்.

குன்னூரில் வாசஞ்செய்யும் டொனகு துரையவர்களுடைய புத்திரர் க்ளேர் டொனகு என்பவர் (Mr. Claire Donaghue) எஞ்சினீயராக அலுவல் பார்த்துக்கொண்டு ஏறிச்சென்ற பிரயாணக்கப்பல் ஓர் முழுகு கப்பலால் கடலில் ஆழ்த்தப்பட்டபடியால் அவர் வெகு சங்கடத்தோடு தப்பிப் பிழைத்து இப்போது லண்டன்மாநகரில் ஓர் ஆஸ்பத்திரி கப்பலில் வேலைப்பார்த்து வருகிறார்.

1916-ம் ௵ ஜனவரி-௴ 16-௳ கோயம்புத்தூர் மேற்றிராணியாரவர்கள சங். A. மரியசூசைநாதருக்குக் குருப்பட்டம் கொடுத்தருளினார்.

## Holy Thoughts.

### தூய சிந்தனைகள்.

ஜெபமானது தேவனுக்கும் நமக்கும் இடையிலுள்ள மட்டற்ற தூரத்தைச் சுருக்கி, சகலவித வருத்தம், சோதனை, ஆபத்துக்கிடையிலேயும் நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தி, நமக்கு மோட்சத்திலிருந்து தேவ வரப்பிரசாதங்களை வருவிக்கின்றது.

ஜெபமும் பொறுமையும், சங்கடங்களனைத்தையும் வெல்வதற்கேற்ற உபாயங்களாம்.

## The Foolishness of a Woman.

### ஓர் ஸ்திரீயின் மூடத்தனம்.

சில வருஷங்களுக்குமுன் உதகமண்டலத்தில் சிக்கனமாகச் செலவு செய்துவந்த ஓர் உபாத்தியாயர் இருந்தார். அவருக்குக் கபடற்ற ஓர் மனைவியும் இரண்டு மக்களும் இருந்தனர். அவர் அன்றாடம் ஆப்பச் செலவிற்குக் கொடுக்கும் சிறு தொகையில் காலணா, அரையணாவாக மிச்சம்பிடித்து ஒரு ரூபாய் சில்லறை சேர்த்து அதை ரூபாயாக மாற்றி அவர் மனைவி தன் புருஷனுக்குத் தெரியாமல் வைத்திருந்தாள். ஓர் மாதத்தின் கடைசிச் சந்தைநாளில் காய்கறி பதார்த்தங்கள் வாங்க அந்த உபாத்தியாயரிடம் பணமில்லாமையால் என்ன செய்யலாம் என்று தம் பாரியாளைக் கேட்டார். அதற்கவள், "நான் அண்டை வீட்டுக்காரரிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கித் தருகிறேன். சம்பளம் வந்தவுடன் ஒரு அணா வட்டி சேர்த்துக் கொடுக்கவேண்டும்" என, உபாத்தியாயர், "நல்லது, அப்படியே ஆகட்டும். அந்த ரூபாயை

"வாங்கிக்கொண்டு இன்று நீயே சந்தைக்குப்போய்ப் பதார்த்தங்கள் வாங்கி வா" என்று சொல்லி அனுப்பினார். அவ்வூருக்கு வந்ததுமுதல் ஒருநாளும் சந்தைக்குப் போயறியாத அந்த மாது சந்தைக்குப் போய்வரச் சமயம் வாய்த்ததைப் பற்றியும் தன் பணத்திற்கு ஒரு அணா வட்டியும் கிடைக்கப் போகிறதே என்பதைப்பற்றியும் அகமகிழ்ந்து சந்தைக்குச் சென்று மெய்மறந்து ஒருத்தியிடம் அரையணாவுக்கு உருளைக் கிழங்கு வாங்கிக்கொண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டு அரையணா மாத்திரம் கொடுத்ததாய் எண்ணிச் சில்லரை வாங்காமலே காய்கறி விற்குமிடஞ் சென்று ஒரு அணாவுக்குக் கத்தரிக்காய் வாங்கிக்கொண்டு அணா கொடுக்கப் பையைப் பார்க்கையில் வெறும் பையாயிருக்கக் கண்டு வருந்தினாள். பிறகு உருளைக்கிழங்கு வாங்கியவிடத்தில் ரூபாயைக் கொடுத்துவிட்டது ஞாபகத்திற்கு வர, அவள் விரைந்தோடி, கடைக்காரியை நோக்கி, "அம்மா! அரையணாவுக்கு உருளைக்கிழங்கு வாங்கிக்கொண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டேன். உருளைக்கிழங்குக்குக் கிரயத்தை எடுத்துக்கொண்டு பாக்கியைக் கொடு" என்று கேட்க, அந்தக் கொடிய வஞ்சகி, "ஓஹோ! அப்படியா? நீ உருளைக்கிழங்கு வாங்கிக்கொண்டு காசு கொடுக்காமல் போய்விட்டு இப்போது வந்து என்னிடம் 15½ அணா வாங்கவுமா பார்க்கிறாய்? போதும்! போதும்! காசைக் கொடுத்துவிட்டுக் கிழங்கைக் கொண்டுபோ" என்று சொல்லிப் பிடுங்கிக் கொட்டிக்கொண்டாள். அந்தப் பேதை மனுஷி, "உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தியைப் போல்" ஒருவருக்கும் சொல்லாமல் விசனத்தோடு வீடு வந்து சேர்ந்தாள். பத்தினியின் முக வாட்டத்தையும் வெறுங் கூடையையும் கண்ட அவள் பத்தாவும் அன்போடு அவளை விசாரித்து, அவள் வாய் மொழியாலேயே உண்மையான சங்கதி முழுதும் அறிந்துகொண்டு, அவளுடைய அவிவேகத்திற்காக அவளைக் கண்டித்து, பிறகு அப்படித் தன்னையறியாமல் மிச்சம் பண்ணிப் பணம் வைத்திருக்கலாகாதென்று திட்டம் செய்தார். ஆதலால், ஸ்திரீகளே! நீங்கள் உங்கள் புருஷரறியாதபடி வயிற்றை ஒடுக்கி மிச்சம் பண்ணவேண்டாம். மிதமாய் உண்டு உடுத்தப் போதுமான செலவுசெய்துகொண்டு மிச்சப்பணத்தை உங்கள் கணவர்களுக்குத் தெரியச் சேர்த்து வையுங்கள். அவ்வாறு செய்துவருவீர்களானால், நீங்கள் சேர்த்து வைக்கும் பணத்திற்குக் கெடுதி நேரிடாதென்பது திண்ணம்.

---

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 1 MAR 1916 MADRAS

அர்ச். அந்தோனியார் தூதன்.

The St. Anthony's Messenger.

புத்தகம் II.] FIDES AC ROBUR. 1-3-1916. [நம்பர் 3.

## The Childhood of Christ.

### கிறீஸ்துநாதரின் குழந்தைப்பருவம்.

பரிசுத்த திருக்குடும்பமானது சம்மனசானவரால் எச்சரிக்கையோடே நடத்தப்பட்டு எஜிப்து தேசத்தைவிட்டுத் திரும்பி வந்து நசரோத்தூரில் வாசம்பண்ண ஆரம்பித்தது. நசரோய ஸ்திரீகளைப்போலவே தேவமாதாவும் தனது திவ்விய குமாரனை ஒரு சமயம் கைகளிலும், மறுசமயம் இடுப்பிலும், மற்றொரு சமயம் தோளிலும் தூக்கிக்கொண்டு செல்வதை நசரோத்தூரார் கண்ணாரக்கண்டனர். அர்ச். சூசையப்பர் தச்சுத் தொழிலோடு கொல்லு வேலையும் சேர்த்துச் செய்துகொண்டு பகல் முழுதும் வருந்தி உழைத்துவந்தார். அவதரித்த தேவசுதனைத் தழுவிச் சீராட்டிப் பாராட்ட அவர் பலமுறை ஒரு நிமிஷ நேரம் தமது வேலையை விட்டுவிடுவார்.

நமது கர்த்தருக்கு நான்கு வயது நடக்கையில் மோசேஸ் என்னும் மகா முனிவருக்குக் கொடுக்கப்பட்ட தேவ கட்டளைப்படியே செய்யப்பட்ட நீல நிறமான தொங்கலங்கியைக் காலைதோறும் கன்னிமரியம்மாள் தனது புத்திரனுக்கு உடுத்திவந்தாள்.

நாட்கள் செல்லச் செல்லப் பரிசுத்த மாதா தனது மைந்தனுக்குச் சில வேத வசனங்களைக் கற்பித்து வந்தாள். காலைதோறும் ஜெபம் பண்ணும்பொழுது அவர் தமது பரிசுத்த திருச் சிறுகரங்களைச் சேர்த்துக்கொள்ளவும், யூதர்கள் வழக்கமாய்த் தினசரி காலையிலும் மாலையிலும், "கர்த்தர் ஒருவர் மாத்திரமே சர்வேசுரன். அவரை உன் முழு ஆத்துமத்தோடு எப்பொழுதும் சிநேகிப்பாயாக," என்று சொல்லிவரும் ஜெபத்தைத் தன்னோடு சொல்லவும் கற்பித்தாள்.

ஆறு பிராயம் நடக்கையில் நமதாண்டவர் மற்ற நசரோயச் சிறுவர்களோடு சேர்ந்துகொண்டு அவ்வூரிலிருந்த பாடசாலைக்கு ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் சென்று வாசிக்கவும் எழுதவும் வேதாகமத்தை மனப்பாடம் பண்ணவும் கற்றுக்

கொள்ள ஆரம்பித்தார். நமது கர்த்தர் சத்தியமாகவே சர்வ ஞானமுள்ளவராயிருக்கிறபடியால் இது அவருடைய மனுஷ சுபாவத்திற்கு மாத்திரம் பொருந்தியது என்று நாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

அவருக்குப் பன்னிரண்டு வயது ஆரம்பித்ததும், அவர் அர்ச். சூசையப்பரிடம் வேலை கற்றுக்கொண்டு அவரோடு உழைத்துத் தமது ஜீவனத்துக்குச் சம்பாதிக்கத் துவக்கினார். அவர் அக்காலத்தில் தமது தாய் தந்தையருக்கு, விசேஷமாய்த் தமது பரிசுத்த மாதாவுக்கு, அநேக வேலைகளில் உதவி புரிந்து வந்தார். அவர் தமது தாயாருக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்திக்கொடுப்பதாகவும், கீழ்த்திசை மாதர்களைப்போல் தமது அன்னை தண்ணீர்க்குடம் தூக்கிக்கொண்டு செல்ல உதவி செய்வதாகவும் நாம் தாராளமாய் எண்ணலாம். பானம் பண்ணினவன் என்றென்றைக்கும் தாகமடையாதபடி ஜீவிய ஜலத்தை மனிதர்களுக்குக் கொடுக்கப் பூமியில் வந்து அவதரித்தவராகிய தேவசுதனே இப்படிச் செய்யத் திருவுளமானார்.

நம்மோடிருக்கும் தேவனாகிய எம்மானுவேலே அவ்வீட்டுக்குச் சந்தோஷமும் மகிமையுமாய் இருந்தார். உன்னதத்திலிருந்து அவருடைய தேவபிதா கன்னிமரியம்மாளையும் சூசையப்பரையும் தமக்கு வெகு பிரியமான நேசசுதனையும் அன்போடு பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தார். (தூதன்.)

## The two blacksmiths.

## இரண்டு கொல்லர்.

ஒரு ஊரில் கொல்லர் இருவர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் இரவும் பகலும் ஞாயிற்றுக்கிழமையிலே முதலாய் இடைவிடாமல் கஷ்டப்பட்டு வேலை செய்வான். அப்படியிருந்தும் அவனுக்குச் சவுக்கியமுமில்லை, பாக்கியமுமில்லை. மற்றவனோ அவ்வளவு கஷ்டப்படுகிறவனுமல்ல, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்கிறவனுமல்ல; இருந்தாலும் கொஞ்சம் பணக்காரனாய்ச் சுகஜீவனம் செய்துவந்தான். அவன் அதைக் கண்டு, “இந்த வித்தியாசமிருப்பானேன்? பணஞ் சேகரிக்கவும் சுகமாயிருக்கவும் என்ன உபாயம் செய்கிறான்? விசாரிப்போம்” என்று தனக்குள்ளே தீர்மானித்து இவனிடம் வந்து, “சிநேகிதா! நான் இடைவிடாமல் வேலை செய்தாலும் நிர்ப்பாக்கியப்படுகிறேனே! நீ என்னைப்போல் அம்மாத்திரம் பிரயாசப்படுகிறவனல்ல. இருந்தாலும் உனக்கு குறைவில்லை. இதற்குக் காரணம் என்ன?” என்று கேட்டதற்கு, இவன்,



“அப்பா! பணத்தைச் சம்பாதிக்க நான் செய்கிற உபாயத்தை இதோ உனக்கு வெளிப்படுத்துகிறேன். ஞாயிற்றுக்கிழமை ஒருக்காலும் நான் வேலை செய்கிறதில்லை. நான் அடைந்திருக்கும் சுகத்துக்கும் இதுவே காரணமன்றி வேறில்லை. என்னைப்போல் நடந்துவருவாயாகில், நீயும் என்னைப்போல் சுகத்தையும் செல்வத்தையும் அனுபவிப்பாய்” என்று சொன்னான். அவன் அதை நம்பி அன்றுமுதல் ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வதை நிறுத்திவிட்டான். சில வருஷங்களுக்குள் அவனுக்குச் சுகமும் சம்பத்தும் உண்டாகி மகிழ்ச்சியாய் வாழ்ந்துவந்தான். (சத்திய நேசன்.)

## It is Lent.

## இதோ! தபசுகாலம்.

இதோ தபசுகாலம் வந்திருக்கின்றது! கிறீஸ்துவர்களென்னும் மகிமைப் பெயரை நாம் தரித்துக்கொண்டிருக்கிறோமே! ஆதலால், நாம் மெய்யாகவே நமது இரட்சகராகிய கிறீஸ்துநாதரைப் பின்செல்லுகிறவர்களாயிருப்போமானால் இந்தத் தபசு காலத்தில் பிரபஞ்சத்தின் இன்ப சுகங்களை வெறுத்தடக்கிக் கல்வாரி மலைக்கு அவருடைய திருவடிகளைப் பின்பற்றி நடந்து செல்வோமாக. கல்வாரி மலைக்கும் மோட்ச லோகத்திற்கும் சிலுவையின் பாதையைத் தவிர வேறு மார்க்கம் இல்லாமையால் நாம் அந்தச் சுகிர்த நெறியிலேயே ஒழுங்காய் நடந்துபோகக்கடவோம்.

இதோ தபசுகாலம்! தபசுகாலமானது ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரிக்கவேண்டிய காலமென்றும், ஜெபதபதானதர்மங்களைச் செய்துகொண்டு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டியகாலமென்றும் கிறீஸ்துவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது. இராத்திரிதோறும் ஜெபமாலை சொல்லும் நல்ல வழக்கத்தை மறந்துவிடலாகாது. குடும்பத்தைச் சேர்ந்த யாதாமொருவர் இக்காலத்தில் கூத்து, நாடகம் முதலிய விநோத வேடிக்கை ஸ்தலங்களுக்குச் செல்வது நிந்தைக்கிடமாகும் என்று யாவரும் நினைத்துக்கொள்ளவேண்டும்.

## Lenten Rules.

## தபசுகாலத்தில் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

i. பெரிய வெள்ளிக்கிழமையைத் தவிர மற்ற ஒருசந்தி நாட்களில் முட்டை, பால், வெண்ணெய் முதலியவற்றை உபயோகித்துக்கொள்ளலாம்.

2. தபசுகாலத்தில் வரும் சகல புதன் வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையிலும் மாமிசம் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது.

3. திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையைத்தவிர மற்றச்சனிக்கிழமைகளிலும், பிரதான போஜனத்தின்போது மாத்திரம் ஒருவேளை மாமிசம் சேர்த்துக்கொள்ளலாம்.

4. ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லாப் போசன வேளையிலும் மாமிசம் சேர்த்துக்கொள்ளலாம்.

5. ஞாயிற்றுக்கிழமைகளில் முதலாய் ஒரே போஜனத்தில் மாமிசமும் மீனும் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

6. ஏழுவயதுக்கு மேற்பட்டவர்கள் யாவரும் மேலே குறிக்கப்பட்டிருக்கிற சுத்தபோசன ஒழுங்குகளை அனுசரிக்க வேண்டியது.

7. இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீ பூமான்கள் யாவரும் வியாதி முதலிய விசேஷ விக்கினம் இல்லாவிட்டால் தபசுகாலத்தில் வரும் ஏழு வெள்ளிக்கிழமைகளிலும் பெரிய சனிக்கிழமையிலும் ஒருசந்தி அனுசரிக்கவேண்டியது.

## Go to Joseph !

### சூசையப்பரிடம் போங்கள் !

பாரவோனரசன் எஜிப்து தேசத்தாருடைய துன்பகாலத்தில் அவர்களை நோக்கி, "சூசையப்பரிடம் நீங்கள் போங்கள்" என்று சொன்னது போலவே, பூமியில் அவதரித்த கர்த்தர் அடங்கிக் கீழ்ப்படிந்து வந்த மகா அர்ச்சியசிஷ்டவராகிய சூசையப்பருடைய உதவியை நம்பிக்கையோடு நாடிச்செல்வோமாக! அவர் குடும்பங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் பாதுகாவலும், தொழிலாளிகளுக்கு நண்பரும், மரிக்கிறவர்களுக்கு உத்தம காவலாளியுமாயிருக்கிறார். அர்ச். சூசையப்பர் சேசுநாதர் சுவாமியையும் கன்னிமரியம்மாளையும் போஷித்துக் காப்பாற்ற கைப்பாடுபட்டு வேலை செய்வதில் தமது காலத்தைச் செலவழித்துவந்தார். அவர் தாம் நேசித்து வந்தவர்களுக்காக நெற்றி வேர்வை நிலத்திலே சிந்தக் கஷ்டப்பாடுபட்டு ஆகாரத்தைச் சம்பாதித்தார். இது தொழிலாளிகளுக்கு எவ்வளவு நல்ல மாதிரிகை! வேலை செய்வதின் மகத்துவத்தைக் கற்பிக்க அர்ச். சூசையப்பர் தாழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் தொழில் செய்துவந்தார். அவர் தமது



கடமையைச் சரிவர நிறைவேற்றுவதிலும், தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட திருக் குடும்பத்தைப் பாதுகாப்பதிலும் தமது ஜீவிய காலத்தைச் செலவிட்டபடியால், அவர் சர்வேசுரனுக்கே ஊழியம் செய்தார். அர்ச். சூசையப்பருடைய இப்படிப்பட்ட சுகிர்த ஜீவிய ஒழுக்கம், அவருடைய வணக்கத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள இந்த மார்ச்சு மாதத்தில் உங்கள் ஞாபகத்தில் இருப்பதாக.

## Welcome to the Messenger.

### தூதனுக்கு நல்வாழ்த்து.

நமது தூதனைப் புகழ்ந்து பேசிவந்த பல கடிதங்களில் சிலவற்றை, தூதனை வாசிக்கும் நண்பர்களுக்கு உற்சாகம் உண்டு பண்ணும்படி யாம் இங்கு மொழிபெயர்த்திருக்கின்றோம்.

1. "தூதனை நடத்திவருகையில் என்ன கஷ்டம் நேரிடினும், தைரியத்தையும் ஊக்கத்தையும் கைவிடவேண்டாம். நன்மை எவ்வளவு சிறிதேனும், அதைச்செய்யத் தொடங்கினால் துன்பமில்லாமல் முடிவுபெறா."

2. "அர்ச். அந்தோனியார் தூதன் மிகவும் நேர்த்தியான ஓர் பத்திரிகை. அது தீக்ஷண்யமான பாலியத்திற்கும் உறுதியுள்ள நம்பிக்கைக்கும் அடையாளமாய் இருக்கிறது. அது தனக்கு முடியாக அணிந்திருக்கும் "Fides ac Robur" என்னும் நீதிமொழி தற்காலத்தில் தைரியத்தையும் பிற்காலத்தில் விசுவாசத்தையும் உண்டுபண்ணத்தக்க ஓர் அழகிய மொழியாம். ஆகையால், அன்பார்ந்த தூதா! மனுமக்களுடைய ஆத்துமங்களில் உன்னுடைய நீதிமொழிகளால் பாய்ந்து, அங்குள்ள களைகளைப் பிடுங்கி, நல்ல விதைகளை விதைத்து, ஆத்துமங்களுக்குச் சத்துருவாகிய பசாசைத்துரத்தி அவற்றில் தேவ இஷ்டப்பிரசாதத்தை வளரச்செய்து காப்பாற்றுவாயாக."

3. "இச்சிறிய பத்திரிகையைப் புது வருட நன்கொடையென்று சொல்லலாம். தைரியத்தைக் கைவிடவேண்டாம். இப்பத்திரிகை நூதனமாயினும் அது தற்காலத்துக் கேற்றதாயும் மிக்க நன்மை பயக்கக்கூடியதாயும் இருக்கின்றது. ஆனால் தூதன் நீலகிரி மலைமீதுள்ள ஸ்தலங்களில் மாத்திரம் உலாவுவது சரியன்று."

4. "இப்பத்திரிகை போகுமிடங்களிலெல்லாம் அது ஜனங்களுக்கு நன்மை செய்து, ஓங்கி வளர்ந்து வாழ்க! இத்

தூதனுக்குத் தைரியமும் பலமும் விடாமுயற்சியும் உண்டாகும்படி சர்வேசுரனும் அர்ச். அந்தோனியாரும் உதவி செய்வார்களாக!"

## How an ignorant woman pretended to give Baptism.

### ஞானஸ்நானம் தவறாய்க் கொடுத்துச் சரியாய்க் கொடுத்ததாக எண்ணியிருந்த ஓர் ஸ்திரீ.

சிலகாலத்துக்குமுன் ஓர் வயதுசென்ற ஸ்திரீ தன்னுடைய பங்கு சுவாமியாரிடம் போய், "சுவாமி! என் மகனுடைய குழந்தை பிறந்த எட்டாம்நாள் இறந்துவிட்டது" என்று சொன்னாள். "குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதா?" என்று குருவானவர் அவளைக் கேட்டார். அவள், "ஆம், சுவாமி! அது இறக்குமுன் நான் அதற்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்" என்று மறுமொழி சொன்னாள். குருவானவர், "குழந்தைக்கு எப்படி ஞானஸ்நானம் கொடுத்தாய்?" என்று கேட்க, அவள், "நான் குழந்தையின் தலைமேல் தண்ணீர் வார்த்து விசுவாச மந்திரத்தைச் சொன்னேன்" என்றாள். "குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லையே! ஆதலால் அபிஷேகம் செய்யப்பட்ட இடத்தில் அதை அடக்கம் செய்யக்கூடாது" என்று குருவானவர் சொன்னார்.

குறிப்பிடம் சொல்வதைக் கேளுங்கள் :—

ஞானஸ்நானம் கொடுக்கிறது எப்படி ?

1-வது. திருச்சபை ஞானஸ்நானம் கொடுக்கிற கருத்தோடே நானும் ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று மனதிலே நினைத்துக்கொள்ளுகிறது.

2-வது. பிள்ளைக்கு இடவேண்டிய பேரை உச்சரித்து அதன் தலையின்பேரிலே தண்ணீர் வார்க்கிறபோது தான் தானே சொல்லவேண்டியதாவது: 'பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே நான் உன்னைக் கழுவுகிறேன்.'

அவஸ்தை சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியதோ? அப்படிப்பட்ட சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதுதான்.



குருவானவர் வந்து ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாத அவசர சமயத்தில் ஞானஸ்நானம் கொடுப்பது எப்படியென்று எல்லாக் கிறீஸ்துவர்களுக்கும் தெரியவேண்டும். குழந்தைகளைக் கோவிலில் ஞானஸ்நானம் பெறக் கொண்டுவர ஒரு பொழுதும் தாமதம் செய்யக்கூடாது. ஞானஸ்நானமில்லாமல் இரட்சண்ணியம் கிடையாது என்ற சத்தியத்தை அவர்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது.

## Even St. Anthony may Find it hard.

### அர்ச். அந்தோனியாருக்கும் கடினமாயிருக்கலாம்.

சிலகாலத்துக்குமுன் ஒரு அஞ்ஞானிப் பெண்பிள்ளை பின்வருமாறு அர்ச். அந்தோனியாரிடம் வேண்டிக்கொண்டாள் :—

"வல்லமையுள்ள அர்ச். அந்தோனியாரே! எனக்குக் கடன்கொடுக்க வேண்டிய 8 பேர்களையும் அவர்கள் தனித்தனியே கொடுக்கவேண்டிய ரூ. 12; ரூ. 22; ரூ. 47; ரூ. 38; ரூ. 65-12-0; ரூ. 3-8-0; ரூ. 3; ரூ. 20-ஐயும் எனக்குக் கொடுக்கும்படியாக அவர்களுக்கு நல்ல மனதைக் கொடுப்பீராக! என்னுடைய வேண்டுதலின்படி என் கடன்கள் எனக்குக் கிடைக்குமானால், நான் உமக்கு ரூ. 10 காணிக்கையாகக் கொடுப்பது மல்லாமல் உமக்குத் தோத்திரமாக ஒரு ஜெபம் ஜெபிக்கும்படியாகவும் செய்கிறேன்."

அர்ச். அந்தோனியார் இவளுடைய ரூபாய்களையெல்லாம் பவுன்களாக மாற்றி இந்தப் பெண்பிள்ளையுடைய மனதைத் திடப்படுத்தி அவளை உண்மையான கத்தோலிக் வேதத்தில் சேர்ப்பாராக! அவளுடைய ஆத்துமம் எல்லாத் திரவியங்களிலும் விலையுயர்ந்ததாய் இருக்கிறது.

## General Joffre and the Sergeant.

### ஜெனரல் ஜோப்ரும், ஸார்ஜன்டும்.

ஜெனரல் ஜோப்ர் போர்முனையில் சைனியங்களைப் பரிசோதித்துக்கொண்டிருக்கையில், பராக்கிரமத்திற்காகக் கொடுக்கப்பட்ட மிலிட்டரிக் கிராஸ் (Military Cross) என்னும் ஓர் வெகுமதியைப் பெற்றிருந்த ஒரு ஸார்ஜன்டு ஜெனரல் ஜோப்ருக்குமுன் கொண்டுவரப்பட்டார். "நான் உமக்கு லெப்டினன்ட் (Lieutenant) உத்தியோகம் கொடுக்கலாமா?" என்று ஜெனரல் ஜோப்ர் ஸார்ஜன்டைக் கேட்டார். அதற்கு ஸார்ஜன்டு, "ஜெனரலே! எனக்கு அது வேண்டாம். அந்த

உத்தியோகத்துக்கு வேண்டிய சாமர்த்தியம் எனக்குக் கிடையாது" என்று சொன்னார். "உமக்கு வேண்டியதெல்லாம் உம்மிடமிருக்கிறதால், நான் உமக்கு ஒன்றும் கொடுக்கமுடியவில்லை. ஆனால் நீர் நம்மோடு நாளை சாப்பிடவேண்டும்" என்று ஜெனரல் சொன்னார். அப்படியே மறுநாள் சேனாதிபதியின் வண்டியில் ஸார்ஜண்டு கொண்டுபோகப்பட்டு, அவரோடு உட்கார்ந்து சாப்பிட்டார்.

## Far and Near.

### நானா சங்கதிகள்.

சங். டூர்னியர் சுவாமியார் (Rev. Fr. L. Tournier) சில நாளைக்குமுன் எழுதிய கடிதத்தில், குன்னூரிலுள்ள சகல கிறீஸ்துவர்களுக்கும் இந்த வருஷம் பரிசுத்தமாயும் பாக்கியமாயும் இருக்கும்படியாக அவர்களை வாழ்த்தி, அவர்களைத் தம்முடைய ஜெபத்தில் எப்பொழுதும் மறக்கிறதில்லையென்று சொல்லியிருக்கிறார்.

நல்ல கத்தோலிக் கிறீஸ்துவரும் வெகுகாலமாய் நீலகிரி மலையில் பிளாண்டருமாய் (Planter) இருந்த ஜே. ஹென்ஜி துரை (Mr J. Henzie) சென்ற-மீ 11-உ குன்னூரில் மரணமடைந்த சங்கதியை விசனத்துடன் வெளியிடுகிறோம். அவருடைய ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவதாக.

குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவில் உதவி சுவாமியாராயிருந்த சங். N. மதலைநாதசுவாமியார் (Rev. Fr. N. Madalay) அத்திக்கோடு உதவிப் பங்குசுவாமியாராக மாற்றப்பட்டு, அவருக்குப் பதிலாக சங். லாசர் சுவாமியார்(Rev. Fr. Lazar) நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய வருகை நன்மையாய் இருப்பதாக! லூர்துமாதா தரிசனை வருஷோற்சவத் திருநாள் சென்ற மீ 11-உ அர்ச். அந்தோனியார் கோவிலில் வழக்கப்படி சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. காலைப் பூசையில் அநேகர் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டார்கள். மாலையில் திரளான கிறீஸ்துவர்கள் பக்தி வணக்கத்துடன் கைகளில் மெழுகுவர்த்திகள் பிடித்துக்கொண்டு ஒழுங்காய் அணிவகுத்து செல்ல ஓர் சுற்றுப்பிரகாரம் நடந்தது. பின்பு கோவில் நிறைய இருந்த ஜனங்களுக்குத் தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.

---

# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 4.

OFFICE OF THE REGISTRAR ... 8 - APR 1915

## Swadeshism in Religion.

### மதத்தில் சுதேசாபிமானம்.

இந்தியாவில் ராஜ்ய பரிபாலனத்தில் காணப்படுகிற சுதேசாபிமானம் மதசம்பந்தமான எல்லா விஷயங்களிலும் பிரவேசிக்கப் பிரயாசப்படுகின்றது. சிலநாட்களுக்குமுன் இந்து மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு பிரசங்கி ஓர் பொதுக்கூட்டத்தில் மத விஷயத்திலும் ஜனங்களிடத்தில் சுதேசாபிமானம் இருக்க வேண்டுமென்று போதித்து மிஷனெரிமார்களையும் அவ்விதமே செய்யும்படி வற்புறுத்தினார்.

இவ்வித அபிப்பிராயம் ஒரு அஞ்ஞானி அல்லது பதிதனிடத்தில் காணப்படுவது ஆச்சரியமல்ல. ஸ்வய ஆட்சியுள்ளதும், தங்களிஷ்டப்படி நடப்பிக்கக் கூடியதுமான ஓர் இந்திய சபை உண்டாகும் காலத்தை எதிர்பார்த்திருக்கும் பதித மதத்தைச் சேர்ந்த இந்திய கிறீஸ்துவர்கள் அநேகர் இருக்கிறார்கள். கத்தோலிக் திருச்சபையின் நிருமாண நிபந்தனைகளையும் நீதியான ஆளுகையையும் அறியாத சில கத்தோலிக் கிறீஸ்துவர்களும் அவ்வண்ணமே சிலவேளை ஆசிக்கலாம்.

இவ்வெண்ணம் உண்மையுள்ள கத்தோலிக் கிறீஸ்துவர்களிடம் காணப்படவே கூடாது. ஏனென்றால், ஒரே திருச்சபையேயன்றி, இரண்டு திருச்சபைகள் இருக்க முடியாது. மற்ற மதங்களைப்போல் கத்தோலிக் திருச்சபையானது ஜாதி, இடம், காலமென்னும் பேதங்கள் இல்லாமல் உலகமெங்கும் பொதுச் சபையாய் இருக்கிறது. கத்தோலிக் திருச்சபைக்கு எவ்விடமும் தன்னிடமே. அது பிரவேசிக்கக்கூடாத இடமேயில்லை. "யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. நீங்கள் எல்லாரும் கிறீஸ்துநாதரில் ஐக்கியமாய் இருக்கிறீர்கள்" என்று அர்ச். சின்னப்பர் கலாத்தியருக் கெழுதியபொழுது கிறீஸ்துவேதம்

ஜாதிப் பிரிவினையால் வேற்றுமைப்படாதென்றே தெரிவித்தனர். எல்லா ஜனங்களையும் சத்திய வேதத்தில் சேரச்செய்வதே கத்தோலிக் திருச்சபையின், கொள்கை. "ஆகையால், நீங்கள் போய்ச் சகல ஜாதி ஜனங்களுக்கும் உபதேசியுங்கள்" என்றே திருச்சபையை ஏற்படுத்திய கிறீஸ்துநாதர் உரைக்கச் சித்தமானார். தான் விசுவசிக்கும் சத்தியங்களிலும் தன் நீதிக் கோட்பாடுகளிலும் தன் பரிபாலனத்திலும் வேறுபடாமல் கத்தோலிக் திருச்சபை எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒரே நிலையாய் இருக்கிறது. நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் ஒரே திருச்சபையை ஸ்தாபித்தார். எப்படியென்றால், "இந்தக் கல்லின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்று சொன்னாரேயொழிய, "திருச்சபைகளைக் கட்டுவேன்" என்று சொல்லவேயில்லை. அன்றியும், சேசுநாதர் தமது கத்தோலிக் திருச்சபையை ஒரே தலைவருடைய அதிகாரத்திற்கு உட்பட்ட ஆளுகையையுடையதாய் இருக்கும்படி ஸ்தாபித்தார் என்னும் சத்தியம், "அப்போது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் உண்டாம்," என அவர் மொழிந்த வாக்கால் தெளிவாக விளங்குகின்றது. மந்தையானது சகல கத்தோலிக் கிறீஸ்துவர்களே. மேய்ப்பனோ அர்ச். பாப்பானவர்தான்.

விசுவாசிகள் வணங்கவும், மதத்தைச் சேர்ந்த விஷயங்கள் யாவற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கவும், அவசியமாயுள்ள ஓர் சிரேஷ்ட குருத்துவ ஆளுகை கத்தோலிக் திருச்சபையில் நிதர்சனமாய் இருக்கிறது. யாதாமொருவன் அவ்வாளுகைக்குக் கீழ்ப்படிந்து நடவானாயின், அவன் கத்தோலிக் கிறீஸ்துவன் அல்ல.

மேலே கூறியுள்ள கருத்துகள் இத்தூதனின் நிருபநேயர்களுள் ஒருவராகிய F. E. B. என்பவரால் நினைப்பூட்டப்பட்டன.

(தூதன்.)

---

## A Good Argument.
## ஓர் வேத தர்க்கம்.

சில வருஷங்களுக்குமுன் ஒரு கிராமத்தில் ஒரு நல்ல கத்தோலிக் கிறீஸ்துவர் இருந்தார். இவர் ஒருநாள் தம்தூருக்கருகிலிருந்த புரோட்டெஸ்டாண்ட் பாதிரியாரோடு வேத விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், பாதிரியார், "உங்கள் கத்தோலிக் மார்க்கம் சுரூப வணக்கத்தால் வழுவி அக்கியான



மதமாய்விட்டது" என்றார். இதைச் செவியுற்ற கத்தோலிக்கர், "ஐயா! உமது வேதாகமத்தில் மத்தேயு சுவிசேஷம் 16-ம் அதிகாரம் 18, 19-ம் வசனங்களை வாசியும். 'மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்தில் நீ கட்டுவது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும், என்று நமது இரட்சகர் மொழிந்திருக்க, அத்திருச்சபை வழுவி அக்கியான மதமாய்விட்டது என்று சொல்வது பெரும் பிசகு" என்றார். உடனே, பாதிரியார், "இதோ பாரும்! அதே அதிகாரம் 23-ம் வசனத்தில், அவரே, திரும்பிப் பேதுருவைப்பார்த்து 'எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே!' என்று கூறியிருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார். அப்பொழுது கத்தோலிக்கர் பாதிரியாரை நோக்கி, "ஐயா! அப்படியானால் அந்தச் சாத்தானால் எழுதப்பட்ட நிருபங்களை உமது பைபிளில் ஏன் சேர்த்து வைத்திருக்கிறீர்? உடனே உமது சபையாருக்கு முன்பாக இவற்றைக் கிழித்து நெருப்பில் சுட்டெரித்துவிடும்" என்று சொல்லிப் பாதிரியாரை மௌனஞ் சாதிக்கச் செய்தார்.

---

## The Benefit of a Parish Library.
## பங்கிலுள்ள (லைபிரேரி) புத்தகசாலையால் விளையும் நன்மை.

உதக மண்டலத்திலிருந்து நிருப நேயர் ஒருவர் நம் தூதனுக்குப் பின் வருமாறு எழுதுகிறார்.

இக்காலத்திலோ சிறுவர்கள் நூதன விஷயங்களை அறிந்துகொள்ளும்பொருட்டு பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வாசிக்க ஆவல்கொள்ளுகிறார்கள். ஆனால் துரதிஷ்ட வசமாய் அவர்கள் கையில் அகப்படும் வாசகங்களோ அற்பக் காரியங்களும், அக்கிரமச் செயல்களும், அவபக்தியும் நிறைந்தவை. கத்தோலிக் தாய் தந்தையரே! உங்கள் மக்கள் மாசற்றவர்களாயிருப்பதினால், உங்களுக்கே கூச்சத்தை உண்டாக்கும்படியான புத்தகங்கள் அவர்களைக் கெடுக்காது என்று சொல்லாதிருங்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை இளம் பிரா

யத்தில் கத்தோலிக் மதானுசார ஒழுங்கின் பிரகாரம் வளர்க்கத் தவறினமையால், அவர்கள் உங்கள் மனதைப் புண்படுத்தி உங்களை மதியாமல் வேதக் கடமைகளை அசட்டை செய்து துன்மார்க்கராய் நடப்பார்களேயாகில், அக்குற்றம் வெகுவாய் உங்களையே சாரும். ஆதலால் உங்கள் பங்கில் கத்தோலிக் புத்தகசாலை ஒன்றை ஏற்படுத்தவாவது அல்லது ஏற்கனவே ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்குமாகில் அதை விருத்திசெய்து பாடசாலையிலும் வீட்டிலும் நேரிடும் கல்விக் குறைவைச் சீர்ப்படுத்தவாவது முறுமுறுக்காமல் உங்களாலியன்ற பொருளுதவி செய்யுங்கள்.

உங்கள் மனைவி மக்களுடைய அழிந்துபோகும் சரீரத்துக்கு அழகு செய்ய ஆபரணங்களில் பணத்தைச் செலவிடுகிறீர்களே! அவர்களுடைய அழியாத ஆத்தும நன்மைக்காக இரண்டு மூன்றணா செலவிட முறைப்படலாமோ? தவிர, நீங்கள் பொருளுதவி செய்வதால் மாத்திரம் புத்தகசாலை சரியாய் நடந்தேறி வராது. உங்களுக்கு நேரமிருக்கும்போது நீங்கள் புத்தகசாலைக்குப்போய் வாசித்துப் பிறருக்கு நன்மாதிரிகை காட்டவும், உங்கள் பிள்ளைகளும் உங்களுக்குக் கீழிருப்பவர்களும் கிரமமாய் வாசிக்கச் சென்று அதனால் விளையும் பலனைப் பெற்றுக்கொள்ளும்படி கவனிக்கவும்வேண்டும்.

தங்கள் மக்கள் நல்ல கிறீஸ்துவர்களாய் நடந்துவருகிறார்களா என்பதைக் கவனித்துவராத தாய் தந்தையருக்கு ஐயோ கேடாம்!

---

## Mortality of Infants.

### பாலர் மரணம்.

ஓர் வீட்டில் ஓர் குழந்தை பிறந்ததினால் உண்டாகிற சந்தோஷம் சீக்கிரத்தில் அது இறப்பதினால் துக்கமாய் மாறுவது விசனப்படத்தக்க காரியமே. கடவுள்தான் பிறப்புக்கும் இறப்புக்கும் அதிபதியென்பது சத்தியம். வாழ்வும் சாவும் நமக்கு அவருடைய சித்தத்தினாலே உண்டாகின்றன. ஆனாலும், ஒரு ஸ்திரீ தன் குழந்தையைக் குளத்தில் போட்டுவிட்டு அது சர்வேசுரனுடைய சித்தத்தினால் இறந்துவிட்டது என்று சொல்வது பெருந்தவறு. இந்தியாவிலே இறக்கும் குழந்தைகளுடைய தொகை சாதாரணமாய் இருக்கவேண்டிய தொகைக்கு மேற்பட்டிருக்கின்றது. முக்கியமாய் இது பெற்றோர்



களின் அஜாக்கிரதையினாலும் அவிவேகத்தினாலும் உண்டாகிறதென்பது திண்ணம்.

உணவுப்பொருள்களைக் கொடுப்பதில் அஜாக்கிரதையும், சுத்தமில்லாமையும், கவனக்குறைவும், வியாதிக்குத் தக்க ஔஷதங்களைத் தக்கமேரையாய்த் தக்கசமயத்தில் கொடாமையுமே பெரும்பான்மையான நோய்களுக்கும் மரணங்களுக்கும் ஏதுவாகின்றது. ஒரு குழந்தை வியாதிப்படும்பொழுது, ஒரு ஜோசியனையாவது மந்திரக்காரனையாவது சிலர் அழைக்கிறார்கள். பிறகு நன்மை செய்வதற்குப் பதிலாய் அதிக தீங்கை விளைவிக்கிற கொடிய மருந்துகளைப் பிரயோகிக்கிறார்கள். இதனால் பெரும்பாலும் மறுநாளே குழிவெட்டியை அழைக்கும்படி சம்பவிக்கிறது.

---

## A Sorceror Victim of his Ignorance.

### ஓர் சோசியன் தன் மூடத்தனத்தினால் உயிரிழந்தது.

ஒரு நாள் ஒரு இராஜா ஓர் பெரிய சோசியனை அழைப்பித்து, "நான் இன்னம் எத்தனைகாலம் ஜீவிப்பேன்?" என்று கேட்டதற்கு, சோசியன் சாஸ்திரத்தை நெடுநேரம் பார்த்து, "இராஜாவே! நீர் இன்னும் இருபதுவருஷகாலம் ஜீவிப்பீர்" என்று சொல்ல, இராஜா, "நீ இன்னம் எவ்வளவுகாலம் ஜீவிப்பாய்? சொல்" எனச் சோசியன் மயங்கிப் பயந்து பேசாமலிருந்தான். இராஜா இதைக்கண்டு கோபங்கொண்டு, "மூடா! நீ சாகப்போகிற காலம் உனக்குத் தெரியாதிருக்கையில், புறத்திச் சனங்கள் சாகப்போகும் காலம் உனக்குத் தெரியுமா? என்ன! இவ்விதமாய் என் குடிகளை மோசஞ் செய்யலாமா?" என்று சொல்லி, அவனுடைய தலையை வெட்டக் கட்டளையிட்டார்.

சோசியர், மந்திரவாதிகள் பசாசின் ஊழியர்களும் மோசக்காரருமாயிருப்பதால் அவர்களை வினவவும் வியாதிக்காரிடத்தில் வரவழைக்கவும் கூடாது.

---

## The Character Book.

### நன்னடத்தைப் புத்தகம்.

நீலகிரி ஜில்லாவில் போலீஸ் சூப்பெரின்டென்டெண்ட் Mr. லவ்லக் துரையவர்கள், வீட்டு வேலைக்காரர்களை ரெஜிஸ்

தார் செய்யும்படியாக ஏற்படுத்திய ஒழுங்கானது இந்த ஜில்லாவில் களவு முதலிய குற்றங்கள் குறையவும், எவ்விடத்திலும் நல்ல ஊழியர்கள் கிடைக்கவும் ஏதுவாயிற்று.

நல்ல வேலைக்காரனுக்கு நன்னடத்தைப் புத்தகம் வேண்டியதில்லை. "நேர்மைத்தனமே மேலான ஒழுக்கம்" என்பது வேலைக்காரர் சகலருக்கும் விசேஷித்த விருதாக இருத்தல் வேண்டும். முக்கியமாய் கத்தோலிக் வேலைக்காரர் தங்களுடைய விசுவாசத்தினாலும், உண்மையினாலும், மற்றுமுள்ள நன்னடக்கையினாலும், இதர மதத்தைச்சேர்ந்த வேலைக்காரர் அனைவருக்கும் மேல்வரிச்சட்டமாய் இருக்க வேண்டியது. மேலும் அவர்கள் இவ்வுலகில் தங்கள் எஜமானருக்கு ஊழியஞ் செய்யும்போது, தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஜீவிய புத்தகத்தில் குறித்து வைக்கும் தங்கள் பரலோக எஜமானனை எல்லாவற்றிற்கு முந்திப் பிரமாணிக்கமாய்ச் சேவிக்கவேண்டும் என்பதை மறந்துபோகக்கூடாது. ஒரு எஜமானனிடத்தில் வேலையிலமரும்போது கத்தோலிக்கர் தங்கள் வேதக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவும், விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப் போகவும் சுதந்தரம் கொடுக்கும்படி நிபந்தனை செய்துகொள்ளவேண்டியதவசியம். ஆனால் அவர்கள் தங்கள் எஜமானர்களை எவ்விதத்திலும் வஞ்சிக்கலாகாது. கோவிலுக்குப் போய்வர உத்தரவு பெற்றுக்கொண்டு, பூசைக்குப்போகாமல், தங்கள் சிநேகிதர்களோடு கூடிக்கொண்டு கடைகளிலும் மற்ற இடங்களிலும் வீணில் நேரத்தைக் கழிக்கக்கூடாது.

---

## An Edifying Procession.

### ஒரு முன்மாதிரிகையான சுற்றுப்பிரகாரம்.

சென்ற பெப்ரவரி-மீ 13-உ உதகமண்டலம் அர்ச். மோக்ஷ இராக்கினி மாதாக்கோயிலில் லூர்து நகர் அமலோற்பவமாதா தரிசன மகோற்சவம் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அத்திருநாளில் சுமார் 500 பேர் சம்மனசுக்களின் திவ்விய போஜனத்தை அருந்தும் பாக்கியம் பெற்றார்கள். சாயங்காலம் 5 மணிக்கு ஓர் விசேஷித்த சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. நமது கத்தோலிக் திருச்சபையில் நடக்கும் சிறந்த சடங்காசாரங்களுக்குக் குறைவில்லை; ஆனாலும் உதகமண்டலத்தைப்போன்ற இடத்தில்



நடந்த இந்தச் சுற்றுப்பிரகாரத்தில் கூடிய ஜனத்திரளும் பக்தியுள்ள கத்தோலிக் ஸ்திரீபுமான்கள் இருபக்கத்திலும் ஒழுங்காய் அணிவகுத்துத் தங்கள் கரங்களில் ஜெபமாலையை ஏந்தி ஜெபித்துக்கொண்டும், தங்களுடைய மோக்ஷ இராக்கினியை "ஆவே மரியா!" (மரியாயே வாழ்க!) என்று மனமுவந்து புகழ்ந்து பாடிக்கொண்டும் சென்ற காட்சியும் என்றும் மறக்கத்தக்கனவல்ல.

அக்கியான தேர் திருவிழாக்களில் நடக்கும் குடிவெறி களியாட்டங்களுக்கும் அனாசாரமுள்ள ஆடல் பாடல்களுக்கும், இந்த மேரை மரியாதை அடக்க ஒடுக்கமுள்ள சுகிர்த கத்தோலிக் சுற்றுப்பிரகாரத்துக்கும் எவ்வளவோ பாரதூர வித்தியாசம் விளங்குகின்றது! திருச்சபையில் நடக்கும் சுற்றுப்பிரகாரத்தில் அதனுடைய சத்துருக்களால் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்கு, ஜெருசலேம் பட்டணத்தின் திரளான ஜனங்கள், "ஓசன்னா!" என்னும் வாழ்த்துப் பாடிக்கொண்டு நமது திவ்விய கர்த்தரைத் தேவாலயத்துக்கு ஒட்டோலகமாய் அழைத்துச் சென்ற என்றும் மறக்கப்படாத சுற்றுப்பிரகாரமானது மேலான கண்டனமாயிருக்கிறது. (Thomas D. Veliath.)

---

## Christ is risen!

### கிறீஸ்து உயிர்த்தார்!

"கிறீஸ்து உயிர்த்தார்!" என்னும் வாக்கிய முழக்கமானது பாஸ்கு ஞாயிறன்று ஒவ்வொரு கிறீஸ்துவனுடைய இருதயத்தையும் சந்தோஷத்தால் பூரிக்கச்செய்கிறது. ஏனெனில் இந்நாளில் ஒவ்வொரு விசுவாசியும் நல்ல பாவசங்கீர்த்தனத்தால் தனது ஆத்துமத்தைச் சுத்திசெய்து தேவ நற்கருணையில் கிறீஸ்துநாதருடைய திவ்விய சரீரத்தையும் இரத்தத்தையும் உட்கொண்டு இந்த ஞான சந்தோஷத்தில் பங்கடையக்கடவான். "மனமுண்டானால் வழியுமுண்டு" என்பதற்கொப்ப, பாஸ்கு காலத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணித் தேவநற்கருணை உட்கொண்டு திருச்சபைக் கட்டளையை நிறைவேற்ற ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் நேரமுண்டு. ஆனதுபற்றி, "எனக்கு அதிக வேலையிருக்கிறது. நேரமில்லை." என்று சொல்வது கோழைத்தனமும் அசதி அசட்டைத்தனமுமுள்ளவர்களுடைய வீண் சாக்குப் போக்குகளாகும். ஆகையால் இப்பாஸ்குத் திருநாளின் ஞான சந்தோஷத்தை

யடையவும், நமதாத்துமங்களிலும் கிறீஸ்து எழுந்தருளிவர வேண்டியிருப்பதாலும் நாம் கடைசிநாள், கடைசிமணி, கடைசி நிமிஷம்வரையில் காத்திராமல் மேற்படி காரியத்தைத் தாமதமில்லாமல் உடனே செய்வோமாக.

---

## Here and There.
### நானா சங்கதிகள்.

கோயம்புத்தூர் மேற்றிராணியாரவர்களும் சங். ரிவியர் சுவாமியாரவர்களும் (Rev. Fr. Riviere) கோயம்புத்தூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த மேற்கேயுள்ள பங்குகளிலிருக்கும் கிறீஸ்துவர்களுக்கு உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தைப் பரிபாலிக்கப் போயிருக்கின்றனர்.

நமக்குப் புது வைசிராயாக (Viceroy) நியமிக்கப்பட்டிருக்கிற லார்ட் செம்ஸ்பர்டு பிரபு (Lord Chelmsford) பம்பாயில் மார்ச்சு-மீ 31-உ வந்து சேர்வதாக வதந்தி.

மிஸ்டர் யங் (Mr. Young, I. C. S.) துரையவர்களுக்குப் பதிலாய் மிஸ்டர் நாப் (Mr. A. R. Knapp, I. C. S.) துரையவர்கள் நீலகிரி ஜில்லா கலெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

“கத்தோலிக்கு நேசன்,” “Catholic Friend” என்னும் புதிய கத்தோலிக் மாதாந்தரப் பத்திரிகையொன்று இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் தனித்தனியே சென்ற ஜனவரி-மீ துவக்கிப் பிரசுரிக்கப்படுவதையறிந்து சந்தோஷப்படுகிறோம்.

சில தினங்களுக்குமுன் லூர்துநகர் அமலோற்பவக் கன்னிகையின் மேலுள்ள பக்தி விசுவாசத்திற்கு அடையாளமாக 27,000 பிரிட்டிஷ் யுத்த வீரர்களும் மாலுமிகளும் தங்கள் கையொப்பங்களை அந்நகரிலுள்ள அற்புத கெபியில் வைப்பிக்கும்படி அனுப்பினர்.

கேத்தையில் மலைவாசிகளான படுகரிற் சிலர் மனந்திரும்பி சத்திய வேதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். மற்றவர்களும் அவ்வாறே மனந்திரும்பி இரக்ஷணியமடையும்படி அமலதேவன் அருள்செய்வாராக!

நீலகிரி ஸப்கலெக்டர் Mr. கிரே (Mr. J. Gray, I. C. S.) துரைக்குப் பதிலாக Mr. பிளாக்கன்பரி (Mr. F. C. Blackenbury I. C. S,) துரை நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

19 MAY 1916


# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**May 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 5.


## The dignity of labour.
### உழைப்பின் மேன்மை.

மகா கீர்த்தி பெற்ற நெப்போலியனென்னும் (Emperor Napoleon) சக்கரவர்த்தியைப்பற்றி ஓர் அழகிய கதை சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சென்ற். ஹெலீனா தீவில் (St. Helena) இருக்கையில், ஒருநாள் அவர் போய்க்கொண்டிருக்கும் பாதையில் எதிர்முகமாய் ஒரு கூலியாள் பாரமான சுமையைத் தன் தோளில் சுமந்து வருவதைக் கண்டார். அவன் வழியை விட்டு அப்பால் நின்று தாம் போகும்படி தமக்கு வழிவிடப் பிரயாசப்படுகிறதைக் கண்ட நெப்போலியன், தாமே ஒதுங்கி நின்று கூலியாளை முதலில் போகவிட்டு, தம் பணிவிடைக்காரர்களைப் பார்த்து, “நாம் உழைப்பை கௌரவப்படுத்த வேணும்” என்று சொன்னார். அவர் சொன்னது சரி. உழைப்பு சிறந்ததே. கைத்தொழில் யாவருக்கும் மேன்மை தரக்கூடியதே.

ஹைஸ்கூல்களில் படித்துக் கல்வி கற்றிருக்கும் நமது வாலிபர்கள் கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளாததின் காரணம் அவர்களிடமுள்ள தகாத அகந்தையே. இது காரணத்தால்தான், கைத்தொழில் கற்றுக்கொள்ளுகிறது அவர்களுடைய கல்விக்கும் கவர்ணதைக்கும் ஏற்றதல்லவென்று நினைக்கிறார்கள். நன்றாய் கல்விகற்ற அநேக வாலிபர்களை நமது தேசத்தில் நாம் காண்கிறோம். முற்காலத்தில் அஞ்ஞானம் நிறைந்த கிறீஸ் (Greece) தேசத்திலும், ரோமை நகரிலும் (Rome) வேலைசெய்வது அவமானத்துக்குரியதென்று ஜனங்

கள் நினைத்திருந்தார்கள். ஆனால் கிறீஸ்துவேதமானது வேலை செய்வதைப் பரிசுத்தமாக்கி மேன்மைப்படுத்தினது. சேசுநாதர் இவ்வுலகில் இருக்கையில், தம்முடைய 30-ம் வயதுமட்டும் தச்சர்பிள்ளையாக வேலை செய்து வந்தார். சுறுசுறுப்புடன் வேலை செய்பவர்களுக்கு தரித்திரம் இன்னதென்று தெரியாது.

ஓர் கல் தச்சன் தன்கூட வாசித்த தோழனுக்கு எழுதியதாவது :—"உண்மையைப் பேசின், கைத்தொழில் செய்பவர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியதென்று சொல்வது சரியல்ல. கையில் பணமில்லாமலிருப்பதென்னவென்று எனக்குத் தெரியவே தெரியாது. பாடுபட்டு வேலை செய்பவர்கள் சிலவேளை தரித்திரத்தால் கஷ்டப்படலாம். ஆனால் இது அரிது. வேலையைச் சரிவர கவனியாமல் செய்தலும், தேர்ந்த வேலைக்காரர்களாயிருப்பினும் பின் காலத்தைக் கவனியாமல் வீண்செலவு செய்தலும், கைத்தொழிலாளிகளின் எளிமைத்தனத்திற்கும் தரித்திரத்திற்கும் காரணம்."

தாய் தகப்பன்மார்கள் செலவு செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாயும் செட்டாயுமிருப்பார்களாகில் அநேக குடும்பங்கள் மேன்மையான ஸ்திதியிலிருக்கலாம். நம்முடைய வாலிபர்கள் சிலாக்கியத்தையும் சோம்பல்தனத்தையும் விட்டுவிடுவார்களாகில், அவர்கள் வேலையில்லாமல் காலங்கழிக்கிறதை நாம் காணமாட்டோம்.

வேலை செய்ய யாரும் அஞ்சக்கூடாது. தங்கள் ஜீவனத்திற்காக உழைக்க எவரும் வெட்கப்படக்கூடாது. அயோக்கியமற்ற எவ்வேலையும் மகிமை பொருந்தியதாயும் மனிதர்களைப் பாக்கியவான்களாகவும் சன்மார்க்கமுள்ளவர்களாகவும் செய்யக்கூடியதாயுமிருக்கிறது. வேலையோ நாம் மோக்ஷத்தையடைய நமக்கு உதவியாயிருக்கிறது.

(சத்திய நேசன்.)

19 MAY 1916



## Save the Pence and the Pounds will take care of themselves.

## காசு விஷயத்தில் எச்சரிக்கையாயிருந்தால் பவுன் விஷயத்தில் எச்சரிக்கை தானே உண்டாகும்.

ஒருநாள் ஓர் அரசன் உற்சாகத்துடனும் மனமகிழ்ச்சியோடும் வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு ஆளைக் கண்டு, அவனோடு பேசத்துவக்கி, சிறிது நேரத்துக்குள் அவன் தினம் 12 அணாவுக்கு வேலைசெய்யும் அற்றைக்கூலிகாரனென்று தெரிந்துகொண்டான். பிறகு அரசன், "நீ தினந்தோறும் 12 அணாவைக்கொண்டு பிழைப்பதே எனக்கு அதிசயமாய் இருக்கிறதே! அப்படியிருக்க நீ இவ்வளவு சந்தோஷமுள்ளவனாய் இருப்பது எப்படி?" என்று கேட்க, அவன், "ஐயா! அத்தொகை முழுவதையும் நான் எனக்கே செலவழித்து விடுவேனாகில் தப்பிதவாளியாவேன். அதில் மூன்றில் ஒரு பாகம் என் ஜீவனத்துக்குப் போதுமானது. பின்னொரு பாகத்தைப் பழய கடனுக்காகக் கொடுத்துவிட்டு மற்றொரு பாகத்தைப் பிற்காலத்துக்கு ஆஸ்தியாகச் சேர்த்து வைக்கிறேன்" என்றான். அப்போது அரசன், இது எப்படி ஆகும் என்று கண்டுபிடிக்கக்கூடாமல் பிரமித்து நின்றதைக் கண்ட அவ்வேலையாள், "கேளும் ஐயா! நான் சம்பாதிப்பதை வேலை செய்யத்திராணியில்லாத என் தாய் தந்தையரோடும், வேலைசெய்யக் கற்றுக்கொள்ளவிருக்கும் என் குழந்தைகளோடும், பாகித்து அநுபவித்து வருகிறேன். இதனால் என் பெற்றோர் எனக்குக் காட்டிய அன்புக்குப் பிரதியன்பு செலுத்தி வருவதோடு, என் மக்கள் என் விருத்தாப்பியத்தில் என்னைக் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடனும் இருக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட அரசன் அவ்வேலைக்காரனுடைய நேர்மைத்தனத்திற்காக மகிழ்ச்சியடைந்து அவன் பிள்ளைகளுக்கு வேண்டிய பண உதவி செய்து வந்தான். இதனால் விருத்தாப்பியரான அவன் தாய்தந்தையர் கொடுத்த ஆசிர்வாதம் பலித்து, நன்றியறிதலுள்ள அவனுடைய பிள்ளைகள் அவனுக்குப் பிற்காலத்தில் ஏற்றபடி சகாயமாயிருந்தார்கள்.

(ஞானி.)

## Annual Report of the Society for Foreign Missions for the Year 1914.

## அந்நியதேசத்துப் போதகர் சபையின் 1914-ம் ஆண்டின் வருஷாந்தர ரிப்போர்ட்.

| | | கோயம்புத்தூர் மேற்றிராசனம் |
|---|---|---|
| மேற்றிராசனங்கள் | 34 | |
| மேற்றிராணிமார் | 46 | |
| கத்தோலிக்கரின் தொகை | 15,79,020 | 39,834 |
| கோவில்கள் | 5,846 | 120 |
| ஐரோப்பிய குருக்கள் | 1,321 | 38 |
| சுதேச குருக்கள் | 940 | 16 |
| உபதேசிமார் | 3,253 | 44 |
| குருமடத்திலுள்ள வித்தியார்த்திகள் | 2,336 | 16 |
| கன்னியாஸ்திரிகள் | 6,286 | 123 |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் | 31,788 | 305 |
| பாடசாலைகள் | 5,023 | 68 |
| மாணாக்கர்கள் | 1,67,456 | 5,039 |

## Correct thing for Confirmation.

### உறுதிபூசுதலுக்கு வேண்டிய சரியான காரியம்.

பிள்ளைகள் புத்தி விவரம் அறிந்து பிரதான வேத சத்தியங்களைக் கற்றுக்கொண்டதும், கிடைக்கக்கூடிய முதல் தருணத்திலே உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

அசட்டைத்தனத்தால் இளமையில் இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெறாமல் தவறிப்போனவர்களும் புதுக் கிறீஸ்துவர்களும் தங்களுக்கு வாய்க்கும் முதல் சமயத்திலேயே அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். வேண்டுமென்று இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுக்கொள்ளாதிருக்கிறவர்கள் பாவத்துக்கு உள்ளாகிறார்கள்.

அவ்வாறே, கூடிய சீக்கிரத்தில் தங்கள் பிள்ளைகள் உறுதிபூசுதல் பெற்றுக்கொள்ளும்படி கவனியாத தாய் தந்தையரும் பாவத்துக்குள்ளாகிறார்கள்.



உறுதிபூசுதல் பெற ஆயத்தம் பண்ணுகிறவர்கள் பிரதான வேத சத்தியங்களையும் இந்தத் தேவதிரவிய அநுமானத்திற்கும், இது நிறைவேறும்பொழுது வழங்கும் சடங்குகளுக்கு அர்த்தத்தையும் கற்றுக்கொள்ளவும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யவும் வேண்டும்.

சாவான பாவத்தோடு இந்தத் தேவதிரவிய அநுமானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவ துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

இந்தத் தேவதிரவிய அநுமானம் ஒருதரமாத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடியது. ஆதலால் யாதாமொருவர் இரண்டாம்தரம் இதைப் பெற்றுக்கொள்ள எத்தனிப்பது தேவ துரோகமாகும்.

---

## Death of two Missionaries.

### இரண்டு குருக்களது மரணம்.

குருக்களின் தொகை வெகு குறைவாயிருக்குமிக்காலத்தில் கோயம்புத்தூர் மேற்றிராசனத்தில் உழைப்பாளிகளான இரண்டு நல்ல குருக்கள் காலஞ்சென்றது விசனகரமான விஷயம்.

**சங். வில்லியன் (Rev. Fr. Villien)** சுவாமியார் காலஞ்சென்றார்:—இவர் ஏப்பிரல்-௴ 7-௳ கோயம்புத்தூரில் திடீரென இறந்தார். அவருக்கு வயது 73. இந்த மிஷனில் 46 ௵ உழைத்தவர். இந்தியாவுக்கு வந்ததும் குன்னூர்ப் பங்கைக் கொஞ்சகாலம் பார்த்துவந்தார். பிறகு குருமடத்தையும் பிரொகூரையும் (Procure) மாறி மாறி மேற்பார்த்து வந்தார். இந்த மேற்றிராசனத்தில் குரு மடம், சென்ற். தியடோர் ஸானிடோரியம், அர்ச். காணிக்கை மாதா கன்னியர்மடம் முதலிய பெரும் கட்டடங்களைக் கட்டினார். சுமார் 30 வருஷ காலம் பிதாவினது அன்போடும் பராமரிப்போடும் கன்னியர்மடத்து சிரேஷ்டராயிருந்தார்.

புகழ்ச்சி விரும்பாது தாழ்ச்சியோடு உழைத்து வந்தார். "வலது கை செய்வதை இடது கை அறியக்கூடாது" என்றறிந்து சாந்தத்தோடும், உதாரகுணத்தோடும் தமது அலுவல்களைச் செய்து வந்தார். அமரிக்கையோடும் பக்தியோடும் கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று, பாக்கியமான மரணமடைந்தார். உலகத்தில் சர்வேசுரனை பிரமாணிக்க

மாய்ச் சேவித்து வந்ததுபோலவே, இப்போதும் மோட்சத்தில் அவரைச் சதா ஸ்தோத்தரித்து தாம் செய்து வந்த உத்தம ஊழியங்களுக்குப் பலனாக சொல்லொண்ணாப் பேரின்ப பாக்கியம் அனுபவிப்பாரென்று நம்புகிறோம்.—R. I. P.

**சங். குடீன் (Rev. Fr. Gudin)** சுவாமியார் மரணமானார் :—கோயம்புத்தூர் மிஷனில் 39 வருஷமாக விடா முயற்சியுடன் உழைத்து வந்த சங். குடீன் சுவாமியார் ஏப்பிரல்-௴ 9-௳ சென்ற் தியடோர் ஸானிடோரியத்தில் 66-வது பிராயத்தில் இறந்தார். இவர் இந்த மேற்றிராசனத்தில் விசேஷமாய் நீலகிரி ஜில்லாவில் தமது ஜீவியகாலத்தின் பெரும் பகுதியை செலவழித்து வந்தார். மேலும் அநேக வருஷம் வய்நாட்டு அப்போஸ்தலராக உழைத்து அநேக அஞ்ஞானிகளை ஞானமந்தையில் சேர்ப்பித்தார். சில வருஷங்களுக்குமுந்தி உதகமண்டலம் திரு இருதயநாதர் கோவிலுக்கு விசாரணைக் குருவாக மாற்றப்பட்டு அங்கே யாவராலும் நன்குமதிக்கப்பட்டு வந்தார். ஆத்தும இரட்சண்ணியத்திலும் அஞ்ஞானிகளை மனந்திருப்புவதிலும் தளரா ஊக்கமுடையவர். ஆனது பற்றி 3 வருஷங்களுக்குமுந்தி தாமே நீலகிரி ஜில்லாவில் படுகர்களை மனந்திருப்பும் அலுவலை மேற்கொண்டு கொஞ்சத்துக்குள்ளாக அநேகரைத் திருச்சபையில் சேர்த்தார். கேத்தையில் ஒரு சிறு கோவிலையும் தமக்கு ஒரு சின்ன அறை வீட்டையும் கட்டினார். இவ்வேலை முடியும் முடியாமுன்னே இந்த நல்ல தகப்பன் தமக்கு வந்த அகோர வியாதியை வெகு பொறுமையோடும் அமைதியோடும் அநுபவித்து கடைசி தேவதிரவிய அநுமானங்களை சரிவரப் பெற்று அம்பரன் திருவடி சேர்ந்தார். அவரிடத்தில் விளங்கின அன்பும், பத்திவைராக்கியமும், ஆத்தும ஆவலும் மகா ஆச்சரியமானது. இப்போது மோட்சத்திலும் தாம் இவ்வுலகில் உருக்கமாய் நேசித்துவந்த ஆத்துமங்களுக்காக வேண்டிக்கொண்டு வருவார்.—R. I P.

---

## 62nd Anniversary of St. Joseph's School, Ootacamund.

## ஸெண்ட் ஜோஸப் ஸ்கூல் 62-வது வருஷக் கொண்டாட்டம்.

சென்ற மார்ச்சு-௴ 20-௳ திங்கட்கிழமை திருச்சபைப் பரிபாலகரான அர்ச். சூசையப்பர் திருநாளாகையால் அன்று



அர்ச். மோக்ஷ இராக்கினிமாதா ஆலயத்தில் காலை 8 மணிக்கு திவ்விய பூசையும் அதன்பிறகு திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டது. அன்று மாலை 1 மணிக்குஷை பள்ளிக்கூடத்தின் வருஷோற்சவம் வெகு விமரிசையாய் நடந்தது. பள்ளிக்கூட முழுதும் கொடிகளும் புஷ்பமாலைகளும் தொங்க அலங்காரமாய் விளங்கிற்று. நீலகிரி ஜில்லா ஸப் அஸ்ஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ கோபால நாயரவர்கள் அக்ராசனம் வகித்தார். வந்தனோபசாரப் பாடல்களும், வேடிக்கைக் கூத்தும், விநோத சம்பாஷணையும் நடந்தேறின. பந்தய விளையாட்டுகளில் ஜெயித்தவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. ஞானோபதேசப் பரீட்சையில் தேறினவர்களுக்கு ஞானப்புஸ்தகங்கள் பரிசாக அளிக்கப்பட்டன. ஸப் அஸ்ஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர், கோயம்புத்தூர் கத்தோலிக் மிஷனில் செய்யும் வேலையை மிக்க வியந்து பேசினார். பள்ளிக்கூடத்துப் பழைய மாணவர்கள் இக்கொண்டாட்டத்துக்காகச் செய்த நன்றி மறக்கற்பாலதன்று. கனம் மானேஜரும் மறுநாள் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை கொடுத்தார். ஷை பாடசாலையின் மானேஜராகிய கனந்தங்கிய பியோலே (Rev. Fr. Biolley) சுவாமியாருக்கும், அவர் பாடசாலைக்கும் நாம் மனமுவந்து வாழ்த்துதல் கூறுகிறோம்.

---

## Our Lady of Hope.

## நன்னம்பிக்கை மாதா.

பிரான்ஸ், ஜெர்மனி தேசங்களுக்குச் சண்டை நடந்துகொண்டிருந்தகாலத்தில் பிரான்ஸ் தேசத்தில் போன்ட்மேயின் (Pontmain) என்னும் சிறு கிராமத்தில் 1871-௵ ஜனவரி-௴ 17-உயில் அர்ச். கன்னிமரியம்மாள் கையில் சிவந்த இரத்த நிறமான சிலுவையைப் பிடித்துக்கொண்டு சில சிறு பிள்ளைகளுக்குத் தரிசனையாகி அவர்களுக்குச் சொன்னதாவது : “பிள்ளைகளே! ஜெபம் பண்ணுங்கள், கூடிய சீக்கிரத்தில் எனது மகன் உங்கள் மன்றாட்டைக் கேட்பார்.”

மெய்தான். விசேஷமாய் இந்த மே மாசத்தில் அதிக பத்தியோடு நாம் தேவமாதாவை மன்றாடுவோமாக. நேசக்கட்சியாருக்கு ஜெயம் உண்டாகும்படி ஜெயமாதாவை நோக்கிப் பிரார்த்திப்போமாக. சமாதானத்தின் இராக்கினியை நோக்கி உலகத்துக்குச் சமாதானம் உண்டாகவேணுமென்று வேண்டிக்கொள்ளுவோமாக.

நமது தேசத்துக்காகப் போராடி உயிரைக் கொடுக்கும் தைரியசாலிகளாகிய நமது போர்வீரர்களுக்காக நன்னம்பிக்கை மாதாவை மன்றாடுவோமாக. யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்காகவும், சிறைப்பட்டவர்களுக்காகவும், யுத்தத்தினால் திக்கற்றுப்போன அநாதைகளுக்காகவும், யுத்தத்தினால் மற்றும் பல இடையூறுகளை அநுபவிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுவதல்லாமல், நமது பரிசுத்ததாயாகிய திருச்சபைக்காகவும், அர்ச். பாப்பானவருக்காகவும் மன்றாடுவோமாக. சர்வேசுரன் சீக்கிரம் நமது ஜெபங்களைக் கேட்டருள்வார்.

---

## Here and There
### நானா சங்கதிகள்.

கோயம்புத்தூர் மேற்றிராணியாரவர்கள் நீலகிரி மலையிலுள்ள பங்குகளில் உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானச் சடங்கை நிறைவேற்ற மேமாதத்துவக்கத்தில் விஜயஞ் செய்வார்கள்.

மே-மீ 14-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வெல்லிங்டனிலும், போத்தனூரிலும், மே-மீ 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை உளிக்கல்லிலும், அர்ச். சூசையப்பரின் அடைக்கலத் திருநாள் கொண்டாடப்படும்.

ஜெர்மானியர் போர்த்துக்கல் தேசத்தின்மேல் யுத்தங்கூறியிருக்கின்றனர். இச்சிறிய தேசமானது நேசவரசர்களுக்கு தன்னாலியன்றமட்டும் உதவிசெய்யப் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

சென்ற இரண்டுமாதங்களாக பிரான்ஸ் தேசத்தில் வெர்டூனுக்கருகே (near Verdun) யுத்தம் மிகவும் கடூரமாய் நடந்து வருகிறது.

இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மானிய தேசத்தில் இருக்கும்படி நேரிட்ட, கொச்சின் ராஜனுடைய குமாரனது விடுதலை ராஜ தூத விவகாரத்தின்படி முடியாமலிருந்தபோதிலும், அர்ச். பாப்பானவருடைய மத்தியஸ்தத்தால் நிறைவேறினது.

இங்கிலாந்தின் பிரதானியாகிய மிஸ்டர் ஆஸ்குவித் என்பவர் (Mr. Asquith, Prime Minister of England) ரோமாபுரியில் ஏப்பிரல்-மீ 2-ம் தேதி அர்ச். பாப்பானவரைத் தரிசித்தனர்.

---

அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**June 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 6.

## The need of our day.
### தற்காலத் தேவை.

தற்காலத்தில் பலரும் தங்கள் குழந்தைகளைக் கவுரவ புருஷர்களாகவும், ஸ்திரீகளாகவும் வளர்க்க எண்ணுகிறார்கள். ஆனால் அதன் முடிவாக அக்குழந்தைகள் உடைக்கோ அல்லது உலகவின்பக் களியாட்டங்களுக்கோ ஆசையை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்களேயொழிய வேறில்லை. இவ்வித டம்பங்கள் கவுரவத்துக்கு ஆதாரங்களாகமாட்டா. இம்மாதிரியான வளர்ப்பினால் உலகத்தில் கணக்கில்லாத சுடுமூஞ்சிச் சிறுவர்களைக் காண்கிறோம். அவர்களைக் காணும்போது கப்பலோட்டிகள் பிரயோஜனமில்லாததென்று தள்ளிவிட்ட மரக்கலங்களிலொன்றைக் கரைதட்டின கப்பலென்றெண்ணிக் கரையேற்றும்போது அதில் ஒரு குரங்கைமாத்திரம் கண்ட கதை ஞாபகத்துக்கு வருகிறது.

கடமையுணர்ச்சியும், பெருநோக்கமுமுள்ள சிறுவர்களே இக்காலத்தில் முக்கியமாகத் தேவையாம். வீட்டில் குணத்திற் சிறந்த பெற்றோர்களாலும், பள்ளிக்கூடங்களில் தெய்வபக்தியுள்ள உபாத்தியாயர்களாலும் கடமைகளது முதன்மையான சிறப்பும், கவுரவ நாட்டத்தின் உயர்வும் கற்பிக்கப்பட்ட சிறுவனும் சிறுமியும் தத்தமக்களித்த எவ்வித வேலையையும், கடவுளது முன்னிலையில் கணக்கொப்புவிக்கவேண்டிவரும் என்ற பயத்தோடு செய்யப் பின்வாங்கார்கள்.

கடமையினிடத்து இவ்வித எண்ணமுண்டாகி, உயர்வான நோக்கங்களால் தூண்டப்படும் மகனும், மகளும் எப்போதும் பெருந்தன்மை வாய்ந்தவர்களாகவேயிருப்பார்கள்.

இப்பெருந்தன்மை, ஜனங்கள் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்யவொட்டாதபடி தடுத்து, மனச்சாட்சிக்கு விரோத

மான தீமைகளைச் செய்யத் தூண்டும். மானம் அல்லது கவுரவமென்ற நாசகாரணமான கொடுங்கோன் மன்னனிடத்து ஒருவனைக் காட்டிக்கொடுக்காதபடி காக்கும். அதனால் துஷ்டர்களது வருத்தத்துக்காவது, ஏளனத்துக்காவது, அல்லது வீண் நியாயத் தீர்ப்புகளுக்காவது அப்பெருந்தன்மை வாய்ந்தவர்கள் பாத்திரமாகமாட்டார்கள்.

கடமையினது மேன்மையையுணர்ந்த பெரியோர் எல்லாக் காலத்திலும், விசுவாசமுள்ளவர்களாகவும், நம்பத் தகுந்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் கடவுளது முன்னிலையிலும், தங்கள் மனச்சாட்சிக்கும் உண்மையாய் நடப்பவர்களாதலால், சாகும்வரையில் உண்மையுள்ளவர்களாகவேயிருப்பார்கள்.

அத்தகைய ஸ்திரீ பூமான்கள், ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும் உழைத்துத் தன்னலம் கருதாது, தங்கள் கருமமுடிவிலேயே கண்ணாயிருப்பார்கள். அவர்கள் எவ்வளவு தாழ்ந்த குடியிற் பிறந்திருந்தாலும், அவர்களே கடவுளுக்கு உவப்பான உண்மைப் பெரிய மனுஷர்களும் மனுஷிகளுமாம். அவர்களையே எல்லாரும் மதிக்கவேண்டிவரும்; ஏனெனில் அவர்களிடத்து அற்பத்தனமாவது, மோசமாவது, பொய்யாவது அற்பமேனும் கிடையாது.

இத்தன்மையான ஸ்திரீ புருஷர்களே எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் தேவையானவர்கள். அவர்களது பெருந்தன்மையான வாழ்வு சொல்வன்மையோடு கூடிய பிரசங்கங்களும் அழகான வியாசங்களும் செய்வதைக்காட்டிலும் அதிகமாக, ஜனசமூகங்களை மேல்தூக்கி மதங்களை நிலையழியாதபடி காக்கிறது.

ஆம்! குற்றமற்ற கவுரவத்தைக் காட்டும் வழி, கண்ணியமான ஆத்துமாக்களுக்குக் கிடைக்கும் ஒரே வெகுமதியை அடையச் செய்வதற்குமுன் செங்குத்தான பாறைத் தூக்குகளின் மேலாகக் கொண்டு செல்லுகிறது.

இன்னே வேண்டும் இன்னே வேண்டும்
ஆண்மையு நேர்மையும் பூண்ட வோர்மகன்
பூண்டெதிர் யாரையும் பொருந்தி நேர்முகத்
தீண்டிய வெண்மையும் தெளிவுங் கொண்டு பார்த்து
எண்ணிய வோர்பொரு ளியைவதற்குமுன்
எண்ணருந் துன்பமற் றோர்மகற்கேனுமே
லுண்ணிலவிய வெறுப்போடு நோக்குமோர்
கண்ணியப் புவிமகன் கடிதின் வேண்டுமே.

(சத்திய நேசன்.)

---



## Better not to be, than not to be noble.

## கீர்த்தியோடு வாழத்தெரியாத பிள்ளை, இருப்பதைவிட இறப்பதே மேலாகும்.

சத்தியப்பிரியர் ஒருநாள், கலாசாலை முடிந்துவந்த தன் மகன் மார்ச்சாலனைப்பார்த்து அவனது குணாகுணங்களைப் பற்றி வினவினபோது, மார்ச்சாலன், உலகத்தில் எல்லாக் காலத்திலும் நிஜம் சொல்ல முடியாமலிருக்கும் ஒரு அவகுணம் தவிர வேறொரு துர்க்குணமும் தன்னிடத்தில் இல்லையென்றான். அந்தோ! இந்த ஒரு துர்க்குணம் தவிர வேறெது இருந்தாலும் அவனை மன்னிப்பேனே! இவன் இருப்பதிலும் இறப்பதே மேலென்று எண்ணுகிறேன்! என்ன? உண்மையல்லாததைச் சொல்லுகிறானா? கண்ணியமே! எனது பூர்வீகர்களே! நான் எவ்வளவு நிலை தவறி விழுந்துவிட்டேன்! என்று கூவித் தன் பையனைப் பார்த்து, "நீ கீர்த்தியாளனா?" என்று வினவினார். "ஏன்? நான் உமது மகன். நீர் ஒரு பிரபு அல்லவா? அது போதுமல்லவா? நான் அப்படித்தான் நினைக்கிறேன்" என்றான் மார்ச்சாலன். "மதியீனமான எண்ணம். கவுரவமான காரியங்களைச் செய்வதே கண்ணியம். உன் நடை கவுரவமற்றிருந்தால் நீ எப்படிப் பெருமை வாய்ந்தவனாவாய்? குடிப்பிறப்பால் வந்த பெருமையும் பழைய குடியில் பிறத்தலும் என்ன பயனைத் தரும்? நீ பெருமகனா? நீ ஒன்றுமில்லாதவன். பொய் சொல்லும் நீ பெரிய மனிதனா? நீ இருப்பது வியர்த்தமே. மேன்மக்களது குடியிலோ தாழ்மகரது குடியிலோ எதில் பிறந்தாலும் நீ பொய் சொல்லும்போது உன்னைப்பார்த்து ஜனங்கள் வெறுக்காமல் இருக்கமுடியாது" என்றார் சத்தியப்பிரியர். (ஞானி.)

---

## When paying does not pay.

## கொடுத்தும் கொடாதிருக்கிறது.

மெய்விவாகம் செய்வதற்கு விக்கினங்கள் இருந்தபோதிலும் கலியாணத்துக்கு வெகு சுலபமாய் உத்தரவு பெறலாம் என்று சில மூட ஜனங்கள் நினைப்பதுமன்றி பணம் கொடுத்தால் கலியாணத்திற்கு உத்தரவு கிடைப்பது நிச்சயம் என்று சொல்லவும் துணிவார்கள். இது பெருந் தப்பிதமான எண்ணம்.

கனமான முகாந்தரமில்லாமல் திருச்சபை அப்படிப்பட்ட கலியாணங்களுக்கு ஒருபோதும் உத்தரவு கொடுக்கிறதில்லை

யென்றும், தக்க முகாந்தரங்கள் இருக்கையில் உத்தரவு கொடுப்பது ஒருக்காலும் பணத்திற்காக அல்லவென்றும் ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டியது.

தூரத்து உறவு சம்பந்தமான விக்கினங்கள் இருக்கையிலும், ஒரே ஜாதியைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள் தொகையில் குறைந்தவர்களாய் இருக்கும்போதும் திருச்சபை வெகு சுளுவாய் அநுமதி கொடுப்பது வாஸ்தவமே. ஆனாலும் அப்படிப்பட்ட சமயத்தில் தரும காரியங்களுக்காக ஓர் பணத் தொகையை அபராதமாக விதிப்பது அவ்வாறு உத்தரவளிப்பது தனக்கு விருப்பமில்லையென்றும், அவ்வித உத்தரவுகளை மட்டுப்படுத்துவதே தனது விருப்பமென்றும் தெரிவிக்கிறது. விக்கினமுள்ள உறவுக்குத் தக்கபடியும் உத்தரவு கேட்பவருடைய அந்தஸ்துக்குத் தக்கபடியும் விதிக்கப்பட்ட அபராதப் பணம் சொற்பமாயிருந்தால் அதற்கு இத்தேசத்துக் கிறீஸ்துவர்களுடைய எளிமைத்தனத்தைப்பற்றி திருச்சபை பாராட்டுகிற தயவே காரணமாகும். இவ்வாறு செலுத்தப்படும் பணம் அபராதமேயொழியக் கிரயமல்ல. ஜனங்கள் இதை நன்றாய் அறிந்திருக்கவேண்டியதும் தவிர, அநாவசியமாய் ஒருபோதும் இவ்வித உத்தரவு கேட்கவும் கூடாது. நெருங்கின உறவின்முறையாரோடு கலியாணம் செய்வது திருச்சபைக் கற்பனையால் விலக்கப்பட்டிருப்பதினால் கலியாணக்காரர் தாங்கள் நடத்தப்போகும் கலியாணத்துக்கடுத்த விக்கினங்களையெல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்கிறபிரகாரம் தங்கள் பங்கு சுவாமிமார்களுக்கு அறிவிக்கவேண்டியது. தவறி, யாதொரு விக்கினத்தை ஒளித்தால் அது சாவான பாவமாயிருப்பதுமல்லாமல் அவ்வாறு நடத்தப்பட்ட கலியாணமும் மெய்விவாகமேயாகாது.

---

## False Prophets.

### கள்ள தீர்க்கதரிசிகள்.

தற்காலம் கத்தோலிக்கு திருச்சபையின் விருத்தியையும், மேன்மையையும், பலத்தையும் கண்டு அநேக பதிதர் அது தங்களை திடீரென்று விழுங்கிவிடும் என்று பயப்படுகிறார்கள். மேலும் கத்தோலிக்கு திருச்சபைதான் அவர்களை இரவிலும் பயமுறுத்துவதால் அச்சபையை எதிர்ப்பதிலும், தூஷிப்பதிலுமே அவர்கள் வாழ்நாட்களைப் போக்குகிறார்கள். அவர்கள் கத்தோலிக்கு திருச்சபையைப்பற்றியும், ஐரோப்பாவின்



பிற்கால நிலைமையைப்பற்றியும், உலக முடிவைப்பற்றியும், பேசியும், பிரசங்கங்கள் செய்தும், புஸ்தகங்கள் எழுதியும், பொய் சொல்லியும் திரிகிறார்கள்.

நிச்சயமாய் உலகம் முடிவு பெறுவதற்கு ஏதாவது அடையாளங்கள் காணப்பட்டால் அது கள்ள தீர்க்கதரிசிகளின் அபிவிருத்தியென்றே சொல்லவேண்டும்.

சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த சத்திய திருச்சபை அதிக பலமுள்ளது. நரகவாசல் அதை மேற்கொள்ளாது. சேசுநாதர்சுவாமி திருச்சபையோடு உலக முடியும் நாள்மட்டுங் கூட இருப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். எப்போது உலகம் முடியும்? அது கடவுளுக்குப் பிரியமானபோதே; அவருக்கே எப்போது உலகம் முடியும் என்பது தெரியும். அந்த நாள், நாழிகையைப்பற்றி கடவுள் ஒருவருக்கே தவிர மோக்ஷத்திலிருக்கும் சம்மனசுகளுக்கு முதலாய்த் தெரியாது.

(அர்ச். மத். 24-ம் அதி. 36-ம் வசனம்.)

---

## The late Rev. Fr. S. Pageault.

### சங். S. பஷோ சுவாமியார் காலஞ்சென்றார்.

கோயமுத்தூர் மிஷன் குருக்களுக்குள் இன்னொரு மரணம் நேர்ந்தது. சங். S. பஷோ சுவாமியார் மே மாதம் 4-ம் தேதி மரணமானார். அவர் 1833-ம் ௵ பிறந்து 1860-ம் ௵ கோயமுத்தூர் மிஷன் வந்து சேர்ந்தார். அவர் பெரும்பாலும் தம் அப்போஸ்தலிக் அலுவலை கொடுவெரிப் பங்கிலேயே செய்துவந்தவர். மறுபடி சில வருஷங்களாக கோயமுத்தூர் மிஷனின் பிரொகூரையும் (Procure) பார்த்துவந்தார். அக்காலத்தில் அவர் மற்ற குருக்கள் மிஷனின் முக்கிய ஸ்தலமாகிய கோயமுத்தூரை வந்து சந்திக்கும்போதும், இன்னம் அவர்கள் ஒடுக்கத்துக்கு வரும்பொழுதும் அவர்களுக்கு சௌகரியமாய் இருப்பதற்கு அநேக அறைகளை அங்கே கட்டுவித்தார்.

கடைசியாய் வேலைசெய்த பங்கு வாலிபாளையமாம். ஏற்கனவே வயதுசென்றிருந்த இவரது பலவீனமான சரீரம் வெயில் மிகுதியால் இன்னம் பலவீனப்பட்டு தம்மால் பங்கு அலுவலைத் தொடர்ந்து நடத்தமுடியாதென்று உணர்ந்து சென்ற். தியோடோர் ஸானிடோரியத்துக்கு தம்மை அனுப்பிவிடவேண்டுமென்று கேட்டு அநுமதிபெற்ற பிறகு, அங்கே

இன்னம் 18 வருஷகாலம் ஒடுக்கத்தில் செலவழித்துவந்தார். அங்கே அவர், தாம் இருந்தும் இறந்ததற்கு சமானந்தான் என்று தம்மைப்பற்றி அடிக்கடி சொல்லிக்கொள்ளுவார் என்றாலும், மோசேஸ் மலைமேல் இருந்து செபம்பண்ணிக்கொண்டிருந்ததுபோல அவரும் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக நாள்முழுதும் செபம் செய்துகொண்டு உலகத்துக்கு உபயோகமாகவே இருந்தார். மிஷனில் நடக்கும் ஒவ்வொரு வேலையிலும் அவருக்கு அக்கறை இருந்தது. தம்மால் ஆனவரையில் குருக்களுக்கு அவர்கள் மேற்கொண்ட வேலைகளுக்கெல்லாம் சொற்ப பண உதவியும் செய்துகொண்டு வந்தார்.

அவர் சாந்தகுணத்தோடும் பத்தி சுறுசுறுப்போடும் ஜீவித்து கடைசி தேவதிரவிய அநுமானங்களை சரிவரப் பெற்று முதிர்ந்த வயதில் மிக்க பெருமையோடு மரித்து தம்முடைய பிரமாணிக்கத்தின் பலனை முடிவில்லா மோக்ஷ பேரின்ப பாக்கியத்தை அநுபவிக்கச் சென்றார்.

---

## Golden Jubilee of the St. Antony's School, Coonoor.

### குன்னூர் அர்ச். அந்தோனியார் பாடசாலையின் தங்க ஜூபிலி.

குன்னூரில் புராதனமானதும், சுதேசப் பள்ளிக்கூடங்களில் உயர்தரப் படிப்பை ஊட்டுவதுமான அர்ச். அந்தோனியார் ஸ்கூலின் 50-வது வருஷக் கொண்டாட்டம் மே மர்தம் 8-ம் தேதி வெகு விமரிசையாய் நடந்தேறியது. அந்நாளில் சங். வியையார் (Rev. Fr. Vieillard) சுவாமியார் அக்கிராசனம் வகித்து வெகுமதி பெற யோக்கியமான பிள்ளைகளுக்கு தக்க பரிசு அளித்தார். அதன்பின்னர் ஒரு நாடகம் இங்கிலீஷில் ஆடப்பட்டது. அன்று நடந்த காரியங்களின் சித்தியை நோக்கும்போது இவ்விஷயத்தை ஏற்பாடுசெய்து ஊக்கத்தோடு நடத்தின எட்மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ S. ராஜூபிள்ளை அவர்கள் B. A., L. T-க்கும், இதர உபாத்தியாயர்களுக்கும், பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கும் அது கீர்த்தியைத் தருகிறது. இவ்விஷயத்தை சரிவர பூர்த்தி செய்வதற்கு வேண்டிய வெகுமதிகளையும், பொருளுதவியையும் தாராளமாய் முன்வந்து செய்த குன்னூர்வாசிகளுக்கு பிரதி வந்தனம் அளிப்பது எங்கள் கடமை. குன்னூர் அர்ச். அந்தோனியார் பாடசாலையை கடவுள் ஆசீர்வதிப்பாராக!

---



## Devotion to the Sacred Heart of Jesus.

### சேசுவின் திரு இருதயப் பத்தி.

சேசுவின் திரு இருதயப் பத்தியால் விவரிக்கப்படுகிற கருத்துகளாவன:—

1-வது. வெகுவாய் அறியப்படாமலும், அறிந்திருப்பவர்களாலும் வெகு சொற்பமாய் நேசிக்கப்படுகிற ஆராதிஷ்ட தேவநற்கருணையில் விசேஷமாய்ச் சேசுவின் திரு இருதயம் காண்பிக்கிற மட்டில்லாத நேசத்தை நம்மால் இயன்றவரையில் அறிந்து அடிக்கடி அவரை ஆராதித்து நேசித்து அதிக மதிகமாய் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துதல்.

2-வது. அவர் இவ்வுலகத்தில் சஞ்சரித்தகாலத்தில் காட்டிவந்ததும் இன்னும் அவர் பரிசுத்த தேவநற்கருணையில் தம்மைக் காண்பித்து வருவதுமான அன்புக்குப் பிரதியாக மனுமக்களால் செய்யப்படுகிற நிந்தை அவமானங்களுக்குத் தக்க விதமாய் நம்மாலானமட்டும் பரிகாரம் செய்தல்.

ஆகையால் சேசுவின் திரு இருதயப் பத்தியும் பரம தேவநற்கருணையின்பேரிலுள்ள நமது பத்தியும் ஒன்றுக்கொன்று ஐக்கியப்பட்டிருக்கிறது.

சேசுவின் திரு இருதயத்தின்மட்டில் நமக்குள்ள பத்திக்குப் பலனும் கைம்மாறுமாக நமக்குக் கிடைக்கும் தேவ இஷ்டப்பிரசாதங்களுக்குக் கணக்கில்லை.

---

## Here and there.

### நானா சங்கதி.

அர்ச். பாப்புவின் ஸ்தானத்திற்கும், கத்தோலிக்குத் திருச்சபைக்குமுரிய சங்கையைக் காண்பிக்கும்பொருட்டு, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்குக் குருமார்களை பலவந்தமான யுத்த சேவையிலிருந்து நீக்கியிருக்கின்றனர். ஆனால் அநேக கத்தோலிக்கு குருக்கள், மிலிட்டெரி சாப்லேன்களாக (Military chaplains) போர்க்களத்துக்குத் தங்கள் மனசாரப் போயிருக்கிறார்கள்.

டார்டனெல்ஸ் காலியான பிறகு அங்கேயுள்ள வியாதிஸ்தரையும் காயப்பட்டவர்களையும் பற்றுதலுடன் பரி

பாலித்து பக்ஷமுடன் போஷித்துவந்த இரண்டு பிராஞ்சு கன்னியாஸ்திரிகளுக்கு பிராஞ்சு கவர்ன்மெண்டார் மிலிட்டெரி வெள்ளி மெடல்களை அளித்திருக்கின்றனர். இதைப்போன்ற அநேக வெகுமதிகளை, குருமார்களுக்கும், சந்நியாசிமார்களுக்கும், கன்னியாஸ்திரிகளுக்கும் அவர்கள் காண்பித்த பிறர்சிநேகக் கிரிகைகளுக்காக, பிராஞ்சு கவர்ன்மெண்டார் இந்த யுத்தகாலத்தில் கொடுத்திருக்கின்றனர்.

சென்ற ஏப்பிரல்-௴ 12-௳, ஒத்தை இருதயநாதர் கோவிலில், காலஞ்சென்ற சங். J. குடின் சுவாமியாருடைய (Rev. Fr. J. Gudin) ஆத்தும இளைப்பாற்றிக்காக, சங். F. E. லாங்கிலெ சுவாமியாரால் (Rev. Fr. F. E Langlet) ஒரு பாட்டுப்பூசை மிகச் சிறப்புடன் செய்யப்பட்டது. அப்பூசையில் சங். மரிய லூயிஸ் சுவாமியாரும், சங். மரிய ஜோசப் சுவாமியாரும் உதவி செய்தனர்.

மே-௴ 15-ம் தேதி, குன்னூர் சென்ற் ஜோசப்ஸ் காலேஜைச் சேர்ந்த சங். I. பிரைஸ் (Rev. Brother I. Price) என்னும் ஓர் வயதுசென்ற சந்நியாசியார் தேவதிரவிய அநுமானங்களுடன் காலமடைந்து, மறுநாள் அந்த காலேஜ் கல்லறையில் அடக்கமாயினர்.

R. I. P.

சென்ற ஏப்பிரல்-௴ 11-ம் தேதி, குன்னூர் பழைய கோவில்பிள்ளையாகிய G. ஞானப்பிரகாச ரெட்டியார் பாகூரில் (Bahur) மரணமடைந்து, அவ்வூரிலே மறுநாள் அடக்கமாயினர். இவர் அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு அதிக உதவி புரிந்துவந்தார்.

R. I. P.

JUL 1916 MADRAS.


# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**July 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 7.


## Reverence due to children.

## பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குக் காட்டவேண்டிய சங்கை.

“தாய் தந்தையர்களே! உங்களது குழந்தைகள்முன் துர்மாதிரியாய் நடவாமல் எச்சரிக்கையாயிருங்கள்” என்று கோயம்புத்தூர் மேற்றிராணியாரவர்கள் குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவிலில் சென்ற மாதம் சிறுவர் சிறுமியருக்கு உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தைக் கொடுத்தபிறகு, அவர்கள் பெற்றோர்களுக்கு புத்திமதி கூறினர்.

இது ஒரு முக்கியமான எச்சரிக்கை. தங்களது குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அச்சிறுவர்களது கண்களுக்குப்படாத செய்கையாவது, வார்த்தையாவது, பார்வையாவது ஒன்றுமில்லை. அவர்கள் பார்த்தவற்றில், சொற்பகாலமாவது அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாத விஷயமுமில்லை. கூர்ந்த உணர்ச்சியோடு கூடிய குழந்தைகளது நடத்தைக்கு, பெற்றோரது ஒவ்வொரு செய்கையும் காரணமாயிருக்கிறது. வீட்டினது சுத்தாசுத்தமும், சுவரிலுள்ள படங்களும், பெற்றோரது சம்பாஷணைகளும், அவர்களது நடையும் ஆகிய ஒவ்வொன்றும் குழந்தைகளது மிருதுவான மனதில் அழுந்தப்பதிகிறது. சூரியன், பூமி, காற்று, இவற்றினின்று அடைகிற குணுகுணங்களைச் செடிகள் பெற்று காப்பாற்றிவைப்பதுபோலவே, பெற்றோரது நடையினாலும் வீட்டுப்பழக்கங்களாலும் குழந்தைகளுக்கு உண்டாகிற வழக்கங்களை அக்குழந்தைகள் விட்டுவிடுகிறதேயில்லை. தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டுமென்று கேட்டதில்லையா?

உங்கள் குழந்தைகளின் ஆத்தும உணர்ச்சியில் நீங்கள் பதியச்செய்யும் எக்கொள்கையும், அக்குழந்தைகள் சாகும்வரையில் அவர்களைவிட்டு ஒழிவதில்லை. நீங்கள் கற்பித்ததனாலோ அல்லது கற்பிக்கத் தவறினதனாலோ, உங்கள் குழந்தைகள் இளமையிலிருந்து கற்றுக்கொண்ட எந்தவழியும் மனப்போக்கும் அக்குழந்தைகள் இறந்தும் அவர்களை விடுவதில்லை. நீங்கள் மனமொழி மெய்களால் கற்பித்த எந்த நீதியும், உங்களுடைய அல்லது உங்கள் வீட்டார்களுடைய நடத்தையினால் தாங்களே கற்றுக்கொண்ட எந்தச்செய்கையும், உங்கள் குழந்தைகளின் இக பர சுகங்களுக்கு முக்கிய ஆதாரமாயிருக்கின்றன.

களங்கமற்ற குழந்தை முகத்தைக் கண்டவுடனேயே தேவலோகத்திலிருந்திறங்கிவந்த தேவதூதனைக் கண்ட அவ்வளவு சந்தோஷமுண்டாகிறது. கோடிதுக்கம் குழந்தைமுகத்திலாறும் என்று கேட்டதில்லையா?

ஆகையால் குழந்தைகள் பார்க்கத்தகாத எந்தப்படமும் எந்த உருவமும் வீட்டிலில்லாதபடி பெற்றோர்கள் ஜாக்கிரதையாயிருப்பார்களாக! யாதொரு கெட்ட மொழியையும் ஆடாதிருப்பார்களாக! குழந்தைகளின் குற்றமற்ற மனத்தைக் கெடுத்துத் துர்நடத்தைகளுக்குத் தூண்டுதலாயிருக்கும் பொய்மொழிதல், கண்ஜாடைசெய்தல், தகாத வார்த்தைகள் அல்லது செய்கைகள், முதலியவற்றைப் பெற்றோர்கள் முற்றிலும் விலக்குவார்களாக!

மேற்சொன்ன போதனைகள் பெற்றோருக்குமட்டுமல்ல, உபாத்தியாயர்களுக்கும் ஒத்தவையே. பெற்றோரைப்போலவே உபாத்தியாயர்களும் கடவுளது முன்னிலையில் தங்களது மாணாக்கரது ஆத்தும பயிற்சிக்கு உத்தரவாதிகளாயிருக்கிறார்கள்.

குழந்தைகள் கடவுளது சாயலாகத் தங்கள் ஆத்துமத்தைப் பெற்றிருக்கிறார்களென்ற விஷயத்தை பெற்றோரும் உபாத்தியாயர்களும் மனதில் வைத்து, அக்குழந்தைகளின் குணங்களையும் குற்றமற்ற தன்மையையும் கெடுக்கும் எதனையும் அவர்களது கண்களில் படாதபடி காப்பார்களாக!

சத்தியநேசன்.

---

## The White neck tie.

## வெள்ளை கழுத்துப்பட்டை.

பிரான்ஸ் தேசத்தில் ஒரு கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த மாணாக்கரில் சாமர்த்தியமும், பத்தியும் சுறுசுறுப்புமுள்ள பையனொருவனிருந்தான். புதுநன்மை வாங்கும் சந்தோஷமான நாளில் அவன் தரித்துக்கொண்டிருக்கும் கழுத்துப்பட்டையை துரதிர்ஷ்டத்தால் யாதொரு சாவான பாவத்தில் விழுந்தாலொழிய ஆயுசுபரியந்தம் அதை கழற்றுவதில்லையென்று உறுதிமொழி செய்துகொண்டான்.



சில வருஷங்களுக்குப்பிறகு நடந்த பிரான்சிய ஜெர்மானிய யுத்தத்தில் 1871-ம் ௵ ஜனவரி மாதத்தில் நடந்த ஒரு சண்டையில் யுத்தகளத்தில் அநேக யுத்தவீரர்கள் காயம்பட்டும் இறந்தும் கிடந்தார்கள். அப்போது ஒரு பட்டாளத்து குருவானவர் காயம்பட்டவர்களுக்கும் மரணத்தறுவாயிலிருக்கும் போர்ச் சேவகர்களுக்கும் கடைசி தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றும்பொருட்டு யுத்த களரியை சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார். மரணாவஸ்தையிலிருந்த ஒரு வாலிப போர் வீரனுக்கு பாவசங்கீர்த்தனம் கொடுக்கச் சென்றார். அப்போது அவன் புன்சிரிப்புடன் "குருவே! நான் மூன்று நாளைக்குமுன்புதான் பாவசங்கீர்த்தனம் செய்தேன். அதுமுதற்கொண்டு என் மனதார நான் யாதொரு சாவான பாவத்தையும் கட்டிக்கொள்ளவில்லை. ஆனாலும் தயவுசெய்து தேவரீர் என்னை எடுத்துப் புல்லின்மேல் கிடத்தி எனக்குக் கடைசி தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றும். மேலும் நான் தங்களைக் கேட்கும் வேறொரு மன்றாட்டு யாதெனில்: "நான் இறந்தபிறகு நான் போட்டிருக்கும் வெள்ளைக் கழுத்துப்பட்டையைக் கழற்றி எனது தாயாருக்கு அனுப்பவும். தவிர நான் என் தேசத்துக்காக சிந்தின இரத்தத்தாலல்லாமல் இதையும் எனது ஆத்துமத்தையும் யாதொரு சாவான பாவத்தால் கறைப்படுத்தவில்லை" என்று தயவுசெய்து அவளுக்குச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான்.

(ஞானி.)

---

## My letter to Antony.

## நான் அந்தோனிக்கு எழுதிய கடிதம்.

பிரியமுள்ள அந்தோனி,

. நான் உனக்கு ஆசீர்வாதம் தந்து எழுதும் சங்கதியாவது :

நீ எப்போதும் கோவிலுக்கு வராமலிருப்பதால் அவ்விடம் உன்னை சந்தித்துப் பேசமுடியாமலிருப்பதாலும், எப்போதும் வேலைமேலே இருப்பதால் வீட்டிலாவது உன்னைக் கண்டுபேசக் கூடாமலிருப்பதாலும் நான் உனக்கு இக்கடிதம்

எழுதலானேன். நீ அன்புடன் நேசிக்கும் மனைவிமக்களை உனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தைக்கொண்டு காப்பாற்றி கஷ்ட ஜீவனம் செய்துகொண்டுவருகிறாயென்று எனக்குத்தெரியும். எல்லாரும் உன்னை சுறுசுறுப்பும் நேர்மையுமுள்ள மனிதனென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நீ உத்தம கிறீஸ்துவனா? உனது நண்பனாகிய நான் உனக்கு முக்கியமான சில சங்கதிகளைச் சொல்லுகிறேன் கேள்: பாஸ்குக்காலம் முடிந்துவிட்டது. நீ உனது பாஸ்குக் கடமையை இன்னம் நிறைவேற்றவில்லை. சர்வேசுரனுடைய நீதி ஆசனத்துக்கு முன் கணக்குச் சொல்ல திடீரென்று நீ அழைக்கப்பட்டால் உனது ஆத்துமம் முஸ்திப்பாயிராதென்று பயப்படுகிறேன். நீ இதைப்பற்றி கிஞ்சித்தும் நினைப்பதில்லை; ஞாயிற்றுக்கிழமைகளில் பூசைக்கு வருகிறதில்லை; வெள்ளிக்கிழமைகளில் மனப்பூர்த்தியாய் மாமிஸம் சாப்பிடுகிறாய்; அடிக்கடி உனது காலை மாலை ஜெபங்களை விட்டுவிடுகிறாய். அப்படியிருந்தும் கடவுளின் பிள்ளையென்றும், திருச்சபையின் பிள்ளையென்றும், வெகு கௌரவமாகச் சொல்லிக்கொள்ளுகிறாய். மேலும் சர்வேசுரனுடைய கற்பனைகளுக்கும் திருச்சபையின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமலுமிருக்கிறாய்.

சர்வேசுரனுடைய கற்பனைகளை சுமுத்திரையாய் நிறைவேற்று. கடைசிநேரம் வரையில் காத்திருக்கவேண்டாம். அப்போது நீ நல்ல மனிதனாகவும் உத்தம கிறீஸ்துவனுமிருப்பாய். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்.

இக்கடிதம் வேறொருவனுக்கு எழுதினேனென்று நினையாதே. இதை நீ திரும்பத் திரும்ப வாசித்துப் பார்ப்பாயானால் இது உனக்காகவே எழுதப்பட்டதென்று அறிந்துகொள்வாய்.

ஆசீர்வாதம்
இப்படிக்குப் பிரிய நண்பன்.

---

## St. Joseph and St. Antony.

### அர்ச். சூசையப்பரும் அர்ச். அந்தோனியாரும்.

அர்ச். சூசையப்பர் புஷ்பித்த பூங்கொத்தோடுகூடிய கிளையை கையில் பிடித்திருப்பதுபோல சித்திரிக்கப்பட்டிருப்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இதனால் இவர் பரிசுத்த கன்னிமரியம்மாளின் பத்தாவாகவும் நமது இரட்சகருடைய போஷகராகவும் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டாரென்று தெரியவருகிறது.



மேலும் சித்திரக்காரர்கள் அர்ச். அந்தோனியாரையும் பரிசுத்தத்தின் அடையாளமாகிய லீலிப் பூவைக் கையில் வைத்திருப்பதாகச் சித்திரித்திருக்கிறார்கள்.

அர்ச். சூசையப்பர் குழந்தை சேசுவுக்குப் போஷகராயிருக்கும் காரணத்தைப்பற்றியும், அர்ச். அந்தோனியார் சேசுவின்மட்டில் காட்டின ஆழ்ந்த பத்தி சிநேகத்தைப்பற்றியும் இருவரும் தங்கள் கரங்களில் குழந்தை சேசுவை ஏந்திக் கொண்டிருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறார்கள்.

இவ்விரு அர்ச்சியசிஷ்டவர்களும் இராஜ குலத்திலுதித்தவர்கள். இருந்தபோதிலும் இருவரும் தாழ்மையுள்ளவர்களாகவும், தொழிலாளிகளுக்கு மாதிரிகையாகவும் இருக்கிறார்கள்.

எல்லோரும் இவ்விரு அர்ச்சியசிஷ்டவர்களை அறிந்து இவர்களைப் பின்பற்றக்கடவார்களாக. இவர்களிடமிருந்து ஒரு உசிதமான பாடம் கற்றுக்கொள்ளலாம். அழிந்துபோகும் இவ்வுலக வஸ்துக்களின்மேல் பற்றுதல் வைக்காமலிருக்கவும், இவர்களுடைய பணிவையும், மனத்தாழ்ச்சியையும், ஆத்தும தூய்மையையும், எளியோருக்கும் துன்பப்படுவோருக்கும் இவர்கள் காட்டின இரக்கத்தின் பெருமையையும் பின்பற்றி நடக்கவும் இவர்களுடைய சரித்திரம் நல்ல தூண்டுகோலாயிருக்குமென்று நம்புகிறோம்

---

## The drunkard's puzzle.

### ஒரு குடிகாரனுடைய ஆச்சரியம்.

ஒருநாள் ஒரு குடிகாரன் தான் வழக்கமாய்க் குடிக்கும் சாராயக் கடைகுப்போய் அக்கடையின் கதவினுடைய உயரத்தையும் அகலத்தையும் அளந்துகொண்டிருந்தான். அப்போது அவ்வழியாய்ச் சென்ற அவனுடைய சிநேகிதர்களிலொருவன், “அப்பனே! என்ன செய்துகொண்டிருக்கிறாய்” என்று கேட்டான். அதற்கு அக்குடிகாரன் “ஐயா! நான் செய்வதைப் பாருங்கள். இக்கதவினுடைய உயரத்தையும் அகலத்தையும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். இவ்வளவு ஒடுக்கமான இந்த வாசற்படி என்னுடைய வீட்டையும், வயலையும் எப்படி விழுங்கிவிட்டதென்று எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது” என்றான். இது எவ்வளவு நிஜம் பாருங்கள். உண்மையாகவே இதுதான் அநேக குடிகாரர்களுடைய கதி.

---

## A soul is better than a pair of shoes.

### ஒரு ஜதை பாதரட்சையைக்காட்டிலும் ஆத்துமாவே சிறந்தது.

ஒரு கத்தோலிக் தாயாருக்கு பள்ளிக்கூடத்துக்குப் போகும் வயதுள்ள ஒரு பையனிருந்தான். ஒருநாள் அவள் எண்ணினதாவது: "என்னுடைய பையனை ஊரிலுள்ள கத்தோலிக் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதுதான் எனக்கு இஷ்டம் அங்கே அவன் ஜெபம் பண்ணவும், கடவுளுக்குப்பயந்து நடக்கவும், தாயாருக்குக் கீழ்ப்படிந்து ஒழுகவும் கற்றுக்கொள்வான். ஆனால் நான் பரம ஏழை. மற்றொரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் என் பையனுக்குப் புஸ்தகங்களும், உடுப்புகளும், பாதரட்சையும் வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார். இவ்வளவு அழுக்குப்பிடித்த உடுப்பில் என் பையன் இருப்பதைப் பார்க்க எனக்கு விசனமாயிருக்கிறது."

முடிவாக தன் பையனை ஞானோபதேசம் சொல்லிக்கொடுக்காத அந்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாள். பள்ளிக்கூடத்தில் சேர்ந்தநாளில் அந்தப் பையனுக்கு இதரவஸ்துக்களோடு ஒருஜதை புதிய பாதரட்சையும் கிடைத்தது. ஆனால் கொஞ்சநாளைக்கெல்லாம் அந்தோ! தன் பையனுடைய நடபடிக்கைகளும் குணமும் மாறிப்போனதைத் தாயார் கண்டாள். ஜெபமில்லை, வணக்கமில்லை, பையன் தறுதலையாய் கெட்டமொழி உபயோகிக்க ஆரம்பித்தான். தாயார் பயப்படத் தொடங்கினாள். ஒரு நாள் தனது மனதை உறுதி பண்ணிக்கொண்டு, உபாத்தியாயரிடத்தில் போய் "ஐயா! என்னை மன்னியுங்கள். பையன் வரவரக் கெட்டுப்போகிறான். நான் ஏழையாயிருந்தபோதிலும் பையனை நல்ல பழக்கங்களுக்குக் கொண்டுவர வேண்டுமென்பது எனது எண்ணம். எவ்வளவோ கஷ்டங்களிருந்தாலும் என் பையனை யோக்கியனையும், நல்ல கிறீஸ்துவப் பிள்ளையாகவும் செய்வேன். அப்படிச் செய்ய என்னுடைய பையனை உங்களுடைய பள்ளிக்கூடத்தை விட்டு எடுத்துவிடவேண்டியதாயிருக்கிறது" என்றாள்.

அவள் பையனைக் கொண்டுபோனபோது உபாத்தியாயருக்குக் கோபம் வந்து, "நில்லு! பையன் கையிலுள்ள புஸ்தகங்கள் உன்னுடையவை அல்ல. அவற்றைத் திருப்பிக்கொடுத்துவிடு" என்று சொல்லிக்கொண்டே அவன் கையிலிருந்த புஸ்தகங்களைப் பறித்துக்கொண்டார். மறுபடியும் நில்லு நில்லென்று சொல்லி பையன் காலில் போட்டிருந்த பாதரட்சையையும் கொடுத்துவிட்டுப் போகும்படியாகக் கட்டாயப்



படுத்தினார். அந்த ஏழைமையான தாய் குளிர் காரணத்தால் முதலில் கொஞ்சம் பின்வாங்கினபோதிலும் பையனை நோக்கி அவற்றைக் கொடுத்துவிடும்படி சொன்னதுமல்லாமல், உபாத்தியாயரைப்பார்த்து, "என் பையனுடைய ஆத்துமம் ஒரு ஜதை பாதரட்சையைக் காட்டிலும் சிறந்தது" என்றாள்.

இச்சிறு கதையிலிருந்து கத்தோலிக் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஞானோபதேசம் கற்கக்கூடிய கத்தோலிக் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டியது கட்டாயம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது. அவர்கள் அப்படிச் செய்யத்தவறினால் ஒரு முக்கியமான கடமையைக் கைவிட்டவர்களாக எண்ணப்படுவதுடன் நல்ல கிறீஸ்துவர்களுடைய நன்கு மதிப்பிலும் இருக்கமாட்டார்களென்பதைக் கவனிக்க வேண்டியது.

---

## Here and There.

### நானாசங்கதி.

மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் நாளது வருஷம் மே மாதம் 21-ம் தேதி குன்னூரிலும், மே மாதம் 28-ம் தேதி வெல்லிங்டனிலும், ஜூன் மாதம் 4-ம் தேதி உதகமண்டலம் திரு இருதயநாதர் கோவிலிலும், ஜூன் மாதம் 11-ம் தேதி ஷையூர் அர்ச். மோக்ஷ இராக்கினிமாதாக் கோவிலிலும் உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றிவிட்டு சமீபத்தில் கோயமுத்தூருக்குத் திரும்பிப் போய்விட்டார். மேலும் உதகமண்டலம் திரு இருதயநாதர் கோவிலில் கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாளன்று மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியார் வெகு சிறப்புடன் திவ்விய பாடல் பூசை செய்தார்.

குன்னூர் கோவில் பாதுகாவலரான அர்ச். அந்தோனியார் திருநாளின் வருஷாந்தரக் கொண்டாட்டம் சென்ற ஜூன் மாதம் 18-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எப்பொழுதும் போல் வெகு ஆடம்பரமாய் நடைபெற்றது. அந்நாளில் சங். (Rev. Fr. J. P. Verdure) வெர்ஜர் சுவாமியார் பெரிய பாடல் பூசை செய்தார். அதன்பிறகு சங். (Revd. Fr. Marie Louis) மரிய லூயிஸ் சுவாமியார் பிரசங்கம் செய்தார். திரளான ஜனங்கள் நீலகிரியின் எல்லாத் திக்குகளிலுமிருந்து திருவிழாவைச் சிறப்பிக்கவும், புதுமை செய்கிறவரான உலகமெங்கும்

கீர்த்திவாய்ந்த அந்த அர்ச்சியசிஷ்டவரை மகிமைப்படுத்தவும் வந்து கூடியிருந்தனர்.

ஜூன் மாதம் 5-ம் தேதி கிச்சனீர் பிரபு ருஷியாவுக்குச் சென்றுகொண்டிருந்த தமது கப்பல் உடைந்து கடலில் அமிழ்ந்தினதினால் அவரும் அவருடனிருந்தவர்களும் உயிர் துறந்தனர். இது இங்கிலாந்துக்கும், நேச கட்சியாருக்கும் மிகவும் நஷ்டகரமான செய்தி. அவர் இறந்த சங்கதியை யாவரும் ஏற்றுக்கொண்ட வியசனகரமானவிதமே அவரை யாவரும் நன்குமதித்தனரென்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது.

“இராஜ்ஜியத்தின் வருஷாந்தர நாளாகிய இன்று நான் உங்களுக்கு தெரிவிக்கிறதியாதெனில்: நமது பிரான்ஸ் சைனியங்கள் வீரமுடன் போர்புரிந்த இந்தியப் பட்டாளங்களைக் கொண்டாடுவது எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. நமது பட்டாளங்கள் போர்க்களத்தில் அவர்களுடைய தீரத்தைப் பார்த்து மெச்சி அவர்களுடன் கூட நின்று ஒரே ஞாயமான காரணத்திற்காக போர்புரிய ஆசைப்படுகிறார்கள்” என்று பிரான்ஸ் படைத்தலைவராகிய (General Joffre) ஜோபர் சொல்லுகிறார்.

நமது பரிசுத்த பிதாவாம் பாப்பானவர் யுத்த கைதிகளுக்கு செய்த உபகாரங்களுக்காக இங்கிலாந்து மறுபடியும் நன்றியறிந்திருப்பதாக தெரிவிக்கிறது. இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிய (Mr. Asquith, the Prime-minister of England) ஆஸ்குவித் பிரபு பரிசுத்த பாப்பானவரைக் காண ரோமாபுரி சென்றபொழுது பிரான்ஸ் குடியரசும் நமது பாப்பாசருக்கு ஒருமனமுவந்த சமாச்சாரம் அவர் மூலியமாய் அனுப்பியதாகத் தெரியவருகிறது.

## St. Antony's bread.

### அர்ச். அந்தோனியார் அப்பம்.

**குன்னூர்** :—எனது குமாரத்திக்கு அர்ச். அந்தோனியார் வேண்டுதலினால் பூரண சுகமானது. தோத்திரமாக; ரூபாய் 1-0-0.

**கோலக்கோம்பை** :—நான் பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்கு நன்றியறிதலாக ரூபாய் 2-0-0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1916 ... MA...


# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**August 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 8.


## Education of Girls.

### பெண் கல்வி.

ஒரு ஜாதியாரது கல்வி முழுதும் பெண் கல்வியைப் பொறுத்திருப்பதால், பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது அவசியமென்பதில் சந்தேகமில்லை. கிறீஸ்துவர்களுக்குரிய கல்வியானது, ஒரு பெண்ணை நல்ல புத்திரியாக்கிப் பிற்காலத்தில் ஒரு விசுவாசமுள்ள மனைவியும் விவேகமுள்ள தாயாருமாயிருக்கச் செய்யும். கல்வியெல்லாம் வீட்டிலேயே தொடங்கவேண்டும். தாய்ப்பால் குடிக்கும்போதே, குழந்தைகள் கிறீஸ்துமதக் கோட்பாடுகளையும் படிப்பினைகளையுங் கற்றுக்கொள்ளவேண்டும். பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளுங் கல்வி, வீட்டிற் கற்றுக்கொண்ட கல்வியாகிய அஸ்திவாரத்தினின்றெழுந்த கட்டிடமாயிருக்கவேண்டும். வீட்டுக் கல்வியை ஆதாரமாகக்கொள்ளாத பாடசாலைக் கல்வி மணல் தரையில் கட்டின வீட்டிற்குச் சமானம். பெற்றோர்கள், முக்கியமாய்த் தாய்மார்கள், குழந்தைகளுக்கு வீட்டுப் படிப்பினை கற்பிக்கவேண்டும். தாய் முட்டாளாயிருந்தால், அவள் கற்பிக்கவேண்டிய நல்ல படிப்பினை, நல்லொழுக்கம் யார் கற்பிப்பது?

இந்தியாவில் கத்தோலிக் பெண்களின் கல்வி விஷயமாக மிஷனெரிகளே பாடுபடுகிறார்கள். மற்ற விஷயங்களிலுள்ளது போலவே, கல்வி கற்பிப்பதிலும் மிஷனெரிகளே எல்லாம் செய்யட்டுமென்று ஜனங்கள் விட்டுவிடுகிறார்கள். மிஷனெரிகளது வேலையைக் குறைகூறவாவது ஒப்புக்கொள்ளவாவது

செய்கிறார்களேயொழிய, ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பெண் பாடசாலைகளை விருத்தி செய்யவாவது அல்லது பெண் பாடசாலைகளைப் புதிதாய் ஸ்தாபிக்கவாவது ஒரு பிரயத்தனமும் எடுத்துக்கொள்ளுவதேயில்லை. தங்கள் பெண்பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்துச் சம்பளந் தருவதில்கூட முறுமுறுக்கிறார்கள். நமது கத்தோலிக் இந்தியப் பெண்கள் அடிக்கடி சாவகாசப்பட்டபோதெல்லாம் பள்ளிக்கூட நேரங்களில் வீட்டிலிருந்துவிடுகிறார்கள். நேரஞ்சென்று பள்ளிக்கூடத்திற்கு வந்து, பள்ளிக்கூடம் விடுவதற்கு முன்னமே போய் விடுகிறார்கள். குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றோ, அல்லது வீட்டில் மற்ற வேலை செய்யவேண்டுமென்றோ, அல்லது மற்ற அற்பக் காரணங்களுக்கோ, பெற்றோர்கள் தங்கள் பெண்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்குப் போகாதபடி வீட்டில் நிறுத்திவிடுகிறார்கள். வருஷம் முடிந்தாலும் பெண்களுக்கு அபிவிருத்தியில்லை. பெற்றோர்கள் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் நொந்துகொள்ளவேண்டியிருக்க, வாத்திமார்கள்பேரிலும் மற்றவர்கள்பேரிலும் முறையிடுவது சரியல்ல.

இதர விஷயங்களிற்போலவே, பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும், பேச்சைக் காட்டிலும் செய்கையே அதிகம் வேண்டும்.

(ஞானி.)

## What St. Jerome says.

### அர்ச். ஜெரமியார் சொல்லுவதாவது.

அர்ச். ஜெரமியார், லேதா என்னும் ஒரு விதவைக்கு எழுதிய கடிதத்தில், அவள் மகளின் கல்வியைப்பற்றி அவள் கவனிக்கவேண்டிய விஷயங்களைச் சொல்லுகிறார் :—

“உன் மகளின் அடக்க ஒடுக்கத்திற்கு விரோதமாயுள்ள எதையும் செவிகொடுத்துக் கேளாதபடியும, வாயினாற் சொல்லாதபடியும் அவளைப் பாதுகாத்துக்கொள். கெட்ட வார்த்தையையாவது கெட்ட பாட்டையாவது அவள் கற்றுக்கொள்ள விடாதே. பெண்களோ, பையன்களோ, வேலைக்காரர்களோ, அவர்கள் துஷ்டர்களாயிருப்பின், அவர்களோடு உன் பெண்ணைச் சேராதபடி பார்.

“அவளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க, வயது முதிர்ந்தவளும் நல்ல நடத்தையும் கல்வியுமுள்ளவளுமான ஒரு



வாத்திச்சியைத் தேடி வை. உன் மகள், எப்போதும் தனது அடக்கமுள்ள நடை உடையினால், அவளது பெற்றோரையும் சுற்றத்தாரையும் சந்தோஷப்படுத்தவேண்டும். தன் முகத்தை மினுக்கிக்கொள்ளவாவது, தன் தலையிலும் காது கழுத்திலும் அதிகமாய் பொன் முத்து ஆபரணங்களை அணியவாவது இடங்கொடாதே.

“ராஜ புத்திரியினது அழகும் பெருமையும் அவளது மனத்திலும் ஆத்துமத்திலும் தோன்றவேண்டும்.

“தினம் தினம் சுவிசேஷத்திலிருந்து சில வசனங்களைப் படித்து ஒப்பிக்கச்செய். உன் நடத்தையில் அவளுக்குத் துர்மாதிரியாயிருக்கும் எதுவும் தென்படாதபடி எச்சரிக்கையாயிரு. உன் வார்த்தைகளைக்காட்டிலும் உன் நடத்தையால் அவளுக்கு அறிவை ஊட்டவேண்டுமென்பதை ஞாபகத்தில் வை.”

(சத்திய நேசன்)

## The Correct Things for Marriages.

### மெய்விவாகத்துக்குரிய சரியான ஒழுங்குகள்.

பெண்ணும் மாப்பிள்ளையும் தாங்கள் செய்யப்போகும் கலியாணத்தைப்பற்றி நன்றாய் ஆலோசனை செய்து, நன்னடத்தையினாலும் ஜெபதபங்களினாலும் மெய்விவாக தேவதிரவிய அநுமானத்தைத் தகுந்தவிதமாய் பெறுவதற்கு முஸ்திப்பு செய்வது ஒழுங்கு.

ஓலை வாசிப்பதற்குமுன் பிரதான வேத சத்தியங்களை அறிந்திருப்பதுமல்லாமல், சின்னக் குறிப்பிடத்தை தக்கவிதமாய் ஒப்பிக்க தெரிந்திருக்கவேண்டியது ஒழுங்கு.

தொடர்ந்து வரும் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் ஓலை வாசிக்கச் செய்வது ஒழுங்கு.

தங்கள் மேற்றிராசன ஒழுங்குப்படி கோவிலுக்குச் சேரவேண்டிய கலியாண மிராசை யாதொரு அட்டியில்லாமலும் எதிர்வழக்காடாமலும் கொடுப்பதுமல்லாமல், கலியாண தினத்துக்கு முந்தின சாயங்காலம் தகுந்த நேரத்தில் பங்குசுவாமியாருக்குத் தங்கள் சந்திப்பைக் கொண்டுவந்து செலுத்தவேண்டியது ஒழுங்கு.

மெய்விவாக தேவதிரவிய அநுமானத்தைப் பெறுவதற்கு முன் பெண்ணும் மாப்பிள்ளையும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து அந்நாளில் திவ்வியநற்கருணை உட்கொள்ளவேண்டியது. சாவான பாவத்தோடு இத்தேவதிரவிய அநுமானத்தைப் பெறுகிறவர்கள் தேவ துரோகத்தைக் கட்டிக்கொள்ளுவதுமல்லாமல், இதைத் தகுந்தவிதமாய் பெறுவதால் கிடைக்கும் வரப்பிரசாதங்களை இழந்துவிடுவார்கள் என்பதை அறிந்திருப்பது ஒழுங்கு.

பெண் இருக்கும் பங்குக் கோவிலில் காலைப் பூசையில் கலியாணம் செய்துகொள்ளுவது ஒழுங்கு.

***  ***  ***

தகுந்தபடி பணம் செலுத்தாமல் கோவிலை ஜோடிக்கச் சொல்லுவதும், இன்னம் கோவிலில் மற்ற விசேஷித்த ஆடம்பரங்கள் செய்யச்சொல்லிக் கேட்பதும் ஒழுங்கல்ல.

கலியாண மகோற்சவ நாளில் தகாத அஞ்ஞானச் சடங்குகளை நிறைவேற்றுவது ஒழுங்கல்ல.

சுவாமியார் மூன்று அல்லது நான்குதரம் கேட்கும் வரையில் சம்மதம் என்கிற வார்த்தையைச் சொல்ல பெண் தாமதிப்பது ஒழுங்கல்ல.

கோவிலில் பேசுவதும், சிரிப்பதும், இரகசியமாய்ப் பேசுவதும் ஒழுங்கல்ல.

தாய்தகப்பன் சக்தியற்றவர்களாயிருக்கும்போது கலியாணத்தில் அதிக பணத்தைச் செலவிடுவது ஒழுங்கல்ல.

## The Dragon of Malta.

### மால்டா தீவின் கொடிய பறவைநாகம்.

மால்டா தீவில் உலகத்தின் எத்திசையிலுமிருந்து திருயாத்திரைக்காரர்கள் சந்தித்து வந்த ஒரு பேர்போன கோவிலைப்பற்றிய பக்திக்குரிய கதை ஒன்றுண்டு.

ஒருநாள் அக்கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு கொடிய பறவைநாகம் இருந்துகொண்டு அவ்வழியாய்ப் போகிறவர்களை விழுங்கிக்கொண்டிருப்பதாக திடீரென ஒரு வதந்தி பிறந்தது. இதைக்கேட்டு அதைக் கொல்லுவதற்காகச் சென்ற மால்டா தீவின் யுத்த வீரர்களை ஒருவர்பின் ஒருவராய் அந்நாகம் பக்ஷித்துவிட்டது. ஆனதுபற்றி அச்சபையின் தலைவர் இனி



மேல் சூரர்களில் யாரும் வெளிச் சென்று அந்நாகத்துடன் சண்டைசெய்யக்கூடாதென்று ஒரு விளம்பரம் செய்தார். இதைக் கவனியாமல் அப்போர்வீரர்களில் இளைஞனொருவன் வெளியே சென்று அதை எதிர்த்து அதனுடன் தைரியமாய்ப் போராடி கடைசியாய் அதைக் கொன்றுவிட்டான். இதைக் கண்டு எல்லாரும் மகிழ்ச்சியடைந்தனர். இந்த வீரசூரனை வெற்றிக்கோலமாய் ஜனங்கள் மடத்துக்கு அழைத்துச் சென்றனர். அவன் வந்தவுடன் அவனுடைய தலைவர் அவனுடைய கீழ்ப்படியாமைக்காக அவன்பேரில் கோபங்கொண்டு அவனை மடத்திலிருந்து நீக்கிவிட்டார். அந்த வாலிபன் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு யாதொரு மறுமொழியும் சொல்லாமல் மடத்தைவிட்டுப் போய்விட்டான். அப்போது சிரேஷ்டர் அவனைத் திரும்பக் கூப்பிட்டு, அன்புடன் அரவணைத்து, "மகனே! நான் உனது குற்றத்தைப் பொறுத்துக்கொண்டேன். ஏனெனில் நீ பறவை நாகத்தின்மேல் ஒன்றும், உன்மேல் மற்றொன்றுமாக இருவகை வெற்றியடைந்தாய். தன்னைத்தான் வென்று அடக்குகிறவன் பெரிய வீரசூரனும்" என்று சொன்னார்.

மால்டா தீவின் பெரிய சிரேஷ்டரைப்போலவே, வீரத்தன்மையையும் சுய பரித்தியாகத்தையும்விட கடவுள் கீழ்ப்படிதலையே அதிகமாய் மதிக்கிறார்.

## Letter to Anthony.

### அந்தோனிக்கு எழுதிய கடிதம்

பிரியமுள்ள அந்தோனி,

எனது முந்தின கடிதத்தை வாசித்துத் திருப்தியடைந்தாய் என்பதைக் கேட்டு நான் சந்தோஷப்படுகிறேன். உன் சிநேகிதர்களில் சிலருக்கு நீ அதைக் காண்பித்ததும் சரியே. ஏனென்றால் அவர்களுக்கும் அதனால் பயன் உண்டாகலாம்.

இப்பொழுது, நேற்றையத்தினம் நீ எழுதிய கடிதத்திற்குப் பதிலாக, கிறீஸ்துவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏன் பூசை காணவேண்டியது கடமை என்பதை உனக்கு விவரிப்பேன்.

முதலாவது, அது சர்வேசுரனுடைய கற்பனையாகவும் திருச்சபையின் கட்டளையாகவும் இருப்பதினாலும்;

இரண்டாவது, நமதாண்டவர் சிலுவையில் துவக்கின நமது இரட்சண்ணியம் பூசையிலே திவ்வியநற்கருணையில் தொடர்ந்து நடத்தப்படுகிறபடியினாலும்;

மூன்றாவது, பூசை நேரத்தில் நாம் செய்யவேண்டிய கடமைகள் நினைப்பூட்டப்படுகிறதினாலும்;

நான்காவது, பூசையின்போது நமது ஆத்துமம் இனி அடைய இருக்கும் பாக்கியமாகிய மோட்சத்திற்கு உயர்த்தப்பட்டுப் பிந்தின வாரத்துக்கு வேண்டிய புதுப்பலனைப் பெற்றுக்கொள்ளுகிறபடியினாலும், இக்கடமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆகையால் தகுந்த முகாந்தரமில்லாமல் ஞாயிற்றுக் கிழமைகளில் பூசை காணத் தவறிப்போகிறவர்கள் நித்திய மோட்சத்தை அடையத் தவறிப்போவார்கள்.

அன்றியும், "நீ ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப் போனால் குருவானவர் உனக்குச் சாப்பாடாவது பணமாவது கொடுப்பாரா?" என்று உன்னைக் கேட்ட உன் சிநேகிதனுக்குப் பின்வருமாறு பதில் சொல்வாயாக. உன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்காக உன் பிள்ளைகளுக்கு நீ சம்பளம் கொடுக்கிறாயா? நீ உன் சட்டைப்பையில் வைத்திருக்கும் ஏழே ரூபாயில் ஓர் பிச்சைக்காரனுக்கு ஆறு ரூபாய் கொடுத்தால், உனக்காக நீ வைத்திருக்கும் ஏழாவது ரூபாயையும் கொடுத்துவிடும்படி பிச்சைக்காரன் உன்னைக் கேட்பது நியாயமாகுமா?

நமது சரீரத்திற்காக வேலைசெய்து சம்பாதிக்க வாரத்தில் ஆறுநாள்களை நமக்குக் கொடுத்துவிட்டு, சர்வேசுரன் தம்மையும் நமதாத்துமாவையும்பற்றி நினைக்கும்படி ஏழாம் நாளைத் தமக்கென வைத்திருக்கிறார்.

தேவமாதா மோட்சத்திற்கு எழுந்தருளின திருநாள் கடன் திருநாள் என்பதை மறந்துவிடாதே. ஞாயிற்றுக் கிழமைகளில் செய்வதுபோலவே அந்நாளிலும் பூசைக்கு வரத் தவறமாட்டாய் என்றும், திவ்வியநற்கருணைப் பந்தியில் அன்று நீ சற்பிரசாதம் அருந்துவதைக் காண்பேன் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் ஆசீர்வாதம்.

இப்படிக்கு, உன் உத்தம சிநேகிதன்.



# The Assumption of the Blessed Virgin Mary.

## தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாள்.

இந்தத் தேதியில் மூன்று திருநாள்கள் கொண்டாடப்படுகின்றன. அவையாவன:—தேவமாதாவினுடைய பாக்கியமான திரு மரணத்தின் திருநாளும். அவள் ஆத்தும சரீரத்தோடே பரலோகத்துக்கு எழுந்தருளின திருநாளும், அவள் மோட்சத்துக்கு இராக்கினியாக முடி சூட்டப்பட்ட திருநாளுமாம். சில சாஸ்திரிகள் எழுதியிருக்கிறதாவது:—

தேவமாதா, கஸ்தி வியாதியில்லாமல் தேவ சிநேகத்தாலும், மோட்சத்துக்குப் போகவேண்டுமென்ற ஆசையினாலும் மரித்தாள். தனக்கு 72 வயது நடக்கும்போது ஆகஸ்டு-மீ 13-உ வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்கு மேலே மரணமடைந்தாள் என்று சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்களும் மற்றச் சீஷர்களும் அவளுடைய திருச் சரீரத்தை வெகு பூச்சியத்தோடு அடக்கம்பண்ணினார்கள். இதற்குப் பிறகு மூன்றாம் நாள் அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்து தேசத்திலிருந்து எருசலேம் பட்டணத்திற்கு அற்புதமாய்ப் போய்ச்சேர்ந்தார். தேவமாதா மரிக்குமுன்னே தாம் அவளைக் காணவில்லையே என்று வெகு கஸ்திப்பட்டு, அவளுடைய கல்லறையைத் திறந்து அவளைப் பார்க்கவேண்டும் என்று விரும்பினார். அவ்வாறே கல்லறையைத் திறந்து பார்த்தபோது அதில் லீலி புஷ்பங்களையும் உரோசா மலர்களையும் கண்டனரே தவிர, தேவமாதாவின் திருச்சரீரத்தைக் காணவில்லை. ஓர் சம்மனசு அங்கேயிருந்த அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையாகி, "தேவமாதா ஆத்தும சரீரத்தோடே பரலோகத்தில் இருக்கிறாள்." என்று அறிவித்தார்.

# Here and There.

## நானா சங்கதி.

ஆகஸ்டு-மீ 28-உ கொண்டாடப்படும் அர்ச். அகுஸ்தீன் திருநாள் நமது மேற்றிராணியாரவர்களுடைய பாதுகாவலரின் திருநாளாக இருக்கிறது. ஆண்டவரவர்களை யாம் வணக்கத்தோடு வாழ்த்துவதுமன்றி, தேவன் அவருக்குப் பாக்கியமுள்ள நெடுங்கால வாழ்வை அருளும்படி பிரார்த்திக்கிறோம்.

அர்ச். பர்ப்பானவருடைய முயற்சியால் காயம்பட்டவர்களும் சக்தியற்றவர்களுமான 150,000 யுத்தக் கைதிகள் சிறைக்கூடத்தினின்று விடுதலையடைந்திருக்கிறார்கள்.

மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். மெய்னியல் சுவாமியாரும் (Rev. Fr. Meyniel), கும்பகோணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். புல்லியார்ட் சுவாமியாரும் (Rev. Fr. Bulliard), போர்க்களத்தில் காயம்பட்டவர்களுக்குச் சகாயம் புரிவதில் காட்டிய வீரத்தனத்துக்காகவும் அன்புக்காகவும் வெகுவாய்ப் புகழ்ப்பெற்று வெகுமதியடைந்திருக்கின்றனர்.

ஜூன்-மீ 28-உ குன்னூர், ஸெயின்ற் ஜோசப்ஸ் கான்வென்ட் மடத்தில் யுத்தநிதிக்குதவியாக நேர்த்தியான விநோத சங்கீத காலட்சேபம் நடத்தப்பட்டது.

ஜூலை-மீ 2-உ ஒத்தை சேசுவின் திரு இருதயக் கோவிலில் அப்பெயர்கொண்ட திருநாள் வெகு ஆடம்பரத்துடன் கொண்டாடப்பட்டது.

குன்னூர், உபாத்தியாயர், Mr. R. S. இராஜேந்திரம் பிள்ளையுடைய குமாரர் R. ஆரோக்கியசாமி இப்பொழுது போர்புரியச் சென்றிருக்கும் சேனையின் குமாஸ்தாவாய் மெஸப்பொட்டேமியாவில் இருக்கிறார்.

நல்ல கத்தோலிக்கரும், கோயம்புத்தூர் அர்ச். மிக்கேல் ஹைஸ்கூலில் பிரசித்திபெற்ற உபாத்தியாயருமாகிய T. C. கண்ணையபிள்ளை ஜூன்-மீ 28-உ மரணமடைந்த சங்கதியை விசனத்தோடு வெளியிடுகிறோம். *R. I. P.*

வெலிங்டன் ஆஸ்பத்திரிச்சேரி நிவாசியாகிய டிப்போ ரெஜிமண்டல் இன்ஸ்டிட்யூட் ஹெட் ரயிட்டர் R. M. அந்தோனி என்பவர் அசௌக்கியத்தினால் பாலக்காடு சென்று சுகமடையாமல் அவ்விடத்திலேயே கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுத் தமது இரண்டு நேச பிள்ளைகளையும் அநாதைகளாய்ப் பரிதபிக்கவிட்டுச் சில காலத்திற்குமுன் பரகதியடைந்தார். *R. I. P.*

☞ கவனிப்பு:—அர்ச். அந்தோனியாருக்குச் செய்யப்படும் நன்றியறிந்த தோத்திரக் காணிக்கைகளைப் பிரசுரம் செய்வதற்கு நமது தூதன் அங்கீகரிப்பதில்லை.

---

162003


# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**September 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர்.


## Ignorance of Religion.

## தங்கள் மதமின்னதென்று அறியாமை.

வெகு சொற்பக் கிறீஸ்துவர்களே தங்கள் மதத்தைப் பற்றி அறிந்திருக்கிறார்களென்பதைக் கவனிக்க மிகவும் விசனகரமாயிருக்கிறது. புதுநன்மைக்கு முன்பும், கல்யாணத்துக்கு முன்பும் அவர்கள் கட்டாயமாய்ப் படிக்கிற சின்னக் குறிப்பிடத்தைத் தவிர அவர்களுக்கு மதத்தைப்பற்றியாவது, கடவுளைப்பற்றியாவது, ஆத்துமாவைப்பற்றியாவது வேறு ஏதாவது தெரியுமா? பணம், உத்தியோகம், கல்யாணம் முதலியவற்றைப்பற்றி ஜனங்கள் அடிக்கடி பேசிக்கொள்வதைக் கேட்கிறோமேயொழிய மதம் அவர்கள் நினைப்புக்காவது சம்பாஷணைக்குள்ளாவது வருவதில்லை. இது படிப்பில்லாத கிறீஸ்துவர்களிடத்து மாத்திரமல்ல, நமது கத்தோலிக்கு பாடசாலைகளில் வெகு வருஷகாலம் படித்த மகான்களுக்கும் ஒத்து நிற்கிறது. கட்டுக்கட்டான புஸ்தகங்கள் வைத்திருந்தார்கள். ஆனால் அவர்களது சிறு ஞானோபதேசச் சுருக்கம் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாயிற்று. ஞானோபதேசக் கிளாஸ் அவர்களுக்கு அவ்வளவு முக்கியமானதில்லை. ஏன்? அது பரீட்சைப் பாடமா? அல்லது அதைப்படித்து அதிக சம்பளமாவது பெரிய உத்தியோகமாவது கிடைக்கிறதா? என்பதினாலேதான்.

என்றாலும், தேவ ஞானமும் ஆத்தும ஞானமுமே மிகச் சிறந்தன; முக்கியமானவையும் அவை "உலக முழுதும் ஒருவனுக்குக் கிடைத்து அவன் தன் சொந்த ஆத்துமாவை இழப்பதனால் அதனால் அவனுக்கு என்ன பயன் வரும்?"

கிறீஸ்துவர்கள் எவ்வளவுக்குத் தங்கள் மதத்தைப்பற்றி அறிகிறார்களோ அவ்வளவுக்கு அதனைக் கொண்டாடத் தொடங்கி அதன்படி அநுஷ்டிக்க ஆரம்பிப்பார்கள். அதன்மேல் அவர்கள் பத்தி வைராக்கியம் அதிகமாகிப் பிறருக்குப் போதிக்கத் தொடங்குவார்கள். அதுமாத்திரமன்றி சத்துருக்களது வாதங்களுக்கும் பிரதி யுத்தரங்கொடுத்துத் தம் மதத்தின் கௌரவத்தைக் காப்பார்கள்.

அப்படியல்லாமல் ஒரு மூடக் கிறீஸ்துவனது மதவைராக்யம் என்ன பயனைத் தரும்? அவனுடைய நம்பிக்கை சோதனை காலத்திலாவது, பிறர் இம்சிக்கும் காலத்திலாவது, எப்படித் தடுக்கக்கூடும்? உபேட்சையாயுள்ள கிறீஸ்துவன் தன்னை மதத்துக்கு ஒழுங்குபடுத்திக்கொள்ளாதபடி மதத்தைத் தனக்கும் தன் மனப்போக்குகளுக்கும் சௌகரியங்களுக்கும் சரிப்படுத்திக்கொள்ளுவான். சமயத்துக்குத் தக்கபடி அதனை எடுத்துக்கொண்டு தள்ளிவைப்பான்.

அவனுக்குப் பக்தியென்று ஒன்றிருந்தால் அது சீக்கிரம் மூட பக்தியாக மாறி, அதற்குத் தக்க காரியங்களைச் செய்வானேயொழிய கொஞ்சங்கூட அச்சமில்லாமல் ஞாயிற்றுக்கிழமைதோறும் நடக்கும் பூசைக்கு வராமலிருந்துவிடுவான்.

கிறீஸ்துவர்களுக்கு மத உண்மை தெரிந்திருந்தால் அவர்களில் ஞாயிற்றுக்கிழமைதோறும் கோவிலுக்கு வராதவர்களது தொகை மிகக் குறைவாயிருக்கும். அநேகர் மற்ற நாட்களிலும் நடக்கும் பூசைக்கு வருவார்கள்.

ஆதலால் மத போதனைதான் தற்காலத்தில் அதிகம் தேவையானது. அது ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் ஆத்தும சுகத்தைக் கொடுப்பதோடு அவர்கள் குடும்பம், திருச்சபை ஆகிய எல்லாவற்றிற்கும் நன்மை தருகிறது.

தங்களது மதத்தை நன்குணர்ந்து அதன்படி நடக்கும் கிறீஸ்துவர்கள் பூலோக தீபங்கள் போலிருக்கிறார்கள்.

"சத்திய நேசன்."

---

## Pragasam and Irul.

## பிரகாசமும் இருளும்.

"24-உ செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு, சந்தைக் கடையில் இருள் அவர்களால் மதத்தைப்பற்றி வெகு நேர்த்தியான பிரசங்கம் செய்யப்படும்" என்பதாகக் கத்தோலிக்குத் திருச்சபைக்குக் கொடிய சத்துருவாகிய இருள் என்பவனால்



சுற்று விளம்பரச் சீட்டுகள் வழங்கப்பட்டன. வினோதப் பிரியத்தினால் பல ஜனங்கள் பிரசங்கத்தைக் கேட்க அவ்விடம் வந்து கூடினார்கள். அப்பொழுது இருள் அவர்களை நோக்கிப் பெருங்குரலெடுத்து, "பட்டணவாசிகளே! ரோமான் மதம் சூதுள்ளது" என்று உரைத்தான். தற்செயலாய் அங்கு வந்திருந்த பிரகாசம் என்னும் கத்தோலிக்கு வாலிபன் பிரசங்கியை தடுத்து, "ஐயா! ஒரு வார்த்தை சொல்ல உத்திரவு கொடுங்கள். ரோமான் மதம் சூதுள்ளது என்று சொல்லுகிறீரே. நீர் வேறு எதுவும் சொல்வதற்குமுன் நீர் எப்படி, எப்பொழுது, ரோமான் மதம் இன்னதென்று படித்தீர் என்று நான் அறிய விரும்புகிறேன்" என்றான். இருள், "பயலே! என்னை யாரென்று நினைத்துக்கொண்டாய்? அத்தன்மையான மதத்தைப்பற்றி ஒருபோதும் படித்ததும் இல்லை, படிக்கப் போகிறதுமில்லை" என்றான். அதற்குப் பிரகாசம், "நீர் என்னைப் பயலென்றோ அல்லது வேறெதுவென்றோ கூப்பிடலாம். ஆனால் இங்கு கூடியிருக்கிற எங்களைக் கழுதைகள் என்று நீர் நினைத்துக்கொண்டாலொழிய உமக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றிப் பேசப் பாசாங்கு செய்யமாட்டீர். பட்டணவாசிகளே! உங்கள் குழந்தை வியாதியாய் இருந்தால் வைத்தியனையா அல்லது கொல்லனையா? யாரைக்கூப்பிடுவீர்கள்? உங்களுக்குப் பிறருடைய ஆலோசனை வேண்டுமானால் அத்துறையை அறிந்தவர்களிடத்திலேயே ஆலோசனை கேட்பீர்களல்லவா? கத்தோலிக் மதத்தைப்பற்றிப் பேசுகிற இவர் அதைப்பற்றி ஒருபோதும் படித்ததேயில்லை என்று தாமே அறிக்கையிடும்போது இனி இவர் சொல்வதை நாம் கேட்கலாமா?" என்றான்.

"சபாஷ்! சபாஷ்!" என்று அங்கு கூடியிருந்தவர்கள் கூவினார்கள். இதனால் இருள் என்பவன் ஆத்திரம் பொங்கி மதிமயங்கி, "இந்த ரோமானித்தான் சொல்வதை நீங்கள் கேட்கவேண்டாம். ரோமான் கத்தோலிக்கர் அமலோற்பவத்தை விசுவசிக்கிறார்கள் என்று அறிய அவனுடைய மதத்தைப் படித்தறிய வேண்டியது அவசியமா?" என்றான். உடனே, பிரகாசம், "அமலோற்பவம் என்பது என்னவென்று எங்களுக்கு விவரித்துரைக்கப் பிரசங்கியாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான். அப்போது இருள் மனக்கலக்கமுற்று, "அமலோற்பவமா? பயலே! அமலோற்பவம் ஒருவித தேவதிரவிய அநுமானம்." என்றான். கூட்டத்தார் யாவரும் நகைத்தார்கள். பிறகு, பிரகாசம், "கேளும்! அது இன்னதென்று உமக்குத் தெரிவிப்பேன். அது ஜென்மப்

பாவ தோஷம் இல்லாமல் பிறக்கப் பரிசுத்த தேவமாதாவுக்குக் கொடுக்கப்பட்ட தேவ சகாயமாகும்.'' என்றான். இருள் என்பவன், "பாப்புவின் தவறாமையோ? அது ஒரு தந்திரமல்லவா? கணக்குச் செய்யும்போதும் பிறரோடு சம்பாஷிக்கும்போதும் பாப்பு தவறமாட்டார் என்று ரோமான் கத்தோலிக்கர் நம்புகிறார்களே!" என்றான். அதற்குப் பிரகாசம், "நாங்கள் நம்புகிறது அதல்ல. வேத சத்தியத்தையாவது நல்லொழுக்கத்தையாவதுபற்றி யாதொரு பிரமாணத்தைத் தீர்மானிக்கையில் மாத்திரம் பாப்பானவர் திருச்சபையின் பிரதான மேய்ப்பர் அல்லது போதகர் என்ற தன்மையில் தவறாமையையுடையவர் என்று நம்புகிறோம். ஐயா இருளே! நீரோ நான் பார்த்தமட்டில் மகா அறியாமையையுடையவர். இன்றையத்தினம் நீர் எங்களை ஏமாற்றப்போவதாய் நம்புவீராகில் வெகுவாய் தப்பிப்போனீர்" என மொழிந்தான். உடனே யாவரும் "சபாஷ்! சபாஷ்!" என்று இரைச்சலிட்டார்கள். ஜனங்களுடைய பரிகாசத்தினால் வெட்கப்பட்டு இருள் அவ்விடம் விட்டு அகன்று மறையலானான்.

பிரகாசத்தைப்போல மற்றக் கிறீஸ்துவர்களும் தங்கள் வேதத்தை அறிந்திருப்பார்களானால் அவர்களும் அதின் சத்துருக்களுடைய மதியற்ற தர்க்கங்களுக்கு எதிர்த்துத் தக்க பதில் கொடுத்து அவர்கள் வாயை அடைத்துத் தங்கள் பரிசுத்த வேதத்தைக் காத்துக்கொள்ள வல்லவராவார்கள்.

(ஞானி.)

## Selecting Sponsors.

## ஞானத் தாய் தந்தையரைத் தெரிந்துகொள்வது.

"குழந்தைக்கு ஞானத்தாய் தந்தையராக யார் இருப்பவர்?" என்பது ஓர் முக்கியமான கேள்வி. இதைப்பற்றிப் பெருத்த யோசனை ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது. உன் குழந்தைகள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வல்லவர்களாகுமுன் கடவுள் உன்னை இவ்வுலக வாழ்க்கையினின்று அழைத்துக்கொள்வாரானால் அவர்களுடைய ஆத்தும சரீர நன்மைகளைக் கவனிக்க யாரை ஏற்படுத்த விரும்புவாய்? நீ இந்தக் கேள்விக்கு மறுமொழி சொன்னால் நீ அவ்விஷயத்தைத் தீர்மானித்துவிட்டாய் என்னலாம்.

ஞானத்தாய் தந்தையருடைய கடமை ஞானஸ்நானத்தின்போது பக்கத்தில் இருப்பது மாத்திரமல்ல, ஞானத்தாய் தந்தையர்மேல் பெருங் கடமை சுமந்திருக்கிறது. ஆதலால்



நல்லொழுக்கமும் குறையற்ற வேத விசுவாசமுமுள்ள பக்திமான்களான கத்தோலிக்கர்களையே தெரிந்துகொள்ளவேண்டியது. ஞானத்தாய் தந்தையருடைய உந்நத கடமைகளைச் சற்று யோசித்துப் பாருங்கள் முதலாவது: அவர்கள் குழந்தைக்குப்பதிலாய் விசுவாச முயற்சியைச் செய்யவேண்டியது. இரண்டாவது: குழந்தை புத்தி விவரம் அறிந்திருந்தால் தானே செய்யக்கூடியதுபோல அவர்கள் குழந்தையின் பெயரால் "சாத்தானை விட்டு விடுகிறாயா? ஆம், விட்டுவிடுகிறேன். அதன் கிரிகைகளையும் அதன் சகல ஆரவாரங்களையும் விட்டு விடுகிறாயா? ஆம் விட்டுவிடுகிறேன்." இவை முதலிய வாக்குத்தத்தம் செய்யவேண்டும். பெற்றோர்கள் தங்கள் கடமைகளைக் கைசோரவிட்டால் அல்லது இறந்துபோனால் ஞானத்தாய் தந்தையர் குழந்தை கத்தோலிக் திருச்சபையில் வளர்க்கப்படவும், கத்தோலிக் பாடசாலையில் கற்பிக்கப்படவும் கத்தோலிக் மார்க்கத்தில் பயிற்றப்படவும் பார்க்கவேண்டியது. கடைசியாகச் சொல்லவேண்டுமானால் ஞானத்தாய் தந்தையரை ஆராயாமல் தெரிந்துகொள்வது கூடாது. தவிர தெரிந்துகொள்ளப்பட்ட ஞானத்தாய் தந்தையர் தங்கள் கடமைகளின் பேரில் அதிக கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டியது.

## Better late than never.

## ஒருபோதும் வராதிருப்பதைவிட தாமதமாய் வருவது உத்தமம்.

ஒரு நாள் ஒரு பட்டிக்காட்டான் தன் ஆத்துமத்தைச் சோதியாமலும் தான் செய்த பாவங்களை நினையாமலும் குருவானவரிடத்தில் பாவ சங்கீர்த்தனம் செய்யப்போனான். அப்போது குருவானவர் அவனைப் பார்த்து, "தம்பீ! நீ பாவ சங்கீர்த்தனம் பண்ணுவது நல்லது. ஆனால் நீ சொல்லுகிறதை நான்மாத்திரமல்ல, சர்வேசுரனும் கேட்பார்" என்றார். அப்போது அவன், "ஓஹோ! அப்படியானால் நான் செய்தவைகளையும் நான் சொல்லவேண்டியவைகளையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லி எழுந்து போய் ஓரிடத்தில் உட்கார்ந்து, தன் ஆத்துமத்தை நன்றாய்ச் சோதித்து, அதின் பிறகு குருவானவரிடம் சென்று நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணினான். "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பது பழமொழி. மேலே சொன்ன பட்டிக்காட்டானைப்போல அவிவேகிகளும் யோசனையற்றவர்களுமான அநேக கிறீஸ்துவர்களுக்கு இது பொருந்தும்.

## Letter to Anthony.

## அந்தோனிக்கு எழுதிய கடிதம்.

பிரியமுள்ள அந்தோனி!

ஓர் பிரேத அடக்கத்துக்குப் பிறகு ஒருநாள் உன்னைப் பார்த்தேன். உன் முகம் கொஞ்சம் மாறியிருந்தது. நீ சிறிது விநோதமாய்க் காணப்பட்டதுமல்லாமல் பீர் நாற்றமும் உன்னண்டை வீசிற்று. நரக நெருப்பால் உன்னைச் சூடாக்கிக்கொள்ளும்படி பேயின் பானத்தைக் குடித்திருப்பாயென்று நான் அஞ்சுகிறேன். அன்றையத்தினம் மழை பெய்துகொண்டிருந்தது வாஸ்தவந்தான். நீ வெகு நல்ல மனுஷனாயிருக்கிறபடியால் அவ்வித பானத்தைக் குடிப்பது உனக்கு வழக்கமல்ல என்றே நினைக்கிறேன். உன்னைக் குடிகாரன் என்று நான் சொல்லுகிறதில்லை. ஆயினும் நீ அப்படிப்பட்ட பொல்லாங்குகளுக்குக் குடியே காரணமாகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

குடிகாரன் தனக்குத் தானே கேட்டை வருத்திக்கொள்ளும் நீசன். அவன் தான் அனுபவிக்கும் சகல துன்பங்களுக்கும் தன்னைத்தவிர வேறொருவர்பேரிலும் குறை கூறக் கூடாதவன். குடிகாரன் துக்கமும், துணித்தரித்திரமும், நிர்ப்பாக்கியமுள்ள மனைவியையுடைய மனுஷன். குடிகாரன் பசியும், அலங்கோலமும், கன்னியக் குறைவுமுள்ள பிள்ளைகளையுடைய மனுஷன். குடிகாரன் தன்னோடு கூடும் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் சஞ்சலத்தை விதைக்கிற மனுஷன். அவன் ஓர் அடிமை. மரியாதையையும் மனப்பாக்கியத்தையும் அனுபவியாதபடி விலக்கித் தன்னைக் கட்டியிருக்கும் சங்கிலியை முறிக்க மனமில்லாத பரிதாபத்துக்குரிய நீச அடிமை அவனே! நீ எப்பொழுதேனும் குடிகாரனாகாதபடி உன்னைக் காத்துக்கொள்ளப் பத்திரமான வழியெதுவென்றால் ஒரு பொழுதும் மது பானத்தைத் தொடாமலிருப்பதுதான்.

உலகத்தில் மிகவும் பரிதாபப்படத்தக்க பிராணிகளில் குடிகாரன் ஒருவன் என்று நினைத்துக்கொள். நீ அப்படிப்பட்டவனாவாயாகில் எனக்கு வெகு கஸ்தியுண்டாகும்.

நீங்கள் எல்லோரும் க்ஷேமமாய் இருப்பீர்களென்று நம்பிக்கையோடு உன்னையும் உன் குடும்பத்தாரையும் ஆசீர்வதிக்கும்

உன் உத்தம சிநேகிதன்.



## Pilgrimages.

## திரு யாத்திரைகள்.

கோத்தகிரியிலும் கருமுத்தன்பட்டியிலும் வழக்கமாய் நடைபெறும் வருஷோற்சவங்கள் நெருங்கி வருகின்றன. வருஷந்தோறும் பெருந் தொகையாக நமது கிறீஸ்துவர்கள் அந்த விசேஷித்த சமயங்களில் கிறீஸ்துவர்களுடைய தாயாகிய பரிசுத்த தேவமாதாவுக்கு மகிமையுண்டாகக் கூடி வருவதைக் காண்பது மனரம்மியமானதே. கோத்தகிரிக்கும், முக்கியமாய்க் கருமுத்தன்பட்டிக்கும் போகிற திரு யாத்திரைக்காரரில் பெரும்பான்மையோர் பக்தியுள்ள கருத்தோடு போகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவர்களிடம் காணப்படுகிற பக்தியுள்ள ஒழுங்கான மேரையானது ஜனக்கூட்டத்தில் அவர்களைச் சுலபமாய்க் கண்டுகொள்ளச் செய்கிறது.

இதற்கு விரோதமாய், சந்தைக் கடைக்குச் செல்வது போல வெறும் வேடிக்கைக்காகவும் உல்லாசத்திற்காகவும் தங்களைக் கிறீஸ்துவர்களென்று சொல்லிக்கொண்டு திரு யாத்திரை ஸ்தலங்களுக்குப் போகிற ஜனங்களும் இருக்கிறார்கள். வேறு சிலர் (நான் நினைக்கிறபடி வெகு சொற்பப் பேர்) குறும்பு செய்வதற்காகப் போவார்கள். ஐயோ! அப்படிப்பட்ட ஜனங்களுக்கு நன்மைக்கேற்ற சமயங்கள், தீமைக்கும் பழிப்புக்கும் ஏற்ற சமயங்களாகின்றன. "கள்ள விசுவாசிக்குக் கழுத்தெல்லாம் ஜெபமாலை" என்றபடி, விசேஷமாய் அவர்கள் அந்நியருடைய அபதூறுக்குப் பாத்திரமாகும்படி அதிக துஷ்டத்தனமாயும் ஒழுங்கீனமாயும் நடந்துகொள்ளுகிறார்கள். திரு யாத்திரை ஸ்தலம் பக்திக்கும் ஜெபத்துக்கும் ஏற்பட்ட ஸ்தலம். ஜனத்திரளின் சந்தடியும் ஒழுங்கீனமும் பக்தியைக் காண்பியாது. "என் பிதாவின் வீடு ஜெபத்தின் வீடாயிருக்கிறது என நினைத்துக்கொள்ளுங்கள்" என்று நமதாண்டவர் வியாபாரிகளைக் தேவாலயத்தை விட்டுத் துரத்துகையில் சொன்னார். அவ்விதமாகவே அவர், "என் மாதாவின் வீடு ஜெபத்தின் வீடாயிருக்கிறது என நினைத்துக்கொள்ளுங்கள்" என்று திரு யாத்திரைக்காரருக்கும் சொல்வார்.

## Here and There.

## நானு சங்கதி.

நேசக் கட்சியாருக்கு இப்பொழுது நடக்கும் சண்டையில் ஜெயம் கிடைப்பது நிச்சயமென்று மௌனியாகிய ஜெனரல் ஜோபர் (General Joffre) சொன்னதாகப் பிரஸ்தாபம்.

ஸ்பெயின் தேசத்திலுள்ள கத்தோலிக்கர்கள் யுத்தத்தில் ஜெர்மானியரால் செய்யப்படும் நிஷ்டூரங்களை வெளிப்படையாய்க் கண்டித்தெழுதியிருக்கிறார்கள்.

சங். தூர்னியெர் சுவாமியார் (Rev Fr Tournier) ஒரு நாள் சண்டை துவக்குமுன் வெளியிடத்தில் திவ்விய பூசை செய்ததாகவும், திரளான உத்தியோகஸ்தரும் போர்வீரர்களும் பூசை கண்டதாகவும் நடந்த சண்டையில் தங்களுக்குப் பூரணஜெயம் கிடைத்ததாகவும் சென்ற தடவை எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

சென்னை அதிமேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ஆலன் ஆண்டவர் சென்னை சட்ட நிரூபண சபைக்கு ஓர் அங்கத்தினராய்த் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார். சென்னை சட்ட நிரூபண சபையில் கத்தோலிக் மேற்றிராணியார் சேர்க்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை.

விக்கார் ஜெனரலாகிய மிகவும் சங்கைக்குரிய ராண்டி சுவாமியார் (Very Rev. Fr. N. Rondy) கோயம்புத்தூர் தொழிற்சாலையின் மானேஜராகவும் சங். கோலர் சுவாமியார் (Rev. Fr. J. Kohler) உதவி மானேஜராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

சங். பெறியெர் சுவாமியார் (Rev. Fr. L. Perrière) கோயம்புத்தூர் அர்ச் மிக்கேல் போர்டிங் மடத்தை இப்பொழுது விசாரித்து வருகிறார்.

குன்னூர் சப் கலெக்டர் பிராக்கன்பரி துரையவர்கள் (Mr. Brackenbury, I.C.S) ஆகஸ்டு-மீ 5-உ குன்னூர் முனிசிப்பல் சங்கத்துக்குச் சேர்மனாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்.

**மரண அறிக்கை**—சங். போயே சுவாமியார் (Rev. Fr. Aug. Boyet) ஆகஸ்டு-மீ 2-உ பெங்களூரில் மரணமடைந்த சங்கதியை விசனத்தோடு வெளியிடுகிறோம். R. I. P.

---

# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**October 1916.**

**புத்தகம் II.]** FIDES AC ROBUR. **[நம்பர் 10.**

## Ignorance of Religion—(*Continued*)

## தங்கள் மதம் இன்னதென்று அறியாமை. (தொடர்ச்சி)

"நமது நாட்களில் நேரிடும் அநேக தின்மைகளுக்குக் காரணம் என்னவென்றால், கிறீஸ்துவர்கள் தங்கள் மதம் இன்னதென்று அறியாமைதான்" என்று பரிசுத்த பிதா பத்தாம் பத்திநாதர் ஓர் நிருபத்தில் சொல்லியிருக்கிறார்.

ஒரு வீட்டில் குழந்தை ஒன்று பிறந்தால் அதைப் படைத்த சர்வேசுரனை நினையாமல் அதினுடைய தலைவிதியை அறிய வீண் சகுனசாஸ்திரங்களைப் பார்த்துத் தகாத சடங்காசாரங்களைப் பண்ணுகிறார்கள். அந்தக் குழந்தைக்குப் பேர் வைத்து ஞானஸ்நானம் கொடுக்கும்படி திருச்சபைக் கட்டளையின் பிரகாரம் அதை எட்டு நாளைக்குள் கோவிலுக்குக் கொண்டுபோகாகமல் நல்ல நாள் நல்ல நேரம் பார்த்துக் கொண்டு போகும்படி தாமதம் செய்கிறார்கள். அப்படிச் செய்யும் பெற்றோர்களுடைய குற்றத்தினால் அநேகம் குழந்தைகள் ஞானஸ்நானம் இல்லாமல் இறந்து போகும்படி சம்பவிக்கின்றது. புது நன்மை வாங்கும்பரியந்தம் குழந்தைக்கு ஜெபங்களையும் வேத சத்தியங்களையும் கற்றுக் கொடுப்பார் மிகவும் சிலரே. குழந்தைக்கு வியாதி வந்தால் ஒரு சமயம் அதைக் கோவிலுக்குக் கொண்டுபோய்க் குருவானவரிடம் மந்திரிக்கச் செய்வார்கள். பிறகு அதுவும் போதாது என்று நினைத்து அஞ்ஞான மந்திரக்காரர்களை அழைத்துத் தங்கள் குழந்தையை மந்திரிக்கச் செய்வார்கள்.

அப்படி அஞ்ஞானிகளின் மத்தியில் வளர்ந்த பிள்ளைகள் அவர்களோடு சேர்ந்துகொண்டு தீபாவளிப் பண்டிகையில் பட்டாஸ் சுடுவதும், கார்த்திகை மாதத்தில் தீபம் வைப்பதும், மொகரம் பண்டிகையில் புலிவேஷம் போடுவதும் அல்லாமல்

பேய்க்கு அடுத்த இன்னம் பலவித காரியங்களையும் செய்வார்கள்.

புது நன்மை வாங்கவேண்டிய தக்க வயது ஆனபிறகு கட்டாயத்தினாலே ஐந்து மந்திரங்களையும் சின்னக் குறிப்பிடத்தையும் அவைகளுடைய அர்த்தம் கண்டு பிடியாமல் படித்து, கிளிப்பிள்ளைபோல் அவைகளைச் சொல்லுவார்கள். இதனால் அநேகர், "உம்முடைய நாமம்" என்பதற்குப் பதிலாய் "உம்முடைய ராமம்" என்றும், "எங்கள் அப்பம்" என்பதற்குப் பதிலாய் "எங்கள் அப்பன்" என்றும் சொல்லுவார்கள்.

"நன்மை வாங்கும்பொழுது யாரை வாங்குகிறீர்கள்?" என்று கேட்டால், சிலர் அர்ச். தேவமாதாவை என்றும், சிலர் அர்ச். அந்தோனியாரை என்றும் சொல்லுவார்கள்.

அப்படி வேதத்தின் அறியாமையில் ஜீவித்த கிறீஸ்துவர்கள் சர்வேசுரனுக்குச் செய்யவேண்டிய தகுந்த ஆராதனை செய்யாமல் வீண் பத்தி ஆசாரங்களினால் சர்வேசுரனுக்கும், அர்ச். அந்தோனியாருக்கும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் அவசங்கை செய்கிறார்கள்.

அப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்கள் தாங்கள் சாகும்பரியந்தம் ஆத்தும இரட்சண்ணியத்தை அடைவதற்கு அறிய வேண்டிய பிரதான வேத சத்தியங்களை அறியாமல் இருக்கிறதினால் விசுவாசம் இல்லாமலும், ஜீவியகாலத்தில் செய்த தங்கள் பாவங்களுக்கு மனஸ்தாபப்படாமலும், தெய்வ பயம் இல்லாமலும் கண்மூடித்தனமாய் மரிக்கிறார்கள்.

கிறீஸ்துவர்கள் எல்லோரும் வேதத்தின் பிரதான சத்தியங்களைப் படித்தறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கடமையை அநேகர் அசட்டை செய்கிறபடியால் நரகத்தில் விழுகிறார்கள். (சத்திய நேசன்.)

---

## Misunderstood devotion.

### குருட்டுப் பத்தி.

தேவமாதாவின்பேரில் பத்தியாயிருந்த ஒரு பெண்பிள்ளை தேவமாதாவைக்குறித்து நாள்தோறும் ஐந்து முறை ஜெபமாலை ஜெபிப்பதாய் வேண்டுதல் செய்தாள். அவள் அவ்வாறு அடிக்கடி ஜெபமாலை ஜெபித்தாலும் தன் புறத்தியாருக்கு விரோதமாய் அடிக்கடி கோபித்தும், தன் வீட்டு



வேலைகளை அசட்டை செய்தும், தன் பிள்ளைகளைக் கவனியாமலும் இருந்துவந்தாள். அவள் சம்மனசுபோல் இருக்க ஆசைப்பட்டாலும், தன் கடமைகளைச் சரிவரச் செய்தவளல்ல. அவள் ஜெபமாலை ஜெபித்து வந்த மேரை எப்பேர்ப்பட்டது என்று சுவாமிக்குத்தான் தெரியும். கணக்கில்லாத முறை ஜெபமாலை வேண்டிக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அவளிடத்தில் இருந்தாலும் பத்தியோடும் கவனத்தோடும் அவள் அதை ஜெபித்தவளல்ல. அவள் அவ்வாறு ஜெபமாலை ஜெபித்ததைக் கணக்கு எடுக்க ஜெபமாலை ஜெபித்து முடிந்த ஒவ்வொரு முறைக்கு பட்டாணிக் கடலையைப் போட்டு வந்தாள். சிறிது காலத்திற்குப் பிறகு அவள் இவ்வாறாகச் சேர்த்து வைத்திருந்த தன் புண்ணிய பொக்கிஷத்தைத் திறந்து பார்த்தாள். ஆனால் என்ன ஆச்சரியம்! அவள் போட்டு வைத்திருந்த ஐந்நூறு பட்டாணிக் கடலைகளில் ஒரே ஒரு பட்டாணிக்கடலை மட்டும் பெட்டியில் இருந்தது. அதுவும் காய்ந்து மெலிந்து சுருங்கியிருந்தது. அவள் ஆச்சரியப்பட்டுப் பங்குசுவாமியாரிடம்போய் இவ்விஷயத்தைச் சொன்னாள். குருவானவர் அவளைப் பார்த்து, "நீ ஜெபமாலை ஜெபிக்கும்போது உன் மனசில் என்ன கருத்து, என்ன கவனத்தோடு ஜெபித்தாய்?" என்று கேட்டார். அதற்கு அவள், "என் புத்தியில் அப்போது என்ன கவலை வந்ததோ அதைத்தான் நான் நினைத்துக்கொண்டு ஜெபித்தேன்" என்று சொன்னாள். அப்போது குருவானவர், "நீ பெட்டியில் போட்டிருந்த பட்டாணிக் கடலைகளை எலிகள் தின்றதைபடி, பத்தியோடும் கவனத்தோடும் நீ ஜெபமாலை ஜெபிக்கவேண்டும் என்று உனக்கு நற்புத்தி கற்பிக்கும்படியாய் உன் காவலான சம்மனசுதான் எடுத்திருப்பார். ஆகையால் இனிமேல் நீ நாள்தோறும் ஐந்து முறை பத்தியில்லாமலும் கவனமில்லாமலும் ஜெபமாலை ஜெபிப்பதைப் பார்க்கிலும் தினந்தோறும் ஒரே ஒரு முறை நல்ல பத்தியோடும் கவனத்தோடும் ஜெபிப்பதே உத்தமம்" என்று சொல்லி அனுப்பினார். (ஞானி.)

---

## The Rosary.

### ஜெபமாலை.

ஜெபமாலைப் பத்தி முயற்சியினால் கிறீஸ்துவர்கள் அடைந்து கொண்ட சகாயங்களுக்கும், நடந்த புதுமைகளுக்கும் கணக்கில்லை.

அர்ச். தொமினிக் என்னும் சாமிநாதர் தேவமாதாவினிடத்தில் பெற்றுக்கொண்ட ஜெபமாலைப் பலத்தினால் அநேகம் பிரிவினைக்காரரை மனந்திருப்பினார்.

இந்துதேசத்தில் வேதம் போதித்த அர்ச். சவேரியார் ஜெபமாலையினால் வியாதிஸ்தரைத் தொட்டு அவர்களுடைய வியாதி நீங்கும்படி செய்தார்.

இப்போது நடக்கும் மகா யுத்தத்தில் அநேக கிறீஸ்துவ போர்வீரர்கள் ஜெபமாலையினால் அநேக ஆபத்துக்களுக்கும் சாவுக்கும் தப்பித்துக்கொண்டார்கள்.

ஜெபமாலையைக் கையில் பிடித்திருக்கும் லூர்துமாதா ஜெபமாலை ஜெபிக்கும்படி நமக்குக் கற்பிக்கிறாள். நமது சரீரத்திற்கும் விசேஷமாய் நமது ஆத்துமத்திற்கும் வேண்டிய நன்மைகளை நாம் பெற்றுக்கொள்வதற்கு ஜெபமாலையைப் பத்தியோடு ஜெபித்து வருவோமாக.

பரிசுத்த திரு ஜெபமாலையின் இராக்கினியே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

---

## Letter to Anthony.

## அந்தோனிக்கு எழுதிய கடிதம்.

பிரியமுள்ள அந்தோனி!

"சத்திய திருச்சபை ஆத்தும விஷயத்திலும் சரீர விஷயத்திலும் பூலோகத்திலுள்ள மனிதர்களுக்குக் கணக்கில்லாத நன்மைகளைச் செய்துவந்தபோதிலும் ஏன் அநேகம் பேர்கள் அதைத் தூஷணிக்கிறார்கள்?" என்று கேட்கிறாய். அதற்குக் காரணம் இன்னதென்று சில வார்த்தைகளில் உனக்குச் சொல்லப்போகிறேன்.

1-வது, சத்திய திருச்சபை சொல்லுகிறது என்ன? "நரகம் இருக்கிறது" என்று சொல்லுகிறது. நரகம் இருக்கிறது என்னும் சத்தியம் அநேகருக்குத் தொந்திரவு, நரகம் இல்லாதிருக்கும்படி அநேகர் விரும்புகிறதினால் அவர்கள் திருச்சபையை எதிர்த்துப் பேசுகிறார்கள்.

2-வது, சத்திய திருச்சபை சொல்லுகிறது என்ன? "பிதாவையும் மாதாவையும் சங்கித்து இருப்பாயாக," என்று சொல்லுகிறது. அநேகம் பிள்ளைகள் கொஞ்சம் வயது ஆனவுடன் தங்கள் தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், அவர்களுக்குச் சங்கை செய்யவும், உதவி செய்யவும் பிரியப்



படாமல் தங்கள் இஷ்டம்போல் நடக்க ஆசைப்படுகிறார்கள். அது தகாதென்று திருச்சபை கண்டித்துக் கற்பிக்கின்றது. அப்படிக் கண்டிக்கிற திருச்சபையை அவர்கள் தூஷணிக்கிறார்கள்.

3-வது, சத்திய திருச்சபை சொல்லுகிறது என்ன? "கொலை செய்யாதிருப்பாயாக," என்று சொல்லுகிறது. ஆனால் அநேகர் புறத்தியார்பேரில் பகை, வர்மம் வைத்துக்கொண்டு, அவர்களோடு சண்டை செய்து, பழி வாங்க வேண்டும் என்கிற எண்ணம் இரவும் பகலும் தங்கள் மனதில் குடிகொண்டவர்களாய் இருக்கிறார்கள். இது தகாது என்று திருச்சபை கண்டிக்கிறதினால் அவர்கள் அதைத் தூஷணிக்கிறார்கள்.

4-வது, சத்திய திருச்சபை சொல்லுகிறது என்ன? "மோகம், அகமியாகமனம் பண்ணாதிருப்பாயாக" என்று சொல்லுகிறது. ஆனால் அநேகர் தங்கள் துர் ஆசாபாசங்களுக்கும் துர் நினைப்புகளுக்கும் அடிமைகளாய்த் திரிந்து, தகாத கிரிகைகளை நாடி, தகாத சம்பாஷணைகளைப் பேசியும், துர்ச்சிநேகம் செய்தும், கெட்ட புஸ்தகங்களை வாசித்தும், துர்மார்க்கத்தில் நடந்தும் வருகிறார்கள். இது தகாது என்று திருச்சபை கண்டிக்கிறதினால் அவர்கள் அதைத் தூஷணித்துப் பேசுகிறார்கள்.

5-வது, சத்திய திருச்சபை சொல்லுகிறது என்ன? "களவாணாதிருப்பாயாக" என்று சொல்லுகிறது. ஆனால் எத்தனையோ பேர் பிறர் உடைமையை ஆசித்து, திருட்டு, கைலஞ்சம் முதலிய அநியாயங்களைச் செய்து, புறத்தியாருடைய பொருளை அபகரிக்கிறார்கள். இது தகாது என்றும், அபகரித்த பொருளை உடையாருக்குத் திரும்பக் கொடுத்து உத்தரிக்க வேண்டும் என்றும் திருச்சபை கற்பிக்கிறதினால் அவர்கள் அதைத் தூஷணிக்கிறார்கள்.

இவைகள் தான் அநேகம் பேர் திருச்சபையைத் தூஷணிக்கிறதற்குக் காரணங்களாம்.

ஆகையால் நீ சத்திய திருச்சபைக்கு உகந்த பிள்ளையாய் இருப்பது உனக்கு எவ்வளவோ மகிமை! உன் பிள்ளைகளுக்கு நன்மாதிரியான புத்திமதிகளைச் சொல்வாயாக. உனக்கும் உன் குடும்பத்திற்கும் ஆசீர்வாதம்.

இப்படிக்கு,

**உன் உத்தம சிநேகிதன்.**

## Spiritual Retreat.

### ஞான ஒடுக்கம்.

கோயமுத்தூரில் நேர்த்தியாய் அமைக்கப்பட்டு அர்ச். மிக்கேல் சம்மனசானவரின் பாது காவலிலிருக்கும் போர்டிங், மிக்கேல் மடத்துப் பாலகருக்கு சங். ((Revd. Fr. L. Bechu) பெஷூ சுவாமியாரவர்களால் வருஷாந்தர ஞான ஒடுக்கம் சென்ற ஆகஸ்ட்-மீ 18-ம் உ துவக்கி 22-ம் உ முடிவுற்றது.

எங்களுக்குக் கிடைக்கப்பட்ட அச்சுகிர்த நாட்களில் கனம் பெஷூ சுவாமி அவர்களால் செய்யப்பட்ட அன்பார்ந்த பிரசங்கங்களினாலும் கூறிய நற்புத்திமதிகளினாலும் எங்களிருதயங்களில் மெய்யாகவே ஆறாத பக்தியும், அவியாத விசுவாசமும், மாறாத பொறுமையும் எங்கள் உள்ளங்களில் தோன்றியிருக்கிறது ஆச்சரியமன்று.

கடைசி தினமாகிய 22-ம் உ மகா வந்திக்கத்தக்க மேற்றிராணியாரவர்களால் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு இந்த ஞான ஒடுக்கம் முடிவுபெற்றது.

சேசுநாதசுவாமி, நாங்கள் இவ்வுச்சித பாக்கியமான ஒடுக்கத்தில் செய்த நல்ல பிரதிக்கினைகளை ஆசீர்வதித்து அவைகளைக் கொண்டொழுகவேண்டிய உதவி ஒத்தாசை செய்வாராக.

தெ. அற்புதசாமி.

---

## Catholic Chronicle of Coonoor.—*Contd.*

### குன்னூர் பங்கின் சரித்திர சுருக்கத்தின் தொடர்ச்சி.

இதற்குமுன் நமது சிறிய தூதனில் சொல்லிய குன்னூர் பங்கின் சரித்திர சுருக்கத்திற்கு தொடர்ச்சியாக இப்போது சில விஷயங்களை எழுதப்போகிறோம். அது முடிந்தபிறகு நமது மேற்றிராசனத்திலுள்ள மற்ற பங்குகளின் சரித்திர சுருக்கத்தையும் நமது தூதனில் குறிப்பிடுவோம்.

குன்னூர் பங்கு விசாரணை ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்படும் வரையில் 1869-ம்௵ முதல் 1884-ம் ௵ மட்டும் அடிக்கடி சுவாமிமார்கள் பங்கு விசாரணைக்காக மாறி மாறி வந்தார்கள்.

1869-ம் ௵த்தில் இவ்விடம் பங்கு சுவாமியாராயிருந்த சங். (Revd. Fr. Degelis) டெஷெலிஸ் சுவாமியார், விக்கர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு கோயமுத்தூருக்குப் போனார். அவருக்குப்பதிலாக சங். (Revd. Fr. Dalquier) டலக்கீயர் சுவாமியார்



குன்னூர் விசாரணைக்கு வந்தார். இவருக்கு நல்ல சௌக்கியமில்லாததினால் இவர் 1871-ம் வருஷத்தில் சீர்மைக்குப் போனார். இவருக்குப்பதிலாக சங். (Revd. Fr. Niveaux) நீவோ சுவாமியார் விசாரணைக் குருவாக நியமிக்கப்பட்டார். இவர் கனம் டெஷெலீஸ் சுவாமியாரால் துவக்கப்பட்ட அறை வீட்டைக் கட்டி முடித்தார்.

அவருக்குப் பதிலாக 1871-ம் வருஷத்தில் சீர்மையிலிருந்து புதிதாய் வந்த சங். (Revd. Fr. Villien) வில்லியன் சுவாமியார் இப்பங்கு விசாரணைக்கு வந்தார். தற்காலம் இருக்கும் அர்ச். அந்தோனியார் கோவில் கட்டடத்தை இவர் துவக்கினார்.

1872-ம் ௵ முதல் 1873-ம் வருஷம் வரையில் மறுபடியும் சங். டெஷெலீஸ் சுவாமியார் இப்பங்குக் குருவாக அனுப்பப்பட்டார்.

1873-௵ முதல் 1875-ம் வருஷம் வரையில் சங். (Revd. Fr. Beroulle) பேரூல் சுவாமியார் குன்னூர் பங்கு சுவாமியாராயிருந்தார்.

1875-ம் ௵ முதல் 1880-ம் வருஷம் வரையில் சங். (Revd. Fr. Ravel) ரபேல் சுவாமியார் இப்பங்கை விசாரித்து வந்தார். இவர் இவ்விடத்தில் பெண்பிள்ளைகளுக்காக ஒரு பாடசாலையை ஏற்படுத்தி இவரால் கோயமுத்தூரில் ஸ்தாபிக்கப்பட்ட அர்ச். காணிக்கைமாதா மடத்து கன்னியாஸ்திரிமார்களில் சிலரை உபாத்தியாயர்களாக நியமித்தார்.

1880-ம் ௵ முதல் 1882-ம் வருஷம் வரையில் சங். (Revd. Fr. Gudin) குடூன் சுவாமியார் பங்குக் குருவாயிருந்தார்.

1882-ம் ௵ முதல் 1884-ம் வருஷம் வரையில் சங். வில்லியன் சுவாமியார் மறுபடியும் குன்னூருக்கு மாற்றப்பட்டு தாம் துவக்கின அர்ச். அந்தோனியார் கோவில் கட்டடத்தை துடர்ந்து நடத்திவந்தார். 1882-ம் வருஷத்தில் குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவிலில் அப்போது கோயமுத்தூர் மேற்றிராணியாராயிருந்த வந்திக்கத்தக்க (Right Revd. J. L. Bardou) பார்து ஆண்டவர் 122 கிறீஸ்துவர்களுக்கு உறுதி பூசுதல் கொடுத்தார். 1884-ம் வருஷத்தில் அர்ச். அந்தோனியார் பாடசாலையில் 200 பிள்ளைகள் வாசித்து வந்ததாக ரிஜிஸ்டரில் காண்கிறோம்.

(இன்னும் வரும்.)

---

## Here and there.

### நாநா சங்கதி.

மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். (Revd. Fr. H. Teissier) டெஸியர் சுவாமியார் மைசூர் மேற்றிராணியாராக தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார். இது சங்கதி செப்டெம்பர் மாதம் 5-ம் உ தெரியவந்தது. இவர் பல்லாண்டு வாழ்வாராக!

கோயமுத்தூர் மேற்றிராணியாராகிய மகா வந்திக்கத் தக்க அகுஸ்தீன் ஆண்டவர் செப்டெம்பர் மாதம் 10-ம் தேதி கோத்தகிரி திருவிழாவுக்கு விஜயம் செய்திருந்தார். திரு நாளுக்கு முந்தின நாளில் அநேகருக்கு உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினார்.

உதகமண்டலம் அர்ச். மோக்ஷராக்கினி மாதாக்கோவிலின் வருஷோற்சவம் சென்ற ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அந்நாளில் சுமார் 600 விசுவாசிகள் பரலோக அப்பத்தை அருந்தினார்கள். சுயந்திரம் வழக்கம்போல சுற்றுப்பிரகாரம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

சென்ற ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி லூர்து நகரில் பிரான்ஸ் தேசத்துப் பிள்ளைகள் நடத்திய காணிக்கைச் சடங்கு வெகு மகத்தானதாயும் பக்திக்குரியதாயுமிருந்தது. அந்நாளில் பிரான்ஸ் தேசத்தின் 5 லட்சம் பிள்ளைகள் கையொப்பமிட்ட காணிக்கைப் பத்திரம், அவ்விடம் கூடியிருந்த திரளான பிள்ளைகளின் முன்னிலையில் லூர்து நகரத்தின் மேற்றிராணியாரவர்களால் அமலோற்பவமாதாவின் கெபியில் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்விடம் கூடி யிருந்த லட்சக்கணக்கான பிள்ளைகளில் ஒவ்வொருவரும் "பிரான்ஸ் தேசத்துப் பிள்ளைகள் லூர்துமாதாவுக்கு 1914-1916" என்று வரையப்பட்ட கொடிகளைப் பிடித்துக்கொண்டு சுற்றுப்பிரகாரம் வந்தார்கள். நேசக்கட்சியாருக்கு சீக்கிரம் ஜெயம் கிடைக்கும்படி இவ்விண்ணப்பம் கேட்கப்படுவதாக.

ருமேனியா நேசக்கட்சியாருடன் சண்டையில் சேர்ந்துவிட்டது. இப்போது நேச தேசத்தார் தங்களுக்குப் பொதுவான சத்துருவை எல்லாப் பக்கங்களிலும் நெருக்கித் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பிரான்ஸ் தேசத்தில் பிரிட்டிஷ் சைனியங்களை வெகு திறமையாய் நடத்திவரும் ஜெனரல் (Sir Douglas Haig) ஸர் டுக்லாஸ் ஹேய்க் என்பவரின் சகோதரர் உலக இரட்சகர் சபையில் கத்தோலிக் குருவாயிருக்கிறாரென்று கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்.

---


# அர்ச். அந்தோனியார் தூதன்.

# The St. Anthony's Messenger.

**November 1916.**

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 11.


OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS.

## Conversion of India.

### நமது சொந்த நாடாகிய சிந்து தேசம் மனம் திரும்ப நாம் செய்ய வேண்டியது என்ன?

சுந்தர வனப்புள்ள சிந்து தேசம் நமது சொந்த தேசம். சத்திய திருச்சபையின் மக்களாகிய நமக்கு இது மிகவும் சிறந்த தேசம். பிறப்பால் எனது தேசத்தாரும் மதத்தால் எனது இனத்தாருமாகிய கிறீஸ்துவ சகோதரர்களே! இந்த நமது இந்தியா தேசம் மனம் திரும்ப நாம் செய்கிறதென்ன? செய்ய வேண்டியதென்ன? முந்த நமக்கு வேத அபிமானந்தான் உண்டா? வேத அபிமானம் என்றால் என்ன? வேதத்தின் மட்டில் நமக்குள்ள மதிப்பு, வேதத்தின் மட்டில் நமக்குள்ள நல்ல எண்ணமும், இந்த நல்லெண்ணத்துக்குத் தக்கபடி நாம் நடந்துகொள்ளும் விதமுமே வேத அபிமானம் என்று சொல்லப்படும். அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் இந்த அபிமானத்தைப்பற்றிச் சொல்வதைக் கேள். "நீதிமான் ஆவதற்கு இருதயத்தில் விசுவசிக்கவும், இரக்ஷண்யம் அடைவதற்கு வாயினாலே பிரசித்தப்படுத்தவும் வேண்டும்" என்று அவர் சொல்லுகிறார். அதாவது, உறுதியாக விசுவசிப்பதும், விசுவசித்ததைத் தன் கிரிகைகளினால் வெளிப்படுத்துவதும் மெய்யான கிறீஸ்துவனுடைய அலுவல். அர்ச். தோமையார், அர்ச். சவேரியார், முத். அருளானந்தர் இவர்களாலும் இன்னும் அநேக புண்ணியோத்தமர்களாலும் உழுது, விதைத்து, நீர் பாய்ச்சப்பட்டுள்ள இந்தியா தேசம் முழுதும் மனம் திரும்புவது எப்போது? நமது திவ்விய இரக்ஷகரை அறியாதவர்கள் எத்தனைகோடி! அவர்களையெல்லாம் சத்திய திருச்சபையில் கொண்டுவந்து சேர்க்க வேண்டாமா? நமது தேசத்தில் நடப்பது என்ன? சுயராஜாங்கம்! சுயராஜாங்கம்!! என்று சுய நலம் பாராமல் சாஸ்திரப் பயிற்சியையும், மகத்தான உத்தியோகங்களையும், மனைவி மக்கள் இன்பசுகம்

அனைத்தையும் ஒரு பொருளாக மதித்து, இராப்பகலாய் உழைத்து வரும் மனிதர்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? சுய ராஜாங்கம் உலக சம்பந்தமான ஒரு காரியம். இதற்காக மனிதர்கள் உழைத்து வருவதைப் பார். தேவ ராஜாங்கமாகிய நமது சத்திய வேதத்தை நமது நன்னடக்கையால் வெளிப்படுத்தவும், மகிமைப்படுத்தவும் நமக்குள்ள ஆவலென்ன? முயற்சியென்ன? முந்த நமக்கு இந்த ஆவல்தான் இருக்கிறதா? வேதத்தை வெளிப்படுத்துகிறதற்கு எல்லோரும் இல்லற வாழ்க்கையை விட்டு, வேதப் பிரசங்கிகளாக வேண்டுமென்று நான் சொல்லுகிறதில்லை. மெய்யான கிறீஸ்துவர்களாகிய நீங்கள் உங்கள் நடக்கையால் புறமதஸ்தருக்குக் காட்டவேண்டிய நன் மாதிரிகையைப் பற்றியே பேசுகிறேன். அபத்தம் நிறைந்த இத்தேசத்தில் சத்தியம் விளங்குவது எப்படி? அஞ்ஞான அந்தகாரம் நீங்கி, எங்கும் சகல ஜாதி ஜனங்களுக்கும் மெஞ்ஞான ஒளி வீசுவது எப்படி? அன்றாடம் புற மதஸ்தரோடு புழங்கிவரும் நீங்கள்தான் நமது சத்திய வேதத்தை மகிமைப்படுத்தவேண்டும். உங்கள் புண்ணியக் கிரிகைகளினாலே சத்தியத்தை வெளிப்படுத்தவேண்டும். ஆனால் கண்ணராவி! உங்கள் நடத்தையைப் பார்த்துப் புறமதஸ்தன் என்ன சொல்லுகிறான்? "இதோ மெஞ்ஞானிகளைப் பாருங்கள்! சத்திய வேதத்தார்கள் இவர்கள்தானா? எங்கள் மதத்தில் இவர்களைவிடச் சுபாவமாய் எவ்வளவு நல்லவர்கள் இருக்கிறார்கள்! வர்த்தகத் தொழிலில் எவ்வளவு எதார்த்தம்! உத்தியோகத் தொழிலில் எவ்வளவு உண்மை! விசேஷமாய்ப் பரோபகார சிந்தையினால் அன்ன சத்திரங்களைக் கட்டி வைத்து, ஆயிரக்கணக்காய் ஏழை எளியவர்களை ஆதரிக்கிறவர்கள் எத்தனை பேர்! என்ன! கிறீஸ்துவர்களுடைய நடத்தையைப் பார்த்தால் வெட்கக்கேடாய் இருக்கிறது. இவர்கள் வேதம் சத்தியமுள்ளதானால் இப்படியும் நடப்பார்களா?" என்கிறான். பார்த்தீர்களா கிறீஸ்துவ சகோதரர்களே! உங்கள் நடத்தை சத்திய திருச்சபையின் தெய்வீக மகத்துவத்தை என்ன கோலமாக்கிப் போட்டது! சுபாவ முறையிலும் சுபாவத்திற்கு மேற்பட்ட முறையிலும் சகல வரப்பிரசாதங்களும் உங்களுக்கு இருக்க இவைகளைக்கொண்டு உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்த மாட்டீர்களா?

**A. G.**

(இன்னும் வரும்.)

---



## "Have pity on me"

## என்பேரில் இரக்கமாயிருங்கள்.

இறந்து போகும் கிறீஸ்துவர்களில் நேராய் மோட்சம் போகிறவர்கள் கொஞ்சம் பேர். ஏனெனில் அசுத்தம் ஒன்றும் மோட்சத்தில் பிரவேசிக்காது. ஆனால், எல்லாரும் நரகத்துக்குப் போகிறதில்லை. சாவுக்குப் பிறகு அநேகம் பேர் உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போய்த் தங்கள் பாவங்களுக்குச் செலுத்தவேண்டிய அநித்திய கடனை முழுதும் செலுத்த வேதனைப்பட்டு உத்தரிக்கிறார்கள். உத்தரித்தபிறகு மோட்சத்தை அடைவார்கள்.

உத்தரிக்கிற ஆத்துமாக்கள் தங்களுக்குத் தாங்களே யாதொரு இளைப்பாற்றியையும் தேடிக்கொள்ளக்கூடாதவர்களாய் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் படும் வேதனையைக் குறைக்கவும் தணிக்கவும் நம்மாலே கூடும். சத்திய திருச்சபை அவர்களுடைய ஆத்துமத்துக்காக ஏற்படுத்தியிருக்கும் தர்ம புண்ணிய வழிபாடுகளைத் தககப் பிரகாரமாய் நாம் உபயோகித்து வந்தால் அவர்களுக்கு ஆறுதல் உண்டாகும்.

ஜெபம், தவம், தர்மம், பூசை, இவைமுதலிய நற்கிரிகைகளைச் செய்து, அவர்களுக்காக அவற்றை நாம் ஒப்புக்கொடுப்போமானால் அவர்கள் படும் வேதனை குறைந்து தணிந்து போகும். அதினால் அந்த எளிய ஆத்துமாக்கள் நம்மை நோக்கி, "எங்களுக்கு உதவி செய்யக்கூடிய எங்கள் சிநேகிதர்களாகிய நீங்களாவது எங்கள் பேரில் இரக்கம் வைக்கக் கூடாதோ?" என்று நம்மைக் கெஞ்சிக் கேட்கிறார்கள்.

மரித்தோர்களுக்காக வேண்டிக்கொள்வது சுகிர்தமான தர்ம சிந்தனை.

---

## Three days in Purgatory.

## உத்தரிக்கிறஸ்தலத்தில் மூன்று நாட்கள்.

*அர்ச். விகோரியார் எழுதிவைத்ததாவது :—*

ஒரு வியாதிக்காரன் ஒரு வருஷகாலமாக அகோர வியாதியினால் படுக்கையில் கிடந்தான். அவன் வியாதி பொறுக்க மாட்டாமல் சாகவேண்டும் என்று தானே ஆசித்து, அதற்காகச் சுவாமியை அடிக்கடி வேண்டிக்கொண்டு வந்தான். ஒரு நாள் சர்வேசுரனால் அனுப்பப்பட்ட ஒரு சம்மனசு அவனுக்குத் தரிசனையாகி, "நேசனே! உனக்கு இஷ்டமானால் இப்போதே செத்து மூன்றுநாள்மட்டும் உத்தரிக்கிற ஸ்தலத்

தில் வேதனைப்படவேண்டும். அல்லது உனக்குப் பிரியமிருந்தால் இன்னும் ஒரு வருஷகாலம் வியாதியோடு துன்பப்பட்டபிறகு, நேராய் மோட்சம் போகலாம். இந்த இரண்டில் உனக்கு இஷ்டமானதை நீயே தெரிந்துகொள். இது சர்வேசுரனுடைய உத்தரவு" என்று சொன்னார். அதற்கு வியாதிக்காரன் இந்தக் கஷ்டமான வியாதியை இன்னும் ஒரு வருஷம் அநுபவிப்பதைவிட உத்தரிக்கிறஸ்தலத்தில் மூன்றுநாள் இருப்பதே நலம் என்று சம்மதித்தான்.

அவ்விதமே அவன் இறந்துபோனான். அவன் இறந்த பிறகு மேற்சொல்லிய சம்மனசு உத்தரிக்கிறஸ்தலத்தில் அவனைப் பார்க்கப்போனார். அப்போது அவன் சம்மனசைப் பார்த்து, "ஐயோ! நான் ஏமாந்து போனேனே! மூன்று நாள் மாத்திரம் நான் உத்தரிக்கிறஸ்தலத்தில் இருக்கவேண்டும் என்று சொன்னீரோ! இதோ மூன்று வருஷகாலமாக இவ்விடத்தில் அகோர வேதனைப்படுகிறேனே!" என்று சொன்னான். அதற்குச் சம்மனசு, "நீ வந்து இன்னும் ஒரு நாள்கூட ஆகவில்லை. உன் பிரேதம் இன்னம் அடக்கம் செய்யப்படவுமில்லை" என்று சொன்னார்.

பூலோகத்தில் நமக்கு நேரிடும் கஸ்தி துன்பங்களையும், வியாதியையும் பொறுமையோடு நாம் அநுபவிக்கவேண்டும். நாம் செய்த பாவங்களுக்காக உத்தரிக்கிற ஸ்தலத்தில் உத்தரிப்பதைவிட இப்பூலோகத்தில் உத்தரிப்பது உத்தமம்.

(ஞானி)

---

## Why he was sad?

## ஏன் துக்கப்பட்டார்?

ஒருநாள் ஒரு குருவானவர் காலையில் பூசை வைத்த பிறகு, புதுநன்மை வாஙகவேண்டிய பிள்ளைகளை மந்திரக் கிளாசுக்குக் கூட்டிவர, உபதேசியாரோடு போனார். போகையில் மந்திரம் படிக்க அநேகம் பிள்ளைகளை அழைத்து வரலாம் என்ற எண்ணத்தோடு போனார். ஆனால், முதலாவது அந்தோனி வீட்டுக்குப் போனபோது, அவன் தன் வீட்டு வாசற்படியில் போர்வையுடன் வெயிலில் உட்கார்ந்திருந்தான். சுவாமியார் அவனைப் பார்த்து, "புதுநன்மை வாங்காத இரண்டு பிள்ளைகள் உன் வீட்டில் இருக்கிறார்களே, அவர்களை மந்திரம் படிக்க உடனே கோவிலுக்கு அனுப்பவேண்டும்" என்றார். அவன் சுவாமியாரை வணங்கி, "சுவாமி! எனக்குத்



REGISTRA

தற்காலம் வேலையில்லை. வயிற்றுக்கில்லாமல் வீட்டில் கஷ்டமாயிருக்கிறது. பிள்ளைகளை மந்திரம் படிக்க அனுப்பினால், நீங்கள் அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பீர்களா? புதுநன்மை வாங்கும்போது அவர்களுக்குத் துணி வாங்கிக் கொடுப்பீர்களா? அப்படிச் செய்யாவிட்டால் வருகிற வருஷம் பிள்ளைகள் புதுநன்மை வாங்கலாம்" என்றான். அதற்குச் சுவாமியார், "புதுநன்மை வாங்கப் பிள்ளைகளுக்கு யாதொரு விசேஷ செலவும் செய்யவேண்டிய அவசரமில்லை. மேலும், முந்த முந்த மோட்ச இராச்சியத்தைத் தேடினால் மற்றதெல்லாம் சர்வேசுரன் தாராளமாய்க்கொடுப்பார்" என்று புத்தி சொல்லிவிட்டுப் போனார்.

பிறகு இராயப்பன் வீட்டுக்குப்போக, அவன் விட்டில் இல்லை. அவன் பெண்சாதி அடுப்பண்டை வேலை செய்துகொண்டிருந்தவள் கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தவுடன், சுவாமியார், "அம்மா! உன் மகனைப் புது நன்மைக்காக மந்திரம் படிக்கச் சீக்கிரம் அனுப்பிவை" என்று சொன்னதற்கு அவள், "சுவாமி! என்னசெய்வேன்! என் கணவனார் உத்தியோகத்திற்குப் போய்விடுகிறார். எனக்கும் ஓய்வு இல்லை. பையன் மாடுமேய்க்கவேண்டியிருப்பதுந் தவிர வீட்டில் பிள்ளையையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் பையன் வருகிறவருஷம் புதுநன்மை வாங்கலாம்" என்றாள். அப்போது, குருவானவர், "வயிறு பெரிதோ? ஆத்துமம் பெரிதோ? மனிதன் உலக முழுமையும் சம்பாதித்தபோதிலும் தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" என்று புத்தி சொல்லிவிட்டு, சின்னப்பன் வீட்டுக்குப் போனார்.

அந்த வீட்டில் புது நன்மை வாங்காத 9 வயதுள்ள பிள்ளை ஒன்று இருந்தது. சுவாமியார் சின்னப்பனையும் அவன் பெண்சாதியையும் பார்த்து, "உங்கள் பிள்ளை தாமதமில்லாமல் புது நன்மை வாங்க மந்திரம் படிக்கக் கோவிலுக்கு அனுப்புங்கள்" என்று சொன்னதற்குச் சின்னப்பன் பெண்சாதி, "சுவாமி! இந்தப் பிள்ளை சிறிய குழந்தை. இவளுக்கு எப்படிப் புதுநன்மை கொடுக்கலாம்? நன்மை தின்மை முதலாய்த் தெரியாதே! ஆகையால் வருகிற வருஷம் புதுநன்மை கொடுக்கலாம்" என்று சொன்னாள். சுவாமியார், "அர்ச். பாப்பானவர் கட்டளை உங்களுக்குத் தெரியாதா? 'மாசற்ற பிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்' என்று

சேசுநாதசுவாமிதாமே சொல்லியிருக்கிறார்" எனப் புத்தி சொல்லிவிட்டு அப்பால் சென்றார்.

அப்படியே குருவானவர் அன்று அநேக கிறீஸ்துவர்கள் வீடுகளுக்குப்போய் மனம் சலித்துக் கோவிலுக்குத் திரும்பிப்போனார்.

ஆகையால் கிறீஸ்துவர்களே! உங்கள் குருக்களை ஒருக்காலும் விசனப்படுத்தாதேயுங்கள்.

---

## Catholic Chronicle of Coonoor:—(Contd.)

## குன்னூர் பங்கின் சரித்திர சுருக்கத்தின் தொடர்ச்சி.

1885-ம் ௵ முதல் 1903-ம் வருஷம் வரையில் சங். (Revd Fr. J. P. Denis.) டெனிஸ் சுவாமியார் குன்னூர் பங்குக் குருவாயிருந்தார். 1885-ம் வருஷம் அவர் இவ்விடம் விசாரணைக்குப் புதிதாய் வந்தபோது, இவ்வூரில் ஏறக்குறைய ஆயிரம் கிறீஸ்துவர்களிருந்தார்கள். சங். டெனிஸ் சுவாமியார் தம் முயற்சியினாலும், குன்னூர் ஜனங்களின் உதவியினாலும் கோவில் விஷயத்திலும், பள்ளிக்கூட விஷயத்திலும் பல காரியங்களை அநுகூலமாகச் செய்துகொண்டு வந்தார்.

அவர் கோவிலின் பெரியசாலையைக் கட்டிமுடித்தபிறகு 1886-ம் வருஷம் மார்ச்சு-மீ 26-ம் தேதியில் அப்போது கோயமுத்தூர் மேற்றிராணியாராயிருந்த மகா வந்திக்கத்தக்க (Right Revd. J. L. Bardou.) பார்து ஆண்டவர் குன்னூர் கோயிலுக்கு அர்ச். அந்தோணியார் என்று பெயரிட்டு அதை அபிஷேகம் செய்தார்.

1887-ம் ௵ முதல் 1889-ம் வருஷம் வரையில் சங். டெனிஸ் சுவாமியார் ஒத்தை பங்குவிசாரணைக்கு மாற்றப்பட்டுப் போய்விட்டபடியால், ஒத்தையிலிருந்த சங். (Revd. Fr. Biolley) பியோலிசுவாமியார் குன்னூர் பங்கு விசாரணைக்கு வந்தார்.

188[illegible]-ம் வருஷத்தில் சங். பியோலி சுவாமியார் மறுபடியும் தமது பழைய விசாரணையாகிய ஒத்தைக்கு மாற்றப்பட்டு சங். டெனிஸ் சுவாமியார் குன்னூர் விசாரணைக்கே வந்துவிட்டார். இவர் பள்ளிக்கூடவிஷயத்தில் அதிக முயற்சி எடுத்து அதை அதிக மேன்மையான அந்தஸ்துக்குக் கொண்டுவந்தார்.

1903-ம் வருஷத்தில் 302 ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துவந்ததாக ரெரிஜிஸ்டரில் காண்கிறோம். இது விஷயத்தில் தலைமை உபாத்தியாயராயிருந்த மாஜி. ஸ்தனிஸ்லாஸ் மிக்கேல்சாமிபிள்ளையவர்கள் வெகு சாமர்த்தியத்



தோடும், சுறுசுறுப்போடும் அர்ச். அந்தோணியார் பாடசாலையை நடத்தி சுவாமியாருக்கு உதவியாக இருந்தார்.

1899-ம் ௵ முதல் 1903-ம் வருஷத்திற்குள் இக்குருவானவர் ஐரோப்பிய பிள்ளைகளின் ஆத்தும நன்மைக்காக மிக்க சிரத்தை எடுத்து ஒரு நேர்த்தியான பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினார். அர்ச். சூசையப்பர்சபையைச்சேர்ந்த சிர்மைக் கன்னியாஸ்திரிகள் அப்பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர்வேலையை ஏற்றுக்கொண்டார்கள்.

சங். (Revd. Fr. Sibuet) சிபெத் சுவாமியாரும், சங். (Revd. Fr. Boulanger) பொலான்ஜர் சுவாமியாரும், சங். (Revd. Fr. Morin.) மோரின் சுவாமியாரும் ஒருவர்பின் ஒருவராய் வெகு மனப்பற்றுதலுடன் அவருக்கு உதவி சுவாமியாராக இருந்தார்கள். அக்காலத்தில் G. ஞானப்பிரகாச ரெட்டியாரும், மரியண்ண செட்டியாரும் ஒருவர்பின் ஒருவராய் உபதேசியாராகவும் ஜோசப் உதவி உபதேசியாராகவும் இருந்தார்கள்.

1903-ம் வருஷம் மே-மீ 23-ம் தேதி திடீரொன்று சங். டெனிஸ் சுவாமியார் கோயமுத்தூர் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டு அதே வருஷத்தில் மேற்றிராணியார் பட்டாபிஷேகம் பெறுமுன் ஆகஸ்ட்-மீ 17-ம் தேதி குன்னூரில் மரித்து கோவிலில் தாம் கட்டின லூர்துமாதா கெபிக்கு முன்னால் அடக்கம் செய்யப்பட்டார். இவருடைய இப்பேர்ப்பட்ட சுருக்கமான சரித்திரத்தில் சங். டெனிஸ் சுவாமியாருடைய தேவசிநேகம், பிறசிநேகம், பக்தி, பற்றுதல், தயவு, ஒழுங்கு இவை முதலிய நற்குணங்களையும் அவர் செய்த நன்மைகள் எல்லாவற்றையும் சொல்லமுடியாது. அவருடைய ஞாபகம் இவ்வூர் ஜனங்களின் மனதில் இன்பமாய் என்றும் நிலைநிற்கும்.

அவர் மோட்சத்திலிருந்து குன்னூர் கிறீஸ்துவர்களுக்காக மனுப்பேசி வருகிறாரென்று நம்புகிறோம்.

---

## Here and There.

## நானா சங்கதி.

ருஷிய ராணுவ உத்தியோகஸ்தராகிய ஜெனரல் (General Brussiloff) புருஷ்சிலோவ் என்பவர் 1917-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்திற்குள் ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்து சமாதானமாகுமென்று சொன்னதாக பிரஸ்தாபம்.

டார்டனல்ஸில் நடந்த சண்டையில் கொல்லப்பட்ட இங்கிலீஷ், பிரான்ஸ் போர்வீரர்களை துருக்கிய எல்லையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லறைகளை அழிக்க வேண்டாமென்று அர்ச். பாப்பானவர் கேட்டுக்கொண்டதின் பேரில் அவ்விதமே செய்வதாக துருக்கியர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

குன்னூரில் உதவி பங்குக் குருவாயிருந்த சங். (Revd. Fr Lazarus) லாஜரஸ்சுவாமி அசௌக்கியமாயிருந்ததினால் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டார் அவருக்குப்பதிலாய் சங். (Revd. Fr. S. Maria Joseph) மரிய ஜோசப் சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிறார். சங். (Revd. Fr. Gnanapragasam) ஞானப்பிரகாசநாத சுவாமியார் போர்டிங் மடத்திற்கும், இவருக்குப்பதிலாய் கோயமுத்தூரில் உதவி பங்குசுவாமியார்களுள் ஒருவராகிய சங். (Revd. Fr. A. Joseph.) மரியசூசைநாத சுவாமியார் மிக்கேல் மடத்துக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

சங். (Revd. Fr. Linehan) லினேயன் என்னும் ஐரிஷ் போர்வீர குருவானவர் டார்டனல்ஸ், மெசப்பொட்டோமியா என்கிற தேசங்களிலிருந்து சௌக்கியத்திற்காக தற்காலம் குன்னூரில் வந்திருக்கிறார்.

நீலகிரிஜில்லா கேத்தையில் சர்க்கார் 215 ஏக்ரா பூமி கொடுத்து அநாத ஆங்கிலோ இந்திய பிள்ளைகளுக்கு மடம் கட்டும்படி உத்தரவு கொடுத்திருக்கிறார்களென்றும், இப்போது கொடைக்கானலில் இருக்கும் ஷை அநாதப்பிள்ளைகள் மடம் கேத்தைக்கு வருமென்றும் பிரஸ்தாபம்.

பெங்களூர் அர்ச். சூசையப்பர் பாடசாலையின் தலைவராயிருந்த சங். (Revd. Fr. L. Froger) பிரோஷர் சுவாமியார், அக்டோபர்-மீ 4-உ இறந்துபோனார். இவருடைய மரணத்தினால் மைசூர் மேற்றிராசனத்திற்கும், அர்ச். சூசையப்பர் பாடசாலைக்கும் அதிக நஷ்டம் நேரிட்டிருக்கிறது. R. I. P.

சோமனூருக்கடுத்த கருமத்தன்பட்டியில் அக்டோபர் மீ 1 தேதியில் அர்ச். ஜெபமாலைமாதா உற்சவம் வழக்கமான சிறப்பலங்காரத்துடன் நடைபெற்றது. மகா வணக்கத்துக்குரிய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் ஷை உற்சவத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

மலைவாசிகளாகிய படுகர் மிகுதியாய் வசிக்கும் கேத்தையில் அர்ச். மிக்கேல் சம்மனசானவர் திருநாள் அக்டோபர் மாதம் 8-ம் தேதி வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது.

---

அர்ச். அந்தோனியார் தூதன்.

The St. Anthony's Messenger.

December 1916.

புத்தகம் II.] FIDES AC ROBUR. [நம்பர் 12.

## Conversion of India.—(*Continued*)
## நமது சொந்த நாடாகிய சிந்துதேசம் மனந்திரும்ப நாம் செய்யவேண்டியது என்ன?

(தொடர்ச்சி.)

போன மாதம் இத்தூதனில் பரிசுத்த சத்திய திருச்சபையின் தெய்வீக மகத்துவத்தை நமது தர்ம நடக்கையினால் நாம் வெளிப்படுத்தவேண்டும் என்று எடுத்துக் காட்டினேன். இது போக இன்னும் கிறீஸ்துவர்களாகிய நாம் நமது தேசத்தின் மனந்திரும்புதலுக்காகச் செய்யவேண்டியது என்னவென்று இப்போது விவரிப்பேன். இந்தியா தேசம் முழுவதும் மனந்திரும்புவது விளையாட்டுக்காரியமல்ல. சத்தியவேத விசுவாசமானது மானிடர்க்குக் கொடுக்கப்படும் பெரியதோர் தேவ வரமாம். நமது இரட்சண்ணியத்தின் அஸ்திவாரம் மோட்சத்தின் திறவுகோல் என்னப்படும். சுபாவத்துக்கு மேலான இந்த வரம் தேவ கருணையால் இலவசமாக நமக்கு அளிக்கப்பட்டது. ஆகவே, விசுவாசம் என்னும் இந்த வரம் நமக்குக் கிடைத்ததுபோல அஞ்ஞானிகளுக்கும் பிறமதஸ்தர்களுக்கும் வந்து சேரும்படி இரக்கம் நிறைந்த சேசுவின் திரு இருதயத்தைப்பார்த்து நாம் மன்றாடவேண்டும். இது ஒவ்வொரு கிறீஸ்துவனும் செய்யக்கூடிய காரியமே. இதுவும் குருவானவர்தான் செய்யவேண்டியதென்று நீங்கள் நினைப்பீர்களோ? "தன்னைத்தான் சிநேகிக்குமாப்போல் பிறத்தியானையும் சிநேகிக்கவேண்டும்" என்னும் கடமை உங்களுக்கில்லையா? பிறத்தியாரும் உங்களைப்போல் விசுவாச வெளிச்சத்தைப்பெற்று மோட்சத்திற்குப் போகவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருக்கவேண்டாமா? அவ்வாறு ஆசையிருந்தால் ஜெபம் செய்யுங்கள். ஜெபத்தினால் நாம் பிறருக்குச் செய்யக்கூடிய நன்மையைச் சொல்லிக்காட்டுகிறேன். அஞ்ஞானிகளுக்கு வேதம் போதிக்க ஊர் ஊராய்ச் சுற்றித்திரிய முடியாதபடி அர்ச். தெரேசம்மாள் மடத்தில் அடைபட்டிருந்த ஓர் கன்னிகை செய்ததைக் கேளுங்கள். அர்ச். சவேரியார் தமது புதுமைகளாலும் போதனையாலும் மனந்திருப்பிய தொகையளவு தனது ஜெபத்தினால் அக்

கன்னிகை மனந்திருப்பியதாக ஒரு காட்சியால் வெளிப்படுத்தப்பட்டது. ஓர் ஊரில் ஒரு குருவானவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அந்தப் பிரசங்கத்திற்கு வந்தவர்களெல்லோரும் மனந்திரும்பினார்கள். இப்படித் திரளான ஜனங்கள் மனந்திரும்புவதற்குக் காரணம் பிரசங்கம் நடந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில் வேண்டிக்கொண்டிருந்த சந்நியாசியார் ஒருவருடைய மன்றாட்டுதானென்று தேவாதீனமாய் வெளியாயிற்று. ஆகையால் பிரிய நேசர்களே! அஞ்ஞான சகோதரர் மனந்திரும்ப வேண்டிக்கொள்ள நீங்கள் மறக்கவேண்டாம். தினமும் தப்பாமல் ஒரு பிரியதத்த மந்திரத்திற்குப் பிறகு, "அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று சொன்னாலும் போதும். (இன்னும் வரும்.) உள்ளது சொல்வோன்.

## Atonement.

### தைரியசாலிகளான போர்வீரர்கள் செய்த பரிகாரம்.

தற்காலம் நடந்துவரும் ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஜெர்மானியர் பிரான்ஸ் தேசத்தில் இருந்த ஒரு சிறிய கோவிலை நாசப்படுத்தி அதிலுள்ள திருச்சுரூபங்களையும் படங்களையும் உடைத்ததுமல்லாமல் திவ்வியநற்கருணைப் பெட்டியையும் திறந்து அதிலிருந்த அப்பங்களை எடுத்துத் துண்டுதுண்டாக்கி தரையில் எங்கும் சிந்தி அவமானம் செய்தார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் கத்தோலிக் ஐரிஷ் போர்வீரர்களும் அவர்களுடைய போர்வீர குருவானவரும் அங்கே வந்து தரையில் சிதறிக்கிடந்த திவ்விய அப்பங்களைப் பார்த்து மகா கோபமும் துக்கமும் அடைந்தார்கள். பிறகு குருவானவர் போர்வீரர்களைப் பார்த்து, "என் நேசர்களே! கொடிய ஜெர்மானியர் செய்த இந்த அக்கிரமத்தைப் பாருங்கள்" என்று சொன்னார். உடனே போர்வீர உத்தியோகஸ்தர் ஒருவர், "சுவாமி! நாங்கள் எங்கள் இரத்தத்தைச் சிந்தி ஜெர்மானியர் செய்த இந்த அக்கிரமத்திற்குப் பரிகாரம் செய்வோம்." என்றார். அப்பொழுது மற்றவர்கள், "ஆமாம் சுவாமி! நாங்கள் அதற்குச் சத்தியம் செய்கிறோம்" என்று சொல்லி, எல்லோரும் சம்மதித்து சுவாமியாருக்கு முன்னால் முழங்காலிலிருந்து ஒப்பந்தம் செய்து அவர்களும் சுவாமியாரும் ஒரு காகிதத்தில் கையெழுத்துப் போட்டு அக்காகிதத்தை ஷை கோவிலின் ஒரு தூணில் ஒட்டிவிட்டார்கள்.

பிறகு அந்தத் திவ்விய அப்பத்துண்டுகளைச் சுவாமியார் ஒன்றும் விடாமல் பொறுக்கி யெடுத்து, ஒரு பாத்திரத்தில் வைத்து, திவ்வியநற்கருணைப் பெட்டியில் வைத்துப் பூட்டி ஆராதனை செய்துவிட்டுப் போனார்கள்.



சிலநாள் கழித்து மேற்சொல்லிய ஐரிஷ் போர்வீரர்கள் ஜெர்மானியருக்கு எதிராய்ப் போருக்கு அனுப்பப்பட்டு அநேக ஜெர்மானிய போர்வீரரைக் கொன்று அவர்கள் கோவிலில் செய்த அக்கிரமத்துக்கு உத்தரிக்கச் செய்தார்கள். அந்த ஐரிஷ் போர்வீரரில் சிலர் காயம்பட்டும், சிலர் உயிரிழந்தும் எல்லோரும் இரத்தம் சிந்தித் தாங்கள் செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றினார்கள். சுவாமியாரும் காயம்பட்ட ஒரு போர்வீரனுக்கு அவஸ்தை கொடுத்துக்கொண்டிருக்கையில் ஒரு குண்டு பட்டுத் தாமும் அவ்விடத்திலேயே இறந்துபோனார்.

இவ்விதமே, ஜெர்மானியர் செய்த அக்கிரமத்திற்காக ஐரிஷ் போர்வீரரும் குருவானவரும் பரிகாரம் செய்து, தங்கள் உயிரைச் சுவாமிக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள்.

## The Gospel of Peace.

### சமாதானத்தின் சுவிசேஷம்.

நமது திவ்விய இரட்சகர் பிறந்த இராத்திரியில் தேவதூதன் ஆயர்களுக்குக் காணப்பட்டு அவர்களை நோக்கி, "நீங்கள் அஞ்சவேண்டாம். ஏனெனில், இதோ! எல்லா ஜனங்களுக்கும் உண்டாயிருக்கும் மகா சந்தோஷமான செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில், இன்று கிறீஸ்துநாதராகிய ஒரு இரட்சகர் உங்களுக்குப் பிறந்திருக்கிறார்" என்று சொன்னார். அக்ஷணமே, அநேக சம்மனசுகள் கூடி, "பரலோகத்தில் சர்வேசுரனுக்குத் தோத்திரமும் பூலோகத்திலுள்ள நல்ல மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக" என்று பாடினார்கள். (அர்ச். லூக். 2-ம் அதி. 10-13-ம் வசனம்.)

எல்லா இராச்சியங்களுக்கும் சமாதானம் உண்டாகக்கடவது! நீதி ஜெயங்கொண்டு, தற்காலம் நடக்கும் பயங்கரமான கொடிய ஐரோப்பிய மகா யுத்தம் முடிவடைந்து, ஜனங்களுக்குள்ளே சிநேகமும் சமாதானமும் உண்டாகும்படி சமாதானத்தின் இராஜாவாகிய திவ்விய குழந்தை சேசுநாதர் கிருபை செய்வாராக!

குடும்பங்களில் சமாதானம் உண்டாகக்கடவது. சகல ஆஸ்தி திரவியங்களிலும் பெரிய திரவியமாகிய சமாதானம் குடும்பங்களில் உண்டாகும்படி திவ்விய குழந்தை சேசுநாதர் கிருபை செய்வாராக!

சர்வேசுரனுக்கு ஊழியம்செய்து தங்கள் ஆத்தும இரட்சண்ணியத்தைத் தேடிவருகிற நல்ல மனமுள்ள மனிதர்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது!

விருத்தாப்பியர்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது. அவர்கள் தங்கள் தள்ளாத வயதில் ஆறுதலும் பாக்கியமும் அடை

யும்படி திவ்விய குழந்தை சேசுநாதர் அவர்களுக்குக் கிருபை செய்வாராக!

வாலிபர்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது! உலக ஆசாபாசங்களினின்று குழந்தை சேசுநாதர் அவர்களைக் காப்பாற்றுவாராக!

பாவத்தினால் கெட்டுப்போன பாவிகளுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது! அவர்கள் மனந்திரும்பி நல்ல வழியைத் தேடும்படி குழந்தை சேசுநாதர் கிருபை செய்வாராக!

கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்கும், கஷ்டப்பட்டுத் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றுகிறவர்களுக்கும் சமாதானம் உண்டாகக்கடவது!

எல்லாரும் சர்வேசுரனையும் புறத்தியாரையும் சிநேகித்து, இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் சமாதானம் உண்டாகும்படி திவ்விய குழந்தை சேசுநாதர் கிருபை செய்வாராக!

கிறிஸ்மஸ் திருநாளில் நாமெல்லோரும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய நன்மை வாங்கி, இந்தச் சுகிர்த சமாதானம் எல்லா ஜனங்களுக்கும் உண்டாகும்படி திவ்விய குழந்தை சேசுநாதரைப் பிரார்த்திப்போமாக! (சத்திய நேசன்.)

---

## The Greatest Evil.
## எல்லாத் தின்மைகளிலும் பெரிய தின்மை எது?

பெர்ஷியா இராஜாவின் சந்நிதியில் 3 ஞானிகள் ஒருநாள் ஆலோசனை செய்துகொண்டிருக்கும்போது எல்லாத் தின்மைகளிலும் பெரிய தின்மை எதுவென்பதைப்பற்றித் தர்க்கம்செய்துகொண்டார்கள். அந்த ஞானிகளில் ஒருவன் கிறீஸ் தேசத்தானும், மற்றொருவன் இந்தியா தேசத்தானும், வேறொருவன் பெர்ஷியா தேசத்தானுமாக இருந்தார்கள்.

கிறீஸ் தேசத்தான் "விருத்தாப்பியகாலத்தில் ஏழையாய் இருப்பது பெரிய தின்மை" என்றான்.

இந்தியா தேசத்தான், "வியாதி, கஸ்தி, துன்பம் இவைகளைப் பொறுமையோடு சகிக்காமல் இருப்பதே பெரிய தின்மை" என்றான்.

பெர்ஷியா தேசத்தானோவெனில், "ஜீவிய காலத்தில் ஜெபம், தபம், தர்மம் இவை முதலிய நற்கிரிகைகளைச் செய்யாமல் மரிப்பதுதான் எல்லாத்தையும் பார்க்கப் பெரிய தின்மை" என்று சொன்னான்.

கடைசியாய் பெர்ஷியா இராஜா இவர்கள் மூவர் சொன்னதையும் கேட்டு, பெர்ஷியா தேசத்தானை நோக்கி, "நீயே மெய்யான ஞானி" என்று சொல்லித் தீர்மானித்தார். (ஞானி.)



பூமியில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம். இவ்விடத்தில் (அவைகளைத்) துருவும் புழுவும் அழிக்கிறதுமன்றித் திருடரும் கன்னமிட்டு திருடுகிறார்கள். ஆனால் பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேகரித்துவையுங்கள். அவ்விடத்தில் (அவைகளைத்) துருவும் புழுவும் அழிக்கிறதுமில்லை, திருடர் கன்னமிட்டு திருடுகிறதுமில்லை.

(அர்ச். மத்தேயு. 6-ம் அதி. 19-20-ம் வச.)

---

## Letter to Antony.
## அந்தோனிக்கு எழுதிய கடிதம்.

பிரியமுள்ள அந்தோனி,

உன்னைப்பற்றி நான் கேள்விப்படும் விஷயங்களைச் சற்று யோசித்தால் என் இருதயமானது கஸ்தியால் உருகி பதைத்துத் துடிக்கிறது. அஞ்ஞானிகள், துலுக்கர் பண்டிகைகளிலும், அவர்களுடைய மத ஆசாரங்களையடுத்த காரியங்களிலும் கிறீஸ்துவர்கள் கலப்பது சத்திய வேதத்திற்குத் தகாதென்று திருச்சபை விலக்கியிருப்பதை நீ அறியாதவனல்ல. அறிந்தாலும் கேட்டும் கேளாதவன்போல இக்கட்டளையை நீ அலக்ஷியம் செய்து சில நாட்களுக்கு முன் நடந்த மொஹரம் பண்டிகையில் அயோக்கியர்களோடு சேர்ந்து பல வேஷங்கள் தரித்து வீதி வீதியாய் அலைந்து அசுத்த வார்த்தைகளை வாயினால் கக்கின சங்கதி என் காதுக்கு எட்டிற்று. ஆ! இதென்ன கேவலம்! எவ்வளவு அக்கிரமம்! குடித்து ஆடிப்பாடி உல்லாசம் கொண்டாடவும், சொற்ப லாபம் சம்பாதிக்கவும், உன் விசுவாசத்தையும் வேதத்தையும் மறுக்கத் துணிந்தாய். சிறுவர்களுக்குத் துர்மாதிரிகை காட்டி, உன் அசுசியான வார்த்தைகளாலும், அநாச்சாரமான சேஷ்டைகளாலும் மாசற்றவர்களுடைய இருதயத்தைக் கெடுத்தாய். அஞ்ஞானிகளே உன் நடக்கையைப் பார்த்து நகைத்து நம்முடைய பரிசுத்த வேதத்தைப் பழிக்கிறார்கள்.

மெய்யான சர்வேசுரனுடைய பிள்ளையென்றும், சேசுக்கிறீஸ்துவின் சீஷனென்றும், நீ அழைக்கப்பட ஆசிக்கிறாய். ஆனால் உன் நடக்கையை சற்று ஆராய்ந்து பார்த்தால் சர்வேசுரனுடைய பிள்ளையென்று சொல்லும்படியாக ஜீவிக்கிறாயா? கிறீஸ்துவின் சீஷனென்று பெயர் தரித்திருக்கும் நீ, அஞ்ஞானியிலும் கேடுகெட்ட அஞ்ஞானியாய் வேதத்துக்கும், விசுவாசத்துக்கு மாறாக தெய்வபயமின்றி பெயருக்கு மாத்திரம் கிறீஸ்துவனாயிருந்துகொண்டு அப்பேருக்குத் தகுதியற்ற விதமாய் நடத்தையில் வேறாயிருப்பதைப் பார்ப்பது எவ்வளவு கஸ்திக்குரிய காரியம். சர்வேசுரனுடைய பிள்ளையென்று சொல்லிக்கொண்டு

அவருடைய பகைஞனை பசாசுக்கு ஊழியம் செய்கிறாய். உன்
நன்மாதிரிகையாலும் கிறீஸ்துவ ஜீவியத்தாலும் அஞ்ஞான இரு
ளில் நடக்கும் மற்ற மதஸ்தருக்கு ஞான வெளிச்சம் காட்ட
வேண்டியிருக்க, இதற்கு விரோதமான உன் நடத்தையானது
அவர்கள் நமது பரிசுத்த வேதத்தைத் தூஷிக்கவும், அதில் அவர்
கள் சேராதபடிக்கு தடை செய்யவும் காரணமாய் இருக்கிற
தல்லவா ! இதைப்பற்றி பின்னொரு காலத்தில் சுவாமி உன்
னிடத்தில் கண்டிப்பான கணக்குக் கேட்கும்போது என்ன பதில்
சொல்வாய் !

நீ காட்டின துர்மாதிரிகைக்கும், செய்த அக்கிரமங்களுக்
கும் தகுந்த பரிகாரம் செய்யவேண்டும். தீர்க்கவேண்டிய அபரா
தத்தைத் தீர்த்து பாவசங்கீர்த்தனத்தால் உன் ஆத்துமத்தை
சுத்திசெய்ய காலதாமதம் செய்யாதே. இனிமேல் திருச்சபை
யால் விலக்கப்பட்ட அஞ்ஞானிகள், துலுக்கர் பண்டிகைகளில்
நீ தலையிடாமல் மெய்யான கிறீஸ்துவ ஜீவியம் ஜீவிப்பாயேயாகில்
சர்வேசுரன் உன்னையும் உன் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.
மேலும் இவ்வுலகில் நீ பாக்கியவானாயிருப்பதுமல்லாமல் மறு உல
கத்தில் சர்வேசுரனுடைய திருமுக தரிசனையை அடையப் பேறு
பெறுவாய்.

இப்படிக்கு,
உன் உத்தம நண்பன்.

---

## Origin of "Sathyamangalam."
## 'சத்தியமங்கலம்' என்னும் பெயர் வழங்குவதற்குக் காரணம்.

சங்கைக்குரிய பத்திராதிபரவர்கட்கு,

உங்களுடைய அர்ச். அந்தோனியார் தூதனில் சென்ற சில
மாதங்களாக குன்னூர் பங்கைக் குறித்தும் மற்றும் நமது மேற்
றிராசனத்தைச் சார்ந்த சிற்சில ஊர்களைப்பற்றியுமுள்ள சரித்
திரங்களைப் பிரசுரிக்கிறதினால் சத்தியமங்கலம் என்று எல்லோரும்
கேள்விப்பட்டுள்ள ஊருக்கு யாது காரணத்தை முன்னிட்டு அப்
படிப்பட்டக் காரணப்பெயர் இடப்பட்டதென்று சிலர் அறிய
விரும்புவார்களென்று நம்பி எனக்கு பாரம்பரையாகவும் வாய்
மொழியாகவும் கிடைக்கப்பட்டுள்ள சரித்திரத்தைக் கீழ்வருமாறு
எழுதத் துணியலானேன்.

சுமார் நூறு ஆண்டுகளுக்குமுன் திப்பு சுல்தான் மைசூர்
இராட்சியத்தை ஆண்டுவருங் காலத்தில் கடவுள் கிருபையால்
மேற்சொன்ன ஊரில் சில கிறீஸ்துவக் குடும்பத்தார்கள் இருந்
தார்கள். இப்படியிருக்க ஓர்நாள் அவ்வூர்க் கோவில் உபதேசியா
ருக்கும், மற்றொரு பிரதம இந்து பூசாரிக்கும் தங்கள் தங்கள்



வேதத்தைப்பற்றி பெரும் தர்க்கம் உண்டாகி, கடைசியாக உப
தேசியார் தன் மதத்தின் சத்தியத்தையும், உண்மையையும் சகல
ஜனங்களுக்கும் பகிரங்கப்படுத்த எண்ணி, அந்த இந்து பூசாரி
கேட்டபிரகாரமாகவே ஒரு கொப்பரை நிறைய காய்ந்து கொதிக்
கும் எண்ணெயில் அன்று மலர்ந்த ஓர் அரளிப்பூவைப் போட்டு
அது வாடாமலிருக்கவும், பிறகு தன் கையினாலேயே அந்தச்
சுடுகொப்பரையிலிருந்து அப்பூவை எடுத்துக் கொடுக்கவும்
உடன்பட்டு அதற்கென ஓர் தினத்தை நியமித்தார்கள். அப்
பேர்க்கொத்த விசேஷ தினத்தில் இச்சம்பவத்தைப் பார்க்க
ஜனங்கள் திரள் திரளாய் வந்து கூடினார்கள். உபதேசியாரோ
வெனில் தான் புறப்படுவதற்குமுன் திவ்விய சற்பிரசாதம் உட்
கொண்டு தேவ உதவியை மன்றாடினபிறகு, குருவானவரின்
ஆசீரையும் பெற்று குறிக்கப்பட்ட இடத்திற்கு வந்து சகல
மதஸ்தர்களுக்கும் முன்பாக தளதளவென்று கொதித்திருக்கும்
எண்ணெயில் மலரைப் போட்டு, சத்திய கடவுளினுடைய கிருபா
கடாக்ஷத்தால் சகல மனிதருக்கும் தாம் அநுசரிக்கும் கத்தோ
லிக்கு வேதமே சத்திய வேதமென்று காண்பிக்கும்பொருட்டு
யாதொரு தீங்குமில்லாமல் அம்மலரை கையால் எடுத்து எல்லோ
ருக்கும் காண்பித்து கடவுளை ஸ்தோத்திரம் செய்தார். இப்ப
டிப்பட்ட விசேஷ புதுமையினால் அநேக ஜனங்கள் மனந்திரும்பி
ஞானஸ்நானம் பெறக் காரணமாயிற்று. மேலும் அந்நாள் வரைக்
கும் மங்கலம் என்று மாத்திரம் சொல்லப்பட்டுவந்த அவ்வூருக்கு
அன்றுமுதல் இன்றுவரையில் சத்தியமங்கலம் என்றும் காரணப்
பெயர் வழங்கிவருகிறது.

கேள்வியுற்றோன்.

---

## Notice.

நமது தூதனில் பிரசுரம் செய்யும்படி திருச்சினாப்பள்ளி
கலெக்டர் துரை அவர்கள் கேட்டுக்கொண்டு அனுப்பிவைத்த
**விளம்பரம்.**

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது யா
தெனில் : சென்னபட்டணம் பீபில்ஸ் (Peoples' Park) பார்க்
கில் பிரதி வருஷம் நடக்கும் கண்காட்சியும் பலவித விளையாட்டு
களும் இவ்வருஷம் சென்னபட்டணத்தில் 1916-ம் ௵ டிசம்
பர்-மீ 23-உ முதல் 1917-ம் ௵ ஜனவரி-மீ 1-உ வரையில்
தென்னிந்தியா (South Indian Athletic Association) விளை
யாட்டு சங்கத்தாரால் நடத்தப்படும். அதில் வசூலாகும் வரும்
படியை மதராஸ் ஆஸ்பத்திரி கப்பலுக்கு உபயோகப்படுத்தப்
படும். முந்தின வருஷங்களைக் காட்டிலும் இவ்வருஷம் காட்சி
யும், வேடிக்கைகளும் விளையாட்டும் அதிக விநோதமாயிருக்கும்.

ஷை காட்சிக்குப் போகிறவர்கள் தாங்கள் வேடிக்கைகளைப் பார்த்து ஆனந்தம் அடைவதுடன் மதராஸ் ஆஸ்பத்திரி கப்பலுக்கு உதவி செய்தவர்களாயுமிருப்பார்கள்.

(Sd.) DAVID,
*for Collector.*

---

## Here and There.

### நானா சங்கதி.

லண்டன் பட்டணத்தின் முக்கிய முனிசிப்பல் உத்தியோகஸ்தராக சர். என்றி டன். (Sir Henry. W. Dunn.) நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் நல்ல கத்தோலிக்கு கிறீஸ்துவர்.

சீனா தேசத்தில் (Liyuanhung) லியோங்அங் என்பவர் குடியரசு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஒரு நல்ல கத்தோலிக்கு கிறீஸ்துவராயிருக்கிறபடியால் இவரால் சீனா தேசத்தில் சத்திய வேதத்திற்கு அதிக நன்மை உண்டாகுமென்று நம்புகிறோம்.

அர்ச். பாப்பானவரின் ஸ்தானாபதியாகிய மகா வந்திக்கத்தக்க (Mgr. Zaleski) ஜலஸ்கி ஆண்டவர் இந்தியாவை விட்டு டிசம்பர்-மீ 4-ம்வ சீர்மைக்குக் கப்பலேறுவார்.

சங். (Rev. Fr. Linehan) லினேயன் என்னும் ஐரிஷ் போர்வீர குருவானவர் நவம்பர் மாதம் 6-ம்வ குன்னூரைவிட்டு போர்முகத்துக்குத் திரும்பிப் போய்விட்டார்.

இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்ற (Arabia) அரேபியா என்ற நீராவி மரக்கலம் ஒரு முழுகுக்கப்பலால் துளைக்கப்பட்டு சேதமடைந்து, ஒரு கப்பல் உத்தியோகஸ்தரும், மாலுமியும் ஆகிய இரண்டு பேரைத்தவிர மற்றவர்கள் எல்லாரும் காப்பாற்றப்பட்டார்கள்.

சங். (Rev. Fr. Darras) டாராஸ் சுவாமியார் அக்டோபர்-மீ 30-ம் தேதியில் தமது 82 வயதில் புதுச்சேரியில் மரணமடைந்தார். அவர் இந்தியா தேசத்தில் 57 வருஷகாலமாக வேதத்தைப் போதித்தவர். அவரிடத்தில் விளங்கின தேவசிநேகத்தினாலும் பிறசிநேகத்தினாலும் ஜனங்களுக்கு அதிக பிரியமுள்ளவராயிருந்தார். R. I. P.

மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும் பாரீஸ் குருமடத்து ஆசிரியருள் ஒருவருமாகிய சங். கிரோட் (Rev. Fr. Guiroud) சுவாமியார் போர் முகத்தில் கொல்லப்பட்டார். R I.P.

---


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. January 1917. No. 1.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 1.


## *A Happy New Year.*

## பாக்கியமான புதுவருஷம்.

நமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும், இதனை வாசிப்பவர்களுக்கும் இப்புது வருஷம் பாக்கியமான வருஷமாய் இருக்கும்படி ஆசிக்கிறோம். தேவ ஆசீர்வாதம் அவர்கள்மேல் இறங்கி எப்போதும் நிலைத்து நிற்கும்படி அருள்புரிய அமல சர்வேசுரனை வேண்டிக்கொள்ளுகிறோம்.

(பத்திராதிபர்.)

## Conversion of India.—(*Continued.*)

### நமது சொந்த நாடாகிய சிந்து தேசம் மனந்திரும்புவதற்கு நாம் செய்யவேண்டியதென்ன? (தொடர்ச்சி.)

நமது தர்ம நடக்கையும், ஜெபமுமல்லாமல், அஞ்ஞானிகள் மனந்திரும்ப நாம் செய்யவேண்டிய காரியம் இன்னம் ஒன்று உண்டு. அதாவது, புறமதஸ்தருக்குத் தக்ககாலத்தில் தக்கபடி உதவி புரிவதுதான். இலட்சக்கணக்கான அஞ்ஞானிகள் மத்தியில் புள்ளிபோட்டாற்போலிருக்கும் நீங்கள் சத்தியவேத வெளிச்சத்தைப் பெற்றிருக்கிறவர்களானபடியால், இன்னம் நீங்கள் செய்யவேண்டியது என்ன? உங்கள் விசுவாசம் உயிருள்ளதாக இருக்கவேண்டும். எங்களுக்கு விசுவாசம் உண்டு என்று வாயினால் மாத்திரம் சொல்லி, உங்கள் கிரிகைகளாலும் நடத்தை

யாலும் உங்கள் விசுவாசத்தைக் காட்டாமற்போனால் உங்கள் விசுவாசத்தால் என்ன பிரயோசனம்? கிரிகைகளில்லாத விசுவாசம், செத்த அதாவது உயிரற்ற விசுவாசமென்றே சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் சர்வேசுரன் புறத்தியாரைப் பற்றி ஒரு கட்டளை கொடுத்திருக்கிறார் என்றும், "உங்களைப் போல் உங்கள் புறத்தியாரையும் சிநேகிப்பீர்களாக" என்றும் உங்கள் விசுவாசம் உங்களுக்குச் சொல்வதில்லையா? அப்படியானால், உங்கள் ஆத்தும நன்மையைப்போலவே புறத்தியாருடைய ஆத்தும நன்மைக்காகவும் உங்கள் சரீர நன்மையைப்போலவே புறத்தியாருடைய சரீர நன்மைக்காகவும் நீங்கள் உழைத்து வரவேண்டும். இதுதான் மெய்யான பிறர்சிநேகமாகும். ஆகையால் உயிருள்ள விசுவாசத்தைக்கொண்டிருக்கும் கிறீஸ்துவர்களே கேளுங்கள்: அஞ்ஞானிகளை மனந்திருப்பும் வேலையைக் குருமார்கள் மாத்திரம் தனியாகச் செய்யமுடியாது. இதற்கு உங்கள் உதவியும் அவசியம் வேண்டியதாய் இருக்கிறது. நமது சத்திய திருச்சபையில் குருமார்கள் மாத்திரம் செய்யக் கூடிய கிரிகைகள் உண்டு. அவையாவன:—திவ்விய பூசை ஒப்புக்கொடுப்பது, ஞானப்பிரசங்கம் செய்வது, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவது இவை முதலியவைகளே.

இவைகள் நீங்கலாக மற்ற அநேக அலுவல்களைச் செய்வதில், குருமார்களுக்குக் கிறீஸ்துவர்கள் வலதுகை, இடதுகையாக இருந்து எவ்வளவோ உதவி புரியலாம். அப்போஸ்தலர்கள் காலத்தில் ஆண்பிள்ளைகள் மாத்திரமல்ல, பெண்பிள்ளைகளும் அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்கு வேண்டிய உதவி புரிந்துவந்தார்களென்று அர்ச். சின்னப்பர் எழுதின நிருபங்களில் நாம் வாசிக்கிறோம்.

உண்மையாகவே, பிறர்சிநேகக் கடமையானது ஆண், பெண் ஆகிய சகலருக்கும் உண்டு. பிறர்சிநேகக் கடமையை நாம் சரிவரச் செய்வதற்கேற்ற கிரிகை யென்னவென்றால் நமது அந்தஸ்துக்குத் தக்கபடி தக்கசமயத்தில் அஞ்ஞானிகளுக்கு உதவி புரிவதே. அவ்வித உதவிகள் எவையென்று சொல்லுகிறேன் கேளுங்கள். சிறு பிள்ளைகளுக்கும் படிப்பில்லாதவர்களுக்கும் மந்திரம் குறிப்பிடம் கற்பிக்கலாம். மரணத்தறுவாயில் இருக்கும் அஞ்ஞானக் குழந்தைகளுக்குச் சாமர்த்தியமாய் ஞானஸ்நானம் கொடுக்கலாம். மரண படுக்கையில் இருக்கும் அஞ்ஞானிகளிடம்போய் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, மெல்லமெல்ல வேதத்தைப்பற்றிப்பேசி ஞானஸ்நானத்திற்கு அவர்களை ஆயத்தம் பண்ணலாம்.

(உள்ளது சொல்வோன்.)

இன்னும் வரும்.



## Wanted your help.

### நமது தூதனுக்கு உங்கள் உதவி வேண்டும்.

நீங்கள் நமது தூதனுக்கு ஏன் உதவி செய்யவேண்டும் என்றால், 1-வது. அது சிறியதாகவும் புதியதாகவும் இருக்கின்றது. ஏழைகளுக்கும் ஆதரவற்ற சிறுவர்களுக்கும் உதவிசெய்வது பெரிய தருமமாகும்.

2-வது. நல்ல காரியங்களுக்கு ஒத்தாசைசெய்வது புண்ணியமாகும். நமதுகாலத்தில் கத்தோலிக் பத்திரிகைகளைப் பரவச் செய்வது மெத்த அவசரமான நற்கருமமாம்.

நமது பத்திரிகைக்கு எப்படி உதவி செய்யலாம் என்று கேட்டால், 1-வது. இப்பத்திரிகையை நீங்கள் வாங்கி வாசித்த பிறகு உங்கள் சிநேகிதர்களுக்கும் உறவினர்களுக்கும் வாசிக்கக் கொடுத்து உங்களால் இயன்றவரையில் இதைப் பரவச்செய்யுங்கள். 2-வது. 1917-ம் வருஷத்துக்கு செலுத்தவேண்டிய சந்தா தொகையாகிய ஒரே ரூபாயைத் தயவுசெய்து நமக்கு அனுப்பிவையுங்கள்.

அப்படியே நீங்கள் யாவரும் செய்துவருவீர்களேயாகில் தற்காலம் நடந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய யுத்தம் முடிந்த பிறகு இப்போது நடந்துவரும் இச்சிறிய தூதன் பத்திரிகையைப் பெரிதாக்கி 12 அல்லது 16 பக்கங்களுக்குக் குறைவில்லாமல் பிரசுரம் செய்யவேண்டுமென்பது நமது ஆவல்.

இத்தூதன் அதிக சிறியதாய் இருக்கிறதென்று முறையிட்டு அலட்சியமாய் எண்ணித் தள்ளிவிடவேண்டாம். யாதொரு காரியமும் கொஞ்சம் கொஞ்சமாய் வளரவேண்டும். ஏனென்றால் அதிக சீக்கிரத்தில் வளர்வதெல்லாம் பலவீனமாகவே இருக்கும்.

(பத்திராதிபர்.)

## The star of the Magi.

### மூன்று இராஜாக்களுக்குக் காணப்பட்ட நட்சத்திரம்.

பெத்ரிலேம் என்னும் ஊரில் சேசுநாதர் பிறந்தபின்பு சடிதியில் கீ[illegible]த்திசையினின்று சோதிடசாஸ்திரிகள் எருசலேம் நகருக்கு [illegible]ந்து, யூதருக்கு இராஜாவாய்ப் பிறந்திருக்கிறவர் எங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோம் என்றார்கள்.

பின்னும் இராஜா சொன்னதை அவர்கள் கேட்டு, புறப்பட்டுப் போனார்கள். அப்போது கீழ்த்திசையில் அவர்கள் கண்ட நட்சத்திரம் மறுபடியும் தோன்றி, குழந்தை இருந்த இடத்தின் மேல் வந்து நிற்குமட்டும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்

களோ வென்றால் நட்சத்திரத்தைக் கண்டு மெத்தவும் சந்தோஷமடைந்து மிகவும் அக்களித்தார்கள். பின்னும் வீட்டில் பிரவேசித்து குழந்தையையும் அதின் தாயாராகிய மரியம்மாளையும் தரிசித்து, சாஷ்டாங்கமாக விழுந்து திவ்விய குழந்தையை ஆராதித்தார்கள். (அர்ச். மத்தேயு. 2-ம் அதி. 1—10-ம் வச.)

மூன்று இராஜாக்கள் நட்சத்திரத்தைக் கண்டு அதன்பின் சென்று இரட்சகரிடத்தில் சேர்ந்தாற்போலவே, நமக்கும் மோட்ச வழியைக் காண்பிக்க மகாப் பிரகாசமுள்ள நட்சத்திரம் உண்டு. அந்த நட்சத்திரம் விசுவாசமும் திருச்சபையுமாமே. ஆகையால் நாம் விசுவாசத்தின் ஏவுதல்களை ஏற்றுக்கொண்டு, திருச்சபையின் சொற்படி கேட்டு நடப்போமானால் சேசுநாதர்சுவாமி இருக்கும் இடமாகிய மோட்ச இராச்சியத்தில் சேருவோம்.

(சத்திய நேசன்.)

## Importance of Catechism.

## ஞான உபதேசத்தின் அவசியம்.

தென் இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்தில் கத்தோலிக் கிறீஸ்துவன் ஒருவன் தனது மகனைக் கத்தோலிக் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூடாதென்று வேறொரு பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தான். ஞான உபதேசம் படியாமலும் ஆயத்தம் நன்மை முதலிய வருஷக்கடன்களைத் தீர்க்காமலும் இருந்த அந்தப் பையன் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது திடீரென வியாதியாய் விழுந்து, ஜன்னி கண்டு, அவஸ்தை, ஆயத்தமில்லாமல் அஞ்ஞானியைப்போல் இறந்தான். தங்கள் பிள்ளையின் ஆத்துமம் இவ்வித நிர்ப்பாக்கியஸ்திதியில் இருக்கக் காரணமாய் இருந்த தாய் தந்தையர் தேவ நீதியின் சிம்மாசனத்திற்கு முன் என்ன பதில் சொல்வார்களோ?

(திரு இருதயத் தூதன்.)

## Letter to Anthony.

## அந்தோனிக்கு எழுதிய கடிதம்.

பிரியமுள்ள அந்தோனி!

சர்வேசுரன் மனிதருக்குக் கட்டளையிடும் ஆஸ்திபாஸ்தி, காணி பூமி, உத்தியோக மகிமை முதலிய பிரபஞ்ச நன்மைகளை விட பிள்ளைப்பாக்கியம் மேலானது. "மக்கட் பேற்றில் பெரும் பேறில்லை" என்பது ஆன்றோர் வாக்கு. பலநாள் செய்த தவத்தால் சர்வேசுரன் கிருபை வைத்து உனக்கு அளித்திருக்கும் பிள்ளைகளை எத்தன்மையான கவலையோடு விசாரித்து வளர்த்து வருகிறாய் என்று சற்று ஆராய்ந்து பார். அந்தப்



பிள்ளைகள் புத்தியிலும், நல்லொழுக்கத்திலும், விசுவாசத்திலும் வளரவேண்டுமென்று நீ சற்றாவது கவனிப்பதில்லை. அக்கடமை உன்னுடையதல்லவென்று நீ எண்ணுவதுபோல் தோன்றுகின்றது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதுபோல், உன் பிள்ளைகள் அறிவீனத்திலும் துர்க்குணங்களிலும் அவிசுவாசத்திலுமே வளருவார்களென்று நான் அஞ்சுகிறேன்.

உன் பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்ப்பது எவ்வளவோ முக்கியமான காரியம். தாய் தகப்பனுடைய பிரதான கடமை இதுதான். இவர்களுடைய புத்தியையும் அறிவையும் விர்த்தி செய்து, புத்திசாலிகளாகவும், படிப்பாளிகளாகவும், நல்ல கிறீஸ்துவர்களாகவும் இருக்கும்படி பார்ப்பது உன்பேரில் சுமந்த பெருங்கடனாகும். பூமியின் எந்தத் தேசத்திலும், எந்தக் காலத்திலுமுள்ள எவ்வகைப்பட்ட ஜாதி ஜனங்களும் தங்கள் பிள்ளைகள் படித்துப் புத்திசாலிகளாவது தங்களுக்குப் பெரிய பாக்கியமென்றும், பெருமையென்றும் எண்ணியிருக்கிறார்கள். உன் பிள்ளைகள் படித்தவர்களானால் உனக்கும் உன் குடும்பத்துக்கும் மகிமையுண்டாகும். புத்தித் தெளிவடைந்து, தங்களுடைய கடமைகளையும், நமது பரிசுத்த வேதத்தின் கட்டளைகளையும் கண்டறிந்து நல்ல கிறீஸ்துவர்களாய் ஒழுகுவார்கள். அவர்கள் மரியாதையாய்க் காலட்சேபம் செய்வதோடு உன் விருத்தாப்பிய காலத்தில் அவர்கள் உனக்கு ஊன்றுகோல்போல நின்று உன்னைத் தாங்கி ஆதரிப்பார்கள். அவர்களுக்கு நீ விடும் பிதிரார்ஜித சொத்தில் கல்விதான் மிகவும் சிறந்ததும் விலையேறப்பெற்றதுமான பொக்கிஷமென்று அறியக்கடவாய்.

உன் பிள்ளைகளைப் படிக்க வைப்பது அவசியமென்றாலும், அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடம் நல்ல பள்ளிக்கூடமாக இருத்தல் வேண்டும். தப்பறையான போதனைகளை ஊட்டும் பதிதப் பள்ளிக்கூடங்களுக்கும், வேதப் படிப்பினையில்லாத அஞ்ஞானப் பள்ளிக்கூடங்களுக்கும் உன் மக்களை அனுப்புவது பெருந்தவறு. பள்ளிக்கூடத்தில் படிப்போடு நல்லொழுக்கத்தையும், நமது சத்தியவேத ஆசார முறைகளையும் அறிவது அவசியமாகையால் அஞ்ஞானிகள், பதிதர்களுடைய அநுசரணையில் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு உன் பிள்ளைகளை அனுப்புவதால் அவர்களுக்கு நல்லொழுக்கம் வரமாட்டாது. வேதப்படிப்பினையிருக்காது. பின்னால் அவர்கள் மெய்யான கிறீஸ்துவ ஜீவியம் ஜீவிப்பார்களென்று சொல்லவும் வழியில்லை.

பிள்ளைகளைப் படிக்க வைப்பதும், அவர்களைக் கத்தோலிக் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதும் இவ்வளவு முக்கியமான

காரியமானால், தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளை எவ்வளவோ ஜாக்கிரதையோடும் கவலையோடும் வளர்க்கவேண்டும்! இவ்விஷயத்தில் நீ எவ்வளவு அசமந்தமுள்ளவனாய் இருக்கிறாய்! உன் பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் வீதி வீதியாய்த் துஷ்டர்களோடு சேர்ந்து திரியவும், நாள் முழுதும் விளையாட்டில் காலத்தை விருதாவாய்ச் செலவழிக்கவும் விட்டு விடுகிறாய். இப்படிக் கவலையற்றிருப்பதால் உன் அந்தியகாலத்தில் அவர்களலா உனக்குக் கஸ்தியும், துன்பமும் வருமேயொழிய ஆறுதல் உண்டாகாது. கிறீஸ்துவர்கள் எவ்வளவு படித்துப் புத்திசாலிகளாய் இருப்பார்களோ அவ்வளவு சத்திய வேதத்துக்குப் பெருத்த மகிமையும், குடும்பத்துக்குக் கீர்த்தியும், உனக்கு ஆறுதலும், சந்தோஷமும் உண்டாகும்.

இப்புத்தியின் பிரகாரம் நடப்பாயேயாகில் சர்வேசுரன் உன்னையும் உன் குடும்பத்தையும் ஆசீர்வதித்து இவ்வுலகிலும் மறுவுலகிலும் உன்னைப் பாக்கியவானாக்குவார்.

இப்படிக்கு, உன் உத்தம சிநேகிதன்.

## Karumuthampatty Legend of a door.

## கருமுத்தம்பட்டித் தேவாலயக் கதவு.

சங்கைக்குரிய பத்திராதிபரே,

நம்முடைய மேற்றிராசனத்தைச் சேர்ந்த கருமுத்தம்பட்டியிலுள்ள திருச்செபமாலை இராக்கினியின் தேவாலயத்தைப் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். தங்களுடைய தூதனை வாசிப்பவர்களில் அநேகர் அத்திரு ஆலயத்தைத் தரிசித்தும் இருப்பார்கள். ஆகையால் இவ்வாலயத்தைப்பற்றி யான் கேள்வியுற்றுள்ள ஒரு விசேஷ சம்பவத்தை மற்றவர்களும் அறிந்தால் சர்வேசுரனுக்கு அதிக தோத்திரம் செய்வார்களென்று நம்பி இக்கடிதத்தைத் தங்களுடைய தூதனில் பிரசித்தப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கருமுத்தம்பட்டியில் இருக்கும் ஆலயம் பல நூறு வருஷங்களுக்கு முன் ஏற்பட்டதென்று வேதசாட்சியான முத். அருளானந்தர் சரித்திரத்தை வாசித்தவர்கள் அறிந்திருப்பார்கள். குருக்களும் தேவாலயங்களும் வெகு சொற்பமாயிருந்த அக்காலத்தில் கருமுத்தம்பட்டியானது கிறீஸ்துவர்கள் மிகுந்த அநேக ஊர்களின் பங்குகளுக்குத் தலைமையாக இருந்ததின்நிமித்தம் அங்கே இருந்த ஆலயம் பெரியதாகவும், அதற்குத் தக்கபடி விசித்திர வேலைப்பாடுகள் பொருந்திய பெரிய கதவு அமைக்கப்பட்டதாகவும் இருந்தது. ஆங்கிலேய அரசாட்சி ஏற்படுவதற்கு



முன் தென் இந்தியாவில் அடிக்கடி வேத கலாபனைகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தனவென்று சகலரும் அறிவார்கள். அப்படி ஏற்பட்ட ஓர் கலாபனையில் சத்திய வேத விரோதிகள் துர்ப்பசாசினால் ஏவப்பட்டவர்களாய், கருமுத்தம்பட்டியிலிருந்த ஆலயத்தை இடித்து நாசம்பண்ணி, கிறீஸ்துவர்களுக்கும் பலவித இம்சைகளைச் செய்தார்கள். இது போதாது என்றாற்போல், தங்களால் இடிபட்ட ஆலயத்திலிருந்த கதவின் அணியலங்காரத்தைப்பற்றி, தங்களுடைய பேய்க் கோவிலுக்கு அதை உபயோகப்படுத்த யோசித்து, அக் கதவைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். பிறகு தங்களுடைய பொய்த் தேவர்களுக்கு ஒரு கோவிலைக் கட்டிமுடித்து, தாங்கள் கொண்டு வந்திருந்த கதவை அக்கோவிலுக்கு அமைத்துவிட்டு, வெகு கப்பீரத்தோடு தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்குமுன் அக்கதவைச் சாத்தும்படி பூசாரிக்குச் சொன்னார்கள். ஆனால் சர்வேசுரனுடைய வல்லமை அப்போது பகிரங்கமாய் வெளியாக அவருடைய தண்டனை அவர்களுக்குக் கிடைத்தது. அதெப்படியென்றால் பூசாரி ஜனங்கள் சொற்படி கதவைச் சாத்தும்படி அதை இழுத்தான். ஆ! என்ன அதிசயம்! அவன் அதை அசைக்க முடியவில்லை. இதைக் கண்ட பலசாலிகளான அநேகர் கூடி அதை இழுத்துப் பார்த்தார்கள். அவர்களாலும் முடியவில்லை. இதைக் கண்டவர்கள் அனைவரும் மலைத்து நின்றார்கள். பின்னும் யோசனைசெய்து பலமான கயிறுகளை அக்கதவுக்குக் கட்டி இழுத்துப் பார்த்தும் கதவு அசையாமல் நின்றது. இதுவுமன்றி அவ்விடத்தில் தங்களுடைய பேயாராதனைச் சடங்குகளையும் நடத்தக் கூடாதவர்களாய்ப் போனார்கள். இதன் பேரில், கிறீஸ்துவர்களிடமிருந்து தாங்கள் கொண்டுபோன கதவை மறுபடியும் கொடுத்துவிடுவதாகவும், அவர்கள் வந்து அதை எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். கிறீஸ்துவர்களோ அது தங்களுக்கு வேண்டியதில்லையென்று சொல்லிவிட்டார்கள். அஞ்ஞானிகள் தங்களுடைய அக்கிரமத்துக்கு ஒருவிதமாய்த் தண்டிக்கப்பட்டவர்களாகி, தாங்கள் கட்டின அக்கோவிலை அப்படியே விட்டுவிட்டார்கள். இந்தக் கோவில் இன்னம் பாழடைந்து இருப்பதையும், அஞ்ஞானிகள் பலாத்காரமாய்க் கொண்டுபோன கதவும் இன்னம் சாத்தப்படாமல் இருப்பதையும் கருமுத்தம்பட்டிக்கு வடக்கில் நாலைந்து மைல் தூரத்திலுள்ள பூலுவபாளையம் என்னும் ஊரில் பார்க்கலாம்.

(கேள்வியுற்றோன்.)

## Here and There
## நானா சங்கதி.

நவம்பர்-மீ 22-உ புதுவையிலும் அதின் சுற்றுப் புறங்களிலும் அடித்த பயங்கரமான புயல் காற்றினால் அநேக உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாயிற்று. புதுவையில் 304 பேரும், திண்டிவனம் தாலூகாவில் 583 பேரும், விழுப்புரம் தாலூகாவில் 328 பேரும் இறந்துபோனார்கள்.

ஐரோப்பிய யுத்தம் முடிந்து சமாதானமானபிறகு பிரான்ஸ் தேசத்திலுள்ள சகல மேற்றிராணிமாரும் கத்தோலிக் கிறீஸ்துவர்கள் எல்லோருடனும் சேர்ந்து லூர்து நகருக்குச் சென்று வேண்டுதல் செய்வதாக ஒரு நிருபம் எழுதியிருக்கிறார்கள்.

பிரான்ஸ் தேசத்தில் காயப்பட்ட இங்கிலீஷ் போர்வீரரை அன்போடு ஆதரித்துவரும் பிறசிநேகக் கன்னியாஸ்திரிகளை நமது சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் கண்டு சந்தோஷப்பட்டு அவர்களுடைய சிரேஷ்ட தாயாருக்கு நன்றியறிந்த வந்தனம் செலுத்தினார்.

ஆஸ்திரியா தேசத்தின் கத்தோலிக் சக்கரவர்த்தியாகிய பிரான்ஸிஸ் ஜோசப் நவம்பர்-மீ 21-உ இறந்துபோக, சார்லஸ் என்பவர் அவருக்குப் பதிலாய்ச் சிம்மாசனம் ஏறினார்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுதேச குருக்களுக்கு டிசம்பர்-மீ 6-உ முதல் 11-உ வரைக்கும் தியான ஒடுக்கம் நடந்தது. ஷை ஞான ஒடுக்கத்தின்போது சங். வியயார் (Rev. Fr. F. X. Vieillard) சுவாமியார் தியானப் பிரசங்கம் செய்தார்.

ஷை மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுதேச கன்னியாஸ்திரிகள் டிசம்பர்-மீ 13-உ முதல் 17-உ வரையில் ஞான ஒடுக்கம் செய்தார்கள். தியானப் பிரசங்கங்கள் சங். பெஷு (Rev. Fr. L. Bechu) சுவாமியாரால் செய்யப்பட்டன.

(Mgr. Zaleski) ஜெலெஸ்கி ஆண்டவருக்குப் பதிலாக, (Mgr. Biondi) பியாண்டி ஆண்டவர் பாப்பானவர் ஸ்தானபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சங். ஞானப்பிரகாசநாதர் சுவாமியார் வில்லிங்ட்டன், கோத்தகிரி, விசாரணையில் (Rev. Fr. Morin) சங். மோரின் சுவாமியாருக்கு உதவி சுவாமியாராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---


# The St. Anthony's Messenger.
# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. February 1917. No. 2.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 2.


## Conversion of India (Continued)
## நமது சொந்த நாடாகிய சிந்து தேசம் மனந்திரும்ப நாம் செய்யவேண்டியதென்ன?—(தொடர்ச்சி)

பசியால் வருந்துகிறவர்களுக்கும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கும் அன்னவஸ்திரம் முதலியவை கொடுத்து ஆதரிக்கவேண்டும். துன்பத்தில் அகப்பட்டுத் தவிப்பவர்களுக்குத் தேறுதல் சொல்லவேண்டும். அஞ்ஞானியொருவன் நமது வேதத்தின்மட்டில் மதிப்புள்ளவனாய் இருந்தால் அவன் மதிப்பு நாளுக்குநாள் அதிகரிக்கவேண்டிய எத்தனங்களைப் பிரயோகிக்கவேண்டும். உங்கள் வீட்டில் இருக்கும் வேலைக்காரர், வேலைக்காரிகள் அஞ்ஞானிகளாய் இருந்தால் அவர்களைப் பட்சமாய் நடத்தி அவர்களை மனந்திருப்பவேண்டும். சுவாமியுடைய ஆசீர்வாதத்தால் உங்களுக்குக் கொஞ்சம் சொத்து இருந்தால், பொருளுதவி செய்து அஞ்ஞானிகளை மனந்திருப்ப எத்தனையோ வழிகள் உண்டு. உலகம் எங்கும் உள்ள நல்ல கிறீஸ்துவர்கள் பாலர் சபைக்கும், விசுவாசப் பரம்புதல் சபைக்கும் தர்மம்செய்து வருகிறார்கள். இந்தத் தருமத்தினால் அல்லவ -மது மேற்றிராசனத்திலுமுள்ள நூற்றுக்கணக்கான அநாதைப்பிள்ளைகளை ஆதரித்து வருகிறோம். அஞ்ஞானத்திலிருந்து எத்தனையோ ஆயிரம் அநாதைப்பிள்ளைகளும், ஜனங்களும் இச்சபைகளினால் உலகமெங்கும் மனந்திரும்பி வருகிறார்கள். ஓ! இது எவ்வளவு பாக்கியம்! பல துளி பெருவெள்ளம் என்பதுபோல், உங்களால் கூடிய உதவியை இச்சபைகளுக்காக உங்கள் பங்கு சுவாமியாரிடம்

கொடுத்துவந்தால் எவ்வளவோ பெரிய தர்மம் உங்களுக்கு! நீங்கள் கற்றறிந்தவர்களாய் இருந்தால், நமது வேதத்தைப் பற்றிக் கேவலமாய் நினைக்கும் அஞ்ஞானிகளுக்கும் மற்றவர்களுக்கும் சத்தியத்தை விளக்கிக் காட்டுங்கள். நீங்கள் அரைகுறையாய்ப் படித்திருந்தால், இதற்கென்று பிரசுரமாய் இருக்கும் துண்டுப் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வாங்கி அவர்களுக்கு வாசிக்கக்கொடுங்கள். இவைபோன்ற வழிபாடுகளையெல்லாம் நாம் சமயோஜிதமாய்ச் செய்து வந்தால், அவர்களுக்கு நமது வேதத்தின்மட்டில் சார்பு உண்டாகி, உடனே மனந்திரும்பாவிட்டாலும், சாகிற சமயத்திலாவது ஒருநாள் மனந்திரும்புவார்கள்.

கிறீஸ்துவ சகோதரர்களே! இந்தச் சகல வழிபாடுகளுக்கும் மேலாக நீங்கள் உத்தம கிறீஸ்துவர்களாக நடந்து வாருங்கள். அஞ்ஞான சடங்கு சாஸ்திரங்களையும், வீண் எண்ணங்களையும் விட்டுவிடவேண்டும். உங்கள் துர்மாதிரிகையால் சத்திய வேதத்தின் மகிமையைப் பங்கப்படுத்தாதிருங்கள். இதுவே நாம் செய்யவேண்டிய பிரதான காரியம். இப்படியே நாம் செய்து வருவோமானால் நமது மெய்யான பிறசிநேகத்தைச் சர்வேசுரன் பார்த்து, நம்மை ஆசீர்வதிப்பதுமல்லாமல், அஞ்ஞானிகள்மீதும் இரக்கம் வைத்து, அவர்களை வேதப் பிரகாசத்திற்கும், விசுவாசத்தின் ஒற்றுமைக்கும் அழைத்துக்கூட்டிவந்து சேர்ப்பார். அப்போது நமது தேசத்தாரெல்லாருக்கும் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும். ஆமென்.

(உள்ளதுசொல்வோன்)

## A Victim of human respect

### முகத்தாட்சணியத்தின் கேடு.

சில வருஷங்களுக்குமுந்தி, அந்தோனி என்னும் கிறீஸ்துவன் ஒருவன் ஒரு உத்தியோகத்திற்காகக் கலெக்டர் துரையிடம் போய் விண்ணப்பம் செய்துகொண்டான். மேற்படி உத்தியோகத்திற்காக விண்ணப்பம் செய்துகொண்ட பத்துப் பன்னிரண்டு அஞ்ஞானிகளும் அந்தோனியோடுகூடக் கலெக்டராபீசுக்குப் பக்கத்தில் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்



பொழுது, தான் மாத்திரம் கிறீஸ்துவனாய் இருப்பதினால் மற்ற அஞ்ஞானிகள் கேலி பரிகாசம் செய்வார்களென்றெண்ணி முகத்தாட்சணியத்தினிமித்தம் அந்தோனி தன்நெற்றியில் ஒரு பொட்டு வைத்துக்கொண்டான். சற்றுநேரத்திற்குப்பிறகு கலெக்டர்துரை வெளியேவந்து முதலில் அந்தோனி என்பவனைக் கூப்பிட்டார். அவன் அவரண்டை சென்று மரியாதையோடு வந்தனம் செய்தான். அவர் அவனை நோக்கி, "நீ நெற்றியில் என்ன வைத்திருக்கிறாய்? நீ கிறீஸ்துவனென்று நினைத்து, இந்த உத்தியோகத்தை உனக்குக் கொடுக்கலாமென்று யோசித்தேன்" என்றார். அதற்கு அந்தோனி, "ஸார்! நான் கிறீஸ்துவன்தான். ஆனால் அஞ்ஞானிகள் என்னைக் கேலிபண்ணுவார்களென்று பயந்து, இந்தப் பொட்டு வைத்துக்கொண்டேன்" என்றான். அதைக்கேட்டு, துரை கோபித்துக்கொண்டு, "ஓ ஹோ! நீ அப்படி மனிதருக்குப் பயப்பட்டு வேதத்துக்கு துரோகம் செய்வாயானால் நீ எப்படிச் சர்க்கார் உத்தியோகத்தைப் பிரமாணிக்கமாய்ச் செய்ய முடியும்? எனக்கு வேண்டிய உத்தியோகஸ்தன் நீயல்ல போ" என்றுசொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

பரலோக எஜமானுக்குக் கீழ்ப்படிந்து சத்திய வேதத்திற்குப் பிரமாணிக்கமாய் நடப்பவர்கள் பூலோக எஜமானர்களுக்கும் பிரமாணிக்கமாய் ஊழியம் செய்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

(ஞானி.)

## Letter to a Friend

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

மனிதனுக்குச் சரீரம் மாத்திரமல்ல. ஆத்துமமும் ஒன்று உண்டு என்பதைச் சகலரும் அறிவார்கள். ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோனாலோ, சரீரம் உடனே உயிரற்றுச் சீக்கிரத்தில் அழியத்தொடங்கிவிடும். ஆனால் ஆத்துமம் அழியாத அரூபியான ஒரு வஸ்து. சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிறகும் அது ஜீவிக்கும். நீ செத்த பிற்பாடு, உன் சரீரத்தை மண்ணுக்கு அல்லது நெருப்புக்கு இரையாய்ப் போட்டுவிடு

வார்கள். ஆனால், அப்போது உன்னுடைய ஆத்துமம் எங்கே போகும் என்பதைப்பற்றி நீ உயிரோடு இருக்கும்போதே கவனித்து அவ்விஷயத்தை ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும். தன் எஜமானுடைய அலுவலைப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட வேலைக்காரன் அவ்வேலை முடிந்ததும் தன் எஜமானிடம் திரும்பிச் சென்று நடந்த சம்பவங்களை அறிவிக்குமாப்போல், சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆத்துமம் தன் எஜமானாகிய கடவுள் சமுகத்தில் போய்த் தனது ஜீவியத்தைப் பற்றிக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

மனிதன் இவ்வுலகத்தில் எந்த அலுவலுக்காக உண்டாக்கப்பட்டானோ அதைப்பற்றியே உன்னிடம் கணக்குக் கேட்பார். மண்ணோடு மண்ணாய்ப் போகிற உன் சரீரத்தை எப்படிப் பேணிவைத்தாய் என்றல்ல; ஆனால் உன் அழியாத ஆத்துமத்தை எத்தன்மையான வழியில் நடத்திவந்தாய் என்றே கேட்பார். உன் ஆஸ்தி, மகிமை, கீர்த்தியைப்பற்றியல்ல; ஆனால் மெய்யான தேவனை அறிந்து அவரை வணங்கி வந்தாயோ, அவரால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியவேதத்தின் கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தாயோ? என்பதைப் பற்றியே கேட்பார். நீ இவ்வுலகத்தில்செய்த புண்ணியமும் பாவமுந்தான் மறு உலகத்துக்கு உன்னைப் பின்தொடர்ந்து வரும். அவைகளுக் கேற்றபடியே மோட்சம் அல்லது நரகம் உனக்குக் கிடைக்கும்.

ஆதலால் பிரியமுள்ள சிநேகிதனே, உன் சரீரத்தை மாத்திரம் கவனித்து நாட்போக்காமல் உன் ஆத்துமத்தைப்பற்றியும் சற்றே சிந்தித்துக்கொள். உன்னுடைய மறுமையின் ஜீவியத்தைப்பற்றிச் சற்றாகிலும் நினைவாயிரு. சத்தியவேதத்தைப் பற்றியும், மெய்யான தேவனைப்பற்றியும் நீ அறிந்திருந்தும் உன் உற்றார் உறவினருடைய நட்புக்காகவும், உலக மதிப்புக்காகவும் ஆசைப்பட்டு, உன் ஆத்துமத்தை நல் வழியில் விடாமல் வைத்துக்கொண்டிருந்தால், அதை நித்தியக் கேட்டுக்கல்லோ ஆளாக்கிக்கொள்வாய்? இது புத்தியா? உன் மெய்யான நன்மையை விரும்பினால் உன் இன ஜனத்தின் பகையால் வருந்தவேண்டியிருந்தாலும் தைரியமாய்ச் சத்தியவேதத்தைக் கைக்கொண்டு, மெய்யான தேவனை வணங்கி ஒழுகுவாய். மனிதனானவன் உலகமெல்லாம் தனக்காக்கிக்கொண்டாலும் தன் ஆத்துமத்தைக் கேட்டுக்குள்ளாக்கிக் கொள்வானாகில் அவனுக்கு வரும் பிரயோஜனம் என்ன?



சினேகிதனே, நீ இப்போது விட்டுப் பிரியப் பயப்படுகிற உன் உற்றார், உறவினரும் பெண்ஜாதி பிள்ளைகளும் உன்னோடு வரமாட்டார்கள். நீ தனியாய்த்தான் உன்னைப் படைத்தவருடைய சமுகத்தில் போய் நிற்கவேண்டும். ஆதலால் நீ உன் நெஞ்சில் கைவைத்து, "நான் என் மனச்சாட்சியின்படி என்னைப் படைத்த மெய்யான கடவுளுடைய ஓரே மெய்யான வேதத்தைக் கைக்கொண்டு நடக்கிறேனோ? அல்லது மனுஷருக்கு அஞ்சிப் பொய்யான வேதத்தில் நிலைக்கொள்ளுகிறேனோ?" என்று யோசித்துப் பார்க்கக்கடவாய்.

இப்படிக்கு,

உன் ஆத்தும நன்மையைக்கோரும் சிநேகிதன்.

---

## A fat rat.
## கொழுத்த எலி.

ஓர் கைத்தொழிலாளி ஒரு நாள் காலை போஜன நேரத்தில் தன் மனைவியிடம் அதற்கு முந்தின இரவு தான் ஒரு கனவு கண்டதாகவும், அதன் அர்த்தம் என்னவாயிருக்குமென்று தான் யோசனை பண்ணுவதாகவும் சொன்னான். அந்தக்கனவின் விவரம் என்னவென்று மனைவி கேட்க, அவன்: "நாலு எலிகள் என்னை அணுகி வருவதைக் கண்டேன். அவைகளில் முதல் எலி பருத்துக் கொழுத்திருந்தது. இரண்டாவதும் மூன்றாவதுமான எலிகள் இரண்டும் மெத்தச் சிறுத்தும் மெலிந்தும் இருந்தன. நான்காவது எலியோ கண்தெரியாத குருட்டெலியாய் இருந்தது" என்றான். மனைவியோ அதற்கு அர்த்தம் சொல்லத்தெரியாது சும்மா இருக்கும்போது, பத்து வயதுள்ள சிறுவனாகிய அவர்களுடைய ஏக குமாரன் தன் தகப்பனைப்பார்த்து, "அந்தக் கனவின் அர்த்தம் எனக்குத் தெரியும். நான் சொல்லலாமா?" என்றான். தகப்பன் இதற்குச் சம்மதிக்கவே, சிறுவன் அவனை நோக்கி, "நீங்கள் நாள்தோறும் இந்தச் சந்துமுனையிலிருக்கிற சாராயக் கடைக்காரனுக்கு அவ்வளவு காசைக் கொண்டுபோய்க் கொட்டிக் கொடுக்கிறீர்களே! அவனே அந்தக் கொழுத்த எலி. இளைத்த எலிகள் இரண்டும் என் தாயாரும் நானுந்தான். குருட்டு எலி நீங்களே அப்பா" என்று சொன்னான்.

(விவேகி)

## The power of the holy names "Jesus and Mary"
## "சேசு மரியாயி" என்னும் திருநாமங்களின் வல்லமை.

நமது தேசமாகிய இந்தியாவில் ஆதியிலிருந்து நடந்து
வரும் கைத்தொழில்களில் நெசவுத் தொழில் ஒன்று என்பது
எல்லோருக்கும் தெரிந்த விஷயம். · இப்பொழுது இத்தொழி
லுக்கு வேண்டிய நூலானது நீராவியின் சக்தியால் நடத்தப்
பட்டுவரும் யந்திர சாலைகளில் நூற்கப்பட்டு நெசவுத் தொழி
லாளிகளுக்கு விற்கப்பட்டு வருகின்றது. ஆனால், மேற்படி
நீராவி யந்திரங்கள் நமது தேசத்திற்கு வருவதற்குமுன்,
நேசவுத் தொழிலுக்கு வேண்டிய நூல் எப்படிக் கிடைத்தது
என்றால், குடியானவர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் "இராட்
டை" என்று சொல்லப்பட்ட திரிகை யந்திரத்தினால் பருத்
தியை அரைத்துப் பஞ்சையெடுத்து அப்பஞ்சைத் தேவை
யுள்ளவர்களுக்குக் கிரயஞ் செய்வார்கள். மேற்படி தொழி
லாளிகள் இதிலிருந்து தங்களுக்கு வேண்டிய நூல் நூற்றுக்
கொள்வார்கள்.

இந்த விதமாய் நம் மேற்றிராசனத்தில் பஞ்சு விற்றுக்
காலக்ஷேபம் செய்துவந்த ஓர் பூர்வீக கிறீஸ்துவ கிராம
முண்டு. இக்கிராமத்தில் ஓர் விதவை இருந்தாள். இவள்
உத்தம கிறீஸ்துவ தாய் தகப்பனிடம் பிறந்தவளாயும், உறுதி
யான விசுவாசம் உடையவளாயும் இருந்தாள். இவ்வுத்தமி
சொத்து இல்லாத ஏழையாயிருந்ததினால் பருத்தி அரைத்துப்
பஞ்சு விற்று அதனால் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு கால
க்ஷேபம் செய்துகொண்டு வந்தாள். இஃது இப்படியிருக்க,
ஓர் நாள் ஒரு நெசவுத் தொழில்காரன் அவ்வூருக்கு வந்து
அவள் வீட்டண்டை, "அம்மா! பஞ்சு இருக்கிறதா? பஞ்சு,
பஞ்சு" என்று கூவ, இதைக் கேட்ட மேற்படி பெண் அப்
போது தன்னிடத்திலிருந்த பஞ்சை விற்கலாமென்று நினை
த்து, அவனைக் கூப்பிட்டு, உட்காரச்சொல்லி விலையைத் தீர்மா
னித்து, தன் பஞ்சைக் கொண்டுவந்து வைத்து நிறுக்கச்
சொன்னாள். பஞ்சோ வெகு நல்லதாய் இருந்தது. கிரயஞ்
செய்பவனோ மிகவும் ஏழை. ஆகையால் மேற்படியான்
தனக்குத் தெரிந்த மாந்திரிய வல்லமையினால் அவளை ஏமாற்
றிச் சொற்ப கிரயத்திற்கு அப்பஞ்சு முழுவதையும் வாங்கி
விட வேண்டுமென்று நினைத்து, அதற்குச் சாத்தானுடைய
உதவியை நாடித் தன்னுடைய தராசில் பஞ்சை எடுத்து
வைக்கச் சொன்னான். அப்பெண்ணும் அவன் கேட்டபிர



காரமே செய்தாள். ஆனால் பசாசின் சாமர்த்தியத்தினால்,
எடை கம்மியாகக் கண்டது. இன்னும் மீதியிருந்த பஞ்சை
யெல்லாம் வைத்தும் அநுகூலப்படவில்லை. ஏற்கனவே சுமார்
இவ்வளவு நிறை இருக்குமென்று தெரிந்திருந்த இந்த விதவை
இதைப் பார்த்து அடக்க முடியாத துக்கங்கொண்டவளாய்,
"சேசு மரியே! நான் என்ன செய்வேன்!" என்று உரக்கக்
கதறினாள். இவள் இப்படிச் சொன்னவுடனே பஞ்சு இருந்த
தட்டானது திடீரென்று கீழே வந்துவிட்டது. பிறகு அதி
லிருந்து பஞ்சை எடுக்க எடுக்கத் தட்டானது கீழேயே இருந்
தது. கடைசியாக எடைக் கல்லுக்குச் சரியான பஞ்சு ஏற்
பட்டவுடனே தட்டுகள் இரண்டும் சமமாகி விட்டன. பிறகு
மீதியிருந்த பஞ்சையும் எடைபோட்டுக்கொடுத்தாள்.

இப்புதுமையைக் கண்ட நெசவுத் தொழில்காரன் அதிக
ஆச்சரியப்பட்டு, தான் செய்த காரியத்தை நினைத்து வெட்கப்
பட்டான். ஆனால் அவன் அப்போது ஒன்றும் பேசாமல்
தன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த பிறகு தன் மாந்திரியம்
பலிக்காமல் போனதைப்பற்றி ஆலோசிக்க, அதன் பயனாக
அந்த விதவை சொன்ன வார்த்தைகள் தன்னுடைய மாந்திரி
யத்தைவிட அதிக சக்தியுள்ளவைகள் என்று உணர்ந்தான்.

சில தினங்களுக்குள்ளாக மறுபடியும் பஞ்சு வாங்க
வந்தபொழுது அவ்விதவையின் வீட்டிற்குப் போய் அவளைப்
பார்த்து, "அம்மா! நீங்கள் அன்றையத்தினம் ஏதோ
இரண்டு வார்த்தைகளைச் சொன்னீர்களே! அவைகளை என
க்கு இப்போது தெளிவாகச் சொல்லவேண்டும்" என்று
கேட்டான். விதவையும் சந்தோஷத்துடன் தனக்குத் தெரி
ந்த மட்டில் நம் வேதத்தின் உண்மையையும், அன்று தான்
உச்சரித்த வார்த்தைகளின் அர்த்தத்தையும் விளக்கச் சொன்
னாள். இவற்றையெல்லாம் கேட்ட நெசவுத் தொழில்காரன்,
தீர யோசித்ததுமன்றி, பிறகு தேவருளினால் கத்தோலிக்கு
வேதமே மெய்யான வேதமென்று உணர்ந்து ஞான தீக்ஷை
பெற்றதாகவும், அவனைப்பற்றி இன்னும் அநேகர் திருச்சபை
யின் பிள்ளைகளானதாகவும் மேற்படி விதவை குடியிருந்த
ஊரில் பாரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகின்றது.

கேட்டீர்களோ கத்தோலிக்கு சகோதரர்களே! நாமும்
நமக்கு வரும் சோதனைகளிலும், ஆபத்துக் காலங்களிலும்
"சேசு மரியாயி" என்னும் திரு நாமங்களைப் பக்தியோடு உச்
சரிப்போமேயானால் நமக்கு வேண்டிய சகாயங்களை அடை
வோம்.

(கேள்வியுற்றோன்.)

## Here and There.
### நானா சங்கதிகள்.

ஜெர்மானியர் தங்கள் நிலைமை பரிதாபத்துக்குரிய அந்தஸ்துக்கு வந்து விட்டதைப்பற்றி நேசக்கட்சியாரைச் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று கேட்டார்கள். அதற்கு நேசக் கட்சியார், " இது வரையில் ஜெர்மானியர் செய்த அநியாய அக்கிரமங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும் " என்றும், பின்னும் " இனிமேல் இப்பேர்ப்பட்ட சண்டை செய்யாதபடிக்குத் தகுந்த ஜாமீன் கொடுப்பதாய்ச் சம்மதித்தாலொழியச் சமாதானம் செய்து கொள்வதில்லை " என்றும் பதில் சொல்லி விட்டார்கள்.

கடந்த டிசம்பர்-மீ 30-உ மைலாப்பூரில் தென் இந்தியாவின் கத்தோலிக் இந்தியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடந்தது. இந்தச் சங்கத்தின் கருத்து என்னவென்றால், இந்தியாவிலுள்ள கத்தோலிக் கிறீஸ்துவர்களின் ஒற்றுமையையும், நன்மைச் சுதந்தரங்களையும் காப்பாற்றி விருத்தி செய்வது தான்.

கோயமுத்தூர் போர்டிங் மடத்தில் புதிதாய்க் கட்டப்பட்டுள்ள நேர்த்தியான கட்டடத்தை நமது கனம் தங்கிய மேற்றிராணியார் ஜனவரி-மீ 9-உ மந்திரித்தார். இப்படி அநுகூலமடைந்துவரும் ஷை போர்டிங் மடத்தில் அநேக கிறீஸ்துவ மாணுக்கர் படித்து, விசுவாசத்தில் வளர்ந்து திடப்படும்படியாகச் சர்வேசுரன் கிருபை செய்வாராக.

கோயமுத்தூரில் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட திரு இருதய சந்நியாச சபையில் சேர்ந்த மூன்று பேர் இப்போது கோயமுத்தூர் அர்ச். சூசையப்பர் தொழிற்சாலையில் மெத்தவும் உதவியாயிருக்கிறார்கள்.

தற்காலம் குன்னூரிலும், அடுத்த கிராமங்களிலும் பிளேக் வியாதி ஆரம்பித்திருக்கிறது. ஷை வியாதி பரவாமல் இருக்கும்படி வீடுகளைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டியதும் தவிர எலிகளைக் கொல்லவும் வேண்டியது.

Rev. Br. Forde (போர்ட்) குன்னூர் அர்ச். சூசையப்பர் கலாசாலை தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். Rev. Br. Bergin முஸ்சூரிக்குப் போகிறார். ஷத்தையில் பெபுருவரி-மீ 11-ம் தேதி அர்ச். மோக்ஷ இராக்கினிமாதாக் கோவிலில் லூர்துமாதாத் திருநாள் ஆடம்பரமாய்க் கொண்டாடப்படும்.

---


# The St. Anthony's Messenger.
# அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. III.** **March 1917.** **No. 3.**

**புத்தகம் III.]** FIDES AC ROBUR. **[நம்பர் 3.**


## Catholic Truth Society.
### கத்தோலிக் சத்திய சங்கம்.

தென்னிந்தியாவிலுள்ள மேற்றிராணிமார்கள் கூடி ஒன்று சேர்ந்து பெங்களூரில் நடத்திய சங்கத்தில் கத்தோலிக் சத்திய சங்கம் ஒன்று நமது நாட்டில் ஏற்படுத்த வேணுமென்று தீர்மானித்ததைப்பற்றி மெத்தவும் சந்தோஷப்படுகிறோம்.

இந்தச் சங்கத்தின் கருத்து என்னவென்றால் நல்ல புஸ்தகங்களையும், நல்ல பத்திரிகைகளையும் பரவச் செய்வதுதான். மெய்யாகவே இவ்வித நற்கிரிகை நமது நாட்களில் மெத்தவும் அவசரமாயிருக்கிறது. சத்தியவேத படிப்பினை அடங்கிய புஸ்தகங்களும், மெய்யான கல்வி சாஸ்திரம் அடங்கிய புஸ்தகங்கள், பத்திரிகைகளும் ஆத்துமத்துக்கு மிகவும் பிரயோசனம் என்பதற்குச் சந்தேகமில்லை.

நல்ல வாசகம் ஆத்துமத்துக்கு ஞான வெளிச்சமும், பலம் கொடுக்கும் அன்னமும்போல் இருக்கிறதுமல்லாமல், புத்தியை விருத்தி செய்வதற்கும், அதற்குத் தெளிவு கொடுப்பதற்கும், நல்ல உணர்ச்சிகளால் அதை அலங்கரிப்பதற்கும் அதிகமாய் உதவுகின்றது.

ஆனால், நல்ல வாசகத்தினால் எவ்வளவு நன்மை விளையக்கூடுமோ, அவ்வளவு தின்மை கெட்ட வாசகத்தினால் விளையுமென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. கெட்ட புஸ்தகங்களிலும், பத்திரிகைகளிலும் அடங்கியுள்ள துர்ப்போதனை ஆத்துமத்துக்கும் புத்திக்கும் கேடு வருவிக்கும் நஞ்சுபோலிருக்கும்.

கெட்ட வாசகமாகிய கெட்ட புஸ்தகங்களிலும், கெட்ட பத்திரிகைகளிலும் உள்ள நஞ்சு இரண்டுவகைப்படும். சிலவற்றிலுள்ள நஞ்சு சத்தியவேதத்திற்கும், சிலவற்றிலுள்ள நஞ்சு, நல்லொழுக்கத்திற்கும் விரோதமாய் இருக்கும். சத்தியவேதத்துக்கு விரோதமாய் இருக்கும் புஸ்தகங்களும், பத்திரி

கைகளும் சத்தியத்தைப் பொய்யாகவும், பொய்யைச் சத்தியமாகவும் புரட்டிப் புத்தியை மயக்கிக் கெடுக்கும்.

நல்லொழுக்கத்திற்கு விரோதமான புஸ்தகங்களும் பத்திரிகைகளுமோவெனில், காமக் கதைகளையும், சிற்றின்ப ஆசையை மூட்டும் துர்ப்போதனைகளையும் சொல்லி இருதயத்தைக் கெடுத்து வாலிபர்களையும் மற்றவர்களையும் மயக்கிப் பற்பல பாவங்களுக்கு உள்ளாக்குகின்றது.

சில புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் சத்திய வேதத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் விரோதமான இரண்டுவகை விஷமும் மறைந்து கலந்திருக்கின்றது. ஆகையால், நல்ல தாயாகிய திருச்சபை தன் பிள்ளைகளுக்கு மோசம் வராதபடிக்குக் கெட்ட புஸ்தகங்களையும் கெட்ட பத்திரிகைகளையும் அறவே விலக்குகின்றது.

சத்திய வேதத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும் விரோதமான சகல புஸ்தகங்களும், பத்திரிகைகளும் அந்த விலக்கத்திற்கு உட்பட்டவைகளே. ஆதலால்,

1-வது: சிற்றின்பக் கதை, பாட்டு, நாடகம் முதலிய நல்லொழுக்கத்திற்கு விரோதமான சகல புஸ்தகங்களும், பத்திரிகைகளும்,

2-வது: பதிதர்களுடைய துர்ப்போதனைகளடங்கிய சகல புஸ்தகங்களும், பத்திரிகைகளும்,

3-வது: சூனிய, சகுனசாஸ்திர, ஜோசியப்புஸ்தகங்களும்,

4-வது: அஞ்ஞானமத துர்ப்போதனையும், பொய்த்தேவர்களின் வணக்க தோத்திரமுள்ள புஸ்தகங்களும் பத்திரிகைகளும் திருச்சபையால் வெகு கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கின்றன.

முற்காலத்தில் சில கிறீஸ்துவர்கள் அஞ்ஞான, பதித புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதை அர்ச். பாப்பானவர் அறிந்து அவற்றை வாசிப்பதைக் கண்டிப்பாய் விலக்கினதுமன்றி, குருக்களுடைய உத்தரவு இல்லாமல் அவைகளை வாசிப்பவர்களையும், தங்கள் வசத்தில் அவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களையும் திருச்சபைக்குப் புறம்பாக்குகிற சாபனை இட்டார்.

ஆகையால் கடந்த ஜனவரி மாதத்தில் பெங்களூரில் நடந்த சங்கத்தில் மேற்றிராணிமார்கள் ஒன்று சேர்ந்து சத்திய வேதத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும் விரோதமான எவ்வித புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் கிறீஸ்துவர்கள் கண்டிப்பாய் வாசிக்கக்கூடாதென்று ஞாபகப்படுத்தியது வெகு நியாயமே.

(சத்தியநேசன்.)

---



## The Priest and the Holy Child.
## குருவானவரும், திவ்விய குழந்தையும்.

முன் ஒரு காலத்தில் பிரொஜில் என்னும் குருவானவர் திவ்விய நற்கருணையிலிருக்கிற சேசுநாதருடைய திருச் சரீரத்தையும், திரு இரத்தத்தையும் தமது கண்களால் பார்க்க வேண்டுமென்று வெகுவாய் ஆசைப்பட்டார்.

ஒருநாள் அவர் திவ்வியபூசை செய்யும்பொழுது தேவ வசீகரத்திற்குப் பிறகு, "ஆண்டவரே! உம்மை நான் என் கண்களால் பார்க்கும்படி கிருபை செய்தருளும்" என்று வேண்டிக்கொண்டார். அவ்வாறே, சேசுநாதர் அந்தப் பக்தியுள்ள குருவானவருடைய மன்றாட்டைக் கேட்டுச் சொல்லிலடங்காத அழகிய சிறு குழந்தை ரூபமாய் அப்பீடத்தின் மேல் அவருக்குத் தரிசனையாகி, தம்மை அவருக்குக் காண்பிக்கச் சித்தமானார். குருவானவர் மிகுந்த அன்போடு அவரை அணைத்து முத்தமிட்டு ஸ்தோத்திரம் செய்தபிறகு, அவர் மன்றாடின பிரகாரம் திவ்விய நற்கருணையில் சேசுநாதர் தம்மை மறைத்தருளினார்.

நாம் நமது சரீரக் கண்ணாலே சேசுநாதரைத் தரிசிக்காதே போனாலும், நமது விசுவாசக் கண்ணாலே அவரைக் கண்டு திவ்விய நற்கருணையில் மெய்யாகவே அவர் எழுந்தருளியிருக்கிறாரென்று உறுதியாக விசுவசித்து அடிக்கடி திவ்விய நன்மை வாங்குவோமாக.

(ஞானி.)

---

## Lenten Rules.
## தபசுகாலத்தில் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

"தவஞ் செய்யாதேபோனால் எல்லாரும் கெட்டுப்போவீர்கள்."

(அர்ச். லூக்கா. 13-ம் அதி. 3-ம் வச.)

1. ஒருசந்தி நாட்களில் முட்டை, பால், வெண்ணெய், தயிர், நெய் முதலியவற்றை உபயோகித்துக் கொள்ளலாமாயினும் பெரிய வெள்ளிக்கிழமையில் அவற்றை உபயோகிக்கக் கூடாது.

2. தபசுகாலத்தில் வரும் சகல புதன், வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையிலும் மாமிசம் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது.

3. திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளிலும் பெரிய சனிக்கிழமையைத் தவிர மற்ற சனிக்கிழமைகளிலும், பிரதான போஜனத்தின்போது ஒருவேளை மாத்திரம் மாமிசம் சேர்த்துக்கொள்ளலாம்.

4. ஞாயிற்றுக்கிழமைகளில் எந்தப் போஜன சமயத்திலும் மாமிசம் சேர்த்துக்கொள்ளலாம்.

5. ஞாயிற்றுக்கிழமைகளில் முதலாய் ஒரே போஜன நேரத்தில் மாமிசமும் மீனும் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

6. ஏழு வயதுக்கு மேற்பட்டவர்கள் யாவரும் மேலே குறிக்கப்பட்டிருக்கும் சுத்த போஜன ஒழுங்குகளை அனுசரிக்க வேண்டியது.

7. இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஸ்திரி பூமான்கள் அனைவரும், வியாதி முதலிய விசேஷ விக்கினம் இல்லாவிட்டால் தபசுகாலத்தில் வரும் ஏழு வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையிலும் ஒருசந்தி அனுசரிக்கவேண்டியது.

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதியகடிதம்

பிரியமுள்ள இராமகிருஷ்ணா,

உனக்கு அழியாத ஆத்துமம் ஒன்று உண்டென்றும், நீ செய்த புண்ணியமும் பாவமுந்தான் மறுவுலகத்திற்கு உன்னோடு தொடர்ந்துவருமென்றும், உன் புண்ணிய பாவங்களுக்கு ஏற்றபடியே முடியாத பாக்கியம் அல்லது நிர்ப்பாக்கியம் உனக்குக் கிடைக்குமென்றும் முந்திய கடிதத்தில் நான் உனக்கு வரைந்துளேன். "எந்த வேதத்தில் இருந்தாலும் அக்கரையில்லை. அந்தந்த வேதத்தின் ஒழுக்க வழக்கங்களை அநுசரித்து அவைகளுக்கொப்ப நடந்தால் போதும்" என்று சொல்வது எவ்வளவு பெரிய தப்பறை! கடவுள் ஒருவர் மாத்திரம் உண்டென்று மானிடர் யாவரும் ஒத்துக்கொள்ளுகிறார்களல்லவா? அப்படியானால் அவர் ஏற்படுத்திய வேதமும் ஒன்றுதானே இருக்க வேண்டும். மகமதியர்களும், அஞ்ஞானிகளும், மற்ற இதர மதஸ்தர்களும் தங்கள் தங்கள் வேதத்தைக் கடவுளே ஏற்படுத்தினார் என்று சொல்லுகிறார்கள். அவ்வண்ணமே கிறீஸ்துவர்களும் தங்கள் வேதத்தைக் கடவுளே ஏற்படுத்தினார் என்று சொல்லுகிறார்கள். இவர்க



ளெல்லாம் சொல்லுகிறபடி வெவ்வேறு வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதானால், அவ்வவற்றை ஏற்படுத்திய கடவுளும் வெவ்வேறு உண்டு என்கிற அபத்தத்தை நாம் அங்கீகரித்தல் வேண்டும். ஆனால் வெவ்வேறு கடவுளே இல்லை. கடவுள் ஒருவரே உண்டென்று யர்வரும் ஒப்புக்கொள்ளுகிறபடியால் அந்த ஒரே கடவுள் ஏற்படுத்திய வேதமும் ஒன்றுதான் இருக்கவேண்டியது என்னும் சத்தியம் ஏற்படுகிறது. அந்த வேதம் ஒன்றையே மெய்யான வேதமென்று நாம் சொல்வது அவசியமாய் இருக்கிறது. அதையே நீ தேடி அடையவேண்டியது. அதில் சேர்ந்து அதன் போதனைகளுக்கும் கற்பனைகளுக்கும் ஒப்ப நீ ஒழுகினால்தான் உன் அழியாத ஆத்துமத்துக்கு முடியாத பாக்கியத்தை மறுமையில் தேடிக்கொள்வாய்.

ஒவ்வொரு வேதமும் தன்னால் கூறப்படும் கடவுளை வெவ்வேறு இலட்சணங்களும் கிரிகைகளும் உள்ளவராகக் காட்டுகின்றது. இப்படி விபரீதமாய்க் கடவுள் தம்மை வெளிப்படுத்தக் கூடுமோ? மனிதர் ஈடேறும்பொருட்டுக் கடவுள் ஒரு வேதத்தை வெளிப்படுத்தாமல் அவரவர் தாம் விரும்பியபடியெல்லாம் நடந்துகொள்ளலாமென்று விட்டிருந்தால் அப்போது வேதமெல்லாம் சரிதான்; எப்படி நடந்தாலும் குற்றமில்லை; கடவுளை எந்த விதமாய் ஆராதித்தாலும் பரவாயில்லையென்று சொல்லலாம். ஆனால் காரியம் அப்படியல்ல. புத்தியுள்ள மனிதன் எவனும் ஒரே கடவுள் உண்டென்றும், அவர் மனிதருடைய ஈடேற்றத்திற்காக ஒரே வேதத்தை வெளிப்படுத்தியிருக்கவேண்டுமென்றும் அங்கீகரிக்கிறபடியால் அந்த ஒரே வேதத்தைத் தவிர மற்ற வேதங்களெல்லாம் அவருக்கு ஆராதனை செய்வதற்கல்ல; அவரைத் தூஷிப்பதற்காகவும் தங்கள் பொல்லாத இச்சைகளை நிறைவேற்றுவதற்காகவும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சமயங்களென்றே சொல்லவேண்டும்.

சிநேகிதனே, உன்னைச் சற்று பரிசோதனை செய்துபார். சத்தியத்தைப் பின்பற்றிச் சர்வேசுரன் அருளிச்செய்த ஒன்றான பரிசுத்த சத்திய வேதத்தில் சேர்வது உன் முக்கிய கடமை. விக்கினங்களை எதிர்த்து ஜெயித்துச் சத்தியத்தையே நாடு. சத்தியமே என்றும் உன்னைக்காக்கும்.

இப்படிக்கு,

உன் பட்சமுள்ள நண்பன்.

---

## The Judge and the Assassin.
### நியாயாதிபதியும், கொலைக்காரனும்.

ஒருவன் தன் மச்சினனைக் கொலைசெய்த குற்றத்திற்காகப்
போலீஸ் உத்தியோகஸ்தர் நீதிஸ்தலத்திற்கு அவனைக்
கொண்டுபோனார்கள்.

கேஸ் விசாரணை அடியில் வருமாறு நடந்தது.

நியாயாதிபதி:—நீ ஏன் இந்தக் கொலைபாதகம் செய்
தாய்?

கொலைகாரன்:—நான் கேட்ட பணத்தை என் மச்சினன்
கொடுக்காதபடியால் அவனை அடித்துக்கொன்றுபோட்டு அவ
னிடமிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு போனேன்.

நியாயாதிபதி:—இவ்வித காரணத்துக்காக உன் மச்சின
னைக்கொன்றது உனக்கு வெட்கமில்லையா?

கொலைகாரன்:—ஒருவரும் என்னைப் பார்க்காமலிருக்கும்
போது நான் ஏன் அதைப்பற்றி வெட்கப்படவேண்டும்?

நியாயாதிபதி:—மனிதர் உன்னைப் பார்க்காவிட்டாலும்
உனக்கு மனச்சாட்சி யில்லையா?

கொலைகாரன்:—மனச்சாட்சி ஏது? நான் அதைக் கண்ணி
னாலே பார்த்ததில்லை.

நியாயாதிபதி:—"களவாணுதிருப்பாயாக" என்றும்,
"கொலை செய்யாதிருப்பாயாக" என்றும் நீ ஞான உபதே
சத்தில் படிக்கவில்லையா?

கொலைகாரன்:—நான் ஞான உபதேசத்திற்குப் போனது
மில்லை. கோவிலுக்குப் போனதுமில்லை. ஆனால் இதற்குமுன்
ஞான உபதேசத்திற்கு வரும்படி நாலைந்துதடவை குருக்கள்
கூப்பிட்டபோது அவர்கள் காணுதபடி நான் ஒளிந்துகொண்
டேன்.

நியாயாதிபதி:—நீ பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது
திருடர்களையும் கொலை செய்தவர்களையும் சர்க்கார் தண்டிப்
பார்களென்று வாசிக்கவில்லையோ?

கொலைகாரன்:—என் தாய் தந்தையர் என்னைப் பள்ளிக்
கூடத்திற்கு அனுப்பாமல் ஊர் சுற்றித்திரிய விட்டுவிட்டார்
கள்.

நியாயாதிபதி:—ஆனால் உன் தாய் தந்தையர் ஒவ்வோர்
சமயத்தில் உனக்குப் புத்தி சொல்லவில்லையோ?

கொலைகாரன்:—(சிரித்துக்கொண்டு) என் தாய் தகப்பன்
தான் திருடவும் பொய்சொல்லவும் எனக்குச் சொல்லிக்கொடுத்
தார்கள். நான் பொய் சொல்லும்போதெல்லாம் அவர்கள் என்



னைக் கெட்டிக்காரனென்பார்கள். நான் ஏதாவது ஒரு பொரு
ளைத் திருடி வீட்டுக்குக் கொண்டுவரும்போதெல்லாம் வெகு
சந்தோஷப்படுவார்கள்.

நியாயாதிபதி:—அப்படியானால் உன் தாய்தகப்பன் கட
வுளுக்குப் பயப்படவேண்டுமென்று உனக்குச் சொல்லவில்லை
யோ?

கொலைகாரன்:—அவர்களும் சுவாமிக்குப் பயப்படுகிற
தில்லை. தெய்வமில்லை, வேதமில்லையென்றாற்போல் நடந்து
வந்த அவர்கள், தெய்வத்தைப்பற்றியும் வேதத்தைப்பற்றி
யும் எனக்கு ஒன்றும் சொல்லவில்லை.

நியாயாதிபதி:—அப்படியானால் நீ மகா பெரிய பாதகன்.
ஆனால் உன்னைவிட உன் தாய்தகப்பன் மகா கொடிய பாதக
ரென்று சொல்லவேண்டும். சர்க்கார் சட்டப்பிரகாரம் நீ
தூக்கு மரத்துக்குப் போகவேண்டும். ஆனால் உன்னை அப்
படி வளர்த்த தாய்தகப்பன்தான் அதற்குப் பாத்திரவான்கள்.
ஞான உபதேசம் இல்லாவிட்டால் ஒருவருக்குச் சிறைச்
சாலை வழியும் தூக்குமரத்து வழியும் நடப்பு வழியாயிருக்கும்.

---

## The Maniyagar of Valipalaiyam
### வாலிபாளையத்து மணியகாரன்.

முன் காலத்தில் நீலகிரி, கோயமுத்தூர், கருமூத்தன்
பட்டி, வாலிபாளையம் முதலிய இடங்களை, புதுச்சேரி அதி
மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். (Rev. Fr. Pacreau) பாக்
ரோ சுவாமியார் ஒருவரே 1841-ம் ஹு முதல் சில வருஷ
காலமாக விசாரணை செய்துவந்தார். வாலிபாளையத்தில்
கிறீஸ்துவர்களுக்குள்ளே விசேஷவிதமாய் பக்தி, நல்லொழுக்
கம், பிறசிநேகம் முதலிய நற்குணங்கள் வழங்கி வந்தன.
இவைகளுக்கெல்லாம் சின்னப்பன் என்னும் அவ்வூர் மணிய
காரன் காரணமாயிருந்ததாக சங். பாக்ரோ சுவாமியார்
வேறொரு சுவாமியாருக்குக் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.
அவன் தேவபக்தியும், தாழ்ச்சியும், கீழ்ப்படிதலும், பிறசிநேக
முமுள்ள கிறீஸ்தனாய் இருந்தான். அவன் ஊர் மணியம் வகித்
திருந்ததினால் அவன் மாஜிஸ்டிரேட் கூப்பிடும்போதெல்லாம்
ஞாயிற்றுக்கிழமை முதலாய்க் கச்சேரிக்குப் போக நேரிட்
டது. ஒருநாள் சின்னப்பன் மாஜிஸ்டிரேட்டிடத்தில், "ஐயா!
தாங்கள் தயவுசெய்து என் மணியத்தை எடுத்து வேறொருவ
னுக்குக் கொடுங்கள். ஏனெனில் இந்த உத்தியோகத்தி
னிமித்தம் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் அநுசரிக்கவேண்டிய

கிறீஸ்துவக் கடமைகளை அநுசரிக்கமுடியாமற் போகிறது" என்று சொன்னான். மாஜிஸ்டிரேட் துரை அவனுடைய நற்குணத்தையறிந்து அவன்பேரில் பட்சமாயிருந்ததினால் அவன் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்திற்கு சம்மதிக்காமல், "சின்னப்பா! உன் மணியத்தை எடுக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் இனிமேல் உன்னை ஞாயிற்றுக்கிழமைகளில் கச்சேரிக்கு வரவழைக்கமாட்டேன்" என்று சொல்லி அனுப்பினார்.

---

## Here and There.

### நானாசங்கதி.

America: ஜெர்மானியர் யுத்தத்தில் செய்யும் அட்டூழியங்களை அமெரிக்கர் சகிக்கமாட்டாதவர்களாய் தங்களுக்கும் ஜெர்மானியருக்குமுள்ள நேசபான்மை பிரிந்துபோய் தங்கள் தங்கள் ஸ்தானாபதிகளை வரவழைத்துக்கொண்டதுமல்லாமல் நேசகட்சியாருடன் சேர்ந்து சண்டைக்கு முஸ்திப்பு செய்கிறார்கள் என்பதாக பிரஸ்தாபம்.

Duke of Norfolk: இங்கிலாந்தில் பிரதான கத்தோலிக் கிறீஸ்துவராயிருந்த டியூக் ஆவ் நார்போக் என்னும் பிரபு கடந்த பெப்ரவரி-மீ 11-உயில் இறந்துபோனார்.

Bangalore: பெங்களூரில் மகா வந்திக்கத்தக்க (Right Revd. H. Teissier) தெஸ்ஸியே ஆண்டவர் சென்ற ஜனவரி-மீ 24-உ மேற்றிராணியார் அபிஷேகம் செய்யப்பட்டார். அச்சமயத்தில் தென்னிந்தியாவிலுள்ள மேற்றிராணிமார்கள் கூடிய ஒரு சங்கத்தில் சில முக்கியமான காரியங்களைப்பற்றி ஆலோசனைசெய்து தீர்மானித்தார்கள்.

Coimbatore: யுத்தமுனைக்குச் சென்றிருந்த (Revd. Fr. J. Perrin) சங். பெரின் சுவாமியார் பிரான்ஸிலிருந்து பெப்ரவரிமாதம் கப்பலேறி கோயமுத்தூருக்குத் திரும்பி வருகிறாரென்று கேள்விப்பட சந்தோஷப்படுகிறோம்.

Ootacamund: கடந்த பெப்ரவரி-மீ 11-ம் தேதியில் உதகமண்டலம் அர்ச். மோக்ஷ இராக்கினி மாதாக் கோவிலில் லூர்து மாதா தரிசனையான திருநாள் தேர் சுற்றுப்பிரகாரத்துடன் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அவ்விதமே ஷை திருநாள் குன்னூரிலும் தேர் சுற்றுப்பிரகாரத்துடனே வெகு ஒழுங்காய் நடந்தேறியது.

ஆரோக்கியசாமி.


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. April 1917. No. 4.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 4.


MADRAS

## Catholic Association.

### கத்தோலிக் சங்கம்.

"அந்தந்த மேற்றிராசனத்தில் அந்தந்த மேற்றிராணியாருடைய பார்வையிலும் பராமரிப்புக்குள்ளும் அடங்கிய கத்தோலிக் சங்கங்களை ஏற்படுத்துவது யுக்தமென்றும், இச் சென்னை இராஜதானியில் மேற்கண்டபடி ஏற்படுத்தப்படும் பல சங்கங்களனைத்தும் ஓர் வகைப் பொதுக் கட்டுப்பாட்டால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டியதென்றும், இப்பொதுச் சங்கம் சென்னையில் சென்னை அதிமேற்றிராணியாரின் சாஸ்வத அக்கிராசனத்துக்குட்பட்டிருக்கவேண்டியதென்றும், அந்தந்த மேற்றிராசனத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை அந்தந்த மேற்றிராசனத்தின் கத்தோலிக் சங்கமே முடிவுசெய்து கொள்ளவேண்டியதென்றும், ஆனால் இந்த இராஜதானியிலுள்ள எல்லாக் கத்தோலிக்களையும் சார்ந்த பொது விஷயங்களைப்பற்றி ஷை பொதுக் கட்டுப்பாட்டுச் சங்கமே அந்தந்த மேற்றிராசன சங்கங்களின் நோக்கத்தை அறிந்து கொண்டு தீர்மானிக்கவேண்டியதென்றும், தற்போதுள்ள தென் இந்திய கத்தோலிக் சங்கத்தைவிட மேற்கண்டபடி சேர்க்கப்பட்ட பொதுக் கட்டுப்பாட்டுக் கத்தோலிக் சங்கமே அதிமிக நலத்தை உண்டுபண்ணக் கூடியதாகையால் அதையே இனி பராமரிக்கவேண்டியதென்றும் கூடிய மேற்றிராணிமார்களால் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது."

பெங்களூரில் நடந்த மேற்றிராணிமார்களின் ஆலோசனைச் சங்கம்.

ஓரோ நூல் எப்போர்ப்பட்டதாக இருந்தபோதிலும் அதைச் சுளுவாய் அறுத்துவிடலாம். இரண்டு நால்

களைச் சேர்த்துத் திரித்திருக்கும்போது அதை அறுப்பது கொஞ்சம் கடினமாய் இருக்கும். மூன்று நாலுகளைச் சேர்த்துத் திரித்தால் அந்தக் கயிற்றை அறுக்கச் சுளுவாய் இராது. மூன்று நால்களை மாத்திரமல்ல, ஆனால் பத்து, இருபது, ஐம்பது, நூறு முதலிய பல நால்களைச் சேர்த்துத் திரித்திருக்கும்போது அதை அறுப்பது எவ்வளவோ பிரயாசையாய் இருக்கும்.

அதேபிரகாரம் ஒவ்வொரு மேற்றிராசனத்திலுமுட்பட்ட பங்கு விசாரணையிலடங்கிய பற்பல தனிச் சங்கங்கள் சேர்ந்து ஒரே சங்கமாய் மேற்றிராணியாரின் கீழ் அடங்கியிருப்பது மெத்த நலம்.

தவிர, தென்னிந்தியாவிலுள்ள மேற்றிராசனங்களிலடங்கிய சங்கங்களெல்லாம் ஒரே சட்டுப்பாட்டால் சேர்ந்து ஒரே பொதுச் சங்கமாய் ஒன்றித்து இருப்பது எவ்வளவோ மெத்த நலமானது!

ஒரு மரத்தில் எப்படிப் பல கிளைகள் இருக்கின்றனவோ அப்படியே நமது திருச்சபையாகிய மரத்தில் பல சபைகள் அதினுடைய கிளைகளைப்போல் இருக்கின்றன. ஏனென்றால் சேசுநாதசுவாமி, "நான் திராட்சச்செடி; நீங்கள் அதன் கிளைகள்" என்று வசனித்திருக்கிறார். (அர்ச். அருளப்பர் 15-ம் அதி. 5-ம் வசனம்.)

இப்பேர்ப்பட்ட ஒற்றுமை உண்டாகும்படி சபையோர் எல்லாருக்கும் விசுவாசம், கீழ்ப்படிதல், சுயபரித்தியாகம் முதலிய நற்குணங்கள் முக்கியமாய் இருக்கவேண்டியது. ஆனால் அநேக விசை அப்படிப்பட்ட சங்கங்களில் சேர்ந்திருக்கும் கிறீஸ்துவர்கள் பொது நன்மையைக் கவனியாமல் சுயநலத்தையே நாடி, தங்களுக்குத்தானே இதனால் என்ன லாபம், என்ன விசேஷ சுதந்தரம் கிடைக்குமென்று யோசிக்கிறார்களேயொழிய பொது நன்மைக்காகப் பிரயாசை எடுக்கிறதேயில்லை.

"நிறை குடம் நீர் தளும்பவில்" என்பதுபோல் சிலர் ஒரு கூட்டத்தில் அதிகமாய்ப் பேசுவார்கள். மற்றப்படி ஒரு பிரயாசையும் எடுக்கமாட்டார்கள்.

பொது நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் திருச்சபைச் சட்டங்களுக்கு இவர்கள் கீழ்ப்படியப் பிரியப்படாமல்,



தங்கள் தங்கள் இஷ்டப்படி சட்டங்களை ஏற்படுத்த உத்தேசிக்கிறார்கள். "ஒற்றுமையில்லாத குடி ஒருமிக்கக் கெடும்," என்பதை இவர்கள் அறியார்கள்போலும்.

"கொடியானது திராட்சச் செடியில் ஒன்றித்திராவிட்டால் தானாகவே அக்கொடி கனி தராததுபோல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி தரமாட்டீர்கள்" என்று சேசுநாதசுவாமி திருவுளம்பற்றியிருக்கிறார். (அர்ச். அருளப்பர் 15-ம் அதி. 4-ம் வசனம்)

அதுபோலவே திருச்சபையாகிய அடி மரத்தில் ஒட்டிராத கிளைகள் (சபைகள்) வறண்டு உலர்ந்துபோகும்.

"பரிசுத்த பிதாவே! நீர் எனக்குத் தந்தருளினவர்கள் நம்மைப்போல் ஐக்கியமாய் இருக்கும்படியாக உமது நாமத்தினால் அவர்களைக் காத்தருளும்." (அர்ச். அருளப்பர் 17-ம் அதி. 11-ம் வசனம்.)

சத்திய நேசன்.

---

## Duties of Parents towards their Children.

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல, சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எவ்வளவு மட்டிகளாய் இருந்தபோதிலும் சரி, எவ்வளவு துஷ்டர்களாய் இருந்தபோதிலும் சரி என்று நினைத்து அதைப்பற்றிக் கவலையற்றவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லிக்கொள்வதைச் சற்றே கவனிப்போம். ஒரு வீட்டிலுள்ள பெற்றோர், "நமது மகன் புத்திசாலி. காசு சம்பாதிக்கிறது எப்படியென்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஒரு காசைக் கண்டால் ஒன்பது முடிச்சுப்போடுவான்" என்று பேசிக்கொள்வார்கள். வேறொரு வீட்டிலுள்ளவர்கள், "நமது மகனுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம். அவனுக்குச் சதுர்வித உபாயமும் தெரியும். எவனையும் ஏமாற்றி எப்படியாவது பிழைத்துக்கொள்வான்" என்பார்கள். இன்னொரு வீட்டில் தகப்பன் தன் பிள்ளையைப்பற்றி, "ஐயா! இந்தப் பிள்ளை என் பிள்ளை. இது என்ன! மாணிக்கமாக்கும். இது வாயைத் திறந்தால் போதும்! அடுத்த வீட்டார், அயல் வீட்டார் எல்லோரும் கப் சிப் என்று வாயை அடைத்துக்

கொள்ளவேண்டும். இந்தச் சிறு பிராயத்திலேயே அது எங்கேதான் இந்தப் பேச்சைக் கற்றுக்கொண்டதோ? அப்பா! அதன் வாயை யாராவது பிடுங்கிவிடுவார்களே யானால் சரி! பொல்லாத வார்த்தையோ நல்ல வார்த்தையோ எதுவானாலும் சரி கல் எறிந்தாற்போலத்தான் ஒவ்வொரு வார்த்தை சொல்லும். அதற்குப் பேர் "மாணிக்கம்" என்று வைத்தது சரியே!" என்று சொல்லுவான். அடுத்த வீட்டில் பேசிக்கொள்வதைக் கேளுங்கள். "ஓ! அந்தப் பயல் சிறுப்பம். விளையாட்டுப் பிள்ளை. இப்போது அவன் மனம்போல் போகட்டும். கண்டிப்பதினால் லாபமென்ன? சிறுப்பத்திலே நாம் அப்படி நடக்கவில்லையோ? வயசாக வயசாகப் பெரியவனாகிறபடியால் தன் நடத்தையைத் தானே திருத்திக்கொள்வான்" என்று பேசிக்கொள்வார்கள்.

ஆ! பரிதாபம்! தங்கள் பிள்ளைகளுக்குச் சரீர மாத்திரமல்ல. ஆத்துமமும் ஒன்று உண்டென்றும் தங்கள் பிள்ளைகள் இந்த உலகத்தில் மாத்திரமல்ல, மறு உலகத்திலும் பாக்கியமாய் இருக்கவேண்டுமென்றும் அநேக தாய் தந்தையர் நினைக்கிறதில்லை.

தாய் தந்தையரே! உங்கள் பிள்ளைகள் என்றும் சிரஞ்சீவிகளாகவும் பாக்கியசாலிகளாகவும் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள் அல்லவா? அப்படியானால் நான் சொல்வதைக் கேளுங்கள். இளம் பிராயத்தில் ஒரு பிள்ளை எப்படியிருக்குமோ அப்படியே முதிர் வயதிலும் அந்தப் பிள்ளை யிருக்கும். "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்." என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்களே. சாதாரணமாக, ஒருவன் இளம் பிராயத்தில் நல்லவனாக அல்லது கெட்டவனாக இருப்பானாகில் பெரியவனான பிறகும் அப்படித் தான் இருப்பான். அவன் மரண நேரத்திலும் அப்படியே இருப்பான் என்றும் சொல்லலாம். ஆனால் மரணத்திற்குப் பின் ஒன்றில் நித்திய பாக்கியத்துக்கு, அல்லது நித்திய கேட்டுக்கு ஆளாவான்.

ஆதலால் நான் சொல்வதைக் கவனியுங்கள். "சாதாரணமாக ஒருவன் தன் இளம் பருவத்தில் இருப்பதுபோலவே கிழ வயதிலும் இருப்பான்" என்று சொல்லுகிறேன். ஆனாலும் இளமையில் கெட்டவர்களாக அல்லது நல்லவர்களாக இருக்கிறவர்களெல்லோரும் கடைசி வரைக்கும் கெட்டவர்களாகவும் அல்லது நல்லவர்களாகவுமே யிருப்பார்



கள்" என்று நான் சொல்லுகிறதில்லை. ஏனென்றால்
இதற்கு விரோதமாக அநேக உதாரணங்கள் சுவிசேஷத்
தில் உண்டு. ஆதலால் நான் சொல்வது யாதெனில்,
"பொதுப்பட, சாதாரணமாக ஒரு பிள்ளை இளம் பருவத்
தில் எப்படியிருக்குமோ அப்படியே முதிர்ந்த வயதி
லும் இருக்கும்" என்பது உலகப் பிரசித்தமான கொள்
கையே. விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா?
நமது பரிசுத்த சுவிசேஷத்தில் வாசிப்பதென்ன? ஞானி
யானவர் சொல்வதைக் கேளுங்கள். "இளம் பருவத்தில் உன்
சிருஷ்டிகரை நினைத்துக்கொள்" என்கிறார். பழமொழி ஆக
மத்தில், "சுயபோக்காய்ப் போகிற வாலிபன் கிழவனான
பொழுதும் அதினின்று அகலான்" என்று சொல்லப்பட்டி
ருப்பதைப் பிரியமுள்ள தாய் தந்தையர்களே சற்று யோசித்
துப் பாருங்கள். (இன்னும் வரும்.)

ஏதார்த்தவாதி.

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய இராமகிருஷ்ணா!

முந்தின கடிதத்தில் நான், "எந்த வேதத்தில் ஒருவன் இருந்தாலும் சரிதான். ஆனால் அந்தந்த வேதத்தின் ஆசாரங்களை அநுசரித்து அவைகளுக்கொப்ப நடந்தால்போதும்" என்னும் தப்பறையை உனக்கு விளக்கிக் காட்டினேன்."

"நீர் சத்திய வேதத்தைச் சேர்ந்தவர். நான் இந்து மதத்தான். கடவுள் உம்மை அதிலேயும், என்னை இதிலே யும் படைத்து விட்டார். என் தாய், தகப்பன், பாட்டன், பாட்டி முதலிய முன்னோர்கள் எல்லாரும் இந்து மதத்தில் பிறந்து அதைக் கைக்கொண்டு மரித்தார்களே. அவர்கள் அநுசரித்துவந்த சமயம் எனக்குப் போதாதா? அவர்கள் தப்பறையைப் பின்பற்றினார்களா? எந்த வேதம் சரி, எந்த வேதம் பிழையென்று ஆராயப்போனால் முடிவு கண்டு கொள்வது கூடாத காரியம்" என்று சொல்வாயாக்கும்.

கடவுள் பொய்யான மார்க்கத்தில் ஒருவரையும் நிரூபிக்க மாட்டார். பொய் மெய்யைக் கண்டுபிடிக்கத்தானே உனக்குப் புத்தியைக் கொடுத்திருக்கிறார். உலகத்தில் பல வேதங்கள்

இருந்தபோதிலும் கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட வேதம் ஒன்றே இருக்கவேண்டும். புத்தியுள்ளவன் எது சரி, எது சரியல்ல என்று ஆராயாமல்விட்டால், அவன் கடவுளுக்குத் துரோகியாயல்லோ போய்விடுவான். உன் பிதா மாதா கைக்கொண்ட வேதம் உண்மையானதென்றும், உனக்குப் போதுமானதென்றும் சொல்லாதே. எப்படிப்பட்ட பொய்யான மார்க்கத்திலுள்ளவனும் நீ சொல்வதுபோலவே சொல்லலாம். அப்போது எல்லா வேதங்களும் மெய்யான வேதங்களாகிவிடும். இது புத்திக்கு ஒத்திருக்கிறதா?

நான் உன் பிதா மாதாக்களைப்பற்றிக் குறை சொல்லவில்லை. அவர்கள் நல்ல மனுஷர்களாயினும், சத்திய வேதத்தைப்பற்றியும் மற்றும் பற்பல விஷயங்களைப்பற்றியும் உன்னைப்போல் சரியாய் அறிந்தவர்களாய் இருக்கவில்லை. அவரவர் அறிந்த அறிவின் அளவுக்குத் தக்கபடியல்லோ கடவுளும் அவரவரிடத்தில் கணக்குக் கேட்பார். சத்தியவேதம் உலகமெங்கும் பரம்பி இவ்வளவு நன்மையைச் செய்துவருகையால் தனவான்களும், ஞானிகளும், வங்கிஷப்திகளும் வருஷந்தோறும் அதில் சேர்ந்துகொண்டு வருவதைப் பார்க்கும்போது அந்த வேதம் எப்படிப்பட்டது? அது கடவுளால் அருளப்பட்ட வேதமோ? அப்படியானால் அதிலே நீயும் சேரவேண்டுமென்று கடவுள் சித்தமாயிருக்கிறாரோவென்று சற்றாகிலும் நீ உன் மனதில் விசாரிக்கவேண்டாமா? புத்தியைத் தந்தவர் அந்தப் புத்தியைக்கொண்டு தம்மைத் தேடாமல் விடுகிறவர்களைத் தண்டியாமல் விடுவாரோ? கண்ணில்லாதவன் குழியில் விழுந்தானென்று கண்ணுள்ள நீயும் குழியில் விழச் சம்மதிப்பாயோ? ஒருக்காலும் சம்மதிக்கமாட்டாயே.

சிநேகிதனே, கடவுளால் அருளப்பட்ட வேதம் ஏதென்றும், பொல்லாத மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கம் ஏதென்றும் புத்தியுள்ள மனிதன் எவனும் தன் ஆராய்ச்சியால் தெரிந்துகொள்ளலாம். அவருடைய வழி யெதுவென்று கண்டுபிடித்து அதையே நீ பின்பற்றி ஒழுகவேண்டும். அதுவே உன்னை என்றைக்கும் பாக்கியவானாக்கும்.

இப்படிக்கு,

உன் நன்மையைக் கோரும் சிநேகிதன்.



## Easter Duty.

### பாஸ்கு கடன்.

கிறீஸ்துவர்கள் தேவநற்கருணை உட்கொள்ளவேண்டுமென்று சேசுநாதர்சுவாமிதானே கட்டளையிட்டிருக்கிறார். “நீங்கள் மனுமகனுடைய மாமிசத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலுமிருந்தால் உங்களிடத்தில் ஜீவனைக் கொண்டிருக்கமாட்டீர்கள் என்று உங்களுக்கு மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன்.” (அர்ச். அருளப்பர். 6-ம் அதி. 54-ம் வசனம்.)

அதற்கு அர்த்தம் என்னவென்றால்: ஞான சீவியம் உங்களிடத்தில் இருக்கவேண்டுமானால் தேவநற்கருணையிலிருக்கிற சேசுநாதசுவாமியுடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் உட்கொள்ளவேண்டும். ஆகையால் நீங்கள் திவ்விய நன்மை உட்கொள்ளாவிட்டால் உங்களிடத்தில் ஞான சீவியமிருக்காது. உங்களிடத்தில் ஞான சீவியம் இல்லாவிட்டால் நீங்கள் மோட்சத்திற்குப் போக முடியாதென்பது சத்தியம்.

புத்தி விபரம் அடைந்த சகல கிறீஸ்துவர்களும் வருஷத்திற்கு ஒருவிசையாகிலும் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தேவநற்கருணை உட்கொள்ளவேண்டுமென்பது திருச்சபைக் கட்டளை.

லாத்திரான் 4-வது சங்கத்திலும் திரென்ட் சங்கத்திலும் தீர்மானிக்கப்பட்டது என்னவென்றால், “புத்தி விபரம் அடைந்த கிறீஸ்துவன் எவனும் வருஷத்துக்கு ஒருவிசையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணி பாஸ்கு திருநாளிலாவது சற்பிரசாதம் உட்கொள்ளக்கடவான். அப்படி செய்யத் தவறினால் அப்பேர்ப்பட்டவனை, கோவிலை விலக்கி, சாவுக்குப் பிறகு அவனுக்கு கிறீஸ்துவ அடக்கமுதலாய்ச்செய்யலாகாது.”

நல்ல கிறீஸ்துவர்கள் தக்க ஆயத்தம் செய்து பாஸ்கு கடனைத் தீர்க்கத் தவறமாட்டார்கள். அசட்டையினாலாவது, விசுவாசக் குறைவினாலாவது, பாவமுள்ள நடத்தையை விடாமையினாலாவது பாஸ்கு கடனைத் தீர்க்காத கிறீஸ்துவர்கள் நல்ல கிறீஸ்துவர்கள் அல்ல. மேலும் பாஸ்கு கடனைத் தீர்க்காதவர்கள் கனமான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். வருஷத்திற்கு ஒருவிசைமாத்திரம் திவ்விய நன்மை

வாங்குவது போதாது. பத்தியுள்ள கிறீஸ்துவர்கள் அடிக்கடி பெரிய திருநாட்களிலாவது திவ்வியநன்மை வாங்கப் பிரயாசப்படுவார்கள்.

சேசுநாதசுவாமி கொடுத்த வாக்குத்தத்தத்தின் பிரகாரம் "திவ்விய அப்பத்தை அடிக்கடி உட்கொள்பவன் எவனோ அவனே என்றென்றைக்கும் ஜீவித்திருப்பான்."

---

## Rathinam before and after his First Communion.

### புது நன்மைக்கு முன்னும் பின்னும் இரத்தினம்.

இரத்தினம் என்னும் 10 வயதுள்ள பையன் புதுநன்மை வாங்காமலிருந்தான். அவன் தாய் தகப்பனுடைய அசட்டைத்தனத்தினாலே ஞானோபதேசத்திற்கும் கத்தோலிக் பள்ளிக்கூடத்திற்கும் போகாமலிருந்தான். ஆகையால் அவனுக்கு ஜெபம் ஒன்றும் தெரியாது. அதினால் காலையில் ஜெபம் செய்யாமல் இருப்பான். இரவிலும் ஜெபம் செய்யாமலே மிருகம்போல் படுக்கைக்குப் போவான். ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப் போவதற்குப் பதிலாய் துஷ்ட பையன்களுடன் சேர்ந்து கோலி விளையாடுவான். வீட்டில் தன் தாய் தகப்பன் சொற்படி கேட்காமல், இஷ்டப்படி செய்வான். பெற்றோர் இதைப்பற்றிக் கண்டித்தால் சிரிப்பான். தவிர அவர்கள் அவன் துஷ்டத்தனத்தைக் கண்டு அவனை அடித்தாலோ வீட்டை விட்டு ஓடிப்போய் நாலைந்துநாள் வரையில் வீட்டுக்கு வராமலிருப்பான். அப்படி புத்தியற்ற மிருகம் போல் வளர்ந்துவந்தான். ஒருநாள் குருவானவர் வழியில் போகும்போது இரத்தினம் விளையாடுவதைக் கண்டு அவர் "தம்பீ! நீ புதுநன்மை வாங்க ஞானோபதேசம் படிக்க வரவேண்டும்" என்று சொல்ல, அவன் "இதோ வருகிறேன், சுவாமீ!" என்று சொல்லி விளையாடுவதை விட்டுவிட்டு கோவிலுக்கு வந்தான். ஆச்சரியமே! அந்நாள் துவக்கி அவனைக் கூப்பிடாமலே தானே தினந்தோறும் ஞானோபதேசம் படிக்க வந்தான்.



புதுநன்மை வாங்கக் குறிக்கப்பட்ட நாளில் அவன் விலையுயர்ந்த உடுபாவனையைக் கவனியாமல் சாதாரணமான சுத்த உடுப்பைத் தரித்துக்கொண்டு ஞான சந்தோஷத்தால் பூரித்து புதுநன்மை வாங்கினான். அந்நாள் துடங்கி ஞாயிற்றுக்கிழமை தோறும் பூசைக்குத் தவறாமல் வருவான். தன்னுடைய சகோதரர் சகோதரிகளுக்கும் ஜெபம் கற்றுக்கொடுத்து காலையிலும் மாலையிலும் அவர்களோடு முழங்காலிலிருந்து பத்தியோடு ஜெபம் செய்வான். தவிர தன் தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து முறையிடாமல் அவர்களுக்கு உதவிசெய்வான். வெள்ளிக்கிழமைகளில் வீட்டில் கறி சமைத்திருந்தால் அவன் அதைச் சாப்பிடாமல் சுத்தபோசனம் அனுசரிப்பான்.

அவனுடைய தாய் தகப்பன், புத்திரனுடைய நற்குணத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு "நீ முந்தி எவ்வளவு கெட்ட பையனாய் இருந்தாய். இப்போது இவ்வளவு நல்ல பையனாய் விட்டாயே, இது என்னத்தினால்?" என்று கேட்டார்கள். "நான் புதுநன்மை வாங்கியிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாதா? நான் யூதாஸ்போல சேசுநாதருக்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன்" என்று சொன்னான். இதற்கு முன் வேதவிஷயத்தில் அசட்டைத்தனமாயிருந்த அவனுடைய தாய் தந்தையர் இவனுடைய நன்மாதிரிகையைக் கண்டு பாவித்து மனந்திரும்பி மெய்யான பத்தியுள்ள கிறீஸ்துவர்களானார்கள். (ஞானி)

---

## Here and There.

### நானா சங்கதி.

மெசோப்பொட்டேமியாவில் பிரிட்டிஷார் மிக்க ஜெயமடைந்து வருகிறார்கள். (Kut) கட் என்னும் நகரத்தைப் பிடித்துக்கொண்டதுமல்லாமல், (Bagdad) பாக்டாட் என்னும் தலைநகரப் பட்டணத்தையும் கடந்த மார்ச்சு மாதம் 11-ம் தேதி பிடித்துக்கொண்டார்கள். பாக்டாட் நகரில் கத்தோலிக்கர் அநேகர் இருக்கிறார்கள்.

பிரான்ஸ் தேசத்திலும் ஜெர்மானியர் களைத்து கொஞ்சங் கொஞ்சமாய் பின்வாங்குகிறார்கள். அமெரிக்காவைப்போலவே சீனாவும் ஜெர்மனியினுடைய முழுக்

கப்பல்கள் செய்யும் அக்கிரமத்தைக் கண்டித்து அதனுட னிருந்த நேசக் கட்டுப்பாட்டை விட்டு விலகிக்கொண் டது.

கடந்த ஜனவரிமாதம் நூறு பிரிட்டிஷ் மாலுமிகள் நமது பரிசுத்த பாப்பானவரைச் சந்திக்கப் போனார்கள். அவர் அவர்களிடம் சற்று நேரம் பேசியபின் அவர்களுக் கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் நல்ல ஆசிர்வாதம் கொடுத் தனுப்பினார்.

யுத்த முனைக்கு சென்றிருந்த சங். பெரின் சுவாமியார் (Revd. Fr. J. Perrin) கடந்த மார்ச்சு-௴ 15-௳ கோயம்புத் தூருக்குத்திரும்பி வந்து சேர்ந்தார். இவர் நீடூழி வாழ்வாராக.

பெங்களூரில் நெடுநாள் இரோக அசௌக்கியமாயிருந்த சங். பொனத்திரோன் சுவாமியார் (Revd Fr. Bonnetrainé) தற்போது சற்று சௌக்கியத்துடன் இருப்பதாகக் கேள்விப் பட்டு சந்தோஷிக்கிறோம்.

பிரிட்டிஷ் பட்டாளத்தில் பதித உத்தியோகஸ்தரா யிருந்த பெக்கிட்டில் என்பவர் முதலில் பிரான்ஸிலும், பிறகு மெசோப்பொட்டேமியாவிலும் யுத்தம் புரிந்து, காயம்பட்டு ஓத்தகமந்துக்கு வந்து, காயம் குணப்பட்டவுடன் சங். பியோல்லி சுவாமியார் (Revd. Fr. Biolley) கையால் ஞானஸ் நானம் பெற்று திருச்சபையில் உட்பட்டார். இந்த மனந் திரும்புதலுக்குக் காரணம் என்னவென்றால்: அவர் பிரான் ஸில் இருக்கும்போது, அத்தேசத்துக் கத்தோலிக்கரின் அதிசயிக்கத்தக்க பத்தி விசுவாசத்தைக் கண்டு வியப்புற்று அவர்கள் வேதமே மெய்யானதென்று அறிந்துகொண்டதே.

# சென்னை யுத்தநிதி ஸ்டாம்பு.

சென்னை யுத்தநிதிக்கு அக்கிராசனாதிபதியாகிய ஹிஸ் எக்ஸெலென்ஸி லார்டு பென்ட்லாண்டு பிரபு சென்னை யுத்தநிதி ஸ்டாம்புகள் அதிசீக்கிரத்தில் விற்பனைக்கு வெளியாகுமென்று பிரசுரம்செய்ய உத்தரவு அளித்திருக்கிறார்கள்.

ஷை ஸ்டாம்பு சென்னை சித்திரக்கலாசாலை சூபரின்டென்
டெண்டு மிஸ்டர் (W. S. Hadaway) டபிள்யூ. எஸ். ஹாட்வே
துரையவர்களால் நிர்மாணிக்கப்பட்டது. அதில் (Madras)
மதுருஸ் என்னும் கப்பல் ஓடுவதாகக் காண்பித்து அதின்
உச்சியின் மத்தியில் (Madras War Fund) "சென்னை யுத்த
நிதி" என்று வரையப்பட்டிருக்கும். ஷை கப்பலின் உச்சிப்
புறத்து இருகோடிகளிலும் அபாயகாலத்தில் காக்கும்படி
யான (Life buoy) லைப் பாய் என்றும் கருவி சித்தரித்து
அந்தக்கப்பலின் அடி இருபுறத்துக் கோடிகளிலும் ரெட்
கிராஸ் வரையப்பட்டிருக்கும். ஷை கப்பலின் அடிப்புறத்து
மத்தியில் ஓர் சுருளில் (Half ½ Anna) அரை ½ அணா என்று
வரைந்திருக்கும்.

ஸ்டாம்புக்கு வேண்டிய அச்சுகள் ஐதராபாத்து ராஜாங்க முத்திராசாலையில் ஹிஸ் ஹைனஸ் நைஜாம் அவர்களால் செலவன்னியில் முத்தரிக்கப்படுகின்றன.

சந்தாதார்களுக்காக ஹிஸ் எக்ஸெலென்சி சென்னை இராஜ
தானியிலுள்ள எல்லா கம்பெனிக்காரர்களும் சிப்பந்திகளும்
பம்பாயில் செய்வதுபோல ஷை ஸ்டாம்புகளை விற்பார்க
ளென்று நம்புகிறார். பம்பாயில் இவ்வித ஸ்டாம்புகளை
விற்பனை வாங்குவதில் எல்லாரும் மும்முரமாயிருந்ததினால்
ஜாஸ்தி விற்பனையாச்சுது. பம்பாய் ராஜதானியில் இவ்வித
ஸ்டாம்பு விற்று முதலினால் லட்சத்துக்குமேலேயே பம்பாய்
ராஜதானி யுத்தகஷ்ட நிவாரண நிதிக்குக் கூடுதலாச்சுது.
அதைப்போலவே இந்த ராஜதானியிலும் ஒவ்வொருவரும்
சிரத்தை எடுத்துக்கொண்டு பம்பாயைக்காட்டிலும் ஜாஸ்தி
விற்றுமுதல் காட்டவேணும். தவிர பம்பாயில் ஸ்டாம்புகளை
தயாரிக்கும் செலவுகளை வியாபாரிகளே ஒத்துக்கொண்டதுமல்

லாமல் ஸ்டாம்புகளையுமே ஆவலோடு அங்கீகரித்துக்கொண்டார்கள். ஒரே வியாபாரக் கம்பெனிமாத்திரம் ரூ. 950-க்கு லேபிள் வாங்கிகொண்டார்கள். மற்றொருவர் தங்களால் அனுப்பப்படும் ஒவ்வொரு ஏற்றுமதி உத்தரவிலும் ஒட்டுவதாக ஒப்புக்கொண்டனர். வேறுசிலர் ஸ்டாம்புகளைப்பற்றின நோட்டீஸ்களை தங்கள் கரஸ்பாண்டென்சுகளில் வைத்து பிரசுரஞ்செய்தனர். எல்லா ஷாப்புகளும், கிளப்புகளும், ஹோட்டல்களும் ஸ்டாம்புகளை விற்பனைசெய்து நோட்டீஸ்களையும், துண்டுப் பத்திரிகைகளையும் பிரசுரஞ்செய்தனர். சினிமா புரோப்ரைட்டர்கள் ஒவ்வொரு ஆட்டங்களிலும் விற்பனை செய்கிறார்கள். எல்லாப் பத்திராதிபர்களும் தங்களால் இயன்றமட்டும் ஸ்டாம்புகள் விற்பனைசெய்ய கிருஷிசெய்கிறார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் சாதாரணமாய் எழுதும் கடிதங்களுக்கு முகருக்குப்பதிலாக உபயோகித்து உதவலாம்.

32 ஸ்டாம்புகள் அடங்கிய புஸ்தகங்களாக விற்கப்படும். மதுறாஸ் கவர்ன்மெண்டு அவுஸ், சென்னை யுத்த நிதி ஸ்டாம்பு, ஆனரரி காரியதரிசியிடம் இப்புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை யுத்த நிதியின் லேடீஸ் டிப்போ ஸ்தல காரியதரிசியிடத்திலும் ஷை ஸ்டாம்புகள் கிடைக்கும். காரியதரிசிகள் தாங்கள் ஏற்கனவே பட்சமாய் உதகரிக்கும் உதவியோடு ஸ்டாம்பு விற்பனையையும் ஏற்றுக்கொள்ளும்படி ஹிஸ் எக்ஸலென்சி கேட்டுக்கொள்ளுகிறார்.

ஸ்டாம்புகள் வெளியானதும் காலக்கிரமத்தில் பிரசித்தம் செய்யப்படும். அப்பொழுது ஸ்டாம்பு புஸ்தகங்களை தேவையானபடி அனுப்பப்படும்.

இந்த ஸ்டாம்புகள் போஸ்டேஜ் (தபால்) லேபிளுக்குப் பதிலாக உபயோகப்படுத்தக்கூடாதென்று எல்லாரும் வியக்தமாய் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் ஒரு லெட்டருக்கு முகர்மாதிரியாக உபயோகப்படுத்தவேண்டியது. அப்படி செய்வதால் நிருபம் எழுதுபவர் இந்த ஸ்டாம்பை வாங்கி உபயோகிப்பதால் யுத்த நிதிக்காக உபயோகிக்கிறார் என்று விளங்கும். மேலும் இந்த மாதிரி செய்வதால் இந்த ஸ்டாம்பையும் யுத்த நிதியையும் இராஜதானி முழுவதும் பிரசுரிப்பதாகும்.

(Sd.) DAVID,

*For Collector.*


# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. III.** **May 1917.** **No. 5.**

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 5.


## A Protest by the Bishops.

## மேற்றிராணிமார்களுடைய எதிருரை.

சென்னையில் பிரசுரிக்கப்படும் ஹிந்து பத்திரிகையில்
சென்ற பெப்ரவரி-மீ 26-உ "இந்திய கத்தோலிக்கர்"
என்ற தலைப்பெயரால் வெளிவந்த பிரதான விஷயமும், அதன்
பிறகு கத்தோலிக்கு நிருப நேசர்களால் எழுதியனுப்பப்
பட்டவைகளென்று அதே பத்திரிகையில் தொடர்ச்சியாகப்
பெயரில்லாமல் வெளிப்படுத்தப்பட்ட பல கடிதங்களும், அடி
யில் கையொப்பமிட்டிருக்கும் மேற்றிராணிமார்களுடைய
பார்வைக்கு எட்டின.

இந்த நிருப நேசர்கள் ஐரோப்பிய குருக்களுக்கும், விசே
ஷமாய் மேற்றிராணிமார்களுக்கும் விரோதமாய்க் கொடிய
வர்மம் நிறைந்த அவபக்தியான தூஷணங்களைக் குவித்து
எழுதியிருக்கிறார்கள். இத்தூஷணங்களை மறுத்து நாங்கள்
ஒரு வார்த்தையும் சொல்லாமல் விடுவோமேயாகில் எங்கள்
வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் குருமாருக்கும், கிறீஸ்து
வர்களுக்கும், நமது பரிசுத்த வேதத்திற்கும், நாங்கள் செய்ய
வேண்டிய திருக்கடமை தவறிப் பழிப்புக்கிடமாகும். அவை
களை எழுதியவர்கள் தங்கள் கடிதங்களில் தகாத வசனங்களைப்
பிரயோகித்து எங்கள்மேல் வீண் அபதூறுகளைச் சுமத்தி
யிருக்கிறார்கள். இதுவுமல்லாமல், கடந்த ஜனவரி-மீ பெங்
களூரில் நடந்த மேற்றிராணிமார்களுடைய ஆலோசனைச் சங்
கத்து நடவடிக்கைகளுக்குத் தப்பான விரோதார்த்தம் செய்து
கொண்டு, தற்கால நிலைமைக்கேற்றபடி பொதுவில் கத்தோ
லிக்கு ஜனசமூகத்தின் அபிப்பிராயங்களை எடுத்துரைக்கிறோ
மென்று அவர்கள் பாசாங்கு பண்ணுகிறார்கள். இவைகளை

யெல்லாம் நாங்கள் எதிர்த்து மறுத்துக் கண்டனம் பண்ணு
கிறோம்.

அவைகளை எழுதியவர்கள் பகிரங்கமாய் இப்படித் தங்
கள் திருச்சபையின் ஞான அதிகாரிகளுக்கு விரோதமாக
அநியாயமாய்க் குறைகூறி அபதூறு செய்வதினால் கனமான
துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்களென்றும், பகிரங்க
மான பரிகாரத்தால் அவர்கள் தங்கள் அக்கிரமமான தூஷ
ணங்களைப் போக்கிவிடத் தங்கள் மனச்சாட்சியின்படி கட
மைப்பட்டிருக்கிறார்களென்றும் நாங்கள் உறுதியாய்ச் சொல்
லுகிறோம். கத்தோலிக்குச் சன்மார்க்கத்தையும், கத்தோலிக்
குத் திருச்சபையின் கீர்த்தியையும் பாதுகாப்பவர்களாகிய
நாங்கள் இந்தப் பரிசுத்த கடமையை அவர்கள் நிறைவேற்ற
வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுகிறோம். அவர்கள்
இதைச் செய்யத் தவறுவார்களானால் தங்களை அவர்கள்
கத்தோலிக்குத் திருச்சபையின் பிள்ளைகளென்று சொல்லிக்
கொள்ள அருகர்களல்லவென்று அறிந்துகொள்ளவேண்டியது.

1917-ம் ஹு மார்ச்சு-மீ 22-உ ✠ எலியாஸ் ஜொஸெப்,
புதுவை அதிமேற்றிராணியார். ✠ ஜே. ஆலன், சென்னை
அதிமேற்றிராணியார். ✠ எச். டெஸ்ஸியே, மைசூர் மேற்றி
ராணியார். ✠ தியெட்டோனியுஸ், மைலாப்பூர் மேற்றி
ராணியார். ✠ அகுஸ்தீன், கோயம்புத்தூர் மேற்றிராணி
யார். ✠ ஏ. ஷாப்பியூ, கும்பகோணம் மேற்றிராணியார்.
✠ ஏ. பெசாங்தியர், சே. ச. திருச்சி மேற்றிராணியார்.
✠ பவுல் பெரினி, சே. ச. மங்களூர் மேற்றிராணியார்.

---

## Indian Clergy.
### சுதேச குருக்கள்.

பெங்களூரில் நடந்த சங்கத்தில் மேற்றிராணிமார்கள்
தீர்மானித்தது என்னவென்றால் :—

"சுதேச குருக்களின் தொகையை அதிகரிக்கவும், குருக்
கள் வேதபோதக சபைகள் சம்ரக்ஷணைக்காக அந்தந்த மேற்
றிராசனத்தில் கிடைக்கக்கூடிய பொருளுதவியை விருத்தி
செய்யவும், வேண்டிய சகலவித வழிபாடுகளையும் பிரயோகிக்க
வேண்டுமென்றும், தங்களுடைய கோவில்களையும், பள்ளிக்
கூடங்களையும், குருக்களையும் சம்ரக்ஷிப்பது தங்களைப் பொறு
த்த கடமையென்று விசுவாசிகளுக்குத் தக்கபடி போதித்துக்

... 1917 MADRAS



கண்டுபிடிக்கச் செய்யவேண்டுமென்றும், குருமடத்தின் சம்
ரக்ஷிப்புக்காகவும், அந்தந்த மேற்றிராசனத்தின் மற்றக் குறை
களை நிவர்த்திக்கும்பொருட்டும் எல்லா மேற்றிராசனங்களிலும்
கிரமத்துடன் பணம் வசூலிக்கப்படவேண்டியதென்றும் தீர்
மானிக்கப்பட்டது."

ஆதிகாலத்தில் வேதத்தைப் போதிக்கும்படி சேசுநாத
ராலே அனுப்பப்பட்ட அப்போஸ்தலர்கள் எத்திசையிலும்
திருச்சபையை ஸ்தாபிக்கும்படியாக அந்தந்த தேசத்தில்
குருத்துவத்தை ஏற்படுத்தி, குருக்களை ஸ்தாபித்தார்கள்.
அப்படியே நமது நாட்களில் இந்தியா தேசத்திலுள்ள வேத
போதகர்கள் அஞ்ஞானிகளுக்கு வேதத்தைப் போதித்துத்
திருச்சபையின் மந்தையில் கிறீஸ்துவர்களை அதிகமதிகமாய்ச்
சேர்க்கப் பிரயாசப்படுவதுமல்லாமல் குருத்துவத்தை ஸ்திர
மாய் ஸ்தாபிக்கவும், குருக்களை அதிகப்படுத்தவும் நோக்கமுள்
ளவர்களாய் இருக்கிறார்கள். ஆயினும் குருப்பட்டம் மனித
னுடைய இஷ்டம்போல் எல்லாருக்கும் அளிக்கக்கூடிய சுதந்
தரம் அல்ல.

முந்தமுந்த, குருப்பட்டம் பெறும்படி தேவ அழைப்பு
அவசியம் இருக்கவேண்டும். "நீங்கள் என்னைத் தெரிந்து
கொண்டவர்களல்ல, நானே உங்களைத் தெரிந்துகொண்
டேன்." என்று சேசுநாதசுவாமி தமது அப்போஸ்தலர்களுக்
குச் சொன்னார். இரண்டாவது, சற்குணம் வேண்டும். ஏனெ
ன்றால், "குருத்துவத்தின் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற
றச் சாதாரண சற்குணம் போதாது, அதைவிட உத்தமமான
சற்குணம் வேண்டுமென்று" வேதசாஸ்திரியான அர்ச்.
தோமாஸ் எழுதிவைத்தார்.

மூன்றாவது, கல்விவேண்டும். பத்து, பன்னிரண்டு
வருஷகாலமாக குரு மடத்தில் படிக்கச் சக்தியும் பிரியமும்
இருக்கவேண்டும். குரு மடத்திலுள்ள வித்தியார்த்திகளுக்
குப் போதுமான சம்ரக்ஷணைவேண்டும்.

மேலும் குருப்பட்டம் பெற்றபிறகு மற்ற மனுஷர்களைப்
போலவே குருக்களுக்கும் அன்ன வஸ்திரம் வேண்டும்.
அதுவுமன்றித் தங்கள் தங்கள் விசாரணையிலுள்ள பங்கு
வேலைகளை நடத்தும்படி பொருளுதவிவேண்டும்.

இதுவரைக்கும் வேத போதக சபைகள் சீமையிலிருந்து
வரும் பொருளுதவியைக்கொண்டு குருக்களைச் சம்ரக்ஷித்து,
பங்கு வேலைகளை நடத்தி வந்தன. ஆனால் தற்காலம் ஐரோப்

பாவில் நடந்துவரும் கொடிய யுத்தத்தினால் இனிமேல் அநேக வருஷம்வரைக்கும் குருக்கள் விஷயத்திலும் பொருளுதவி விஷயத்திலும் சீமையிலிருந்து இதுவரையில் வந்துகொண்டிருந்த உதவி மிகவும் குறைந்துபோகும்.

ஆகையால், சுதேச குருக்களின் தொகையை அதிகரிக்கவும், இந்தியா தேசத்தில் பொருளுதவி தேடவும் அவசியம் நேரிட்டிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தியா தேசத்தில் இருக்கும் கத்தோலிக்கு பள்ளிக்கூடங்களையும், கன்னியாஸ்திரி மடங்களையும், குரு மடங்களையும், குருக்களையும், கோவில்களையும் சம்ரக்ஷிப்பது யாருடைய கடமை? இந்திய விசுவாசிகளுடையதுதான் என்பதைக் கேட்கவும் வேண்டுமோ?

ஆனால், தலைக்கட்டுப் பணமென்றால் அவர்களுக்கு வேப்பங்காய்போலிருக்கிறது. கலியாணம், அடக்கம் முதலிய சமயங்களில் மிராசு கேட்டால் அவர்கள் உயிர்போவது போல் நினைத்து, ஷை மிராசு கொடுக்கப் பிரியப்படாமல் தர்க்கம் பண்ணுகிறார்கள். பங்கு சுவாமியார் அவைகளைக் கேட்காமல் விட்டுவிட்டால் அவர் நல்ல சுவாமியாரென்று பெயரெடுப்பார்.

இனிமேல் சகல கிறீஸ்துவர்களும் திருச்சபைக் கட்டளைப்பிரகாரம் "நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவி செய்யவேண்டும்." என்று நன்றாய் அறிந்து அநுசரிக்கக்கடவார்கள்.

(சத்திய நேசன்.)

---

## Negligence of Parents.

### தாய் தந்தையரின் அஜாக்கிரதை.

மணியாச்சி என்னும் ஊரில் இரத்தினசாமி யென்று ஒரு தனவான் இருந்தான். அவனுக்குத் தனராஜுலு என்று பெயர்கொண்ட ஏக குமாரன் இருந்தான். பிள்ளைகு வயதானபோது அவனைத் தாய் தந்தையர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். தனராஜுலுவின் தந்தை தன் மகனை வெகு செல்வமாக வளர்த்து வந்தான். யாரும் தன் மகனுக்கு விரோதமாய் எதையும் சொல்லக்கூடாது. பிள்ளை கொண்டு வரும் ஒவ்வொரு வீண் சண்டைக்கும் கையில் கங்கணம் கட்டிக்கொண்டு வியர்த்தமான சச்சரைக்கேற்படுவான். பிள்ளை



யுடைய விளையாட்டுச் சண்டை ஒவ்வொன்றிற்கும் தன் மகனுக்குச் சலிகை கேட்பான். உபாத்தியாயர்மீது தனராஜுலு யாதொரு பிரியாது கொண்டுவரும்போது இரத்தினசாமி பள்ளிக்கூடத்திற்கு வந்து உபாத்தியாயர்மேல் முறையிடுவான். தன் குமாரனுக்காக அவரிடம் சிபாரிசு பேசுவான். இதனால் தனராஜுலு ஒரு நாளும் நன்றாய்ப் படிக்கிறதில்லை. இரத்தினசாமிக்குத் தன் மகனுடைய படிப்பு அவ்வளவு பெரிய காரியமல்ல. மகனுக்கு நோகாமலிருந்தால் அதுவே போதும்.

ஒரு நாள் உபாத்தியாயர் தனராஜுலுவை நாலைந்தடி பலமாய் அடித்துவிட்டார். பையன் அடிகளை வாங்கிக் கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடித் தகப்பனிடம் சொல்ல, தகப்பன் முன் பின் யோசியாமலும், கேள்விமுறை விசாரணை யாதொன்றும் செய்யாமலும், உடனே கச்சேரிக்குப்போய் பிரியாது எழுதி நீதியஸ்தரிடம் கொடுத்துவிட்டான்.

சில தினங்கள் கடந்த பின்னர், நீதியஸ்தர் உபாத்தியாயரையும் மாணாக்கனையும் அழைத்துத் தீர விசாரித்து, உபாத்தியாயர் செய்தது நியாயமென்று தீர்த்து, இரத்தினசாமியின் வியாஜியத்தைத் தள்ளிவிட்டார். தனராஜுலு பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளப்பட்டு வெவ்வேறு பள்ளிக்கூடங்களைத் தேடிப்போயும் ஒரு உபாத்தியாயராவது அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமுதல் பையனுடைய பாடசாலை நாடகசாலையாயிற்று. இவ்வாறு, தனராஜுலு பள்ளிக்கூடத்தை விட்டு நீங்கி, கடிவாளமில்லாத குதிரைபோல் அடக்குவாரில்லாமல் துஷ்டரோடுகூடி விபசாரம், குடி, சூது, திருட்டு முதலிய பல துர்க்கிருத்தியங்களில் விருத்தியடைந்து தன் மாதா பிதாக்களை மதியாமல் தன் இஷ்டம்போல் நடந்து வந்தான். இதனால் இரத்தினசாமிக்கு வாக்கிலடங்காத கிலேசமும், துக்கமும், வியாகுலமும் நேரிட்டுச் சீக்கிரத்தில் தேக வியோகமாகிச் சமாதி யடைந்துவிட்டான்.

தனராஜுலு தன் பிதிரார்ஜிதத்தைத் தன்னிஷ்டம் போல் விபசாரம், குடி முதலிய தீய கருமங்களில் செலவிட்டுக் கடைசியாகப் பெரும் ஏழையானான். இந்தப் பரம எளிமைத்தனத்திலும் தன் விசேஷ துர்க்குணங்களைவிடாமல் ஓர் இராத்திரி துராகிருதமாய் ஓர் வீட்டில் நுழைந்து நிர்ப்பாக்கியமாய்க் கொலையுண்டு ஓர் பாழுங் கிணற்றில் போடப்பட்டான். இதுவே தனராஜுலுவின் முடிவு.

ஆதலால், தாய் தந்தையர்களே, உங்கள் பிள்ளைகள் சிறுவர்களாய் இருக்கும்போதே அவர்களுடைய நடத்தை யைக் கவனித்துத் துர்க்குணங்களைச் சீர்ப்படுத்தி, அவசரமா யிருக்கும்போது கண்டித்து, அவர்களைத் தெய்வ பயத்திலும், விசுவாசத்திலும், நல்லொழுக்கத்திலும் வளர்க்கப் பிரயாசப் படுங்கள்.

---

## Annual Report of the Society of Foreign Missions for the year 1915

## அன்னியதேசத்துப் போதகர் சபையின் 1915-ம் ஆண்டின் வருஷாந்தர ரிப்போர்ட்.

| மேற்றிராசனங்கள் | 35 | கோயம் புத்தூர் மேற்றிராசனத்தில்: |
|---|---|---|
| கத்தோலிக்கரின் தொகை | 1602104 | 40242 |
| கோவில்கள் | 6058 | 118 |
| ஐரோப்பிய வேத போதகர் | 1300 | 37 |
| சுதேச குருக்கள் | 984 | 17 |
| உபதேசிமார் | 3372 | 46 |
| குருமடங்கள் | 46 | 2 |
| குருமடத்திலுள்ள வித்தியார்த்திகள் | 2363 | 14 |
| சந்நியாசிகள் | 385 | 9 |
| கன்னியாஸ்திரிகள் | 6586 | 116 |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் | 28094 | 240 |
| பாடசாலைகள் | 5136 | 69 |
| மாணுக்கர்கள் | 178218 | 4982 |

## Guruvasavayan.

### குருவசவையன்.

ஏறக்குறைய இருநூறு வருஷங்களுக்குமுன் குத்தளத் தூர் மலையில் ஒக்கிலிய ஜாதியில் குருவசவையன் என்னும ஒரு அஞ்ஞானிக் குரு இருந்தான். ஒருநாள் அவன் ஒரு அஞ்ஞான வேத புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் அதின் கடைசியில் மரம், கல், மண், பொன், வெள்ளி இவை



முதலியவற்றால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் மெய்யான
தேவர்கள் அல்லவே. பரலோகத்தையும் பூலோகத்தையும்
படைத்த ஒரே கடவுள் இருக்கிறார். அவரைத் தவிர வேறே
கடவுள் இல்லையென்று வாசித்தான். இந்த வாக்கியத்தை
வாசித்தவுடனே அந்த நேர்மையுள்ள மனிதன் யோசித்து
ஆச்சரியப்பட்டுத் தன்னுடைய வேதம் பொய்யான வேத
மென்று அறிந்துகொண்டு, அன்றுமுதல் பொய்த் தேவர்க
ளுக்கு ஊழியம் பண்ணுவதை விட்டுவிட்டான். அதை
அறிந்த அவன் ஜாதியாரும் பந்துக்களும் ஒன்றில் அவனைப்
பைத்தியகாரன் அல்லது தேவதுரோகியென்று எண்ணி,
மைசூர் இராஜாவிடம் அவனைக் கொண்டுபோனார்கள். அவன்
இராஜாவைப்பார்த்து, "இராஜாவே! நான் பைத்தியகாரனு
மல்ல, தேவ துரோகியுமல்ல. ஆனால் வேத விஷயத்தில் என்
புத்தி மாறிப் போனதற்குக் காரணம் யாதென்று அறிய
வேண்டுமானால் நமது வேத புஸ்தகத்திலேயே அதைக் கண்டு
கொள்ளலாம். அதில் நான் வாசித்தது என்னவென்றால் 'மரம்,
கல், மண், பொன், வெள்ளி இவை முதலியவைகளால் செய்
யப்பட்ட விக்கிரகங்கள் மெய்யான தேவர்கள் அல்லவே. பர
லோகத்தையும் பூலோகத்தையும் படைத்த ஒரே கடவுள்
இருக்கிறார். அவரைத் தவிர வேறே கடவுள் இல்லை" என்று
தன் புஸ்தகத்திலிருந்து உரத்த சத்தமாய் வாசித்தான். பிறகு,
"அப்படியிருக்கும்போது என்பேரில் குற்றம் சாட்டலாமோ"
என்றான். அதைக் கேட்டு இராஜா, "இவன் நமது வேத
புஸ்தகங்களில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடக்கிறபடியால்
இவன்பேரில் குற்றம் சாட்டலாகாது" என்று சொல்லி
அவனை அனுப்பிவிட்டார். பிறகு ஆனந்தப்பன் என்னும்
ஒரு கிறீஸ்துவ உபதேசியார் இந்தச் சங்கதியைக் கேள்விப்
பட்டு அவனுக்குச் சத்திய வேதத்தைப்பற்றிப் போதனை
செய்தார். ஆறு இலக்ஷணமந்திரத்தைக் கற்றுக் கொடுக்கும்
போது, அஞ்ஞான குருவாகிய அந்தக் குருவசவையன்
அதைக் கேட்டு இந்த வேதமே மெய்யான வேதமென்று
உரக்கச் சொன்னான்.

பிறகு, இருவரும் கொடிவேலிக்குக் கிழக்கில் எல்லை
மங்கலம் என்னும் ஊருக்குப் போனார்கள். அவ்வூரில் குரு
வசவையன் சத்திய வேதத்தைப் படித்து ஞானஸ்நானம்
பெற்று அமிர்தப்பன் என்னும் பெயர் வைத்துக்கொண்டான்.

(ஞானி.)

## Here and There.

### நாநா சங்கதிகள்.

அமெரிக்கா நேச கட்சியாருடன் சேர்ந்து ஜெர்மனிக்கு விரோதமாய் ஆஸ்டிரியாவோடும் பல்கேரியாவோடும் யுத்தம் கூறியிருக்கிறது. "சமாதானத்துக்குமுன் நீதி செலுத்தப் படவேண்டும்" என்று குடியரசுத் தலைவராகிய உவில்ஸன் துரை கூறினர்.

பிரிட்டிஷ்காரரும் பிரான்ஸியரும் எதிரிகளைப் பிரான்ஸ் தேசத்தில் பின்னிடச்செய்து அநேக ஊர்களையும், கோட்டை கொத்தளங்களையும் கைதிகளையும் பிடித்துக்கொண்டு முன்னே றுகிறார்கள். ருஷியாதேசத்தில் சக்கரவர்த்தி அரசைவிட்டு விட, இப்போது அத்தேசத்தில் குடியரசு ஏற்பட்டிருக்கிறது.

சங். பொனத்திரேன் (Rev. Fr. F. E. Bonnetraine) சுவாமியார் மார்ச்சு-மீ 31-உ பெங்களூரில் மரணமடைந்தார்.

R. I. P.

---

## A song for the Month of Mary.

### தேவமாதா வணக்கமாதப் பாட்டு.

1. ஜென்ம மாசில் உற்பவியே
   சேசு பரனின் மாதாவே
   உன்னை அண்டும் பாவிகட்கு
   உதவி செய்யும் உத்தமியே.
2. சர்வ வல்ல உன்சுதனைத்
   தயவாய் வேண்டி அடியவரை
   தற்காத்தருள வேண்டுகின்றோம்.
3. அலகைசெய்யும் சோதனையில்
   அடியோர் வெற்றி அடைந்து நிதம்
   உலகில் நல்ல புண்ணியத்தில்
   ஓங்க அருள்செய் மரியாயே.
4. அழியும் உலக இன்பமதை
   அசட்டை பண்ணி அநுதினமும்
   அழியா மோட்ச இன்பமதிற்
   காவல் கொள்ள அருள்புரிவாய்.
5. மனதில் வாக்கில் கிரிகைகளில்
   மாசற் றடியோர் வாழ்ந்தபின்னே
   உனது மகனுக் குயர்வானில்
   ஊழி யஞ்செய் வரமருளே.

---

(பக்தன்)


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. June 1917. No. 6.

புத்தகம் III.] FIDES AC ROBUR. 6.


OFFICE OF THE REGISTRAR ... 7 JUN 1917 MADRAS

## Racial Feeling.

### ஜாதி பேதகம்.

"கத்தோலிக்கருக்குள் முதலாய் 'ஜாதி பேதகம்' அதி கரித்துக்கொண்டே வருகிறபடியால், நமது பிரயாசைகள் அனுகூலப்படுவதற்கு அது ஒரு பெருந்தடையாய் இருக்கும் போல் தோன்றுகிறது என்பதைப் பெங்களூர் சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்."

சகல ஜாதி மனிதர்களையும் படைத்தவர் சர்வேசுரன் ஒருவர்மாத்திரம் இருக்கிறார். சகல மனிதர்களும் ஒரே ஆதித்தாய், ஆதித்தகப்பனிலிருந்து உற்பத்தியானவர்கள். ஜென்மப்பாவத்தால் கெட்டுப்போன சகல மனிதர்களையும் இரட்சித்தவர் ஒரே சர்வேசுரன். சத்திய திருச்சபையானது சகல கிறீஸ்துவர்களுக்கும் ஒரே தாயாக இருக்கிறது. இவ்வுலகத்தில் சகல விசுவாசிகளுக்கும் ஒரே மேய்ப்பராக இருப்பவர் அர்ச். பாப்பானவர். இதுதான் திருச்சபையின் வல்லமையும் அழகுமாக இருக்கிறது. கிறீஸ்துவர்களின் ஜென்ம சத்துருவாகிய பசாசு இதனால் பொறாமைகொண்டு நல்ல நிலத்தில் களைகளை விதைத்துப் பலவிதமாய் வேற்றுமை உண்டாக்கப் பார்க்கிறது. மனிதர்களுக்குள்ளே இருக்கும் வேற்றுமையும், ஜாதிபேதகமும், மற்ற வித்தியாசங்களும் சர்வேசுர

னாலுண்டாகாமல் மனிதர்களாலேயே உண்டாகிறது. ஆதிகாலத்தில் ஜனங்கள் பபேல் கோபுரத்தைக் கட்டிமுடிக்கப் பிரயாசப்படுமளவில் வேற்றுமையால் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கோபுரத்தை முடிக்காமல் விட்டுவிட நேர்ந்தது. இந்தியாவிலும், மற்றத் தேசங்களிலும் ஜாதி பேதகம் மனிதர்களால் உண்டாகிறதேயொழிய சர்வேசுரனால் அல்லவே. ஐரோப்பியரானாலும் சரி, இந்தியரானாலும் சரி, ஆப்பிரிக்கரானாலும் சரி, சீனாக்காரரானாலும் சரி, திவ்விய சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் சர்வேசுரன்முன்பாகச் சரியொத்தவர்களாய் இருக்கிறார்கள். ஆனாலும் அவர் ஒரே வித்தியாசத்தைக் கவனித்துப் பார்த்து நல்லவர்களையும் கெட்டவர்களையும் தீர்வையிடுவார். திருச்சபையானது சகல மனிதர்களையும் வித்தியாசம் பார்க்காமல் ஒரே மந்தையில் சேர்க்கப் பிரயாசப்படுகிறது. சேசுநாதசுவாமி இப்பூலோகத்தில் இருக்கும்போது நல்லவர்களுக்கும், பாவிகளுக்கும், ஆஸ்திக்காரருக்கும் ஏழைகளுக்கும், சத்தியவேதத்தைப் போதித்த பிரகாரமே, அவருடைய குருக்கள் எல்லோருக்கும் சத்தியவேதத்தைப் போதித்துப் பாத்திரவான்களுக்குத் தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அவர்கள் போதிக்கிற வேதம் அந்நிய வேதம் அல்லவே. ஆசியா கண்டத்தில் பெத்திலேம் ஊரில் மனுஷனாய்ப்பிறந்த சுதனாகிய சர்வேசுரனுடைய வேதம் அது. சேசுநாதருடைய வேதபோதகர்கள் தங்கள் உற்றார், பெற்றார் எல்லாரையும் விட்டுவிட்டுத் திருச்சபையின் மந்தையில் அதிகமதிகமாக ஆத்துமாக்களைச் சேர்க்கும்படி பிரயாசப்படுகிறார்களேயொழிய மற்றப்படி அவர்கள் தங்கள் சுகத்தையாவது உலக மகிமையையாவது தேடுகிறதில்லை. அப்படியிருந்தபோதிலும் எத்திசையிலும் எக்காலத்திலும் வேத கலாபனை உண்டாகும்போது, சத்தியவேதத்தை அந்நியவேதமென்றும், சத்தியவேத குருக்களையும் விசுவாசிகளையும் அந்நியர்களென்றும் அபாண்டமாய்த் தூஷிக்கிறார்கள். "இவர் (சேசுநாதர்)



வேண்டாம். பரபாஸ் வேண்டும்" என்று யூதர்கள் சொன்னதுபோலவே, சத்தியவேத விரோதிகள் சத்தியவேதம் அந்நியவேதமென்று கூறி நிந்திக்கிறார்கள். ஆங்காரத்தினால் லூத்தேர் சேசுநாதருடைய பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவருக்குக் கீழ்ப்படியாமல், அவரை அந்நியரென்று சொல்லி மறுதலித்ததுபோல, கெட்ட கிறீஸ்துவர்கள் சத்தியவேத போதகர்களை அந்நியரென்று கலாபனை எழுப்புவது எவ்வளவோ பரிதாபம்! அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதினதாவது: "உங்களில் ஒருவன் நான் சின்னப்பனுக்கும், வேறொருவன் நான் அப்பொல்லோவுக்கும் சீஷனாயிருக்கிறேனென்று சொல்லும்போது நீங்கள் மாமிசத்துக்குரிய மனுஷர்களல்லோ? ஆகிலும், அப்பொல்லோதானென்ன? சின்னப்பன்தானென்ன? கர்த்தர் அவனவனுக்குக் கொடுத்த வரத்தின்படியே, இவர்கள் நீங்கள் விசுவசித்திருக்கிறவருடைய ஊழியர்தானே! நான் நட்டேன். அப்பொல்லோ நீர் பாய்ச்சினான். ஆனால் சர்வேசுரனே விளைவைத் தந்தார். ஆதலால் நட்டவனாலும் நீர்பாய்ச்சினவனாலும் காரியமில்லை. விளையப்பண்ணுகிற சர்வேசுரனாலேயே காரியமாகிறது............நாங்கள் சர்வேசுரனுடைய உதவி ஆள்களாயிருக்கிறோம். நீங்களோ சர்வேசுரனுடைய வெள்ளாண்மையும் கட்டடமுமாயிருக்கிறீர்கள்.........நான் அஸ்திவாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டியெழுப்புகிறான். ஆதலால் அவனவன் தான் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்த்துக்கொள்ளக்கடவான். போடப்பட்டிருக்கிற அஸ்திவாரமாகிய சேசுக்கிறீஸ்துநாதரேயல்லாமல் வேறே எந்த அஸ்திவாரத்தையும் எவனும் போட ஒண்ணாது."

I. கொரிந்தியர். 3-ம் அதிகாரம்.

இதைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் கண்டு பிடிப்பார்களாக! (சத்தியநேசன்.)

## Duties of Parents towards their Children.—
*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.—
(தொடர்ச்சி.)

தாய்தந்தையரே! போன வியாசத்தில் "சாதாரணமாக ஒரு பிள்ளை இளம்பருவத்தில் எப்படியிருக்குமோ அப்படியே முதிர்வயதிலும் இருக்கும்" என்று சொன்னேன். அநுபவத்தால் நாம் அறிந்ததென்ன? ஒரு காரியம் துவக்குகிற விதத்திலேயே அது எப்படி முடியுமென்று சொல்லுகிறோம். அப்படியே விடியற்காலமே ஆகாயம் வெளுத்து அல்லது சிவந்து இருந்தால் அன்றைக்கு முழுவதும் காற்றோ மழையோ இருக்குமென்றும், மேகமில்லாமல் ஆகாயம் சுத்தமாக இருந்தால் சாயங்காலம்வரைக்கும் அப்படியே இருக்குமென்றும் சொல்லுகிறோமல்லவா? மிருகங்களுக்கும் நடக்கும் விதம் இதுவே. குட்டியாயிருந்தபோது பொதிசுமந்த குதிரை சவாரிக்கு உதவாது. மடிமேலும், மெத்தைமேலும் செல்வமாக வளர்ந்த நாய் வேட்டைக்கு உதவாது. எவ்வளவு பயங்கரமான மிருகத்தையும் இளம்பருவத்தில் குட்டியாயிருக்கும்போதே எடுத்துவந்து நாய்க்குட்டியைப்போல் சாதுவாக வளர்க்கலாம். பெரிய மிருகத்தையோ சாதுவாக்குவது கூடாத காரியம். மிருகஜாதிகளுக்குப் பகுத்தறிவு இல்லை. ஆகையால் அவைகள் கட்டாயத்தினாலும் வழக்கப் பழக்கத்தினாலும் இப்படிச் செய்கின்றனவென்று நீங்கள் நினைப்பீர்களாக்கும். வாஸ்தவந்தான். மிருகங்களுக்குப் பகுத்தறிவு இல்லை. மனிதனுக்கு அது உண்டு. மனிதனுக்கு மன சுயாதீனம் அதாவது சுயமனது இருக்கிறது. ஆனதினால் அவன் தனக்கு இஷ்டமானதைச் செய்யலாம். தன்னிஷ்டம்போல் நடக்கலாம். கட்டாயம் அவசியமில்லை. இதுவெல்லாமிருந்தும் மனிதன் நடக்கிறவிதமென்ன? மாமூல், வழக்கம், பழக்கம் இவைகளின்படி நடக்கிறான். மனச் சுயாதீனமுள்ள மனி-



தனுக்கும் வழக்கம் இரண்டாவது சுபாவமாய் மாறிப்போகிறது. அவன் தான் சிறுபத்தில் கைக்கொண்ட வழக்கத்தின்படி நடக்கிறான். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். ஒருகாலத்தில் பணக்காரனாயிருந்து ஏழையாய்ப்போன மனிதன் என்ன சொல்லுகிறான்? "கூலிவேலை செய்து கஷ்டப் பாடுபட்டுப் பிழைக்க என்னால் முடியாது. இரந்து உண்ணவும் வெட்கக்கேடாயிருக்கிறது" என்று சொல்லுகிறான். மனச் சுயாதீனம் இருந்தும் வழக்கத்தையல்லவா மனிதன் கவனிக்கிறான்? வழக்கத்தின்படியல்லவா அவன் நடக்கிறான்.

புண்ணியத்தின் பாதையில் நடக்கிறதும் வளர்கிறதும் அப்படித்தான். புண்ணியவானுக்குச் சர்வேசுரனுடைய கற்பனைகளையும், திருச்சபையின் கட்டளைகளையும் அநுசரிப்பதும், ஆசாபாசங்களை அடக்குவதும், பாவசமயங்களை விலக்குவதும், இலகுவாயும், இன்பமாயும் இருக்கும். ஆனால் பாவத்திலும் சிற்றின்பத்திலும் பழகினவனுக்கு அவைகளோடு போராடுவது தாங்க முடியாத சுமையாயிருக்கும். பாவத்தில் பழகினவன் தான் பாவத்தை விடமுடியாதென்று அவநம்பிக்கைப்படுகிறான். ஏன்? ஏனென்றால் பாவப்பழக்கமானது அவனுக்குப் பெரும் வழக்கமாகிவிட்டது. நாள்பட்ட வழக்கத்தைத் தொலைப்பது வெகு கஷ்டமாயிருக்கிறது. "பழக்கம் கொடியது பார். பாறையினும் கோழி கிழிக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு.

ஆகையால், தாய் தந்தையரே! உங்கள் பிள்ளைகளை இளம் பருவத்திலேயே சர்வேசுரனை ஆராதிக்கவும் சிநேகிக்கவும், அவருடைய கற்பனைகளையும் திருச்சபையின் கட்டளைகளையும் அநுசரிக்கவும் வழக்கப்படுத்தி வாருங்கள். நீங்கள் இப்படிச் செய்துவருவீர்களேயானால் அவர்கள் பெரியவர்களான பிறகும் சுபாவமாய் தங்கள் வழக்கத்தினால் புண்ணியத்தின் பாதையிலேயே நடந்து வருவார்கள். இளம்பருவத்தில் புண்

ணியம் செய்யப் பழகினவன் தன் முதிர் வயதிலும் அதை விடாமல் நடந்துகொள்வான். (இன்னம் வரும்.)

---

## Dharapuram.

### தாராபுரம்.

முன் காலத்தில் அநேக வருஷங்களாக தாராபுரம் என்னும் ஊர் கோயம்புத்தூர் ஜில்லாவுக்குத் தலைநகரமாயிருந்தது. 1608-ம் வருஷத்தில் அவ்வூரில் சில கிறீஸ்துவர்களும் ஒரு சிறிய கோவிலும் இருந்ததாம். ஏறக்குறைய 1650-ம் வருஷத்தில் தஞ்சாவூரில் அஞ்ஞானிகளால் உபத்திரியப்பட்ட சில கிறீஸ்துவர்கள் தாராபுரத்திற்கு ஓடிவந்து வாசம்பண்ணி வந்தார்கள். ஐதர்ஆலி, அல்லது திப்பு சுல்தானுடைய ஆளுகைத் துவக்கத்தில் இங்கிலீஷ்காரருக்கும் மகமதியருக்கும் தாராபுரத்தின் அருகில் சண்டை நடந்தது. அவ்வூரிலிருந்த இராயனுந்தர் என்னும் சேசுசபைக் குருவானவர் ஒருவர் தமது விசாரணையைச்சேர்ந்த கிறீஸ்துவர்களுக்கு நஷ்டப்படுத்தாதபடி கோட்டையிலிருந்த சேனாதிபதியிடம் விண்ணப்பம் செய்யப் புறப்பட்டுப்போனார். ஆனால் அவர் கோட்டையருகில் சேர்ந்தவுடனே அவ்விடமிருந்த மகமதிய சிப்பாய்கள் அவரைக் கண்டதும் இன்னொன்று அறியாமல் அவர் வேவுகாரரென்று எண்ணி அவர்மேல் துப்பாக்கியைப் பிரயோகித்தார்கள். அவர் குண்டடி பட்டு கொஞ்சநேரத்துக்குள் இறந்துபோனார். அவர் இறந்த இடத்தில் கிறீஸ்துவர்களெல்லோரும் கூடி அவரை நல்லடக்கம் செய்து அந்த இடத்தில் நேர்த்தியான கல்லறை கட்டினார்கள். தாராபுரத்துக்கு வடக்கே கஞ்சம்பாளையத்தில் அந்தக் கல்லறையை இன்னம் பார்க்கலாம்.

---



## Advice to Christian Mothers.

### கிறீஸ்துவ தாய்மாருக்கு ஓர் புத்திமதி.

ஒரு ஸ்திரீ தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது அவளுடைய மகனாகிய சிறு பையன் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தான். ஒரு குருவானவர் அவ்வழியாய் வரும்போது அந்தச் சிறுவனைப்பார்த்து, "தம்பி, உனக்குச் சிலுவை அடையாளம் வரையத் தெரியுமா?" என்று பட்சமாய்க் கேட்டார். அந்தச் சிறு பையன் புன்சிரிப்புடன், "தெரியும் சுவாமி" என்று சொல்லிச் சிலுவை அடையாளம் சரியாய் வரைந்தான். பக்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த அவனுடைய தாய் வந்து, குருவானவருக்குச் சங்கை செய்து, "சுவாமி! சிலுவை அடையாளம் மாத்திரமல்ல, இன்னம் குறிப்பிடத்தில் சில கேள்விகளைக் கேளுங்கள். சரியாய் மறுமொழி சொல்வான்" என்று சொன்னாள். அப்படியே அந்தச் சிறுவன் குருவானவருடைய கேள்விகளுக்குச் சரியான மறுமொழி சொன்னான். அப்போது அந்தக் குருவானவர் ஆச்சரியப்பட்டு, "உன் மகனுக்கு வயது என்ன?" என்று அந்த அம்மாளைக் கேட்க, அவள் ஏறக்குறைய ஆறு வயதாகிறது" என்று சொன்னாள். அதற்குக் குருவானவர், "இவ்வளவு சிறுவனுக்கு எப்படி அவ்வளவு ஞானஉபதேசம் தெரிந்தது?" என்று கேட்டார். "சுவாமி, அது வெகு சுளுவு. இந்தப்பையன் என் கரங்களில் இருக்கும்போதும், அவனுக்கு உடுப்புப் போடும்போதும், சாப்பாடு போடும்போதும், அவனைப் படுக்க வைக்கும்போதும் வேதத்தைப்பற்றி அவனுக்குச் சிலவற்றைச் சொல்லிக்கொடுக்கிறேன். அவ்விதமே அவனும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கற்றுக்கொள்ளுகிறான்" என்று அவள் சொன்னாள்.

கிறீஸ்துவ தாய்மாரே! அப்படியே நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு ஞான உபதேசம் சொல்லிக்கொடுக்கப் பிரயாசப்படுங்கள். (ஞானி).

---

## Rev. Fr. S. Arulnather's Letter.

### "கத்தோலிக்கு வாட்ச்மன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த சங். S. அருள்நாத சுவாமியாருடைய கடிதம்.

*சென்னையில் கூடின இந்திய கத்தோலிக்கருடைய பெருங்கூட்டத்தின் அக்கிராசனாதிபதியவர்களுக்கு,*

*ஐயா !*

*நீர் அச்சிட்டுப் பிரசுரித்து எனக்கு அனுப்பிவைத்த உபயோகமற்ற காகித மூட்டையைப் பின்வரும் இரண்டு முகாந்தரங்களை முன்னிட்டு நான் பார்வையிட்டேன்.*

1-*வது :—உமது நடபடிக்கைகளை ஆமோதிக்கிறவர்களில் நானும் ஒருவன் என்கிற அபகீர்த்தியை மறுத்து நீக்கவும்,*

2-*வது :—நான் என்னுடைய குருத்துவத்தின் கடமைகளையும், பரிசுத்த வேதத்தையும், தேவனையும் விட்டுவிட்டு, யூதாசென்ற துரோகியைப்போல வேஷம்போட்டுக்கொள்வேனென்று நீர் எண்ணிக்கொண்டதைப் பார்க்க எனக்கு மெத்த மனோவியாகுலமாயிருக்கிறதென்றும் உமக்குத் தெரிவிக்கவுந்தான்.*

*இவைகளையெல்லாம் எனக்கு எழுதியிருக்கிறபடியால் நீர் அதிகமாய்த் தவறிப்போகிறீர். ஐயா, நானோ அப்படிப்பட்ட நீசனல்ல என்பதினால் சுவாமிக்கு ஸ்தோத்திரம் பண்ணுகிறேன். அவருடைய கிருபையால் நான் என் மரணமட்டும் கத்தோலிக் திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள பிள்ளையாய் இருப்பேனென்பது எனது உறுதியான நம்பிக்கை.*

*புறட்டுருட்டும், வெட்கக்கேடும், அருவருப்பும் பொருந்திய உமது கூட்டமும், சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், அப்போஸ்தோலிக் அதிகாரம் வகித்திருப்பவர்களுமான நமது நேச மேற்றிராணிமார்களுக்கும், ஞானத்தந்தையர்களுக்கும் விரோதமாக உமது கூட்டாளிகள் அச்சிட்டு வெளிப்படுத்திய கடிதங்களும், அவபக்தியையும், வேதவிரோதத்தையும், பேய்க்குணத்தையும் காட்டுகின்றனவே*



*யன்றி வேறல்லவென்பதினால் நான் அவற்றையெல்லாம் முழுமனதோடு அருவருத்து வெறுக்கிறேன்.*

*இனி உலகமடங்கலுமுள்ள ஒவ்வொரு கனவானும், அவர் யாராயிருந்தாலும் சரி, ஏழை இந்தியர்களுடைய நீசத்தனத்தையும், நன்றிகேட்டையும்பற்றி அவமதித்துப் பேசுவாராயின் அது நியாயமாய் இருக்குமேயொழிய மற்றப்படியல்ல. அதற்கு நீரும் உமது நடபடிக்கைகளுந்தான் காரணம்.*

*உமது தகாத நடபடிக்கைகளுக்காக மனதில் கிலேசமும் வெறுப்புமுடையவனா யிருக்கிறேன்.*

*இப்படிக்கு,*

*கிறீஸ்துவில் உமது உண்மையுள்ள*

**S. அருள்நாதர்,**
*கத்தோலிக் குரு,*
*கொடிவேரி. (ஈரோடு மார்க்கம்).*

*கொடிவேரி,*
1—5—1917.

---

## Silence in the Church.

### கோவிலில் மவுனம்.

*இரத்தினம், சாந்தப்பன் என்கிற சிநேகிதர் இருவர் ஓர் ஞாயிற்றுக்கிழமை பூசைகாணக் கோவிலுக்கு வந்தார்கள். பூசைநேரத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கி உட்கார்ந்திருந்தார்கள். இரத்தினம் தன் ஜெபப்புஸ்தகத்திலுள்ள பூசை ஜெபங்களைப் பக்தியோடு வாசித்துக்கொண்டு பூசை கண்டான். சர்ந்தப்பனோ கையில் ஜெபபுஸ்தகம், ஜெபமாலை ஒன்றுமில்லாமல், இங்குமங்கும் வேடிக்கை பார்த்துப் பராக்காய்ப் பேசிக்கொண்டிருந்தான். இவன் இரத்தினத்தைப் பார்த்து, "நீ உன் புஸ்தகத்தில் என்ன படிக்கிறாய்?" என்று கேட்டான். இரத்தினம் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தான். மறுபடியும் சாந்தப்பன் அவனை இம்சித்து, "என்ன பாடத்தைப் படிக்கிறாய்?" என்றுகேட்க, இரத்தினம், "கோவிலில் மவுனமாயும் சங்கை மரியாதையுடனும் இருக்கவேண்டும்" என்று படிக்கிறேன் என்று சொன்னான்.*

---

## The Crucifix and the blind Soldier.

### பாடுபட்ட சுரூபமும், குருட்டுப் போர்ச்சேவகனும்.

தற்காலம் ஐரோப்பாவில் நடந்துவரும் கொடிய யுத்தத்தில் நடந்த ஓர் சரித்திரமாவது :—

பிரான்ஸ் தேசத்தில் இங்கிலீஷ்காரருக்கும் ஜெர்மானியருக்கும் நடந்த சண்டையில் ஜெர்மானியர் தோல்வியடைந்து தங்கள் வசமிருந்த ஊரைப் பிரிட்டிஷ்காரருக்கு விட்டுவிட நேர்ந்தது.

பிரிட்டிஷ்காரர் ஷை ஊரில் நுழைந்தவுடன் அவர்களில் ஓர் பதித போர்ச்சேவகன் ஊரின் நடுவில் ஓர் பக்கத்தில் ஒரு பாடுபட்ட சுரூபத்தைக் கண்டான். அதனருகில் சேரப் பிரயாசைப்பட்டுச் செல்லுகையில் அவன் களைத்து மயங்கி அந்தச் சிலுவையருகில் சோர்ந்து விழுந்துவிட்டான். அவன் பக்கத்திலிருந்தவர்கள் அவனைத் தூக்கி யெடுத்துச் சமீபத்திலுள்ள ஒரு காலியான வீட்டுக்குக் கொண்டுபோனார்கள். அவ்விடத்தில் இருக்கும்போது தனக்கு மயக்கம் தெளிந்த பிறகு அந்த அறையில் அவன் ஓர் பாடுபட்ட சுரூபத்தைக் கண்டான். அதைக் கையிலெடுத்துக்கொண்டு, "நான் அங்கே பார்த்தது இவர்தான். நான் இந்தச் சுரூபத்தை எடுத்துக் கொண்டு போனால் எனக்கு எவ்வளவோ நன்மையாயிருக்கும். இல்லை, இல்லை, நான் இதை எடுத்துக்கொண்டு போனால் அது திருட்டு ஆகும். ஆனால் இவ்விடத்தில் விட்டுவிட்டுப் போனால் எனக்கு இதினால் எவ்வளவு ஆறுதல் இருக்கிறதோ அவ்வளவு ஆறுதல் மற்றவர்களுக்கும் இருக்கும் என்று சொல்லி மறுபடியும் அந்தச் சுரூபத்தை வைத்துவிட்டு, யுத்தமுனைக்குச் சென்றான். சென்றவுடன் அவன் வேறொரு ஊரில் ஒருசிலுவைப் பக்கத்தில் காவலாக நியமிக்கப்பட்டான். அவ்விடத்தில் இருக்கும்போது அவன் தலையில் குண்டுபாய்ந்து கண் இரண்டும் குருடாயின. அவனுக்கு உலகமெல்லாம் மறைந்தபோதிலும் அவனுடைய விசுவாசக் கண்ணுக்கு மோட்சம் திறந்தது. அவன் தன் மனதில் திவ்விய ஆறுதலடைந்து



("He is mine and I am his.") "அவர் எனக்கும் நான் அவருக்கும்" என்று சொன்னான். அவ்விடமிருந்த மற்றச் சேவகர் இவன் சொன்னதற்கு அர்த்தம் கண்டுபிடிக்கக் கூடவில்லை. இரண வைத்தியர் அந்தக் காயத்துக்காகக் குருடனுக்கு மருந்து கொடுத்து இங்கிலாந்திலுள்ள வைத்தியசாலைக்குக் கப்பலேற்றி அனுப்பினார்கள். அவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருக்கும்போது அவன் கழுத்தில் ஜெபமாலை இருந்ததைக் கண்டு நீ கத்தோலிக் கிறீஸ்துவனாவென்று கேட்டதற்கு அவன், "இல்லை! ஆனால் நான் ஒரு பாடுபட்ட சுரூபம் கேட்டேன். அதற்குப் பதிலாய் இதைத்தான் கொடுத்தார்கள். ஆகையால் தயவுசெய்து நீங்கள் ஒரு பாடுபட்ட சுரூபம் கொடுங்கள்" என்றான். அப்படியே அவன் கேட்டதைக் கொடுத்தார்கள். அதை வாங்கி மரியாதையுடன் அந்தச் சுரூபத்தின் உருவத்தைக் கையினால் தடவி முண்முடியையும் கைகால்களில் ஆணி ஊடுருவியிருப்பதையும் பார்த்து அவர்தான் இது ("He is mine and I am his") அவர் எனக்கும் நான் அவருக்கும் என்றும், தான் பிரான்ஸ் தேசத்தில் முன் சொல்லப்பட்ட பெரிய சிலுவையடியில் தனக்கு நேர்ந்த ஆபத்து இத்தன்மையானதென்றும் விவரமாய்ச் சொல்லிய பின், "இவ்வுலோகத்தில் இனிமேல் நான் யாதொன்றும் காணமுடியாது. கடைசியாய் நான் அந்த பாடுபட்ட சுரூபத்தைக் கண்டு ஆறுதலடைந்தேன். எனக்கு வேறொன்றும் தேவையில்லை. அதுவே போதும். ("He is mine and I am his.") அவர் எனக்கும், நான் அவருக்கும், என்றான். பிறகு ஓர் கத்தோலிக் குருவானவர் வந்து சேசுநாதசுவாமி பட்ட பாடுகளின் வரலாறுகளையும், வேதசத்தியங்களையும் அவனுக்குச் சொல்லி வந்தார். கொஞ்சநாளைக்குப் பிற்பாடு அவர் அவனுக்கு ஞானஸ்நானமும் புது நன்மையும் கொடுத்தார். மெய்யாகவே இந்தப் பதிதப் போர்ச்சேவகன் சிலுவையினால் இரட்சண்யமும், ஜீவியமும், ஆறுதலும் அடைந்தான்.

## Here and There.

### நானா சங்கதிகள்.

மகா வந்திக்கத்தக்க கோயம்புத்தூர் மேற்றிராணியாரவர்கள் கடந்த ஏப்பிரல்-மீ 22-உ குன்னூரில் 72 பேருக்கு உறுதிப்பூசுதல் சடங்கை நிறைவேற்றினார். அடுத்த ஞாயிற்றுக் கிழமையாகிய 29-உ வெல்லிங்டனில் ஷை சடங்கை நிறைவேற்றினார்.

அர்ச். பாப்பானவரால் புதிதாய் நியமிக்கப்பட்ட ஸ்தானாதிபதியாகிய (His Excellency Mgr. Biondi) மகா வந்திக்கத்தக்க பயாந்தி ஆண்டவரவர்கள் கடந்த மே-மீ 6-உ கொழும்பு வந்து சேர்ந்தார். அவரை ஜனங்கள் மகா சிறப்பு ஆடம்பரத்துடன் எதிர்கொண்டழைத்தார்கள்.

மார்ச்சு-மீ 26-உயில் பிரான்ஸ் தேசத்தில் (Paray le Monial) பரேலெமோனியால் என்னும் ஊரிலுள்ள திரு இருதயக்கோவிலில் நேசக் கட்சியாருடைய கொடிகள் திரு இருதயத்துக்கு மகா ஆடம்பரத்துடன் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் இங்கிலீஷ் கர்தினால் (Cardinal Bourne) மகா வந்திக்கத்தக்க போர்ன் அதிமேற்றிராணியார் இப்போது நடக்கும் சண்டையைப்பற்றி நேர்த்தியான ஓர் பிரசங்கம் செய்தார்.

குன்னூர் அர்ச். அந்தோனியார் செக்கன்றரி பள்ளிக்கூடத்தில் மே-மீ 14-உ திங்கட்கிழமை குன்னூரிலுள்ள கனவான்களால் தருமமாகக் கொடுக்கப்பட்ட தொகையைக் கொண்டு வெகு ஆடம்பரத்துடன் மாணாக்கர்களுக்குப் பிரைஸ் கொடுக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் மகா-ள-ள-ஸ்ரீ கோபால் நாயர் B.A., L.T., அவர்கள் சேர்மனாக இருந்து ஷை பள்ளிக்கூடத்தில் செய்யப்படும் அனுகூலமான வேலையைப்பற்றியும், கோயம்புத்தூர் மிஷன் இந்திய மாணாக்கர்களுக்குச் செய்துவரும் நன்மையைப்பற்றியும் நேர்த்தியான உபந்நியாசம் செய்தார். மகா-ள-ள-ஸ்ரீ S. [illegible]


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. July 1917. No. 7.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 7.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 11 JUL 1917

## Indifference in Religion, and Spirit of Independence.

### வேத விஷயத்தில் அசட்டைத்தனமும், தீய மனச் சுவாதீன புத்தியும்.

பெங்களூர் மேற்றிராணிமார்களுடைய ஆலோசனைச் சங்கத்தில், "இக்காலத்தில் எவ்விடத்திலும் பரம்பியுள்ள தீய மனச் சுவாதீனத்தினின்றும் வேத விஷயங்களில் அக்கறையற்றதனத்தினின்றும் விளைகிற தீமைகளை முறிக்க ஏற்ற பிரதான சாதனங்கள் ஆழ்ந்த வேதோபதேசமும், பலத்த கத்தோலிக் பத்திரிகைகளுமட்டுமல்ல; கீழ்த்தர எலிமென்டரி பாடசாலைகளிலும், நடுத்தர பாடசாலைகளிலும், உயர்தர பாடசாலைகளிலும் புகட்டும் நல்ல கத்தோலிக் படிப்புங்கூடத்தானென்பதை இச்சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மேற்கண்ட சாதனங்களைத்தவிர, கத்தோலிக் பந்தன சபைகள், கத்தோலிக் வாசக சாலைகள், ஜெபக்கூட்டங்கள், மாதா சபை முதலியனவும் இது விஷயத்தில் வெகு உதவியாய் இருக்கும். ஆகையால் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சமயோசிதமாய் மேற்கண்ட சாதனங்களைக் கூடியவரை கையாடவேண்டியதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தன் இஷ்டம்போல் நடக்கவேண்டுமென்பது மனிதனுடைய சுபாவம். ஆனால் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பது சேசுக்கிறீஸ்துநாதருடைய போதனை.

வேத விஷயத்தில் அசட்டைத்தனம் செய்வது உலக வாடிக்கை. ஆனால் சேசுக்கிறீஸ்துநாதருடைய போதனையோ "உன்னைப் படைத்த சர்வேசுரனை உன் முழுமனதோடே சிநேகிப்பாயாக" என்பதுதான்.

மனமிருந்தாலும் சரி, மனமில்லாவிட்டாலும் சரி, இவ்வுலகத்தில் எஜமான் இல்லாமல் இருப்பார் ஒருவருமில்லை. தங்கள் இஷ்டம்போல் நடக்க நினைப்பவர்கள்முதலாய்த் தங்கள் ஆங்காரத்துக்கும் ஆசாபாசத்திற்கும் அடிமைகளாகிப் பசாசுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் சர்வேசுரனுக்கே கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். எப்படியென்றால், இராஜாவுடைய ஸ்தானாதிபதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் இராஜாவுக்குத்தானே கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அதுபோல் சர்வேசுரனுடைய ஸ்தானாபதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் சர்வேசுரனுக்குத்தானே கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். அதுவுமல்லாமல் சர்வேசுரனுக்கு ஊழியம்செய்வது ஆளுகை செய்வதற்குச் சமானமாகும். ஏனெனில், "நமக்கு ஊழியம் செய்கிறவர்களை நமது ஊழியக்காரரொன்று அழைக்காமல் நமது நேசர்களென்று அழைப்போம்" என்று சுவாமி சொல்லியிருக்கிறார். அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதலும், சர்வேசுரன் பேரில் பத்தி பற்றுதலாயிருப்பதும் ஆகிய இவ்விரண்டு நற்குணங்களும் நல்ல கிறீஸ்துவனுடைய தப்பாத அடையாளங்களாம். இந்த இரண்டு நற்குணங்களுக்கும் தாழ்ச்சியும், சுயபரித்தியாகமும், நல்ல படிப்பினையும் அஸ்திவாரம் என்னலாம். தாழ்ச்சியும், சுயபரித்தியாகமும் சத்தியவேத படிப்பினையினாலே சுபாவமாய்ப் பிறக்குமேயொழிய மற்றப்படியல்ல. மெய்யாகவே வேதத்தைப் படிக்கிறவர்கள் வெகு சொற்பப்பேர்களாம். ஆதலால் வேத விஷயத்தில் அறியாமையாயிருப்பது எவ்வளவோ கேவலம். படிப்பு இல்லாத கிறீஸ்துவர்கள் மாத்திரமல்லவே; பள்ளிக்கூடத்தில் படித்தவர்களுக்குள்ளே முதலாய் எத்தனையோபேர் வேத சத்தியங்களைச் சரியாய்ப் படித்தறியாமல் இருக்கிறார்கள்.



ஒருநாள் கலியாணத்துக்கு வந்த பி.ஏ. படித்த மாப்பிள்ளை ஒருவனைப் பங்கு சுவாமியார் வழக்கம்போல் சின்னக் குறிப்பிடத்தில் இரண்டொரு கேள்வி கேட்டும் அவன் ஒன்றுக்காவது பதில் சொல்லக் கூடாமல்போனான். பத்தாவது வகுப்புப் படித்தவர்களும், எப்.ஏ; பி.ஏ. படித்தவர்களும் எத்தனையோ புஸ்தகங்களை வாங்கிப் படித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் படித்த பெரிய புஸ்தக மூட்டையில் ஞானோபதேசப் புஸ்தகம் எதுவென்று கேட்டால் அவர்கள் வெகு நேரம் தேடி, பிறகு ஒரு சிறிய புஸ்தகத்தைக் காண்பித்து இதுதான் என்பார்கள். அவ்வளவு சொற்பமாக ஞானோபதேசம் படித்து, பிறகு பெரிய உத்தியோகங்களில் இருக்கும்போது ஓய்வு நேரங்களில் ஞான உபதேசத்தையும் ஞான வாசகத்தையும் படிக்கிறவர்கள் வெகு சொற்பப்பேர்களே.

ஞாயிற்றுக்கிழமைகளில் குருவானவர் பூசைக்குப்பிறகு பிரசங்கம் செய்யத் துவக்கும்போது எத்தனையோபேர் நேரமில்லையென்று சாக்குப்போக்கு சொல்லிப் பத்து நிமிஷமாவது தங்காமல் ஓட்டம்பிடிக்கிறார்கள். உபதேசியார் பூசைக்குமுன் கோவிலில் குறிப்பிடம் வாசிக்கும்போது அதைக் கேட்க உள்ளே போகாமல் வெளியில் நின்றுகொண்டு பூசை துவக்கும் வரையில் காத்திருப்பவர்கள் எத்தனையோபேர்! எத்தனையோ தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை ஞான உபதேசத்துக்கு அனுப்ப அசட்டைத்தனமாயிருக்கிறார்கள்.

வேதத்தை அறியாமையினால்தான் அத்தனை கிறீஸ்துவர்கள் வேத விஷயத்தில் அசட்டைத்தனமாயிருந்து கெட்டுப்போகிறார்கள். ஏனெனில், "அறியாததை யாரும் விரும்புகிறதில்லை" என்பது பழமொழி. எத்தனையோ கிறீஸ்துவர்களுடைய பத்தி விசுவாசமானது வார்னிஷ் என்னும் மினுக்கெண்ணெய் பூசினபிறகு வெய்யிலிலும் மழையிலும் அந்த மினுக்கெண்ணெய் அழிந்துபோகுமாப்போல் சொற்ப சோதனை வரும்போது அவர்களுடைய பத்தி விசுவாசமும் ஒழிந்துபோகும். பத்தி விசுவாசம் மினுக்கெண்ணெயைப் போலிராமல் ஆழ்ந்து பதியவேண்டும். அந்தப் பத்தி விசுவாசம் ஆழமாய்ப் பதியும்படி தொட்டிலிலும், வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், கூட்டங்களிலும், சூழ்ந்திருக்கிற ஆகாயத்திலுங்கூட மல்லிகைமலர் வாசனை வீசுமாப்போல் அந்தப் பத்தி விசுவாசம் விளங்கவேண்டும். அந்தப் பத்தி விசுவா

சம் குடும்பத்தில் வளரத் தவறிப்போனாலும் நமது பள்ளிக்கூடத்திலாவது மெய்யான கிறீஸ்துவ பத்தி விசுவாசத்தை வளர்க்கும்படி எவ்விதத்திலும் பிரயாசப்படுவோமாக. இது தான் நமது கடைசி நம்பிக்கை. இதுவே இரக்ஷணியத்தின் பலகை.

(சத்தியநேசன்.)

---

## Pagan Practices.

### அக்கியான சடங்காசாரங்கள்.

சேசுநாதசுவாமியும் அர்ச். தேவமாதாவும் கானாவென்ற ஊரில் நடந்த கலியாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தபோது, அவ்விடத்தில் தேவமாதாவின் மன்றாட்டைக் கேட்டு, சேசுநாதர் தமது முதல் அற்புதத்தைச் செய்து அந்தக் கலியாணத்திற்கு ஞான சந்தோஷத்தையும் தேவ ஆசீர்வாதத்தையும் கொடுத்ததினாலே, அந்த மணவாளர்கள் எவ்வளவோ பாக்கியம் பெற்றார்கள். ஆதலால் நீங்களும் உங்கள் கலியாணங்களில் அவர்களை அழைத்துக்கொண்டால், நீங்கள் காணாத விதமாய் அவர்கள் உங்கள் கலியாணங்களுக்கு வந்து மணவாளர்களை ஆசீர்வதிப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், பசாசையும் கூட அழைத்துக்கொண்டீர்களானால் உங்கள் கலியாணத்திற்குத் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதென்பது உறுதி.

சகுன சாஸ்திரம் பார்ப்பதும், அக்கியான சடங்குகளைச் செய்வதும் அல்லது அக்கியானத்துக்குச் சம்பந்தப்பட்ட வேறு எந்தக் காரியத்தையாகிலும் செய்வதும் பசாசை அழைத்துக்கொண்டதுபோலாகுமென்பதினால், சர்வேசுரன் இவைகளைக் கண்டிப்பாய்த் தமது வேதத்தில் விலக்கியிருக்கிறார். மனிதர்களைக் கெடுக்கத்தேடுகிற பொல்லாத சத்துருவாகிய பசாசு உங்கள் கலியாணத்தில் பிரவேசித்தால், கிடைக்கத்தக்க தேவ ஆசீர்வாதத்திற்கு அதினால் விக்கினமுண்டாகி, கலியாணத்திற்கு முன்னாவது பின்னாவது பல தின்மைகள் விளைவதற்குக் காரணமாகும்.

இந்தத் தேசத்தில் அநேகர் படிப்புக் குறைவினால், அக்கியானிகளுடைய சகுன, சாஸ்திர சடங்குகளில் அடங்கிய தப்



பறைகளையும் தின்மைகளையும் கண்டுபிடிப்பதில்லை. சிலர் பொய்ச் சாஸ்திரக்காரரிடத்தில் போய் நல்லநாளும் முகூர்த்தமும் கலியாணத்திற்குக் கேட்பார்கள். இது வேதத்திற்கும் புத்திக்கும் ஒவ்வாத பைத்தியமொழிய வேறல்ல.

யாதொரு வித்தியாசமுமில்லாமல் எந்தநாளும் எந்தநேரமும் கலியாணத்துக்கும் மற்ற எந்த நல்ல காரியத்துக்கும் தக்கவைகளேயாம். ஆயினும் கிறீஸ்துவர்களில் அநேகர் கலியாண நாளை நியமிக்க அப்படிப்பட்ட ஆகாத சகுனசாஸ்திரங்களை அநுசரிக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அக்கியானிகள் பெண்ணுக்கு முன்சுழி, ஏறுநெற்றி முதலிய குற்றங்களையெண்ணி, அப்படிப்பட்ட துரதிர்ஷ்ட அடையாளங்களால் புருஷனுக்குச் சாவு வருமென்பது முதலிய சாஸ்திரங்களைப் பார்த்துவருகிறார்கள். மேற்சொல்லிய குறைகளினால் நல்ல சமுசாரத்துக்கு நேரிடும் விக்கினமென்ன? கெடுதி என்ன? ஒன்றுமில்லை.

பத்தி விசுவாசத்தில் குறைச்சலுள்ள கிறீஸ்துவர்கள் தங்கள் கலியாண சடங்குகளில் அக்கியானிகளைப்போலே செய்துவருகிறார்கள். இது வேதத்திற்கு ஒவ்வாத காரியம்.

சிலர் தாலியில் பிள்ளையார் அடையாளம் வைப்பதும், தாலிக்கயிற்றில் நூற்றெட்டு நூல் கோர்ப்பதும், ஆலாத்தி எடுப்பதும், அரசமரத்தின் கிளையைக் கட்டுவதும், கலியாண விருந்தில் பதார்த்தங்களை எண்ணிக்கை பார்த்து வைப்பதும், பாத்திரங்களின் கணக்கிலும் ஒரே திட்டம் அநுசரிப்பதும், சாஸ்திரம்பார்த்துத் தேங்காய் உடைப்பதும், இன்னும் இவைபோன்ற மற்றநேக அக்கியான சடங்குகளும் அர்ச். பாப்பானவரால் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட அக்கியான சாஸ்திர சடங்குகள் வழியாய்ப் பசாசு உங்கள் கலியாணங்களில் நுழைந்து தேவ ஆசீர்வாதத்திற்கு விக்கினமுண்டாக்கும். இப்படிப்பட்ட அக்கிரமங்களை ஆண்டவர் தண்டிக்கிற விதமெப்படி? காசநோயுள்ள தாய் தகப்பனுக்குக் காசநோயுள்ள பிள்ளைகள் பிறக்கிறதும், துர்க்குணமுள்ள தாய் தகப்பனுக்குத் துர்க்குணமுள்ள பிள்ளைகள் பிறக்கிறதும் வழக்கம். தாய் தகப்பனுடைய நோயும், துர்க்குணங்களும் ஜென்மவழியாய் அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தொத்துகிறதினால் அப்படிச் சம்

*

பவிக்கிறது. பெற்றோர்களுடைய குற்றங்களைப்பற்றித் தேவ கோபாக்கினை பிள்ளைகள்மேல் நிற்பதுண்டு.

சிலர் கோவில் கலியாணம் செய்தாலும் தக்க ஆயத்தம் செய்யாததினாலும் அக்கியான சடங்குகளைச் செய்ததினாலும் பசாசு நுழைந்து அவர்கள் தேவ ஆசீர்வாதம் பெறாமல் கலியாணம் செய்யக் காரணமாயிருந்தது. தேவ ஆசீர்வாதம் இல்லாத குடும்பம் எப்போதும் நிர்ப்பாக்கியமாயிருக்கும். கிறீஸ்துவர்களே, நாம், “அர்ச்சியசிஷ்டவர்களுடைய பிள்ளைகளானோம்; ஆதலால் சுவாமியை அறியாத ஜனங்களைப் போலே நாம் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது.” (Tobias)

---

## Advice to Christian Wives.

### கிறீஸ்துவ மனைவிகளுக்குப் புத்திமதி.

கிறீஸ்துவ பெண்சாதியானவள் எப்போதும் தன் புருஷனுக்குச் சந்தோஷமும் பாக்கியமும் உண்டாகும்படி நடக்கக்கடவாள். பின் வரும் புத்திமதிகளைக் கேட்டு அவைகளின்படி நடப்பாளேயானால் அவள் குடும்பத்தில் எப்போதும் பாக்கியமும் சமாதானமும் நிலைத்திருக்கும்.

1. பெண்சாதி தன் புருஷனுடைய குறைவுகளை யாருக்கும், தன் சிநேகிதர்களுக்குமுதலாய் வெளிப்படுத்தாமல் இருப்பாளாக.

2. புருஷன் செய்யும் வேலை, ஏற்பாட்டு விஷயத்தில் கவனித்து, அவனைப் புகழ்ந்து தைரியப்படுத்துவாளாக.

3. வீட்டில் தங்கள் இருவருக்கும் சச்சரை உண்டானால் பெண்சாதி தன் புருஷனோடு வெகுநேரம் தர்க்கம் பண்ணாமலும், அவனுக்குக் கோபம் உண்டாக்காமலும் எப்போதும் எச்சரிக்கையோடே நடப்பாளாக.

4. புருஷன் தன் வீட்டின்பேரில் பிரியமாயிருக்கும்படி பெண்சாதி அந்த வீட்டைச் சுத்தமாயும், சீராயும், இன்பமுள்ளதாயும் வைத்திருப்பாளாக.



5. பெண்சாதி பாவமில்லாத எல்லாக் காரியங்களிலும் தன் புருஷனுக்குச் சுறுசுறுப்போடே கீழ்ப்படிந்து நல்ல மனமுடையவளாய் இருப்பாளாக.

6. கலியாணம் செய்தநாள் துவக்கி, மரணபரியந்தம் சமுசாரத்தில் சண்டை, சச்சரவு, மனஸ்தாபம் ஒன்றும் உண்டாகாமல், எப்போதும் நித்திய சமாதானம் இருக்கும்படி பிரயாசப்படுவாளாக.

பெண்சாதிகள் மேற்சொல்லிய புத்திமதிகளைச் சுமுத்திரையாய் அநுசரித்து நடப்பார்களேயானால் புருஷர்கள் அதிக நல்லவர்களும் பாக்கியசாலிகளுமாய் இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படி நடப்பதற்குப் பெண்களுக்கு மெய்யான புண்ணியமும், நற்குணமும் அவசரம். ஏனெனில் புண்ணியமானது இப்பூலோகத்தில் முதலாய்ப் பாக்கியத்துக்கு அஸ்திவாரம். (ஞானி.)

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய இராமகிருஷ்ணா,

கடவுள் ஒருவர்மாத்திரம் இருப்பதுபோல் மனுக்குலமும் ஒன்றுதான். மனிதர்கள் எல்லோரும் ஓரே மனிதனுடைய மக்கள். உலகத்திலே பற்பல ஜாதி பேதகங்களை மனிதன் ஏற்படுத்திக்கொண்டாலும் கடவுள் உண்டாக்கிய மனுப்பிறவி ஒன்றுதான். மனுஷர் எல்லோரும் பிறப்பினால் ஓரே தன்மையானவர்களும் ஓரே சுபாவமுள்ளவர்களுமாயிருக்கிறபடியால் கடவுள் அருளிய வேதம் எல்லோருக்கும் ஏற்றதாயிருக்கவேண்டும். எல்லோருக்கும் ஏற்ற ஒருவேதத்தைக் கடவுள் கொடுத்திருக்க ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தங்கள் இஷ்டம்போல் வெவ்வேறு மார்க்கங்களை ஏற்படுத்தி அவைகளை அநுசரித்து வருவது பெருங் குற்றமன்றோ?

இந்தியா முழுவதுக்குமென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு இராஜசட்டத்தை நீலகிரி ஜனங்கள் தள்ளிவிட்டுத் தங்கள்

பிரியப்படி வேறொரு சட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளத் துணிவார்களோ! இல்லையே: சகல மனிதரையும் படைத்து ஆண்டு நடத்திக்கொண்டு வருகிற கடவுள் ஒருவர்தான். ஒருவரான கடவுள் தம்மை மனுஷருக்கு வெளிப்படுத்துகிறபோது, ஒரு தேசத்தில் தம்மை சிவனென்றும், வேறு தேசத்தில் தம்மை அல்லாவென்றும், இன்னொரு தேசத்தில் அக்கினியென்றும், மற்றொரு தேசத்தில் தம்மை கிறீஸ்துவென்றும், ஒன்றுக்கொன்று விபரீதமாய் வெளிப்படுத்துவாரா? உண்மையேயல்லாமல் பொய்யின் நிழலும் அறியாத கடவுள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்வார் என்று நினைத்தலும் தோஷமே.

நித்தியமோட்சமும் ஒன்றுதான். மோட்சத்தை அடைகிற புண்ணியவழி மனுஷரெல்லோருக்கும் ஒன்றேயாமொழிய வேறாகமாட்டாது. இந்த விஷயத்திலும் கடவுள் இங்கொன்றும் அங்கொன்றுமாக சொல்லியிருக்கமாட்டார். ஆனபடியால் சகல மனிதருக்கும் பொதுவாக மெய்யான ஒரு வேதந்தான் இருக்கவேண்டும். அது ஒரு மெய்யான கடவுளைப் பற்றி மாத்திரம் எல்லோருக்கும் போதிக்கும். ஒரே புண்ணிய வழியை மாத்திரம் எல்லோருக்கும் காட்டும். அது எந்த ஜாதிக்கும், எந்த ஜனத்துக்கும், எந்த தேசத்துக்கும் ஏற்றதாயிருக்கும். எல்லா மனிதருடைய இருதயங்களையும் அது திருப்தியாக்குவதோடுகூட சகலருக்கும் அதன் நன்மைகளிலே பங்கு உண்டு.

சத்திய வேதத்தைத் தவிர வேறெந்த மார்க்கத்திலும் மேற்சொன்ன அடையாளங்களை நீ காணமாட்டாய். சத்திய வேதம் ஒன்றே. சகல ஜாதி ஜனங்களுக்கும் சகல தேசத்தாருக்கும் பொதுவானது. சத்தியவேதம் உலகமெங்கும் ஒரே கடவுளைப் போதித்து, ஒரே புண்ணிய வழியை எல்லோருக்கும் காட்டுகிறது. அதிலே ஜாதிக்கொரு தெய்வமில்லை. செல்வர்க்கொரு வழி எளியோர்க்கொரு வழியில்லை. சகலருக்கும் ஒரே புண்ணியவழிதான் ஏற்பட்டிருக்கிறது. சத்திய வேதம் உலகமெங்கும் உள்ளது. அதினால் சகல ஜாதியாரும் நன்மையடைந்து வருகிறார்கள்.

ஆகையால் பிரிய சிநேகிதா! சத்தியவேதத்தின் பரிசுத்தமான புண்ணிய வழி ஒன்றே எல்லா தேசத்தாருக்கும், எல்



லாக் காலத்துக்கும் ஏற்றதும், சகல ஜாதியாருக்கும் பொதுவுமாயிருக்கிறது. மறு உலகத்தில் நித்தியமாய்ப் பாக்கியத்தைக் கொடுக்கக்கூடியது அதுவேயாகையால் நீயும் அதைத் தழுவிக்கொள்ளவேண்டும்.

இப்படிக்கு,
உன் பிரிய சிநேகிதன்.

---

## A little problem

### ஒரு சிறிய கணக்கு.

ஒரு இன்ஸ்பெக்டர் அம்மாள் ஒரு கத்தோலிக் பள்ளிக்கூடத்தில் கணக்கு விஷயத்தில் பிள்ளைகளை சில கேள்விகள் கேட்டாள். அவள் ஒரு பிள்ளையைப்பார்த்து, "பவுன் 4 அணா வீதம் தினம் 2 பவுன் கறி வாங்கினால் ஒரு வாரத்திற்கு என்ன செலவாகும்" என்று கேட்டாள். அதற்கு அந்தச் சிறு பிள்ளை யோசித்து சற்றுநேரம் கழித்து "பவுன் 4 அணா வீதம் தினம் 2 பவுன் கறி வாங்கினால் ஒரு வாரத்திற்கு 3 ரூபாய் ஆகும்" என்று பதில் சொன்னாள். "எப்படி, வாரத்திற்கு ஆறுநாள்மாத்திரம் இருக்கிறதா" என்று இன்ஸ்பெக்டர் அம்மாள் கேட்டாள். "இல்லையம்மா! வாரத்திற்கு ஏழுநாள் தான். ஆனால் எங்கள் வீட்டில் வெள்ளிக்கிழமை கறி சாப்பிடுகிறதில்லை" என்று அந்த புத்திசாலிப்பிள்ளை சொன்னாள்.

---

## How the Messenger is growing up.

### நமது தூதன் பெரிதானதற்குக் காரணம்.

ஒருநாள் ஒரு நண்பர் பத்திராதிபரிடத்தில் வந்து அர்ச். அந்தோனியார் தூதனைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, "உமது தூதனில் அநேக நற்புத்திகள் அடங்கியிருப்பதினால் அது கிறீஸ்துவர்களுக்கு மெத்த நன்மையாயிருக்கும். நானும் அதை வாக்கி மாதாமாதம் ஒரே மூச்சாய் வாசிக்கிறேன். ஆனால் அதைக் கொஞ்சம் பெரிதாகச் செய்தால் அதிக நலமாயிருக்கும்" என்றார்.

*பத்திராதிபர்:* "அது பெரிதாகவேண்டுமென்பது நமது கருத்துத்தான் சண்டை முடிந்த பிறகு அதைப் பெரிதாக்கலாமென்று யோசனை பண்ணுகிறோம்."

*நண்பர்:* "ஏன்: அவ்வளவுகாலம் காத்திருக்கவேண்டும்: இந்த வருஷத்தில் அதைப் பெரிதாக்கக்கூடாதோ?"

*பத்திராதிபர்:* "தற்காலம் காகிதத்தின் விலை அதிகம் என்று உமக்குத் தெரியாதோ?"

*நண்பர்:* 200 காப்பிகளுக்கு மாதம் என்ன செலவுபிடிக்கும்"

*பத்திராதிபர்:* 200 காப்பிகளுக்கு தற்காலம் அச்சுக்கூலி ரூ. 9-8-0; கட்டுக்கூலி ரூ. 0-2-0; தபாற் கூலி ரூ. 0-8-0. ஆக ரூ. 10-2-0 ஆகிறது. அதில் ஏறக்குறைய 100 காப்பிகள் வெளியூர்களிலுள்ள சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படுகின்றன. மீதியாயுள்ள காப்பிகளெல்லாம் குன்னூர் விசாரணையிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்படுகின்றன. 4 பக்கம் சேர்த்து 12 பக்கமாகப் போட்டால் ஏறக்குறைய மாதம் ரூ. 12-8-0 செலவாகுமென்று உத்தேசிக்கிறேன்."

*நண்பர்:* "சரி: சரி: எப்படியாவது 12 பக்கங்களாகவாவது போடுங்கள். அதினால் உங்களுக்கு என்ன நஷ்டம் வருமோ அந்த நஷ்டத்தில் பாதியை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்."

*பத்திராதிபர்:* "அப்படியேயாகட்டும். உமக்கு மெத்த வந்தனம். ஆனால் நஷ்டத்தில் இன்னம் ஒரு பாதியிருக்கிறதே! யார் அதை பத்திராதிபருக்குக் கொடுப்பார்?

(Deus providebit)

---

## Saverippulavan.

## சவரிப்புலவன்.

பின்வரும் சரித்திரம் கிறீஸ்துவர்களுக்குள்ளே பரம்பி வருகிறது. வாலிபாளையம் பங்கு விசாரணையைச் சேர்ந்த கணவக்கரை என்னும் ஊரில் சவரி என்னும் ஓர் கிறீஸ்துவப் பையனிருந்தான். சிறு பிராயத்தில் அவன் எவ்வளவு மந்தப் புத்தியுள்ளவனாயிருந்தானென்றால் அவன் ஆத்திச்சுவடி எழுத்துக்கள் முதலாய்ப் படிக்க சக்தியற்றவனாயிருந்தான். ஆதலால் அவன் பள்ளிக்கூடத்தில் கோபமுள்ள உபாத்தியாயரிடத்தில் எத்தனையோ அடி வாங்கினதுமல்லாமல், வீட்டிலும் அவனைப்பற்றி வெட்கப்பட்ட தாய்தந்தையரும் அவனை அடிக்கடி தண்டித்துவந்தார்கள். அந்த நிர்ப்பாக்கியனான பையன் அவநம்பிக்கைப்பட்டு தேவமாதாவை நினைத்து வேண்டிக்கொண்டு அவள் ஆதரவில் தன்னை வைத்துக்கொண்டான். ஒருநாள் சில முட்செடிகளையும் சில கற்களையும் கொண்டுபோய் தேவமாதாவின் பீடத்திற்கு முன்னால் வைத்து அவைகளின்மேல் முழங்காலிலிருந்து தேவமாதாவைநோக்கித் தனக்குப் படிக்கும் வரத்தைக் கொடுக்கும்படி மன்றாடினான். அப்போது தேவமாதா சுரூபம் புதுமையாக பீடத்தைவிட்டுக் கீழிறங்கி அவனுடைய நாவைத்தொட்டு "உன் மன்றாட்டுகள் கேட்கப்பட்டன" என்று சொல்லி அச்சுரூபம் திரும்பி பீடத்துக்குப் போனதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். பிறகு சவரிப் புலவன் பள்ளிக்கூடத்துக்குப் போய் நன்றாய்ப் படித்து புத்தித் தெளிவும், தீக்ஷணியமும் அடைந்ததைப்பற்றி எல்லாரும் ஆச்சரியப்பட்டார்களாம். இவ்விதமாக அவனைப்பற்றி ஜனங்கள் இன்னும் அநேக விநோத கதைகள் சொல்லுகிறார்கள். அவன் வளர்ந்தபிறகு திருச்சபைக்கு அடங்காமல் கெட்ட கிறீஸ்துவனாய் நடந்து வந்தான். பிறகு அவன் திருச்சபையிலிருந்தும் ஜாதியிலிருந்தும் தள்ளப்பட்டு பசாசின் வல்லமையினாலேயோ வேறு உபாயத்தினாலேயோ விநோத அதிசயங்களைச் செய்துவந்ததாகவும் சொல்லுகிறார்கள். திருச்சபைக்கு அடங்காமலிருந்ததினால் அவன் இறந்தபிறகு கிறீஸ்துவக் கல்லறையில் முதலாய் அடக்கம் செய்யப்படவில்லை. இந்த முகாந்தரத்தினாலும் திருச்சபையால் விலக்கப்பட்ட அஞ்ஞான சடங்குகளை ஜனங்கள் அந்தக் கல்லறையில் போய் செய்வதினாலும் கிறீஸ்துவர்கள் அந்தக் கல்லறையில் யாதொரு சடங்கும், வேண்டுதலும் செய்வது கூடாதென்று ஞாயமாய் விலக்கப்பட்டிருக்கிறது.



---

## Here and there.

## நானா சங்கதி.

• Belgium: சென்ற ஜூன்-மீ 7-உ பெல்ஜியம் தேசத்தில் மெஸ்ஸின்ஸ் (Messines) என்னுமிடத்தில் பிரிட்டிஷ்காரர் ஓர் விசேஷித்த வெற்றியடைந்தார்கள்.

Greece: நேச அரசர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் சென்ற ஜூன்-மீ 13-உ கிரீஸ் தேசத்து அரசராகிய கான்ஸ்டன்டைன் என்பவர் தமது குமாரர் அலெக்சாந்தருக்குத் தமது சிம்மாசனத்தைக் கொடுத்துவிட்டுத் தமது ஆளுகையை விட்டு நீங்கினார்.

Atticode: கடந்த மே-மாதம் 24-உ அத்திக்கோட்டில் தம்பியண்ணன் என்னும் கிறீஸ்துவ மணியகாரனை சில கொலைபாதகர் வெட்டி தலையைக் கொண்டுபோய்விட்டனர். போலீசார் அந்தக் கொலைபாதகரைக் கண்டுபிடிக்கத் தேடித் திரிகிறார்கள்.

St. Theodore's Sanatorium: புதுச்சேரி அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். (Rev. Fr. Mette) மெத் சுவாமியார் சென்ற மே-மீ 30-ம்உ செய்ன்ற். தெயடோர்ஸ் சனிட்டோரியத்தில் மரணமடைந்தார். அவர் உபதேசிகளுக்கு ஓர் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி வெகு பிரயாசப்பட்டு சிரத்தையுடன் அதை நடத்திவந்தார். R. I. P.

St. Mary's Home: கடலூர் அர்ச். சூசையப்பர் ஐஸ்கூல் உபாத்தியாயராகிய சங். (Rev. Fr. Loubiere) லூபியர் சுவாமியார் St. Mary's Home என்னும் ஒரு புதுப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி அதற்காக நேர்த்தியான ஓர் கட்டடத்தைக் கட்டி முடித்தார். அந்தப் பள்ளிக்கூடத்தின் முக்கிய கருத்து என்னவென்றால், 11 வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தையும், நற்படிப்பினையையும், இங்கிலீஷ் பாஷையையும் கற்றுக்கொடுப்பதுதான். St Joseph of Cluny என்னும் சபையில் சேர்ந்த சீர்மைக் கன்னியாஸ்திரிகள் அதில் உபாத்திமைத்தொழில் செய்து வருகிறார்கள்.

Victims of the War: அர்ச். பாப்பானவர் உத்தரவுப் பிரகாரம் மகா வந்திக்கத்தக்க நமது கோயமுத்தூர் மேற்றிராணியார் சண்டையினால் அதிக நஷ்டப்பட்ட ருஷியாதேசத்திலுள்ள (Lithuania) லித்துவேனியா கத்தோலிக் கிறீஸ்துவர்களுக்காக தமது மேற்றிராசனத்தைச் சேர்ந்த கோவில்களில் தர்ம வசூல செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறார்.

---

THE REGISTRAR OF BOOKS 1-AUG 1917 MADRAS


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. August 1917. No. 8.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 8.


## Higher Education.

### உயர்தரக் கல்வி.

பெங்களூரில் மேற்றிராணிமார்களின் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டதாவது:—

"கத்தோலிக் உயர்தரக் கல்வி அபிவிர்த்தி விஷயமாக
இச்சங்கம் தீர்மானிப்பதென்னவெனில், கத்தோலிக்கரின்
உலக செல்வாக்கை உயர்த்த இது ஓர் பலத்த சாதனந்தா
னென இச்சங்கம் பூரணமாய் உணருவதுடன் அவ்வகை அபி
விர்த்தியை ஆதரிக்க ஏற்ற சாதனங்களைத் தேடக் குருக்க
ளுடன் ஏகோபித்துழைப்பது தங்கள் கடமையென விசுவாசி
கள் கண்டுபிடித்திருப்பதைப்பற்றித் திருப்தி அடைந்தும்
இருக்கிறது. ஆகையால் இவ்வுயர்தரக் கல்வி அபிவிர்த்தி
யைத் தேடக் கத்தோலிக்கருக்கு உதவிபுரியும்பொருட்டுப்
பணம் வசூல்செய்ய உத்தரவளிக்கவேணுமாய்க் கத்தோலிக்
இந்தியரில் சில பெரியவர்கள் சென்னை அதிமேற்றிராணியா
ருக்குச் செய்துகொண்ட விண்ணப்பத்தை இங்கு கூடிய மேற்
றிராணிமார்கள் சந்தோஷமாய் அங்கீகரிக்கிறார்கள். ஆனால்
அப்படிப் பணம் வசூல் செய்வதற்குமுன் எந்த மேற்றிராசனத்
தில் பணவசூல் செய்யப்போகிறார்களோ அந்த மேற்றிராணி
யாரிடம் எழுத்து மூலமாய் அநுமதி பெற்றபின் வசூலை ஆரம்
பிக்கவேண்டியது."

மனிதனுடைய புத்திக்கு ஓய்வுமில்லை; களைப்புமில்லை; இளைப்புமில்லை. ஆகையால் இப்படிப்பட்ட புத்திக்குக் கல்வியென்கிற தலைவன் இல்லாவிட்டால் அது கடிவாளமில்லாத குதிரைபோலவும், யதேச்சையாய்த் திரியும் குரங்குபோலவுமிருக்கும். ஆதலின் கல்வி மனிதனுக்கு அவசியமானது. மீளவும் கல்வியானது எவ்வளவு உயர்ந்த அந்தஸ்திலிருக்குமோ அவ்வளவு மனிதனுடைய புத்தி விர்த்தியடையும். படித்தவனுக்கும் படியாதவனுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் நாள்தோறும் கண்டுவருகிறோம். படித்தவன் கூடியவரையில் தன்னுடைய படிப்புக்குத் தகுந்த புத்திசாலியாயும், நல்லொழுக்கமுள்ளவனாயும், யோக்கியமான யாதொரு ஜீவனம் செய்யக்கூடியவனாயும் இருப்பான். படியாதவனோவென்றால் மாடு மேய்க்கவும், விறகு வெட்டவும், கல், மண் முதலியவை சுமக்கவும், இன்னும் மற்றக் கஷ்டமான வேலை செய்யவுமே உபயோகப்படுவான்.

கல்வி எல்லாருக்கும் அவசியம் வேண்டியதே. ஆயினும் சகலரும் உயர்தரக் கல்வி படித்துச் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்து உயர்ந்த அந்தஸ்துக்குப் போனால், பூமியை உழவும், கைத்தொழில் செய்யவும், வியாபாரம் செய்யவும் ஒருவரும் இருக்கமாட்டார். ஆதலால் புத்தியின் அபிவிர்த்திக்காக யாவரும் படிக்கவேண்டுமேயொழிய உத்தியோகத்தையே நாடிப் படிக்கவேண்டியதல்ல. படிப்பதற்கு உத்தியோகமாத்திரம் காரணமென்று சொல்வது தலைக்காகக் குல்லா என்று சொல்வதற்குப் பதிலாய்க் குல்லாவுக்காகத் தலையென்று சொல்வதுபோலாகும்.

நமது இந்தியா தேசத்தில் வேத போதகரும், சர்க்காரும் ஜனங்களுடைய கல்வி அபிவிர்த்தியின்பொருட்டு அநேக மடங்களையும், கலாசாலைகளையும் ஏற்படுத்தி, தாராளமாய்ப் பணச் செலவு செய்து அவைகளை நடத்திவருகிறார்கள். கத்தோலிக் பள்ளிக்கூடங்களில் கத்தோலிக்கரில் அநேகர் அதிக பணச் செலவு செய்யாமலே படித்துக்கொண்டு மேலான உத்தியோகங்களிலமர்ந்து தகுந்த அந்தஸ்திலிருக்கிறார்கள்.

அநேகர் இக்காலத்தில் உயர்தரக் கல்வி வேண்டுமென்று உரத்த சத்தமாய்க் கேட்கிறார்கள். ஆனால், "காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும்; காற்றைப்போல் அது பறக்கவும் வேண்டும்" என்பதுபோலவும், "புல் உண்ணாத பசுவும்



வேண்டும்; பூரணமாக அது கறக்கவும்வேண்டும்" என்பதுபோலவும், அவர்கள் "உயர்தரக் கல்வி வேண்டும்; பணச் செலவு செய்யாமல் இருக்கவும் வேண்டும்" என்று ஆசைப்பட்டால் எப்படி அவர்கள் கருத்து நிறைவேறும்? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோலல்லோ ஆகும்?

உயர்தரக் கல்வி கற்கப் படிப்படியாய் எலிமெண்டரி பாடசாலைகளிலும், ஸெக்கண்டரி பாடசாலைகளிலும் படிக்கவேண்டும். இப்படிப்பட்ட கலாசாலைகள் நமது தென் இந்தியாவிலுள்ள கத்தோலிக் மாணாக்கர்களுக்கு எங்கும் குறைவில்லாமல் தாராளமாய்த் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அந்தந்தக் கத்தோலிக் பாடசாலைகளில் எத்தனை கத்தோலிக் மாணாக்கர்கள் வாசிக்கிறார்களென்று பங்குசுவாமியாரையும், உபாத்திமார்களையும் கேளுங்கள். குன்னூர் அர்ச். அந்தோனியார் ஸெக்கண்டரி பாடசாலையில் படிக்கும் 225 மாணாக்கர்களில் சுமார் 50 மாணாக்கர்களே கிறீஸ்துவர்கள். அதிலும் ஏழாவது வகுப்பிலுள்ள 25 மாணாக்கர்களில் 3 பேர்மட்டும் கிறீஸ்துவர்கள்! கோயம்புத்தூர் அர்ச். மிக்கேல் ஹைஸ்கூலில் ஆறாவது பாரத்தில் படிக்கும் கத்தோலிக் மாணாக்கர் வெகு சொற்பப்பேர்தான். திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் காலேஜின் உயர்ந்த வகுப்பில் வெகு சொற்பக் கத்தோலிக் மாணாக்கர் படித்து வருகின்றனர்.

தாய் தந்தையரே! உங்கள் மக்களை நமது கத்தோலிக் பாடசாலைக்கு அனுப்புகிறதுமல்லாமல் நமது கத்தோலிக் பள்ளிக்கூடத்திற்குத் தகுந்த சம்ரட்சணை செய்யும்படி உங்களால் கூடியமட்டும் முறையிடாமல் உதவி செய்துவாருங்கள். தேவ ஆசீர்வாதத்தினாலே மேலான அந்தஸ்தில் இருப்பவர்களே! உங்கள் தர்மகுணமுள்ள இருதயத்தைத் திறந்து ஏழைப் பிள்ளைகளுடைய படிப்புக்காக ஸ்காலர்ஷிப், அதாவது உபகாரச் சம்பளம் ஏற்படுத்துங்கள். அப்படியே கத்தோலிக் உயர்தரச் செல்வாக்கை உயர்த்தவேண்டுமானால் தாங்களே பிரயாசப்பட்டு, அந்த ஏணிப்படிகளின்மேல் படிப்படியாய் ஏறிப்போகவேண்டும். வேதபோதக சபைகள் இந்த நல்ல கருத்து நிறைவேறும்படி உதவிசெய்யும். "முந்த முந்த நீ உனக்குத்தானே உதவி செய்துகொள். பிறகு பரலோகம் உனக்கு உதவிசெய்யும்." (சத்தியநேசன்)

# Duties of Parents towards their Children.

*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

போன சஞ்சிகைகளில் "சாதாரணமாக ஒரு பிள்ளை தன் இளம்பருவத்தில் எப்படியிருக்குமோ, அப்படியே தன் முதிர் வயதிலும் இருக்கும். ஆதலால், இளம்பருவத்தில் புண்ணியம் செய்யப் பழகினவன் தன் முதிர்வயதிலும் அதன்படி நடந்துகொள்வான்" என்று ஒப்பித்துக்காட்டினேன். காரியம் இப்படியிருக்க, தாய் தந்தையர்களே! உங்கள் பிள்ளைகளை நீங்கள் எப்படி வளர்க்கிறீர்கள்? தேவ இஷ்டப்பிரசாதத்தால் உயர்த்தப்பட்ட தாய் தந்தையர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதமென்ன? ஊர்வன, நடப்பன, பறப்பன தங்கள் குஞ்சுகளை, குட்டிகளைப் பேணிவளர்க்கையில், பகுத்தறிவுள்ளவர்களாகிய நீங்கள் நெஞ்சு முறியப் பாடுபட்டு உங்கள் பிள்ளைகளை வளர்த்து வருகிறீர்களென்பதற்கு ஐயமில்லை. உண்ணவும், உடுக்கவும், ஒய்யாரமாய் நடக்கவும் சொல்லிக்கொடுக்கிறீர்கள். பேச, எழுத, வாசிக்கக் கற்றுக்கொடுக்கிறீர்கள். இவையெல்லாம் இந்துக்களும், அவிசுவாசிகளும் செய்துவருகிறார்களே! கிறீஸ்துவ தாய் தந்தையர்களே! நீங்கள் இதுமாத்திரம் செய்தால் போதுமா? பிள்ளை வயதில் முதிர்ந்ததும் அவர்கள்மட்டில் உங்கள் கவலையென்ன? "நாங்கள் கண்மூடுமுன் எங்கள் பிள்ளைகள் சுகமாயிருக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல வேலை கற்பித்து வைக்கவேண்டும். எங்கள் பிள்ளை வெயிலில் போகாது. நிழலிலிருந்து சம்பாதிக்கவேண்டும். நோவாமல் எங்கள் பிள்ளை இருந்து சாப்பிடவேண்டும். அதற்காக பி. ஏ; யம். ஏ. பரீக்ஷைகளில் தேறும் வரைக்கும் படிக்கவைக்கவேண்டும். எங்களிடத்திலுள்ள முதலெல்லாம் தோற்றாலும் சரியே; அல்லது எங்கள் பிள்ளை கலியாணத்துக்குத் தோர்வையானது. உள்ள இடம் பார்த்துக் கொடுக்கவேண்டும். என்ன இருந்தாலும் நாங்கள் கண்மூடுமுன்னே எங்கள் பிள்ளைகள் சுகமாயிருப்பதைப் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு இரவும் பகலும் இதே கவலையாய் அநேகர் இருக்கிறார்கள். தங்கள் எண்ணப்பிரகாரம் காரியம் கைகூடிவந்தால் போதும். பிள்ளைகள்மட்டில் தங்களுக்கு உள்ள கடமைகளெல்லாம் தீர்ந்தனவென்று அவர்கள் நினைக்கிறார்கள்.



தாய் தந்தையரே! பெற்ற பிள்ளைகள்மீது கவலை வைப்
பதும், கைத்தொழிலோ, உத்தியோகமோ அவர்களுக்குச்
சம்பாதித்துக் கொடுப்பதும் நியாயமே. நீங்கள் இவைகளைச்
செய்யவேண்டியதுதான். உங்கள் கண்ணுள்ளபோதே அவர்
கள் சுகமாயிருக்க ஆசிப்பதும் நியாயந்தான். சத்திய வேதா
பிமானிகளும், உயிருள்ள விசுவாசிகளுமாகிய நீங்கள் இவை
களை மாத்திரம் ஆசித்தாலும் செய்தாலும் போதுமா?
அப்படிப் போதுமென்பீர்களானால் விசுவாசிகளுக்கும் அவி
சுவாசிகளுக்கும் வித்தியாசமென்ன? உங்கள் விசுவாசம் ஒன்
றும் சொல்வதில்லையா? இதற்காகத்தானா அதாவது, உலகத்
தில் சுகமாயிருப்பதற்காகத்தானா சர்வேசுரன் பிள்ளைகளை உங்
கள் வசம் ஒப்புவித்தார். புழுக்களுக்கு இரையாகப் போகவி
ருக்கும் சரீரத்தைப்பேணி வளர்ப்பதுதானா உங்கள் கடமை?
உங்கள் பிள்ளைகள் உலகத்தில் நாலு பேரைப்போல் சம்பா
தித்துச் சுகமாயிருந்தால் மாத்திரம் போதுமா? அவர்கள்
ஒவ்வொருவருக்கும் **ஒரு ஆத்துமம், ஒரே ஒரு ஆத்துமம்,
அழியாத ஓர் ஆத்துமம்** இல்லையா? இந்த அழியாத ஆத்து
மங்களைப்பற்றி உங்களுக்குக் கவலை ஒன்றும் இல்லையா?
நீர்மேல் குமிழிக்கொத்த இந்த உலக ஜீவியத்தில் கொஞ்ச
நாளிருந்து உங்களைப்போல் உங்கள் பிள்ளைகளும் கண் மூட
வேண்டாமா? கண் மூடினாலும், அவர்கள் காலா காலத்துக்
கும் நித்திய பாக்கியத்துக்காகிலும், நித்திய நிர்ப்பாக்கியத்
துக்காகிலும் ஆளாக வேண்டுமென்று உங்கள் விசுவாசம்
உங்களுக்குச் சொல்வதில்லையா? சர்வேசுரன் எது காரணத்
தைப்பற்றிப் பிள்ளைகளை உண்டாக்கி உங்கள் வசம் ஒப்பு
வித்திருக்கிறார்? தம்மை அறியவும், சிநேகிக்கவும், சிநேகித்
துத் தக்க ஊழியம் செய்யவும், அதனால் நித்தியத்துக்கும்
சிரஞ்சீவிகளாயும், பாக்கியசாலிகளாயும இருக்கும்படிக்கே
அவர்களை உண்டாக்கினார். உங்கள் பிள்ளைகள் இந்தப்
பாக்கியத்தை அடையவல்லோ நீங்கள் பார்க்கவேண்டும்?
இந்தக் கதியை அவர்கள் அடையாவிட்டால் அவர்கள் பிறந்
தும் லாபமென்ன? அவர்கள் பிறவாமலிருந்தால் நலமாயி
ருக்கும். தங்கள் பிள்ளைகள் உலகத்தில் மாத்திரம் சுகமா
யிருக்கவேண்டுமென்று கவலைப்படுகிற தாய் தந்தையர் தங்கள்
பிள்ளைகளை வளர்ப்பதற்குப் பதிலாய் அவர்களைக் கொலை
செய்கிறவர்களென்று சொல்லவேண்டும். வேத புஸ்தகத்தில்
சொல்லியிருப்பதைக் கேளுங்கள். "அக்கிரமிகளான பிள்ளை
கள் அதிகரிப்பதினால் சந்தோஷம் கொள்ளாதே. அவர்

களிடத்தில் தேவ பயமில்லாமல் போமானால் அவர்களைப் பற்றி அகமகிழ்ச்சி கொள்ளாதே. துர்மார்க்கரான ஆயிரம் பிள்ளைகளைவிட, தேவபயமுள்ள ஒரே குமாரன் மேலானவன். துர்மார்க்கரான மக்களை அடைவதைவிட மக்கள் இல்லாதிருப்பது உத்தமம்." (சர்வ பிரசங்கி ஆகமம். 16-ம் அதி. 1-5 வசனங்கள்.) என்று சொல்லியிருப்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். (இன்னும் வரும்.)

எதார்த்தவாதி.

---

## Letter to a Friend.
## சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

உன் அழியாத ஆத்துமத்துக்கு மறுமையில் நித்திய பாக்கியத்தைத் தேடிக்கொள்ள, நீ மெய்யான கடவுள் அருளிச்செய்த ஒன்றான பரிசுத்த வேதத்தைத் தழுவி அதன் கற்பனைகளுக்கொப்ப ஒழுகுவது உன் அதிமுக்கிய கடமையென்று உனக்கு முந்தின கடிதங்களில் சொல்லிக் காட்டினேன். அதுவே சத்திய வேதம். சத்திய வேதம் என்னும் பெயரைக் கேட்கும்போது அது ஏதோ விபரீதமான மார்க்கமென்று நீ எண்ணி மயங்குவாயாக்கும். சத்திய வேதத்தின் தன்மையை அறியப் பிரயாசை எடுக்காததினாலேயும், அதைப்பற்றிச்சரியாய் விசாரித்துப்பாராததினாலேயுமே இந்த மயக்கம் உனக்கு உண்டாகிறதென்று சொல்லத் தேவையில்லை.

சத்திய வேத மென்பது உன்னையும், என்னையும், மற்றனைவரையும் படைத்த ஏக சர்வேசுரன் தாமே உலகத்தில் எழுந்தருளி வந்து போதித்த உண்மை வழியேயன்றி வேறல்ல. கடவுள் நம்மைப்போல் ஒரு மனுவாய் இவ்வுலகத்தில் வந்து, தவத்தைக் காட்டி, மோட்ச வழியை மனுக்குலத்துக்குப் போதிக்குமுன் உலகத்திலே அறியாமையும் பொய்த் தெய்வ ஆராதனையும் எங்கும் பரவியிருந்தது. யோசனையுள்ள மனிதரெல்லோரும் பரகதியைப்பற்றிய உண்மையையும், அதை அடைவதற்குச் செய்யவேண்டிய வழிபாடுகளையும் அறிய மிகவும் ஆவலாய் இருந்தார்கள். ஆனால் உலகத்திலே அறியாதவர்களும், மோசக்காருமான



மனிதர் போதித்த தப்பறைகளில் சிக்குண்டு உண்மையான வழியை அறியமாட்டாமல் இருந்தார்கள்.

உலகம் இப்படி மாய்கையில் கிடந்து அலையும்போது கடவுள் மானிடரூபம் பூண்டு, சத்தியத்தைப் பிரசங்கித்து, நல்ல மனதுள்ளவர்கள் எல்லோரும் அதைப் பின்பற்றி ஒழுகத்தூண்டிவந்தார். சத்திய வேதமானது சகலத்தையும் படைத்துக் காத்து ஆண்டு வருகிற ஒரே தேவனைமாத்திரம் நாம் வணங்கவேண்டுமென்றும், அவர் அளவில்லாத பூரண பரிசுத்தமுள்ளவராய் இருக்கின்றமையால் நாமும் பாவத்தை விலக்கிப் பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டுமென்றும் போதிக்கின்றது. மனிதர்களால் உண்டாக்கி வைக்கப்பட்ட தெய்வங்களாகையால் அவைகளைத் தொழுவதினால் பயனில்லாமல் போவதுமன்றி, அது ஏக மெய்யான கடவுளுக்கு ஏற்காத துரோகமுமாகுமென்று நமக்குச் சத்திய வேதம் காட்டுகின்றது.

சத்தியவேதம் கூறும் கடவுள் ஆதிகாலத்தில் உன் முன்னோராகிய பிதாக்கள் வணங்கிவந்த சிருஷ்டி கர்த்தாவேயன்றி வேறல்லர். அவரோ, உலகமானது தம்மை அறியாமல் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்திக் கிடப்பதைக் கண்டிரங்கித் தமது நித்திய திருச்சுதனை இவ்வுலகில் அனுப்பிச் சத்திய வழியை மானிடருக்கு அறிவித்திருக்கிறார். உன் மதத்தைச் சேர்ந்த எத்தனையோ ஆயிரம் பேர் தங்கள் தப்பறையைக் கண்டுபிடித்து உண்மையைப் பின்பற்றிச் சத்திய திருச்சபையில் சேர்ந்திருக்கிறார்கள். இன்னம் எத்தனையோ பேர் அதில் சேர்ந்து வருகிறார்கள். இது உனக்குத் தெரியாத விஷயமல்ல. ஆகையால் நீயும் அவர்களைப்போல் இவ்வழியில் பிரவேசித்து இதில் என்றும் வழுவாதொழுகி நித்திய ஆனந்த பாக்கியத்தை அடையச் சர்வேசுரனுடைய திருவருளைத் தேடுவாயாக. மனமிருந்தால் வழியைக் காண்பாய்.

இப்படிக்கு,

உன் பிரிய சிநேகிதன்.

## The Correct Things for a Funeral.

### கிறீஸ்துவ அடக்கத்திற்கு தகுந்த ஒழுங்குகள்.

மரித்தவருடைய கையில் ஒரு பாடுபட்ட சுரூபத்தை வைத்து பிரேதத்தின் பக்கத்தில் மெழுகுதிரிகளை கொளுத்தி வைப்பது ஒழுங்கு.

மரித்தவருடைய ஆத்துமத்துக்காக வேண்டிக்கொள்வதும், கூடிய சீக்கிரம் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசைசெய்து ஒப்புக்கொடுப்பதும் ஒழுங்கு.

சுவாமியாரைக் கூப்பிட்டுக் கோவிலிலும் கல்லறையிலும் பிரேதத்தை மந்திரிக்கச் செய்வதும் ஒழுங்கு.

அடக்கத்திற்கு முந்தி செலுத்த வேண்டிய கோவில் மிராசைத் தர்க்கம் செய்யாமலும் முறைப்படாமலும் செலுத்தி விடுவதும் ஒழுங்கு.

மரித்தவருடைய உற்றார், பெற்றோர், பந்துக்கள் அடக்க சமயத்தில் குடித்துவிட்டு மதிமயங்கி மரியாதையில்லாமல் சந்தடிசெய்து கோவில் பிள்ளையை தூஷிப்பது ஒழுங்கல்ல.

ஏழைகள் உலக ஆடம்பரமான அடக்கத்துக்கு வீண் செலவுசெய்து மரித்தவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசை ஒப்புக்கொடுக்காமலிருப்பதும் ஒழுங்கல்ல.

அடக்கத்திற்குப் பஜனைவைப்பதும், அஞ்ஞானப்பாட்டுப் பாடுவதும், அஞ்ஞான சடங்கு செய்வதும் ஒழுங்கல்ல.

மரியாதையில்லாத அஞ்ஞானிகளை அடக்கத்திற்குக் கூப்பிடுவதும் ஒழுங்கல்ல.

திருச்சபைக்கு அடங்காதவருடைய சவத்தை கோவில் சடங்கு முதலிய காரியங்களை செய்யவும், மந்திரிக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யக் கேட்பதும் ஒழுங்கல்ல.

பிரேதப்பெட்டிக்கு வீட்டில் ஆணிவைத்து மூடாமல் கோவிலிலும், கல்லறையிலும் அதைத்திறந்துவைத்து முகத்தைப் பார்க்க வேண்டுமென்று கேட்பதும் ஒழுங்கல்ல. (ஞானி)

---



## An Accursed Village.

### ஓர் சபிக்கப்பட்ட கிராமம்.

அநேக வருஷங்களுக்குமுன் பாலக்காட்டினருகாமையில் சவரியாபாளையம் என்ற ஓர் கிராமம் இருந்தது. அவ்வூரில் அக்காலத்தில் அநேக கிறீஸ்துவர்களும், சில அஞ்ஞானிகளும் இருந்தார்கள். அந்தக் கிறீஸ்துவர்களில் அநேகர் திருச்சபையின் கட்டளைகளை மீறி அஞ்ஞானிக் கலியாணம் செய்ததுமல்லாமல், தங்கள் குருவானவருடைய புத்திமதிகளை நிந்தித்து அஞ்ஞானிகளைப்போல் நடந்துவந்தார்கள். அப்படியிருக்க ஒரு நாள் ஒரு குருவானவர் குதிரையின்மேலேறி பாலக்காட்டிலிருந்து அவ்வூருக்கு வந்தார். அவர் சவரியாபாளையம் சேர்ந்தவுடன், தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சில கிறீஸ்துவப் பையன்களும் அஞ்ஞானப்பையன்களும் தங்கள் தங்கள் தாய் தந்தையரால் தூண்டப்பட்டு, இன்னும் சில துஷ்டர்கள் உதவியைக்கொண்டு தங்கள் அருகிலிருந்த மாடு, எருமை மந்தைகளைத் துரத்தி, குருவானவர் ஏறியிருந்த குதிரையை மிரளும்படி செய்தனர். குதிரை மிரண்டு குருவானவர் கீழே விழுந்து கடினமான காயப்பட்டார். பிறகு அவர் ஜனங்கள் உதவியைத் தேடியும் ஒருவரும் கிட்டவராமல் சற்று தூரத்திலிருந்து அவரைக்கேலிசெய்தார்கள். அப்போது குருவானவர் தாம் பட்சமாய் நேசித்த ஞானப்பிள்ளைகளின் துஷ்டத்தனத்தையும் நன்றி கேட்டையும் பார்த்து மிகவும் கஸ்திப்பட்டு, வானத்தை அண்ணார்ந்து பார்த்து அவ்வூரைக் கைவிட்டதற்கு அடையாளமாக ஜாடை செய்தார். கொஞ்சகாலத்திற்குப் பிற்பாடு அந்த நிற்பாக்கியமான ஊர் அழிந்துபோனது. குருவானவர் சாபனையினாலும் தேவ கோபாக்கினையினாலும் அப்படி அழிந்துபோனதென்று அநேக கிறீஸ்துவர்களும் அஞ்ஞானிகளும் சொல்லுகிறார்கள். இன்னமும் அந்தப் பாழடைந்த ஊரில் அழிந்துபோன சிறிய கோவிலிருந்த இடத்தின் அடையாளத்தைப் பார்க்கலாம்.

## Chain Prayer.

### முடிவில்லாத ஜெப சங்கிலி.

சில நாட்களுக்குமுன் ஒரு கிறீஸ்துவன் குருவானவரிடத்தில் வந்து ஒரு போஸ்டுகார்டைக் காண்பிக்க அவ்விருவருக்கும் அடியில் வருமாறு சம்பாஷணை நடந்தது.

கிறீஸ்துவன் : சுவாமி, எனக்கு வந்த இந்த விநோதமான போஸ்டு கார்டை வாசித்துப் பாருங்கள். நான் அதைக் கண்டுபிடிக்கக் கூடவில்லை.

குருவானவர் : சரி, அந்தக் கார்டைக் காண்பி, (வாசிக்கிறார்.) "முடிவில்லாத ஜெப சங்கிலி"......இது தானே? தெரியும்! தெரியும்!! நீ இதை நம்பாதே. இதெல்லாம் வீண் ஆசாரம், இதைக் கிழித்து எறிந்துவிடு.

கிறீஸ்துவன் : யார் இந்தக் கார்டை எழுதியிருக்கக் கூடும்?

குருவானவர் : யாரோ? தெரியவில்லை. ஒரு பதிதனாவது குருட்டுப் பத்தியுள்ள ஒரு கிறீஸ்துவனாவது இதை எழுதியிருப்பான். ஆனால் இப்படிப்பட்ட சங்கிலி ஜெபங்களைச் சத்திய திருச்சபை அங்கீகரிக்காமல் கண்டிப்பாய் விலக்குகிறதென்று நீ அறிந்து கொள்ளவேண்டியது.

கிறீஸ்துவன் : நான் இந்தக் கார்டில் குறிக்கப்பட்ட பிரகாரம் ஒன்பது பேருக்கு அந்த ஜெபத்தை எழுதி அனுப்ப வேண்டுமோ? அப்படி அனுப்பாவிட்டால், எனக்குத் தின்மை வருமென்று சொல்லியிருக்கிறதே! நான் என்ன செய்வேன்?

குருவானவர் : நீ ஒன்றும் செய்யவேண்டாம். அதனால் உனக்கு ஒன்றும் வராது. பயப்படாதே. இதோ பார்! நானே அதைக் கிழித்து எறிந்து விடுகிறேன்.

கிறீஸ்துவர்களே! இப்படிப்பட்ட சங்கிலி ஜெபம் உங்களுக்கு வந்தால் அதைக் கவனிக்காமலும், சட்டைபண்ணாமலும், உடனே கிழித்து எறிந்துவிடுங்கள்.



## The King and the Shepherd Boy.

### இராஜாவும், இடைப்பையனும்.

ஓர் இராஜா, காட்டில் ஆடு மேய்க்கிற இடைப்பையனை நோக்கி, "ஒரு நாளைக்கு நீ என்ன சம்பாதிக்கிறாய்?" என்று கேட்டார். அதற்குப் பையன் புன்சிரிப்புடன், "இராஜாவே! தாங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்களோ அவ்வளவு நானும் சம்பாதிக்கிறேன்" என்று சொன்னான். இராஜா அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, "நீ இப்படி ஏழைப் பையனாயிருக்கையில் இராஜாவைப்போல் எப்படிச் சம்பாதிக்கக் கூடும்" என்று கேட்க, அந்த இடைப்பையன், "நான் தினந்தோறும் வேலை செய்யும்போது மோட்சத்தையாவது நரகத்தையாவது சம்பாதிக்கிறேன். தாங்களோ இராஜ ஆளுகை செய்து வந்த போதிலும், அதைவிட வேறொன்றும் சம்பாதிக்க முடியாதே!" என்றான். இராஜா இடைப்பையனுடைய புத்திசாலித்தனத்தை மெச்சிப் புகழ்ந்தார். (விவேகி.)

---

## Here and There.

### நாநா சங்கதி.

Coimbatore: கடந்த ஜூன்-மீ 24-உ கோயம்புத்தூர் மேற்றிராசனக் கோவிலில் அவ்வூர் மேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ரூவா ஆண்டவர் சங். மார்ஷல் (Rev. Fr. Martial) சுவாமியாருக்குக் குருப்பட்டம் கொடுத்தார். இந்தப் புது குருவானவர் திருச்சபையாகிய நிலத்தில் நன்றாய் உழைத்துக்கொண்டு நீடூழி வாழ்வாராக! மகா வந்திக்கத்தக்க கோயம்புத்தூர் மேற்றிராணியார் உறுதிப்பூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானம் நிறைவேற்ற இப்போது வாலிபாளையம், கொடிவேரி, கொளப்பலூர்க் கிராமங்களுக்கு விசாரணைக்காகப் போயிருக்கிறார்.

Ootacamund: கடந்த ஜூன்-மீ 17-உ ஒத்தை, திவ்விய இருதயநாதர் கோவில் திருநாள் வெகு ஆடம்பரத்துடன்

Greece: சென்ற ஜூன்-மீ 28-உ கிரீஸ் தேசம் நேச வல்லரசுகளுடன் சேர்ந்து ஜெர்மனிக்கு விரோதமாய் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டது.

Catholic Friend: மகாவந்திக்கத்தக்க சென்னை அதிமேற்றிராணியாரும், மைலாப்பூர் மேற்றிராணியாரும் 'கத்தோலிக் நேசன்' என்னும் பத்திரிகைக்குக் கொடுத்திருந்த அங்கீகாரத்தை நீக்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் அப்பத்திரிகையில் திருச்சபைக்கு விரோதமான போதனைகள் காணப்படுவதுதான்.

Coonoor: குன்னூர் அர்ச். அந்தோனியார் ஸெக்கண்டரி பாடசாலை உபாத்தியாயர் R. S. இராஜேந்திரம் பிள்ளையுடைய குமாரர் R. ஆரோக்கியசாமி (Basrah) பஸ்ராவிலிருந்து சௌக்கியத்துக்காக லீவு பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்.

---


# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. September 1917. No. 9.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 9.


THE REGISTRAR OF ... 20 SEP 1917

## NOTICE.

### அறிவிப்பு.

நமது மேற்றிராசனத்தைச் சேர்ந்த சில பங்குகளில் தர்மம் செய்யும்படியாகப் பல வகையிலும் கிறீஸ்துவர்கள் இம்சிக்கப்படுவதாக நமக்குத் தெரியவருகிறது. சில சமயங்களில் இவ்வித தர்மத் தண்டல் செய்வது மேற்றிராசனம் அல்லது பங்கின் நற்காரியங்களுக்குப் பிரதிகூலமாய் இருப்பதால், பின்வரும் ஒழுங்குகளை எல்லோரும் அறியும்படியாகவும், அவைகளுக்கொப்ப நடந்துகொள்ளும்படியாகவும், அவைகளை வெளியிடல் அவசியமென்று காண்கிறோம்.

1-வது. கோயம்புத்தூர் மேற்றிராணியார், அல்லது, அந்தந்த இடத்தின் விசாரணைக் குருவானவருடைய அநுமதியால் தண்டல் செய்யுப்படும் தர்மம் தவிர, மற்றதெதுவும் பங்குசுவாமியாரால் அவருடைய கையொப்பத்தோடு அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2-வது. வசூல் செய்யப்படும் தொகை கோயம்புத்தூர் மேற்றிராசனத்திலில்லாமல் வெளியிடங்களின் தர்ம காரியங்களுக்காக உபயோகிக்கப்படவேண்டுமாகில் மேற்றிராணியாருடைய கையொப்பத்தோடு கூடிய அவருடைய அங்கீகாரமாவது, அவர் இல்லாத பட்சத்தில் அவருடைய விக்கர் ஜெனரலுடைய அநுமதியாவது ஏற்கனவே பெற்றிருக்கவேண்டியது. அப்படி அநுமதி பெற்றிருந்தபோதிலும், ஒவ்வொரு பங்கு

சுவாமியாரும் தம்முடைய பங்கில் எத்தனை காலம் தண்டல் செய்யலாமென்று தீர்மானிப்பார். எந்த முகாந்தரத்தைப் பற்றியும் இந்தக் காலம் ஒருமாத தவணைக்கு மேற்படக் கூடாது.

3-வது. இன்ன தர்ம காரியத்துக்கென்று தெளிவாய் வெளிப்படுத்தப்படாத எந்தத் தண்டலுக்கும் உத்தரவு அளிக்கப்படாது.

கோயம்புத்தூர்,
20—7—1917.

✠ அகுஸ்தீன் ரூவா,
கோயம்புத்தூர் மேற்றிராணியார்.

---

## Female Education.

### பெண்கல்வி.

பெங்களூர் மேற்றிராணிமார்களுடைய சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டதென்னவென்றால்:—

“ பெண்கல்விப் பயிற்சி அபிவிருத்தி விஷயமாய் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சக்திக்கேற்றவாறு எல்லா வகுப்புப் பெண்களுக்கும் உபயோகப்படும்படி ஒரு செக்கண்டரி ஸ்கூல் ஏற்படுத்தவும், இன்னும் உயர்தரக் கல்வி கற்க விரும்பும் பெண்களுக்காக சென்னையில் யூனிவர்சிட்டியாரால் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒரு காலேஜை ஏற்படுத்த ஓர் கன்னியர் சபைச் சகோதரிகளைக் கேட்டுக்கொள்ளவும் வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.”

சில குருடர்கள் யானை எப்படியிருக்கிறதென்று அறிந்துகொள்ள ஆசைப்பட்டு, யானைக்காரனுடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு, யானையைத் தங்கள் கைகளால் தடவிப் பார்த்தார்களாம். யானையின் காதைத் தடவிப்பார்த்தவன் யானை முறம்போலிருக்கிறதென்றும், துதிக்கையைத் தடவிப் பார்த்தவன் யானை உலக்கைபோலிருக்கிறதென்றும், காலைத் தடவிப் பார்த்தவன் யானை உரல்போலிருக்கிறதென்றும், வாலைத் தடவிப்பார்த்தவன் யானை விளக்குமாறுபோலிருக்கிறதென்றும் சாதித்துக்கொண்டு தங்களுக்குள்ளே தர்க்கம் செய்துகொண்டார்களாம்.

கல்வியில்லாத ஸ்திரீகள் அந்தக் குருடர்களுக்கு ஒப்பானவர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஞானமும், தெய்வபக்தியும் உண்டாவது அசாத்தியம். கடவுளுடைய ஆறு இலக்ஷணங்களைப்பற்றியும், வேத சத்தியங்களைப்



பற்றியும் கல்வியில்லாத பெண்களுக்கு எவ்வளவுதான் போதித்தாலும் செவிடன் காதில் சங்கு ஊதினதுபோலவும், கல்லின்மேல் மழை பொழிந்ததுபோலவும் அந்தப் போதனை முழுதும் வீணாய்ப்போகும்.

குருக்கள் சாதாரணமான பிரசங்கம் செய்தாலும் கல்வியில்லாத பெண்கள் அந்தப் பிரசங்கத்தைக் கண்டுபிடிப்பது அருமை. ஆகையால் குருக்கள் கோவிலில் பிரசங்கம் செய்யத் துவக்கினவுடனே கல்வியில்லாத பெண்கள் அந்தப் பிரசங்கத்தின் பொருளை அறிந்துகொள்ளக் கூடாமையால் தூங்கிவிழுவார்கள். தாராட்டு முடிந்தவுடன் குழந்தை விழித்துக்கொள்வதுபோல, குருக்கள் செய்யும் பிரசங்கம் முடிந்தவுடனே அந்த ஸ்திரீகளுடைய நித்திரை முடிந்து விழித்துக்கொள்ளுவார்கள்.

கல்வியில்லாத பெண்கள் எவ்வளவு அழகுள்ளவர்களாக இருந்தபோதிலும், அவர்களுடைய அழகு எட்டிமரம் பழுத்ததுபோலவும், பிரேதத்தை அலங்கரித்தது போலவும் ஆகும். அவர்கள் வாயைத்திறந்தால் எவ்வளவோ அவலக்ஷணமும் புத்தியீனமுமாயிருக்கும்!

பெண்கள் படித்தால் அவர்களுக்கு அவர்கள் படிப்புக்குத் தகுந்த ஞானமும், பத்தியும், புத்தியும், விவேகமும் உண்டாகும். அவர்கள் வீட்டின் மந்திரிகளைப்போல் தங்கள் புருஷருக்கும் பிள்ளைகளுக்கும் சமயத்தில் தக்க புத்திமதி சொல்லுவார்கள். உபதேசிகளைப்போல் வேத சத்தியங்களையும், பிரதான மந்திரம், குறிப்பிடம் இவைகளையும் உபதேசிப்பார்கள். காரியஸ்தனைப்போல் வீட்டைச்சேர்ந்த சகல காரியங்களையும், கணக்குகளையும் எழுதிக்கொண்டு ஒழுங்காயும் திட்டமாயும் அவைகளை நடத்துவார்கள். தங்கள் பிள்ளைகளுக்குக் குருட்டுத்தனமாய் மருந்துகளையும், புத்தியில்லாத காரியங்களையும், வீண் ஆசாரங்களையும் பிரயோகியாமல், வைத்தியர்களைப்போல் அவர்கள் தேக சௌக்கியத்துக்கடுத்த காரியங்களையே செய்வார்கள். அவர்கள் பிள்ளைகள் குற்றம் செய்து நன்னெறி தவறி நடந்தால் குருவைப்போல் அவர்களுக்கு உபதேசம் செய்வார்கள். காவற்காரனைப்போல் வீட்டுப் பண்டங்களையெல்லாம் ஜாக்கிரதையாய்க் காத்து வருவார்கள். நல்ல உபகாரிகளைப்போல் அவர்கள் தங்கள் புருஷர்களுடைய வருத்தங்களைத் தீர்த்து, அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் உதவியும் ஆறுதலுமாயிருப்பார்கள்.

பெண்கள் படிப்பு இல்லாமலிருந்தால் புருஷர்கள் தங்கள் தோளில் சேர்ந்த வெளி வேலைகளோடு வீட்டைச் சேர்ந்த வேலைகளையும் சுமந்துகொண்டு, இரண்டு குதிரைகள் சேர்ந்து இழுக்க வேண்டிய வண்டியை ஒரு குதிரை இழுக்க வேண்டியிருக்குமாப்போல் அவர்கள் கஷ்டத்துடன் பாடுபட வேண்டியிருக்கும்.

படிப்பு இல்லாத தாய் எப்படித் தன் பிள்ளைகளுக்குப் புத்தி கற்பித்து, குற்றங்களைத் திருத்தி, அவர்களை நல்வழியில் சேர்ப்பாள்? குருடன் குருடனுக்கு வழிகாட்டக் கூடுமோ? வேறுவிஷயங்களில் அவளுக்கு எவ்வளவு தான் நற்குணமும், பட்சமும், திரவியமும் இருந்தாலும் அவற்றால் பிரயோசனம் என்ன? மூடன் ஆஸ்தி முழுவதும் நாஸ்தி என்பதுபோல, பெண்களுக்குப் படிப்பு இல்லாவிடில் திரவிய நஷ்டம் சம்பவிக்கவும் இடமுண்டாகும்.

ஆகையால் எல்லா விஷயத்திலும் பெண்களுக்குக் கல்வி அவசியமானதுதான்.

(சத்தியநேசன்.)

---

## A Joint Protest by the Indian Clergy of the Coimbatore Diocese.

## கோயம்புத்தூர் மேற்றிராசனத்து இந்திய குருக்களுடைய பொது எதிருரை.

சென்ற பெப்ரவரி-மீ சென்னை பச்சையப்பன் ஹாலில் நடந்தேறிய கத்தோலிக் இந்தியர் பொதுக்கூட்டம் செய்த பல தீர்மானங்களுள் பெங்களூர் சங்கத்தில் கூடின மேற்றிராசனங்களது இந்திய குருக்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துரைப்பதாகப் பாசாங்கு செய்தது ஒன்று. துவக்கத்தில் இது எங்கள் கவனத்தைக் கவரத் தகுதியற்றதென்று எண்ணியிருந்தபடியால், நடந்த காரியங்கள் அனைத்தையும் ஒரு விகாரமான வேடிக்கையென்றே நாங்கள் பாராட்டினோம். ஆனால் மேற்படி கூட்டத்தின் அக்கிராசனாதிபதி, கொடிவேலி, சங். அருள்நாதர் சுவாமியாருக்கு எழுதிய பதில் கடிதத்தில் ஜனசமூகத்தின் பேரால் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட பிரதிநிதிகளாகிய இவர்கள் இந்திய குருக்கள் விஷயமாய்த் தாங்கள் முன்காட்டின சித்தாந்தத்தையே மறுபடியும் உறுதிகொள்ளுகிறார்கள்.



இவ்விஷயத்தில் நாங்கள் காலதாமதம் செய்வது எங்களுடைய அபிப்பிராயம் இன்னதென்று வேறு விதமாய் யூகிக்க வேண்டியிருக்குமாகையால், பின்வருமாறு அவைகளை மறுத்துக் கண்டனம் பண்ணுகிறோம்.

மேற்சொல்லப்பட்ட தலைவர்கள் எங்களுடைய பிரதிநிதிகளுமல்ல; அவ்விதமாக ஜனசமூகத்தால் எண்ணப்படுவதற்குத் தகுதியானவர்களுமல்ல. நேச தந்தைகளும், சூக்ஷ்ம புத்தியுள்ளவர்களுமான நமது வந்திக்கத்தக்க அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் இவர்களுடைய அநுசரணையில் நம்முடைய ஜனசமூகம் முன்னுக்கு வருவதை நாம் எவ்விடத்திலும், எக்காலத்திலும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து வருகிறோம். அந்த விருத்திக்கு அநுகூலமாய் இருப்பதற்குப் பதிலாய் இவர்களுடைய நடவடிக்கையானது அதை எவ்வளவோ பின்னடையச் செய்யும். இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியம் நேரிடுமேயாகில் இந்திய கத்தோலிக்கர்மேலேயே இப்பழி சாரும். இதைத்தடுப்பதில் ஒவ்வொருவரும் தத்தம் கடமையை நிறைவேற்ற விழிப்பாயிருப்பார்களாக.

ஜனசமூகத்தின் நம்பிக்கையுள்ள தலைவர்கள் தைரியமாய் முன்னுக்கு வந்து, நமது ஞான மேய்ப்பர்களோடு ஒன்றித்து, நகமும் சதையும்போல் ஒன்று கூடி, தேகத்தில் அரிக்கும் இரணத்தை ஆற்றவேண்டிய பிரயத்தனங்களை உதவிக்கொள்ள நாங்கள் அவர்களைத் தூண்டுகிறோம்.

இப்படிக்கு,

| | | |
|---|---|---|
| அலோசியுஸ் | T. சவரிநாதர் | லாஸர் |
| அருள்நாதர் | மரியநாதர் | மரியஜோசெப் |
| A. இஞ்ஞாசிநாதர் | மிக்கேல்நாதர் | S. அருள்சாமி |
| S. அம்புரோஸ் | N. தோமினிக் | மதலைநாதர் |
| M. பவுல். | மரியலூயிஸ் | A. J. லூயிஸ் |
| M. சவரிநாதர் | அந்தோனிநாதர். | A.M. ஜோசெப் |
| | | G. மார்ஷல் |

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

சர்வ ஜீவ தயாபரக் கடவுள் உன்னை ஒன்றுமில்லாமையினின்று படைத்து உன்னை என்றும் தமது கருணையுள்ள பராமரிப்பில்வைத்துக் காத்துவருகிறார். உனக்கு ஒரு சரீரத்தையும் ஆத்துமத்தையும் கொடுத்தருளினார். உன்சரீரம் ஒருநாள் செத்து நாறிப்புழுத்து அழிந்து மண்ணோடு மண்ணும் தூசியோடு தூசியாயும் போய்விடும். சரீரத்துக்கு உரித்தான சுகம், பெலம், அழகு, மகிமை, சம்பத்து ஆகிய இவைகளெல்லாம் காற்றுப்போல் பறந்து கனாப்போல் மறைந்துவிடும். உன் ஆத்துமமோ ஒருபோதும் அழியாது. ஆத்துமத்துக்குரிய புண்ணிய சம்பத்தும் ஒழியாது.

உன்னைப்படைத்து ஆண்டு நடத்திவரும் கடவுள் உன் சரீரத்தின் மட்டில் கொண்டிருக்கிற கரிசனை, கவலையைப் பார்க்கிலும் உன் ஆத்துமத்தின்பேரில் கொண்டிருக்கிற கவலை மெத்த என்பதற்கு யாதேனும் ஐயமில்லை. உன் அழியாத ஆத்துமத்துக்குத் தம்முடைய பிரத்தியக்ஷ தரிசனம் என்னும் மோட்ச பேரின்ப பாக்கியத்தை நித்தியமாய்க் கொடுப்பதற்காகவே உன்னைப் படைத்தார். உன்னை அத்தரிசனம் அடையும் இடமாகிய மோக்ஷத்தில் சேர்த்துவிடுவதற்கு அவர் மிகவும் ஆவலுடையவராய் இருக்கிறார். நீயோ பாவத்தில் ஜென்மித்துப் பிறந்து பாவச்சேற்றில் உழன்று வருகிறாய். பாவத்தைப் போக்கிவிடவோ உன்னால் முடியாது. பாவத்தோடு நீ இருக்குமளவும் உன்னை மோட்சக்கரை சேர்த்தல் சரிப்படுமோ? அது ஒருக்காலும் கூடாத காரியம்.

இப்படியே நீ பாவத்தில் உழன்று மோட்ச முடியை அடைய முடியாத நிலைமையில் நீ இருப்பாயென்று அறிந்த தயாபரக்கடவுளானவர் உனக்காகச் செய்தருளிய ஆச்சரியத்தைச் சொல்லக் கேள். உன் பாவங்களைப் போக்கி, நீ மோட்சகரைசேர வழி திறந்து விடும்படியாக அவர் தம்மோடு ஏக சுபாவமுள்ள கடவுளாகிய தம்முடைய திருச்சுதனை இவ்வுலகத்தில் அனுப்பியருளினார். அத்தேவ சுதன் உன்னைப்போலொத்த ஒருமனிதனாய் அவதாரம்பண்ணிப் பிறந்து வந்து உன் பாவப்பழியைத் தாமே சுமந்து, தேவ நீதிப் பிரகாரம் நீ படவேண்டிய தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டு உனக்காகத் தமது ஜீவனை விட்டருளினார். என்றும் சுயஞ்



ஜீவியராகிய கடவுள் உன்னை இரட்சிக்க அழியும் சரீரத்தை ஏற்றுக்கொண்டார். மனுஷனாக அவதரித்த கடவுளாகிய இவர் உனக்காக உயிர்ப்பலியானதைக் கண்டு நீ மனம் இளகி உன் பாவங்களை வெறுத்துவிட்டு அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு உன் இரட்சணியத்துக்காகப் பலியான இவருடைய திருவேதத்தில் சேர்ந்து மோட்ச வழியைப் பின்பற்றி இவருடைய திருச்சித்தத்தின்படியெல்லாம் செய்ய முஸ்திப்பாயிருப்பாயேயாகில் உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீ ஈடேற்றத்தை அடைவதற்கு வழியாகும்.

இப்போது நான் சொன்னவைகளெல்லாம் உனக்கு நன்றாய் விளங்கியிராது. இவைகளைச் சத்தியமாக உடனுக்குடனே ஏற்றுக்கொள்ளவும் பின்னிடுவாய். ஆனால் நான் இனிமேல் உனக்குச் சொல்லவிருக்கும் விஷயங்களைப் பொறுமையோடும் சத்தியத்தை அறிய வேண்டுமென்கிற ஆசையோடும் கவனமாய் வாசித்து வருவாயேயாகில் உண்மையை அறிந்துகொள்வாயென்பது நிச்சயம்.

இப்படிக்கு,
உன் பிரிய சிநேகிதன்.

---

## Correct Things For Baptism.

### ஞானஸ்நானத்திற்குத் தகுந்த ஒழுங்குகள்.

பிறந்த குழந்தையைத் தாமதமில்லாமல் கோவிலுக்குக் கொண்டுவந்து ஞானஸ்நானம் கொடுப்பது ஒழுங்கு.

குழந்தைக்குச் சுத்தமான உடுப்பு உடுத்தி ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவருவது ஒழுங்கு.

குழந்தையின் நெஞ்சிலும் முதுகிலும் குருவானவர் அர்ச்சியசிஷ்ட எண்ணெயைப் பூசுவதற்கு உடுப்பைத் திறந்து வைத்திருப்பது ஒழுங்கு.

ஞானத் தாய் தகப்பனாக வேத சத்தியங்களை அறிந்த யோக்கியமுள்ள கிறீஸ்துவர்களை நியமிப்பது ஒழுங்கு.

ஞானத் தாய் தகப்பன் ஒருமிக்க வரக்கூடாதிருந்தால் பெண்குழந்தைக்கு ஒரு பெண்பிள்ளையையும், ஆண் குழந்தைக்கு ஒரு ஆண்பிள்ளையையுமாவது நியமிப்பது ஒழுங்கு.

ஞானஸ்நானம் கொடுக்கையில் குருவானவர் குழந்தையின் தலையின்பேரில் தண்ணீர் வார்க்கும்போது குழந்தையுடைய தோளின்பேரில் ஞானத் தாய்தகப்பன் தொடுவது ஒழுங்கு.

குழந்தைக்குப் பரிபாலனராக ஒரு அர்ச்சியசிஷ்டவருடைய பெயரை யிட்டு அதே பெயரால் எப்போதும் கூப்பிடுவது ஒழுங்கு.

குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது சந்தோஷத்தின் குறிப்பாகக் கோவில் மணி அடிக்கச்செய்வது ஒழுங்கு.

ஞானஸ்நானத்திற்குப் பிறகு ரெஜிஸ்டரில் பெயரைப் பதிவுசெய்வதற்குப் பெற்றோர்களுடைய பெயர்களைத் திருத்தமாய்ச் சொல்வது ஒழுங்கு.

குழந்தையைப் பெற்ற தாய் நாற்பதாம் நாள் சடங்கு செய்து ஆசீர்வாதம் பெறுவது ஒழுங்கு.

குழந்தையுடைய தாய் குழந்தை பிறந்தபிறகு நாற்பது நாள் வரையில் கோவிலுக்கு வரக்கூடாது என்று எண்ணுவது ஒழுங்கல்ல.

அவஸ்தை சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானம் கொடுப்பது ஒழுங்கு.

ஆகையால் கிறீஸ்துவர்களெல்லோரும் ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி என்று படித்திருப்பது ஒழுங்கு.

---

## The Baptismal Garment.

## ஞானஸ்நானத்தின் வெள்ளை வஸ்திரம்.

திருச்சபைச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஓர் வர்த்தமானம் அடியில் வருமாறு :—

ஆப்பிரிக்கா தேசத்தில் ஆரிய பிரிவினையைச் சேர்ந்த உனரியென்னுமரசன் அக்காலத்து விசுவாசிகளுக்கு விரோதமாய்க் கொடிய வேத கலாபனை எழுப்பி தேசமெங்கும் கிறீஸ்துவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து உபாதித்துக் கொலைப்படுத்தி வந்தபோது, மெய்யான ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், நியாயாதிபதி ஒருவன் பிரிவினைக்காரரைப்போலவே தன்னுடைய ஞானத் தந்தையாகிய அர்ச். முரித்தா என்பவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைப்பித்தான். அவன் ஞானஸ்நானம் பெற்றபோது அணிந்திருந்த வெள்ளையுடுப்பை வெகு பத்திரமாய்க் காப்பாற்றி வைத்திருந்த அந்த அர்ச்சியசிஷ்டவர் மறுநாள் அந்தத் துரோகியுடைய நீதிஸ்தலத்திற்குக் கொண்டுபோகப்பட்டபோது, தாம் வைத்திருந்த வெள்ளையுடுப்பையெடுத்துச் சபையில் காண்பித்து, நியாயாதிபதியை நோக்கி, " இதோ! நீ ஞானஸ்நானம் பெறும்போது நானே



உனக்குத் தரிப்பித்திருந்த வெள்ளை வஸ்திரத்தைப் பார். ஓ துரோகி! நீ இதை எடுத்து எறிந்துவிட்டுக் கந்தைகளையல்லவோ தரித்துக்கொண்டாய்? நடுத்தீர்வை நாளில் நீ பெற்ற ஞானஸ்நானத்தைப் பற்றிச் சகலருக்கு முன்பாக உன்னிடத்தில் கணக்குக் கேட்கப்படும். அப்போது நானே இந்த வஸ்திரத்தைச் சகலருக்கும் காண்பித்து உன்மேல் குற்றம் சாட்டுவேன் " என்று சொல்லவே, அவன் பயந்து நடுநடுங்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (ஞானி.)

---

## Duties of Parents towards their Children.

*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

தாய் தந்தையரே! சிறுபோது உங்கள் பிள்ளைகள் உருகின மெழுகுக்குச் சமானமாயிருக்கிறார்கள். உருகின மெழுகுக்கு இஷ்டமான உருவத்தைக் கொடுக்கலாம். இன்னமும் பிள்ளைகளுடைய மனது சிறு செடிக்குச் சமானமாயுமிருக்கிறது. சிறு செடியை இஷ்டமானபடி நேராகவோ அல்லது கோணலாகவோ வளரும்படி செய்யலாம். அதுபோலவே இளம் பருவத்திலே பிள்ளைகளை வளர்க்கும் விதத்தால், ஒன்றில் அவர்களைச் சம்மனசுகளுக்கு ஒப்பானவர்களாய், அல்லது பேய்க் குட்டிகளாக வளர்க்கலாம். ஆகையால் தாய் தகப்பன்மார்களே! உங்கள் பிள்ளைகள் நல்லவர்கள் அல்லது கெட்டவர்களாவது உங்கள் கையிலிருக்கிறது. உருகின மெழுகுக்கும் சிறு செடிக்கும் சமானமான உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உங்களுக்கு இஷ்டமான உருவத்தைக் கொடுக்கலாம்.

ஒரே தெருவில், ஒரே சமயத்தில், ஒரே வேதத்தில், ஒரே நிலைமையில், ஒரே வகுப்பில், ஒரே குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் குணத்திலும் நடத்தையிலும் முழுவதும் வித்தியாசமாக வளர்வதற்குக் காரணமென்ன? வளர்க்கும் விதமல்லவா? வென்ஸென்லாஸ் (Wencenlaus), பாலஸ்லாஸ் (Baleslaus) என்கிறவர்கள் இருவரும் ஒரே தகப்பன் பிள்ளைகள். ஆயினும் குணத்திலும் நடத்தையிலும் ஒருவர்க்கொருவர் முழுவதும் வித்தியாசமானவர்கள். முதற்பையன் தெய்வபயமுள்ளவன்; வெகு சாது. பொகிமியா (Bohemia) தேசத்தில் கோணு நீதியுடையவனாய் நடந்துவந்தான். அவன் தம்பியோ கொடுங்கோலன், ஜனங்களை வெகுவாய் இம்சித்தவன். ஒரே தகப்பனுடைய மக்களாகிய இருவருடைய வித்தியாச

மான நடத்தைக்கும் காரணமென்ன? என்னவென்றால் வென்ஸெஸ்லாஸ் என்பவனைப் பெற்ற தாய் லூடிமெல்லா (Ludimella) என்பவள் தெய்வ பக்தியும் பரிசுத்த நடத்தையுமுள்ளவள். பாலெஸ்லாஸ் என்பவனைப் பெற்ற தாயோ துஷ்ட நடத்தையுள்ளவளும், தெய்வபயம் இல்லாதவளுமாயிருந்து தன் பிள்ளையை வளர்த்து வந்தாள்.

இந்தக்காலத்திலும் நமது தேசத்திலேமுதலாய் நடந்து வருவதென்ன? ஒரு வீட்டில், பிள்ளைகள் மந்திரங்களையும் குறிப்பிடத்தையும் சரியாகப்படித்து அறிந்து காலையில் எழுந்தவுடன் முழங்காலிலிருந்து தேவஆராதனைசெய்து காலைச்செபங்களைச் செய்துவருகிறார்கள். மாலையிலும் இராச்செபம் முடிந்த பிறகு ஆத்துமசோதனை செய்துவிட்டு அவர்கள் உறங்கப் போவார்கள். அடுத்த வீட்டிலோ, பிள்ளைகள் தங்கள் இஷ்டம் போல் சுற்றித் திரிந்து நெற்றியில் சிலுவையடையாளங்கூடப் போடாமல் தூங்கப்போவார்கள். தங்கள் இஷ்டம்போல் படுக்கையை விட்டெழுந்து சேசுவென்கிற நாமத்தைமுதலாய் உச்சரிக்காமல் வெளியே போவார்கள். (இன்னும் வரும்.)

யதார்த்தவாதி.

---

## Chronicle of Somanur.

### சோமனூர் சரித்திர சுருக்கம்.

பதினேழாம் நூற்றாண்டில் சோமனூரில் சில கத்தோலிக் கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். அவர்கள் சேலத்திலிருந்து வந்த அஞ்ஞானிகளென்று தோன்றுகிறது. ஏனென்றால் அக்காலத்தில் சேலத்தில் அகோர பஞ்சம் உண்டாகவே, சில ஜனங்கள் தங்கள் ஊரைவிட்டு பாலக்காட்டுக்குப் பக்கத்திலுள்ள வனூர்க்காடு என்னும் ஊரில் வந்து தங்கினார்கள். அதுவும் தங்களுக்குச் சரிப்படாததாகையால் சில நாள் கழித்து தங்கள் ஊருக்குத் திரும்பிப்போகப் புறப்பட்டார்கள். அப்படியே சோமனூர் வழியாய்ப் போகும்போது வேளாளர் வகுப்பைச் சேர்ந்த அவ்வூர் மணியகாரன் அவர்களை அவ்விடத்திலேயே தங்கியிருக்கும்படியாகச் சொன்னான். அதற்கு அவர்கள் சம்மதித்து அங்கேயே தங்கியிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் அக்காலத்தில் சிவவணக்கம் புரிந்து வந்தார்கள். தினந்தோறும் ஊருக்குப் பக்கத்திலுள்ள நொய்யலாற்றுக்குப் போய் ஸ்நானம்செய்து தங்கள் பொய்த் தேவனுக்கு ஆராதனைசெய்து வந்தார்கள். ஒரு நாள் அவ்விடம் குடியிருந்த பழைய கிறீஸ்துவக் கிழவியொருத்தி அவர்களைப் பார்த்து



"நீங்கள் ஞானஸ்நானத்தினால் உங்கள் ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்தாமல் ஆற்றில் குளித்து உங்கள் உடம்பைக் கழுவி வந்தபோதிலும் உங்களுக்கு என்ன பிரயோஜனம். ஆற்றுத் தண்ணீர் உங்கள் பாவங்களை விமோசனமாக்குமென்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள். அதற்கு அவர்கள் ஆச்சரியப்பட்டு, "எங்கள் ஆத்துமத்தை சுத்தப்படுத்துவதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்க, அவள் "நீங்கள் சத்தியவேதக் குருக்கள் கையால் ஞானதீட்சை பெறுவீர்களானால் உங்கள் ஆத்துமம் பரிசுத்தமாவதும்தவிர, மோட்ச வாசல் உங்களுக்குந் திறக்கப்படும்" என்று சொன்னாள். "அப்போது சத்தியவேதக் குருக்கள் எங்கே இருக்கிறார்கள்" என்று அவர்கள் கேட்டார்கள். "இரண்டுமைல் தூரத்திலுள்ள கருமத்தன்பட்டியில் சத்தியவேதக் குரு ஒருவரிருக்கிறார்" என்று சொன்னாள். அவ்விதமே பத்துக் குடும்பங்கள் அவ்வூருக்குப் போய் வேத சத்தியங்களைக் கற்றறிந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். பிறகு அந்தப் புதுக் கிறீஸ்துவர்கள் சோமனூரில் வசித்துக்கொண்டு அங்கே அர்ச். இஞ்ஞாசியார் பேரால் ஒரு கோவிலைக் கட்டினார்கள்.

---

## Kotagiri Festival.

### கோத்தகிரி திருநாள்.

கோத்தகிரியில் அர்ச். ஆரோக்கியமாதாத்திருநாள் அடுத்த செப்டெம்பர் மாதம் 9-உ ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும்.

வெளியூர் கிறீஸ்துவர்கள் கோத்தகிரி கோவிலில்போய் திவ்வியநன்மை வாங்கப் பிரியமிருந்தால் தாங்கள் பாவசங்கீர்த்தனம் செய்ததாகவாவது, தேவதிரவிய அநுமானங்களைப் பெறுவதற்கு யாதொரு விக்கினமில்லையென்பதாகவாவது தங்கள் தங்கள் பங்கு விசாரணைக் குருசுவாமியாரிடத்தில் ஒரு சீட்டு வாங்கிக்கொண்டு வரவேண்டியது. இந்த ஒழுங்கு கண்டிப்பாய் அநுசரிக்கப்படும்.

பூசைக்காவது வேறுவித வேண்டுதலுக்குக் காணிக்கையாவது கொடுக்கப் பிரியமுள்ளவர்கள் அங்கேயிருக்கும் குருக்கள் தவிர மற்ற யாரிடத்திலும் பணமுதலியவைகளைக் கொடுத்து செலுத்தும்படி கேட்கக்கூடாது.

REVD. V. MORIN.

வெலிங்டன் பங்கு சுவாமியார்.

---

## Here and There.

### நாநா சங்கதி.

The war: சியாம் (Siam) தேசமும், சீனு (China) தேசமும் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தம் கூறிவிட்டது. இவ்விதமே ஏறக்குறைய உலகமெல்லாம் நேசக்கட்சியாரின் நீதியை அறிந்து கொண்டு ஜெர்மன் சக்கரவர்த்திக்கும் அவன் கூட்டாளிகளுக்கும் விரோதமாய் எதிர்த்துப் போராடுகிறது.

France: பிரான்ஸ் தேசத்தார் தங்கள் எதிராளிகளை ஜெயிக்கும்படியாகவும், பூலோகத்தில் பத்தி விசுவாசம் உண்டாகும்படியாகவும், பிரான்ஸ் தேசத்திலுள்ள வந்திக்கத்தக்க கர்தினல்மார்களும், அதிமேற்றிராணிமார்களும், மேற்றிராணிமார்களும் திரு இருதயத்துக்கு ஒரு பொருத்தனை செய்திருக்கிறார்கள்.

From the front: யுத்தமுனையிலிருக்கும் சங் (Revd. Fr. Tournier) தூர்னீர் சுவாமியாரும். சங் (Revd. Fr. J. Trideau) திரிடோ சுவாமியாரும் க்ஷேமமாயிருக்கிறார்கள். திரு இருதயத்தின் கிருபையால் நேசக் கட்சியார் கூடிய சீக்கிரம் ஜெயமடைவார்கள் என்பதாய் நம்பவேணுமென்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். போர்முனையிலிருக்கும் கோயம்புத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த இன்னம் மற்றக் குருக்களும் க்ஷேமமாயிருப்பதாக அவர்கள் கடிதத்தால் தெரியவருகிறது.

Coonoor: சங் (Revd. Fr. C. Petite) பெத்தித் சுவாமியார் குன்னூர் அர்ச். சூசையப்பர் மடத்து ஐரோப்பிய மாணுக்கர்களுக்கு ஜூலை-மீ 30-உ துவக்கி, ஆகஸ்ட்-மீ 3-உ வரையிலும் தியான ஒடுக்கம் நடத்தி, நேர்த்தியான பிரசங்கங்கள் செய்தார்.

குன்னூர் லாலி ஆஸ்பத்திரி டாக்டர் (Dr. Milton) மில்டன் துரைக்குப் பதிலாக டாக்டர் (Dr. J. H. Hesterlow) ஹெஸ்டர்லோ துரை சிவில் சர்ஜனுக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

162003

# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. October 1917. No. 10.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 10.

## Interconfessional Associations.

### பதிதருடைய கூட்டங்களில் கத்தோலிக்கர் மெம்பராகச் சேருவது யுக்தமல்ல.

பெங்களூர் மேற்றிராணிமார்களின் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது என்னவென்றால்:—

"இலௌகீக கூட்டுறவு விஷயமாயாவது, துரைத்தன சம்பந்தமாயாவது கத்தோலிக்கரும், புரோட்டெஸ்டாண்டாரும் ஏகோபித்துழைப்பதைப்பற்றி இச்சங்கம் ஒருமனப்படச் செய்யும் தீர்மானம் என்னவெனில், புரோட்டெஸ்டாண்டாருடைய எந்த சபைக்கூட்டமானுலும் சரி, அல்லது எந்தக் கட்டுப்பாடானுலும் சரி, அச்சபைக் கூட்டத்தின் நோக்கம் சாதாரண இலௌகீக அல்லது துரைத்தன சம்பந்தமான விஷயமாகமட்டுமிருந்தபோதிலுமுதலாய் கத்தோலிக்கர் அதில் மெம்பர்களாகச் சேருவது யுக்தமல்ல; ஆனால், விசேஷித்த சமயங்களில் புரோட்டெஸ்டாண்டாரும் கத்தோலிக்கரும் ஏகோபித்தல் நலமாகத் தோன்றினுல் அச்சமயங்களில் அதில் குறிக்கப்பட்ட விஷயங்களில் இருதிறத்தாரும் ஒன்றித்து ஓர் முடிவான தீர்மானத்துக்கு வருவதற்காகச் சில கத்தோலிக் பிரதிநிதிகளை நியமித்து, புரோட்டெஸ்டாண்டு பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிவர அனுப்புவதில் மேற்றிராணிமார்களுக்கு ஆக்ஷேபனையில்லை"

அர்ச். பாப்பானவர் அமெரிக்கா தேசத்து மேற்றிராணிமார்களுக்கு எழுதிய நிருபத்தில் அமெரிக்க வாலிபர் தப்பிப்

போகக் கூடிய ஆபத்தான விஷயங்களில் சிலவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறார். பதிதருடன் இலௌகீக சங்க விஷயமாய்க் கத்தோலிக் வாலிபர் கலந்திருப்பது யுக்தமல்லவென்பது அவைகளில் ஒன்று. அப்படியே பல இடங்களிலும், பல சமயங்களிலும் அர்ச். பாப்பானவர் பதிதருடைய கூட்டங்களில் கத்தோலிக்கர் கலக்கக்கூடாதென்று விலக்கியிருக்கிறார். ஆகையால் நமது மேற்றிராணிமார்கள் இதே விஷயமாய்ப் பெங்களூரில் செய்த் தீர்மானம் வெகு விவேகமுள்ளதே.

விசுவாசம் என்கிற தேவ வரம் எல்லா வரங்களிலும் சிரேஷ்டமானது. அது சகல திரவியங்களையும்விட அதிக விலையேறப்பெற்றது. விசுவாசிகளுடைய இருதயங்களில் அந்தத் தேவ வரத்தைக் காப்பாற்றும்படி திருச்சபை சகல முயற்சிகளையும் செய்து சகல ஆபத்துக்களையும் விலக்கப் பிரயாசப்பட்டு வருகின்றது. அந்தத் திரவியத்தைத் தங்கள் கண்மணிகளைப்போல் காப்பாற்றுவது கிறீஸ்துவர்களுடைய கடமை.

விசுவாசமே ஆத்துமத்துக்கு ஞானவெளிச்சம். அந்த வெளிச்சமில்லாவிடில் ஆத்துமம் இருளடைந்து போகும். அந்த வெளிச்சத்தினால் கிறீஸ்துவர்களுடைய மனச்சாட்சி தெளிவாயும் நேர்மையாயுமிருக்கும். ஒருவன் விளக்கு இல்லாமல் இருட்டில் நடந்தால் அவனுக்குக் கால் இடறுமல்லவா? அதுபோலவே மனிதனுடைய மனச்சாட்சிக்கு விசுவாசமாகிய வெளிச்சமில்லாதுபோனால் அவனுடைய ஆத்துமம் நெறி தவறிப்போகும்.

ஒரு விளக்கில் சுத்தமான எண்ணெய் ஊற்றினால் அந்த விளக்கு நல்ல வெளிச்சம் கொடுக்கும். அதற்கு மாறாக கலப்படமான எண்ணெய் அல்லது தண்ணீர் ஊற்றினால் அது நல்ல வெளிச்சம் கொடாமலிருப்பதுந்தவிர நின்றும் விடும். அதேபிரகாரம் கிறீஸ்துவர்களுடைய விசுவாசம் கலப்படமான எண்ணெய்போலிருந்தால் இருளடைந்துபோகுமல்லாமலும் அவர்களுடைய விசுவாசமும் படிப்படியாய்க் குறைந்து போகும். (உன் தோழன் யாரென்று சொல்; நீ யாரென்று நான் சொல்வேன்.)

இதே காரணத்தினால்தான் கிறீஸ்துவர்கள் பதிதர் கூட்டங்களில் சேரக்கூடாதென்று திருச்சபை விலக்குகிறது. கிறீஸ்துவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பதிதருடைய பள்ளிக்



கூடங்களுக்கு அனுப்பக்கூடாதென்றும் கற்பிக்கின்றது. ஏனெனில் பதிதர்கள் நமது வேதசத்தியங்களை நிந்தித்து, அர்ச். பாப்பானவருடைய அதிகாரம், தேவமாதா வணக்கம், பாவசங்கீர்த்தனம் இவை முதலிய சத்தியங்களுக்கு விரோதமாய்ப் போதிக்கிறதினால் கிறீஸ்துவ பிள்ளைகளுக்குச் சிறுபத்திலேயே அவர்களுடைய விசுவாசம் குறைந்து அழிந்துபோவதற்குக் காரணமாகும்.

கிறீஸ்துவர்கள் பதிதருடைய கோவில்களில் நடக்கும் பிரசங்கங்களுக்கும், போதனைகளுக்கும், வேதகாரியங்களுக்கும் போகக்கூடாததும் தவிர, அவர்களுடைய வேத காரியங்களில் உதவிசெய்யவும் கூடாது. மெய்யும், பொய்யும் கலந்து போதிக்கும் பதித புஸ்தகங்களை வைத்திருக்கவும் வாசிக்கவும் கூடாது.

மேலே குறிக்கப்பட்ட காரணங்களினால் கிறீஸ்துவர்கள் உலக காரியங்களிலும் பதிதருடன் கலப்பது யுக்தமல்ல. வேதகாரியங்களுக்கும் உலக காரியங்களுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லாமற்போகாது. சாதாரணமாய் ஒவ்வொருவனும் உலக காரியங்களில் தன் மனச்சாட்சிப்பிரகாரம் நடந்து வருகிறான். மெய்யான கத்தோலிக்கர் அநேக உலக காரியங்களில் வேதத்தை அனுசரித்துத் தங்கள் மனச்சாட்சியின் பிரகாரம் செய்வார்கள். பதிதர்கள் தங்கள் வேதத்தை அனுசரித்து வேறு விதமாய்ச் செய்வார்கள். உதாரணமாக, கலியாண விஷயத்தில் உலக காரியமும் வேதகாரியமுமாகிய இரண்டும் கலந்திருக்கின்றன. எப்படியென்றால, கத்தோலிக் கிறீஸ்துவன் டைவர்ஸ் (divorce) என்னும் தீர்ப்பின்படி புருஷன் தன் பெண்ஜாதியைவிட்டு வேறு கலியாணம் செய்யச் சம்மதியான். பதிதனோ அதற்குச் சம்மதிப்பான்.

துரைத்தன காரியங்களில் ஒருவனுக்கு இரண்டு மனச்சாட்சி இருக்கலாகாது. ஆகையால் ஒருவன், "கிறீஸ்துவனாகியமட்டும் வேதகாரியங்களில்மாத்திரம் நான் திருச்சபைக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன். இந்தியதேசத்தானாகியமட்டும் இலௌகீக காரியங்களிலும் துரைத்தன விஷயங்களிலும் நான் திருச்சபைக்குக் கீழ்ப்படிந்து நடக்கமாட்டேன்" என்று சொல்வது தப்பறை. அது பரிசுத்த பிதா பத்தாம் பத்திநாதரால் விலக்கப்பட்டிருக்கிறது. (உன் விசுவாசத்தைக் காப்பாற்றி வருவாயாக.)

(சத்திய நேசன்.)

## Duties of Parents towards their Children

*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

ஒரு வீட்டில் தாய், தகப்பன், பிள்ளைகள் அனைவரும் ஒருமிக்க ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன்திருநாட்களிலுமல்லாமல், மற்ற நாட்களிலும் தினந்தோறும் திவ்விய பூசைக்கும், ஞான உபதேசத்துக்கும், பிரசங்கத்துக்கும் போவார்கள். கூடுமானால் திவ்விய நன்மையும் வாங்குவார்கள். வேறே ஒரு வீட்டிலோ, திவ்விய பூசை, பிரசங்கம், தேவ நன்மை என்பதை நினைக்கவுமாட்டார்கள். இதற்கு மாறாக, தகப்பனும் ஆண் மக்களும் சாராயக்கடையிலும் பீர்க்கடையிலும் அடைக்கலம் புகுவார்கள். தாயும், பெண்மக்களுமோ வழியில் போகிற வருகிற ஜனங்களோடு அடக்கவொடுக்கமில்லாமல் வாயாடித் திரிவார்கள்.

ஒரு வீட்டில் பெண்மக்கள் இருப்பது முதலாய்த் தெரியாது. மற்றொரு குடும்பத்திலோ பெண்மக்கள் வழியிலும், வாசற்படியிலும், ஜன்னல்களிலும் நின்றமணியமாக ஆண்பாலர்களோடு பேசியும், சிரித்தும், காலத்தைக் கழிப்பார்கள்.

ஒருவீட்டில் பெண்மக்கள் மேனா மரியாதையோடு தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி சீராய் உடுத்துவார்கள். அண்டை வீட்டிலோ, தலைக்கு மிஞ்சின விலைக்குப் புடைவைகளை வாங்கி, டம்பமாய் உடுத்திக்கொண்டு ஒய்யாரமாய் நடப்பார்கள்.

ஒருவீட்டில் பிள்ளைகளை இஷ்டம்போல் நடக்க விடாமல் கண்டிப்பு செய்து அவர்கள் மனதைத் திருத்தி ஒழுங்குப்படி நடத்துவார்கள். வேறொரு குடும்பத்தில் பிள்ளைகள் தங்கள் இஷ்டம்போல் நடக்க விடப்படுவதால், அவர்கள் உண்பதையும் குடிப்பதையும் தவிர வேறொன்றையும் நினைக்கமாட்டார்கள். இந்த வித்தியாசங்களுக்குக் காரணமென்ன? இளம் பருவத்தில் தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதமேயாம். ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் தெய்வ பக்தியுள்ளவர்களாய், பிள்ளைகளுக்கு நன் மாதிரிகை காட்டி, அவர்



களுடைய நடத்தையைப்பற்றிக் கண்ணும் கருத்துமாய் இருக்
கிறார்கள். மற்றொரு குடும்பத்திலோ பெற்றோருக்குத் தெய்வ
பயமுமில்லை, பிள்ளைகளுடைய நடத்தையைக் கவனிக்கவும்
கண்டிக்கவும் அவர்களுக்கு அக்கறையுமில்லை. ஆகவே ஓரே
குடும்பத்தில் ஓரே சமயத்தில் ஓரே நிலைமையில் பிறந்த பிள்ளை
கள் குணத்திலும், நடத்தையிலும் வெவ்வேறாய் இருக்கிறார்
கள். லாஸடோனியர் காலத்தில் ஒரு சட்டம் இருந்தது.
அதாவது, பிள்ளைகள் தவறி நடப்பதற்குத் தாய் தகப்பனு
டைய அஜாக்கிரதையே காரணமாகையால் மகன் தப்பிதத்துக்
குத் தகப்பனையும், மகள் தப்பிதத்துக்குத் தாயையும் தண்டி
க்கவேண்டுமென்பதே. ஆகையால் பிள்ளைகளைப் பெற்றவர்
களே; உங்கள் மக்களுடைய நித்திய பாக்கியம் அல்லது நித்
திய நிர்ப்பாக்கியம் நீங்கள் அவர்களை வளர்க்கும் விதத்தில்
இருக்கிறது. உங்கள் மக்களை மெய்யாகவே நீங்கள் நேசிப்பீர்
களானால் அத்தியாவசியமான நித்திய மோட்சானந்தத்தை
அவர்களுக்கு ஆசிப்பீர்கள். இதற்காக அவர்களை வெகு ஜாக்
கிரதையாய் தெய்வ பயத்தில் வளர்க்கவேண்டும் இதைக்
கவனியாமல் நடக்கிற மாதா பிதாக்களே! உங்களுக்கு ஐயோ
கேடாம். உங்களுடைய அஜாக்கிரதையினாலாவது, துர்
மாதிரிகையினாலாவது ஓரே ஒரு பிள்ளையுடைய ஆத்துமத்
துக்காயினும் கேடுவருமானால் உங்களுக்கு ஐயோ கேடாம்.
பிள்ளைகள் எப்படி நடந்தாலும் பரவாயில்லை. நாம் மாத்திரம்
பத்தியுள்ளவர்களாய் நடப்போமென்று நினைப்பீர்களானால்
உங்கள் பத்தி வீணானது. பிதாவின் சித்தத்தை அதாவது பிள்
ளைகளின் நடத்தையைக் கவனிப்பதைவிட்டு, "ஆண்டவரே!
ஆண்டவரே!" என்று கூவினாலும் லாபமென்ன? தேவ
கடாக்ஷத்தால் பாக்கியமான மரணத்தை நீங்கள் அடைந்தீர்
களென்று வைத்துக்கொள்வோமென்றாலும் கடைசித்தீர்வை
நாளில் உங்களுடைய அஜாக்கிரதையினிமித்தம் நரகத்துக்குத்
தீர்ப்பாகும்போது உங்கள் மனம் பதைக்காதோ? இதைச்
சற்று யோசித்துப் பாருங்கள்.

(யதார்த்தவாதி.)

## Pius X predicted the Great War.

### சண்டையைப்பற்றி பரிசுத்த பிதா பத்தாம் பத்திநாதரின் முன்னறிவிப்பு.

கர்தினால் மெரி டெல் வால் (Cardinal Merry del val) என்பவர் லவால் (Laval) மேற்றிராணியாருக்குப் பின்வரும் சங்கதியை வெளிப்படுத்தினதாகச் சீர்மைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

1910-ம் வருஷத் துவக்கத்தில், நாள்தோறும் பொது விஷயங்களைமுன்னிட்டு அர்ச். பாப்பானவரிடம் கணக்கு ஒப்புவிக்கப்போகும் வழக்கப்படி ஒரு நாள் நாம் சென்றபோது ஒரு கஸ்திக்குரிய சங்கதியை அவருக்கு அறிவிக்கவேண்டியிருந்தது. அப்போது அர்ச். பாப்பானவர் "இது ஒரு கஸ்திக்குரிய காரியந்தான். ஆனால் இனிமேல் வரப்போகிற அகோர சண்டையைப்பார்த்தால் இது வெகு அற்ப காரியமென்பதற்குச் சந்தேகமில்லை" என்று சொன்னார்.

இரண்டு வருஷங்களுக்குப்பிறகு பால்கன் சண்டை வெளியாகும்பொழுது நாம் அவரிடம் சென்று, "பரிசுத்த பிதாவே! நீர் முன்சொன்ன அகோர சண்டை இதோ துவக்கிவிட்டது" என்று சொன்னோம். அதற்கு அவர், "இல்லை, இல்லை. நாம் பயப்படுகிற சண்டை இதுவல்லவே. மெய்யாகவே பெரிய சண்டை சீக்கிரம் வரும். 1914-ம் வருஷம் அந்த சண்டையில்லாமற் போகாது" என்று உறுதியாய்ச் சொன்னார்.

1914-ம் வரு ஜூன்மாதத்தில் சண்டை துவக்கயாதொரு அடையாளமும் இல்லாமலிருக்கும்போது நாம் அர்ச். பாப்பானவரிடம் போய், "பரிசுத்த பிதாவே! இதோ பாதி வருஷம் கடந்துவிட்டது. இன்னம் சண்டையின் அடையாளத்தைக் காணோம்" என்று சொன்னோம். அப்போது அர்ச். பாப்பானவர் நம்மைப் பார்த்து, "மெய்யாகவே இந்த வருஷம் முடியுமுன் பெரிய சண்டை துவக்கும்" என்று வெகு உறுதியாய்ச் சொன்னார்.

அதற்குச் சில நாளைக்குமுன் பிரான்ஸ் தேசத்தைப் பற்றி அவர், "திருச்சபையின் தலைச்சன் பிள்ளையாகிய பிரா



ன்ஸ் தேசம் ஒருக்காலும் நாசமாகாது. ஏனெனில், அந்தத் தேசம் திருச்சபைக்காகவும் அந்நியதேசங்களில் சத்தியவேத போதனைக்காகவும் செய்துவரும் நற்கிரிகைகளைப்பற்றிச் சர்வேசுரன் அதைப் பட்சமாய்க் காப்பாற்றுவாராக!" என்று சொன்னார்.

---

## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

மெய்யான கடவுள் ஏற்படுத்தின திரு வேதத்திற் சேர
ஆசிப்பாயேயாகில் முதன்முதல் நீ அறியவேண்டிய சத்திய
மாவது:—தாமாய், அநாதியாய், அரூபியாய், அளவில்லாத
சகல நன்மைச் சுரூபியாய், எங்கும் வியாபியாய், எல்லாத்துக்
கும் ஆதிகாரணராய் விளங்குகிற மெய்யான கடவுள் ஒருவரே
யன்றிப் பலரல்ல. அவ்வேக கடவுள் தமது தேவ சுபாவத்
தில் ஒருவராயிருந்தாலும் ஆள்வகையில் திரித்துவமாய், அதா
வது பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்னப்படுகிற மூவா
ளாய் இருக்கிறாரென்பது வெளிப்படுத்தப்பட்ட சத்தியமாம்.
இச்சத்தியம் நமது புத்திக்கெட்டாத பரம ரகசியம். இது
ஆதிமுதற்கொண்டு உலகத்திலே விசுவசிக்கப்பட்டு வந்தது
மன்றி, பற்பல பொய்ச் சமயங்களிலேயும் சில அபத்தங்க
ளோடு கலப்புண்டு வழங்கிவந்திருப்பதை அறிவோம். கட
வுள் பிரமா, விஷ்ணு, சிவன் என மும்மூர்த்திகளாயுள்ளவர்
என்பது தற்கால இந்துக்களுடைய சித்தாந்தம்.

திரித்துவத்தின் மூன்றாட்களுக்கும் ஒரே தேவ சுபாவம்
பொதுவாயிருக்கிறபடியால் மூவரும் ஒரே கடவுளன்றி மூன்று
கடவுளல்லர். பின்னும் மூவரும் ஒரே தேவசுபாவமுடைய
வராகையால் பிதாவுக்குள்ள தேவ இலட்சணங்கள் எல்லாம்
குறைவின்றி சுதனுக்கும், சுதனுக்குள்ள தேவ இலட்சணங்
கள் எல்லாம் குறைவின்றி இஸ்பிரீத்து சாந்துவுக்கும் உண்டு.
அன்றியும் அதே நியாயத்தினால் மூவரும் ஒருவர் ஒருவரிடத்
தில் இருக்கின்றனரேயன்றி ஒருவரையொருவர் பிரிக்கக்கூடிய
இயல்பு உடையோரல்லர்.

இப்படியே அளவில்லாத பாக்கியம் நிறைந்த கடவுள்
தமது ஆனந்தத்திலே பங்கு பெறும்படியாக ஞானமுள்ள
சிருஷ்டிகளைப் படைக்கவேண்டுமென்று தமது மட்டில்லாத
நன்மைத்தனத்தினால் திருவுளமாகி, குறிக்கப்பட்ட காலத்தில்
முதன்முதல் சம்மனசுகள் என்னப்படுகிற சரீரமில்லாத அரூபி
களை ஒன்றுமில்லாமையினின்று உண்டாக்கினார். அவர்கள்
தமது பேரின்ப பாக்கியத்தை அநுபவிப்பதற்குக் கட்டாய
மாய் நியமிக்கப்படவேண்டுமென்று அவர் சித்தமாகவில்லை.
ஆகையால் அவர் அவர்களுக்குச் சுவாதீன சித்தமென்னும்
தன்னிஷ்டத்தைக் கொடுத்து, அதனுதவியால் புண்ணியபேறு
களைச் சம்பாதித்து அப்பேறுகளின் பலனை மோட்ச பாக்கி
யத்தை அடையும்படி வைத்தருளினார். அவர்களில் சிலர்
ஆங்காரத்தினால் மோட்ச உரிமையை இழந்து நரக வேத
னைக்குள்ளாக, பெரும் பங்கானோர் தங்கள் புண்ணியத்தின்
பலனை மோட்ச பேரின்பத்தை அடைந்துகொண்டார்கள்.
நரக கதியை அடைந்த சம்மனசுகளுக்குப் பிசாசுகள் என்று
பெயர் வழங்குகின்றது.

பின்பு கடவுள் தம்மால் குறிக்கப்பட்ட காலத்தில் ஆத்து
மமும் சரீரமுமுள்ள சுரூபிகளான மனுஷரைப் படைத்து,
அவர்களுக்கும் சுயாதீன சித்தத்தைக் கொடுத்து அவர்களும்
தங்கள் புண்ணியத்தின் பலனை மோட்ச சுதந்தரத்தை அடை
யும்படி வைக்கத் திருவுளமானார். அப்படியே மனிதர் சிறிது
காலம் வசித்துப் புண்ணியபேறுகளைச் சம்பாதிக்கும் இடமாக
உலகத்தையும், அவர்களுடைய சரீர ஜீவியத்துக்கு உபயோக
மாக அவ்வுலகத்திலே தாவர ஜீவ வர்க்கங்களையும் படைத்த
பின் மனுக்குலத்தின் ஆதி பிதாவும் மாதாவுமான ஒரு மனு
ஷனையும் மனுஷியையும் உண்டாக்கி வைத்தருளினார்.

பிரிய சிநேகிதா, முன் சொல்லிய பிரகாரம் கடவுள்
தாமே வேறொன்றுமில்லாதிருக்கையில் தமது வல்லமையால்
உலகத்தையும் அதிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கியருளி
னார். இதற்கு விரோதமான கொள்கைகளையெல்லாம் தப்
பறையென்று மறுப்பாயாக!

இப்படிக்கு,

உன் உத்தம நண்பன்.

---



## God is not to be mocked.

### கடவுள் நகைக்கப்பட சகிக்கமாட்டார்.

பின்வரும் சங்கதி கல்கத்தாவில் சில வருஷங்களுக்கு
முன் சம்பவித்தது.

ஒரு நாள் காலையில் மூன்று வாலிபர்கள் ஓர் ஏரியில்
ஸ்நானம் செய்யப் போனார்கள். அம்மூவரில் ஒருவன் கத்
தோலிக் கிறீஸ்துவன். ஆனால் அவனோ வேதத்தை அசட்
டைசெய்து ஞாயிற்றுக்கிழமைகளில் பூசை காணத் தவறின
வன். அப்படியிருந்தபோதிலும் எப்போதும் அவன் தன்
கழுத்தில் கர்மேல் உத்தரீயம் தரித்துக்கொண்டிருப்பான்.
உத்தரீயம் இல்லாமல் குளத்திலாவது கிணற்றிலாவது ஸ்நா
னம் செய்யத் துணியமாட்டான். உத்தரீயம் தரித்திருக்கை
யில் நான் இறந்தாலும் நரகத்துக்குப் போகமாட்டேன் என்று
சொல்லுவான். உத்தரீயம் தரித்துக்கொண்டு ஸ்நானம் செய்ய
அந்த ஆழமான ஏரியில் இறங்கினான். அவன் இறங்கினவுடன்
மற்றவர்களைப் பார்த்து, "நம்மூவரில் இந்த ஏரியில் கரை
யோரமாய் நீந்தி சுற்றி வருகிறவனே சமர்த்தன்" என்று
சொன்னான். அப்படியே அவர்கள் சம்மதித்து, மூவரும்
நீந்தி வருகையில் கரையோரமாய் இருந்த ஒரு மரத்தின் கிளை
கள் தண்ணீரில் சாய்ந்து கிடந்தன. அவர்களில் இருவர் அம்
மரத்தின் கிளைகளுக்கு அடியில் மூழ்கி நீந்தி வந்தார்கள்.
ஆனால் அந்தக் கிறீஸ்துவன் நீந்திக்கொண்டு வரும்போது
மற்றவர்கள் தனக்கு உதவி செய்ய வரும்படியாக திடீரென
கூக்குரலிட்டான். உடனே முன்னால் நீந்திச் சென்ற இருவ
ரும் திரும்பிப் பார்த்து தங்கள் சிநேகிதனைக் காணாததைக்
கண்டு அவனை இரட்சிக்கப் பிரயாசப்பட்டார்கள். ஆனால்
முடியவில்லை. உடனே அவர்களிருவரும் ஊருக்குள் சென்று
ஜனங்களை உதவிக்குக் கூப்பிட்டு வந்து அவனைத் தேடியும்,
கடைசியில் அவனுடைய பிரேதந்தான் வெளியில் கொண்டு
வரப்பட்டது. அப்போது அவனுடைய கழுத்தில் உத்தரீயம்
இருக்கவில்லை. அவனுடைய சிநேகிதர் இருவரும் அவன்
கழுத்தில் எப்போதுமிருக்கும் உத்தரீயம் இல்லாததைக்
கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பிறகு அதை ஏரியில் அங்கு
மிங்கும் தேடிப்பார்த்தார்கள். கடைசியில் அந்த உத்தரீயம்
அவன் மரத்தின் கிளைகளுக்கடியில் நீந்திவருகையில் ஒரு கிளை
யில்மாட்டி தொங்கிக்கொண்டிருந்தது. அவன் அப்படியே
உத்தரீயம் இல்லாமல் இறந்துபோனான். தேவமாதாவின்

திரு உடைக்கு அவன் பாத்திரமற்றவனுதலால் அப்படியே உத்தரீயமில்லாமல் இறந்தான்.

இது மாதிரி குருட்டுப் பக்தியுள்ள சில கிறீஸ்துவர்கள் வெகு கவனமாய் உத்தரீயமணிந்துகொண்டிருந்தாலும், தேவ மாதாவின் புண்ணியங்களைக் கண்டுபாவித்து நடக்கப் பிரயாசப்படுகிறதில்லை. அவ்வாறே உத்தரீயம் தரித்துக்கொண்டிருப்பதினுல் சர்வேசுரன் தங்களை எவ்வித ஆபத்திலுமிருந்து காப்பாற்றுவாரென்று எண்ணி அஞ்சாமல் பாவ வழியில் நடக்கிறுர்கள்.

ஆனதுபற்றி அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல, "நீ ஏமாந்து போகாதே, சர்வேசுரன் நகைக்கப்பட சகிக்க மாட்டார்." (ஞானி.)

---

## Chronicle of Karumuthanpatty.

### கருமுத்தன்பட்டியின் சுருக்கமான சரித்திரம்.

முன் காலத்தில் கருமுத்தன்பட்டி என்கிற ஊர் வெகு விஸ்தாரமாயிருந்தது. அக்காலத்தில் அவ்வூரிலிருந்த ஒரு கோட்டையை திப்பு சுல்தான் அழித்துவிட்டான். அவ்வூரில் அக்காலத்தில் கருமுத்தன் என்னும் ஒரு இராஜா இருந்தபடியால் அவ்வூருக்கு அப்பேர் இடப்பட்டதென்று சொல்லுகிறுர்கள்.

அவ்வூரில் முன் காலத்தில் அநேக கிறீஸ்துவர்கள் இருந்தார்களாம். கி. பி. 1640-ம் வருஷமுதல் இந்நாள்வரைக்கும் அவ்வூர் அர்ச். ஜெபமாலைமாதாவின் திருயாத்திரை ஸ்தலமாக பிரசித்திபெற்றிருக்கிறது.

முந்தியிருந்த கோட்டையில் ஒரு சிறிய கோவில் கட்டப்பட்டிருந்தது. பிராமணக் கிறீஸ்துவர்களை விசாரித்துவந்த ஒரு குருவானவர் அதில் பூசை செய்வார். கோட்டையின் வெளியில் மற்ருெரு சிறிய கோவில் இருந்தது. மற்ற ஜாதிக் கிறீஸ்துவர்களை விசாரித்து வந்த வேறு குருவானவரொருவர் அதில் பூசை செய்வார். முத்திப்பேறுபெற்ற (John Britto) அருளானந்தர் அந்த ஊர் கிறீஸ்துவர்களை விசாரித்து வந்ததாக அவருடைய சரித்திரத்தில் சொல்லி இருக்கிறது.



கி. பி. 1684-ம் வருஷத்தில் மைசூர் இராஜாவின் சிப்பாய்களும், சிவாஜியின் சிப்பாய்களும் அடிக்கடி அவ்வூரை நஷ்டப் படுத்திவரும்போது அவ்வூரில் சேசுசபையைச் சேர்ந்த சங். (Revd. Fr. Pereira) பெரேரா சுவாமியாரும், சங். (Revd. Fr. Noguera.) நொகேரா சுவாமியாரும் அக்காலத்தில் கருமுத் தன்பட்டியில் விசாரணைசெய்து வந்தார்கள். ஒரு நாள் சிப் பாய்கள் சங். நொகேரா சுவாமியாரைப் பிடிக்க வந்தபோது அவ்வூர் மணியகாரன் அவர்களை எதிர்த்துத் துரத்தினுன். அதனுல் அச்சிப்பாய்கள் கோபவெறிகொண்டு அவ்வூரின் சுற்றுப்புறங்களை நாசஞ்செய்ததுமல்லாமல் புதுக்கிறீஸ்துவர் களைப் பிடித்துக் கொன்று அவர்கள் வீடுகளையும் கோவிலையும் சுட்டெரித்தார்கள். இதைக்கண்டு சங். பெரேரா சுவாமியார் சத்தியமங்கலத்திலிருந்த அதிகாரியிடத்தில் விண்ணப்பஞ் செய்து தமக்கு உதவி கேட்டார். அவ்வதிகாரி கருமுத்தன் பட்டி மணியகாரனுக்கு உதவி செய்யும்படியாக சில சிப்பாய் களை அனுப்பினுர். அந்த சிப்பாய்கள் வந்தவுடன் இருகட்சிக் கும் சண்டைதுவக்கும் சமயத்தில் கிறீஸ்துவர்கள் தங்களில் சிலரை பிரதானிகளாக நியமித்து, சத்துராதிகளிடம் பஞ்சாயம் செய்ய அனுப்பினுர்கள். அவர்கள் அப்படியே பஞ்சாயம் பேசி சமாதானம் செய்துகொண்டு திரும்பி வந்தார்கள்.

---

## Here and There.

### நாலு சங்கதி.

The War :—அர்ச். பாப்பானவராகிய 15-ம் ஆசிர்வாதப்பர் இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் சேர்ந்துள்ள இராஜாக்களுக்கு விண்ணப்பஞ்செய்து எல்லாரையும் சில நிபந்தனைகளுடன் சமாதானமாகும்படி கேட்டிருக்கிறுர். நேசக் கட்சியார் அதை அங்கீகரித்து நல்ல மனதுடன் ஆலோசனை பண்ணுவதாகப் பதில் தெரிவித்திருக்கிறுர்கள். ஆனுல் ஜெர்மானியர் முன் அநேகந்தடவை பலவிடங்களில் செய்த உடன்படிக்கைகளை வெறுந் துண்டுக் கடிதங்களென்று அசட்டைபண்ணி மீறி நடந்து வருவதால், இனிமேல் அவர்களுடன் யாதொரு உடன்படிக்கையும் செய்வது நேசக்கட்சியாருக்குச் சம்மதமில்லை.

America :—அமெரிக்காவில் 250 பிரிவினைக்காரர்கள் தங்கள் குருவுடன் சத்திய திருச்சபையில் சேர்ந்தார்கள். அவர்களெல்லோரும் திருச்சபையின் தலைவராகிய அர்ச். பாப்பானவருக்குப் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து நடப்போமென்று வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

England :—இங்கிலாந்து தேசத்திலும் சில நாட்களுக்கு முன் அநேக பதிதர்கள் சத்திய வேதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் மூவர் பிரதான பாதிரிமார்கள்.

Beer Traffic :—கடந்த செப்டெம்பர்-மீ 6-உ குன்னூர் சப் கலெக்டர், தாசில்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்ற பிரதானிகளோடு சங்கம் கூடி, குன்னூரில் இருக்கும் பீர்க்கடைகளைப்பற்றி அடியில் கண்ட ஆலோசனை செய்தார்கள். பீர்க்கடைகளைக் குறைக்கவேண்டுமென்றும், இரவில் 8 மணிக்குக் கடைகள் மூடப்படவேண்டுமென்றும், ஒவ்வொருவனுக்கும் குறிக்கப்பட்ட அளவுக்குமேல் கடைக்காரர் கொடுக்கக்கூடாதென்றும், ஜனங்கள் வெளியில் வாங்கிக்கொண்டு போகக்கூடாதென்றும் ஆலோசனை செய்தார்கள். அந்த நல்ல ஆலோசனை சீக்கிரம் தீர்மானமாகக்கடவது.

Coonoor :—கடந்த மீ 16-உ (His Excellency) புதுச்சேரி கவர்னர் குன்னூர் அர்ச். சூசையப்பர் மடத்தையும், ஐரோப்பிய பள்ளிக்கூடத்தையும் சந்தித்தார்.

Nellore :—மகா-ள-ள-ஸ்ரீ L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை நெல்லூர் ஜில்லா கலெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Karumuthanpatty : — கருமுத்தன்பட்டியில் வழக்கம்போல் அக்டோபர்-மீ முதல் ஞாயிற்றுக்கிழமையாகிய 7-உ அர்ச். ஜெபமாலை மாதாத் திருநாள் கொண்டாடப்படும்.

---

# The St. Anthony's Messenger.

## அர்ச். அந்தோனியார் தூதன்.

Vol. III. November 1917. No. 11.

புத்தகம் III.] FIDES AC ROBUR. [நம்பர் 11.

## Conversion of Heathens.

### அஞ்ஞானிகளை மனந்திருப்புதல்.

பெங்களூர் மேற்றிராணிமார்களின் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது என்னவென்றால் :

மனந்திருப்புதல் விஷயமாய்ச் சகல விசுவாசிகளும் இன்னும் அதிக பிரயாசை எடுத்துத் தங்கள் குருக்களுடன் ஒன்றித்து உழைக்கவேண்டியது அவசியம்; ஆகையால் அஞ்ஞானிகளை மனந்திருப்புதலைச் சுலபப்படுத்தக் குருக்களுடன் சேர்ந்து அதிக உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் உழைக்கவேணுமாயும், விசேஷமாய் ஜாதிபேதகத்தினிமித்தம் மனந்திருப்புதலுக்குத் தடைசெய்யாதிருக்கவும், எல்லா கத்தோலிக்கரையும் இவ்வாலோசனைச் சங்கத்தில் கூடிய மேற்றிராணிமார்கள் வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இதுவிஷயமாய் ஓர் "கத்தோலிக் மிஷனரி சங்கம்" கூட்டவேணுமாய்ப் பிரோரேபிக்கப்பட்டிருப்பதைப் பூரண அனுமதியுடன் நோக்குகிறார்கள்.

மெய்யான கடவுளை அறியாத அஞ்ஞானிகளைச் சத்திய திருச்சபையில் சேர்க்க ஆசித்துத் தக்க முயற்சிசெய்து பிரயாசப்படுகிறவன் எவனோ அவன் சத்தியவேதத்தையும் சர்வேசுரனையும் மெய்யாகவே நேசிக்கிறான் என்பது தப்பாத வாக்காகும்.

அஞ்ஞானிகளை மனந்திருப்புவது குருக்களுக்குமாத்திரம் கடமையல்ல; சாதாரண கிறீஸ்துவர்கள்முதலாய்த் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்காப்போல் அக்கடமைகு உட்பட்டிருக்கிறார்கள்.

முன் நமது பத்திரிகையில் நமது சொந்த நாடாகிய சிந்து தேசம் மனந்திரும்ப நாம் செய்யவேண்டிய விஷயங்களைப் பற்றி "உள்ளது சொல்வோன்" என்பவரால் விஸ்தரித்து விபரமாய் எழுதப்பட்டிருக்கின்றது.

மேற்றிராணிமார்களின் ஆலோசனைச் சங்கத்திற்கு சம்மந்தமாக மேலே சொல்லப்பட்ட அதே விஷயத்தில் சிலவற்றைச் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறோம்.

அஞ்ஞானிகளை மனந்திருப்புதல் விஷயமாய் விசுவாசிகள் தங்கள் கடமையின்படி குருக்களுடன் ஒன்றித்து உழைக்க வேண்டுமானால் :—

1-வது. அவர்கள் அஞ்ஞானிகள் மனந்திரும்பும்படியாகப் பத்தியோடு வேண்டிக்கொள்ளவேண்டும். அர்ச். சவேரியார் தமது போதனையால் அநேக அஞ்ஞானிகளை மனந்திருப்பினார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அதைவிட அநேக அஞ்ஞானிகளை அர்ச். தெரோசம்மாள் தனது அநுதின ஜெபத்தினால் மனந்திருப்பினதாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் கிறீஸ்துவர்களில் ஒவ்வொருவரும் அந்தச் சுகிர்த கருத்துக்காக நாள்தோறும் சொற்ப ஜெபம் செய்து வந்தால் தேவ கிருபையால் அஞ்ஞானிகள் மனந்திரும்புவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

2-வது. கிறீஸ்துவர்கள் தங்கள் வேதத்தைச் சரியாய் அநுசரித்து, நடத்தையிலும் வார்த்தையிலும் ஒழுங்கிலும் நியாயத்திலும் நேர்மைத்தனத்திலுமாகச் சகலத்திலும் அஞ்ஞானிகளுக்கு நல்ல மாதிரிகை காண்பித்து வருவார்களானால் அவர்கள் மெய்யான வேதத்தை அறிந்து அதில் சேர ஆசைப்படுவார்கள். ஏனென்றால் சேசுநாதர் சுவாமி சொன்னதுபோல், "விசுவாசிகள் உலகத்தின் தீபங்களைப்போல் இருக்கக் கடவார்கள்." ஆனால் பரிதாபம்! அதற்கு விரோதமாய் எத்தனையோ கிறீஸ்துவர்கள் துர்மார்க்கராய் நடந்து வேதத்துக்கு அவமானம் வருவித்துத் தங்கள் துர்மாதிரிகையினால் அஞ்ஞானிகள் நமது சத்திய வேதத்தைத் தூஷணிக்கும்படி செய்கிறார்கள்.

3-வது. "விசுவாசம் செவியினால் இருதயத்தில் பிறக்கும்" என்று அர்ச். சின்னப்பர் சொல்லுமாப்போல் சமயத்துக்குச் சமயம் அஞ்ஞானிகளுக்குத் தக்கபடி நற்புத்தி சொல்லி வேதத்தைப் போதிக்கவேண்டும். அதற்காக சந்நியாசி உடுப்பு அணிந்துகொண்டு பைபிளைக் கையில் வைத்து ஊர் சுற்றிவர அவசரமில்லை. வேலை செய்யும்போதும், வழியில் செல்லும்போதும், வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும் இவை முதலிய சாதாரண சமயங்களில் சத்தியவேதத்தைப் போதிக்கலாம். பின்னும் அதற்காக சந்தைக்கடையில் பெரிய கூட்டங்கூடி பிரசங்கம் செய்யத் தேவையில்லை. சமயத்துக்குத் தக்காப்போல் இங்குமங்கும் அவனவனுக்கு வேதத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொன்னால் போதும், அது வீணாய்ப் போகாது. "ஒருவன் விதைத்ததை வேறொருவன் அறுப்பான்."



4-வது. உபதேசிமார்கள் வேதத்தைச் சரியாய்ப் படித்து அதின்பேரில் பத்தி பற்றுதலாய் இருக்கவேண்டியது. அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாய் அறிந்து நுணுநுணுக்கமாய் அநுசரித்து வந்தால் அவர்களாலே அநேக அஞ்ஞானிகள் சேசுநாதசுவாமியுடைய மந்தையில் சேருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அதற்காக ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சேர்ந்துள்ள உபதேசிமார்கள் வருஷா வருஷம் ஒன்றாய்க்கூடி ஞான ஒடுக்கம் செய்துவந்தால் மெத்த நலமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இப்படிச் செய்து வருவதால் அவர்கள் இருதயத்தில் பத்தி பற்றுதல் அதிகமதிகமாய் உண்டாகுமல்லாமலும், தங்கள் மேலான உத்தியோகத்தைப் பெரிதாக எண்ணி, தங்கள் கடமைகளை அறிந்து அவைகளைச் சரியாய் அநுசரிக்க அவர்களுக்குப் புது தைரியமுண்டாகும்.

மேலே சொல்லப்பட்ட வழிபாடுகள் அஞ்ஞானிகளை மனந்திருப்புவதற்குக் குருக்களுக்கு மெத்தவும் ஒத்தாசையாயிருக்கும். ஆதலால் கிறீஸ்துவர்கள் அவ்விதமே குருக்களுடன் உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உழைக்கக் கடவார்கள். அதனால் சர்வேசுரனுக்கு அதிக ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

சத்திய நேசன்.

---

## Duties of Parents towards their Children.

*(Continued.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

பிள்ளைகளைப் பெற்றவர்களே! உண்மையாக நீங்கள் உங்கள் மக்களை நேசிப்பீர்களானால், அவர்கள் ஆத்துமங்களை இரட்சியுங்கள். முத்தி நெறியில் அவர்களை நடந்துவரச்செய்யுங்கள். அப்போதுதான் நீங்கள் இகத்திலும் பரத்திலும் பாக்கியசாலிகளாய் இருப்பீர்கள். இந்த உலகத்தில் உங்கள் மக்களால் உங்களுக்கு வரவேண்டிய பாக்கியம் என்ன? அன்

னையும் பிதாவும் தற்போதும் தங்கள் தள்ளாத பிராயத்திலும் மக்கள் தங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று ஆசிக்கிறார்கள்? சர்வேசுரனுக்குப் பிற்பாடு அவர்கள் தங்களைச் சிநேகித்து, கனம்பண்ணி, பயந்து, கீழ்ப்படிந்து, இன்பத்திலும் துன்பத்திலும், சகலத்திலும், தங்களுக்கு ஊன்றுகோலாய் நின்று உதவி செய்து, இவ்விதமாகத் தங்களுக்கு ஆறுதலும் சந்தோஷமுமாய் இருக்கவேண்டுமென்பதே. இதுதான் மக்களுடைய கடமை. இதுதான் இகத்தில் பெற்றோர் அடையக்கூடிய பாக்கியம்.

தாய் தந்தையரே! "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்றாற்போல, சிறுபோது தெய்வபத்தியோடு வளராத பிள்ளை ஆளுக்கு ஆளான பிறகு உங்களை வணங்கிப் பேணி வருமென்று நீங்கள் கனவிலும் கருதவேண்டாம். தெய்வ பயமும் தெய்வ பக்தியுமே "தந்தை தாய்ப் பேண்" என்னும் சான்றோர் வாக்கை மெய்ப்பிக்கும். தெய்வ பக்தியுள்ள பிள்ளைதான் பெற்றோர்மட்டில் வணக்கத்துடனும் மரியாதையுடனும் நடந்து அவர்களை ஆதரித்துவரும். காரணம் சர்வேசுரனைச் சிநேகிக்கிற பிள்ளை அவருடைய சித்தத்தையும் கற்பனையையும் மீறி நடவாது. "பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்னும் கற்பனையைச் சிரமேற்கொண்டு நடக்கும். தெய்வபயமற்ற தறுதலைகள் மாத்திரம் பெற்றோரை அவமதித்து எதிர்த்து, பிடிவாதமாய்க் கீழ்ப்படியாமல் நடந்து வருகின்றன. சர்வேசுரன்மட்டில் பிரமாணிக்கம் தவறி நடக்கிறவன் மனுஷர்மட்டிலும் அப்படியே நடக்கிறான். தன்னைப் படைத்த கர்த்தனைத் தொழாத மூடன் பெற்ற தாய் தந்தையரைப் பேணுவானோ? தேவ கற்பனைக்கு அஞ்சாத பாவிப் பயல் மனுஷர்கட்டளைக்கு அடங்குவானோ? சர்வேசுரனுக்குத் துரோகம் செய்ய அஞ்சாத பாவி தாய் தந்தையரை அடித்து, அவமதித்து, வீட்டைவிட்டுத் துரத்தி, கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கவைப்பது ஆச்சரியமல்ல.

தாய் தந்தையரே! தள்ளாத பிராயத்தில் பிள்ளைகள் உங்களை ஆதரிக்கவேண்டுமோ? அதுவும் உங்கள் கையில்தான் இருக்கிறது. அவர்கள் உங்கள் ஆதரிப்பில் இருக்கும் சிறுபோதே தெய்வ பயத்தை அவர்களுக்கு ஊட்டுங்கள். எவ்வளவுக்குத் தெய்வ பக்தியில் வளருவார்களோ அவ்வளவுக்கு அவர்கள் தங்கள் மாதா பிதாக்களை அன்பாய் ஆதரித்து வருவார்கள்.

(யதார்த்தவாதி.)

---



## A Treasure.

## ஒரு பொக்கிஷம்.

ஒருநாள் ஒரு வாலிபன் ஒரு குருவானவரிடத்தில் போய், தான் கொஞ்ச நாளைக்குள் கலியாணம் செய்யப்போவதாகத் தெரிவித்தான்.

குருவானவர் அவனை நோக்கி, "நீ கட்டப்போகிற பெண்ணின் விசேஷ நற்குணங்கள் எவை?" என்று கேட்டார்.

அதற்கு வாலிபன், "அவள் அழகுள்ளவளாயிருக்கிறாள்" என்றான். அப்போது குருவானவர் ஒரு துண்டு காகிதத்தை யெடுத்து அதில் (0) பூச்சியம் ஒன்று பெரிதாக எழுதி வைத்தார்.

குருவானவர், "சரி, பிறகு என்ன?" என்றார்.

வாலிபன் "அவள் நல்ல குடும்பத்தில் பிறந்தவள்" என்றான்.

குருவானவர் "சரி" என்று சொல்லி இரண்டாவதாக ஒரு பூச்சியம் பக்கத்தில் எழுதிக்கொண்டார். ஆக 00.

வாலிபன், "அவளுடைய தாய் தகப்பன் பெரிய ஆஸ்திக்காரர்" என்றான்.

குருவானவர், "சரி" என்று சொல்லி இன்னொரு பூச்சியம் போட்டார். ஆக 000.

வாலிபன் "அவள் கல்வியறிவுடையவள்" என்றான்.

குருவானவர், "சரி" என்று பின்னும் பல பூச்சியங்கள் சேர்த்து எழுதினார். ஆக 000000000.

பிறகு வாலிபன், "அவள் மிகுந்த பத்தியுள்ளவள். பத்தி விசுவாசத்தோடு அடிக்கடி திவ்விய நன்மை வாங்குகிறாள்" என்றான்.

குருவானவர், "அதுதான் சரி" என்று சொல்லி, முன் போட்ட பல பூச்சியங்களுக்கு முன்னால் 1 என்னும் இலக்கத்தை எழுதினார். ஆக 1000000000.

பின்னும் குருவானவர் வாலிபனை நோக்கி, "இதோ பார்! தம்பி! உனக்கு நூறு கோடி விலையுள்ள பெரிய பொக்கிஷம் கிடைத்தது" என்று சொல்லி அனுப்பினார். (ஞானி)

## Letter to a Friend.
### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

மனுமக்கள் சகலரும் ஒரே ஆதி பிதா மாதாவினிடத்தி
னின்று பிறந்து பலுகி வருகின்றாராகிறார்கள். ஆனால் இப்
போது உலகத்திலே காணப்படுகிற குல, வருண, ஜாதி பேதங்
கள் வரலானது எப்படியென்று நீ ஆட்சேபிப்பாயாக்கும். முன்
ஓரிடத்திலிருந்த மனுக்குலத்தார் பலுகி வெவ்வேறு தேசங்க
ளிற்போய்க் குடியேறியபின் அவரவர் குடியேறிய தேசத்தின்
சீதோஷ்ண வித்தியாசத்தினாலும் நடத்திய தொழில் வித்தி
யாசத்தினாலும் உலக ஆசார பேதகங்களினாலுமே குலபேதம்,
வருணபேதம், ஜாதிபேதம் என்பவை உலகத்திலே ஏற்பட
லாயின. ஆனால் இப்படிப்பட்ட வித்தியாசங்கள் அவரவர்
தேவ கற்பனைப்படி நடந்து மோட்ச கதியை அடைந்துகொள்
வதற்குத் தடையல்லவென்று நீ அறியவேண்டியது.

கடவுள் ஆதிமனிதனைப் படைத்தபோது அவனுக்கு "இஷ்
டப்பிரசாதம்" என்னும் ஓர் பரம வரத்தை அளித்து அதைக்
கொண்டிருப்போர் மோட்சபாக்கியத்துக்கு உரிமைக்காரராக
வும், அதைப் போக்கடிப்போர் நரக நெருப்புக்குப் பாத்திர
வான்களாகவும் இருக்க ஆக்கியாபித்தார். கடவுள் மனிதனை
எவ்விதத்திலும் குறைவு உள்ளவனாய் இருக்கவிடாமல், புத்தி,
சாமர்த்தியம் முதலான ஆத்தும சம்பந்தமான வரங்களையும்,
சாகாமை முதலிய சரீரத்தையடுத்த வரங்களையும் கொடுத்து,
கண்ணைக் கவரத்தக்க சுகந்த புஷ்பச் செடி, கொடிகள், நற்
சுவை பொருந்திய கனி மரங்கள் நிறைந்த சிங்காரத் தோப்
பில் வைத்துச் சொன்னதாவது: "உன்னை ஓர் பெருஞ் சந்த
திக்குத் தலைவனாக்கினோம். நம்முடைய கற்பனைகளுக்கு நீ
அடங்கி நடந்தால், உனக்கும் உன் சந்ததியாருக்கும் இவ்வுல
கில் இன்பசுகபாக்கியமும் பரகதியில் நம்மை முகமுகமாய்த்
தரிசிக்கும் பேரின்பமும் கொடுக்கப்படும்" என்று வாக்களித்
தார். மேலும் மனிதன் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டி
யவன் என்பதற்கு அடையாளமாக அத்தோப்பிலுள்ள கனி
மரங்களுள் ஓர் மரத்தின் கனியைப் புசியாதிருக்கும்படி கட்
டளையும் கொடுத்தார்.

ஆங்காரத்தினால் மோட்சத்தை இழந்துபோன பசாசு
கள், ஆதி பிதா மாதா சுவாமியுடைய கட்டளையை அநுசரித்
தால் தாங்கள் இழந்துபோன மோட்ச பேரின்ப பாக்கியத்தை



அடைந்துகொள்வார்களேயென்று காய்மகாரங்கொண்டு அவர்
களைக் கடவுளுக்குத் துரோகிகள் ஆக்கிவிட ஓர் உபாயம்
தேடின. ஓர் பசாசு சர்ப்ப வேஷம் தரித்து ஆதி மனுஷிக்கு
நயவசனம் பேசி விலக்கப்பட்ட கனியை அவள் புசிக்கப்
பண்ணிவிட, அவள் தான் புசித்தபின் தன் கணவனுக்கும்
கொடுத்தனள். அக்கனியை உண்பது தேவ கட்டளைக்கு
விரோதமென்று நன்றாய் அறிந்திருந்தும், தன் ஸ்திரீயைப்
பிரியப்படுத்தும்பொருட்டு அதை வாங்கிப் புசித்தான். தன்
கீழ்ப்படியாமையால் அளவில்லாத நன்மைத்தனமுள்ள கட
வுளுக்கு விரோதமாய்ப் பெருந் துரோகத்தைக் கட்டிக்கொண்
டான். மனுக்குல முழுதுக்கும் தலைவனாகிய தனக்கும், தன்
சந்ததியாருக்கும் கிடைக்கவிருந்த மோட்ச பாக்கியத்தை
வேண்டாமென்றவன்போல நடந்துகொண்டபடியால் தன் சந்
ததியாருக்கு விரோதமாகவும் பெரும் பாதகத்தைச் செய்தவ
னாயினான்.

நீதிபரரான சர்வேசுரன் அவனைச் சிங்காரத் தோப்பி
னின்று துரத்திவிட்டதுமன்றி அவனுக்கும் அவன் சந்தத
யாருக்குமாகக் கொடுததிருந்த பரம வரங்களையும் அவனி
டத்தினின்று எடுத்துவிட்டார். குடும்பத் தலைவன் இழந்த
தைக் குடும்பத்தாரனைவரும் இழந்துபோவதுபோல, ஆதி
மனுஷன் இஷ்டப்பிரசாதத்தை இழந்துவிடவே சகல மனி
தரும் மோட்ச சுதந்தரத்தை இழந்து சாபத்தின் மக்களானார்
கள். இச்சாபத்தோடேயே பிள்ளைகள் பிறக்கிறார்கள். இது
தான் ஜென்மப்பாவம்.

பிரிய சிநேகிதா! ஆதிமனிதன் பாவத்தால் நாம் பாக்கி
யத்தை இழந்து நரக நெருப்புக்கு ஆளானபோதிலும் அப்பாக்
கியத்தை அடைய சர்வேசுரன் சில வழிபாடுகளை ஏற்படுத்தி
யிருக்கிறார். அவைகளை நீ கைக்கொண்டால் உன் இரணம்
ஆற்றப்பட்டு, நீ குணமடைந்து இரட்சிக்கப்படுவாய்.

இப்படிக்கு,

**உன் உத்தம நண்பன்.**

---

## Persecution of Thippu.
### திப்புசாய்பு செய்த வேதகலாபனை.

1784-ம் வருஷத்தில் திப்புசாய்பு வேதகலாபனை எழுப்பி
கிறீஸ்துவர்களை உபத்திரியப்படுத்த ஆரம்பித்தான். அதற்
காக அவன் தன் மனதிலுள்ள கருத்தை மறைத்து பின்வரும்

உபாயத்தைப் பிரயோகிக்க எண்ணினான். சீரங்கப்பட்டணத்துக்குச் சமீபத்திலுள்ள கிரங்கூர் என்னும் ஊரிலுள்ள கிறீஸ்துவர்களின் கோவிலை அழிக்கவேண்டுமென்று விரும்பி, பொதுப்பணத்திலிருந்து ஒரு தொகையைக் கோவில் பூமிக்குள் இரகசியமாய்ப் புதைத்து வைக்கச்செய்தான். பொதுப் பொக்கிஷத்திலிருந்து திருட்டுப்போனதாக பிரசித்தப்படுத்தி, மாந்திரிகரை வரவழைத்து அவர்களுக்கு தன் கருத்தை இரகசியமாய் வெளிப்படுத்தி, அந்தப்பணத்தைத் தேடக் கட்டளையிட்டான். அவர்கள் அங்கும் இங்கும் போய்த் தேடிப்பார்த்து அகப்படாமையால் கடைசியாய்க் கோவில் அடியில் தேடிப்பார்க்க அது அகப்பட்டது. குருவானவரும் கிறீஸ்துவர்களும் அந்தப் பணத்தைத் திருடினதாகக் குற்றஞ்சாட்டி, குருவானவரை ஊரிலிருந்து துரத்திவிட்டான். ஆயினும் கோவிலை அழிக்கத் துணியவில்லை. ஏனென்றால் அந்தக் கோவிலைச்சேர்ந்த கிறீஸ்துவ சிப்பாய்கள் இந்த சங்கதி அறிந்து கோவிலுக்குள் கூடியிருந்தார்கள். அவர்களுடைய தலைவன் சூரப்பன் என்னும் மிக்கேல் மிக்க தைரியமுள்ளவனாக இருந்தான். திப்பு சுல்த்தான் மிக்கேலை வரவழைத்து அவனும் அவனோடு சேர்ந்துள்ள கிறீஸ்துவ சிப்பாய்களும் மஹமதிய மதத்தைக் கைக்கொள்ளவேணுமென்று கட்டளை கொடுத்தான்: அதற்கு மிக்கேல் என்பவன் சுல்த்தானைப் பார்த்து, "நீர் கொடுத்த கட்டளைப்படி செய்ய மூன்றுநாள் கெடு கொடும், யோசித்துச் சொல்லுகிறேன்" என்றான். மறுநாள் கிரங்கூர் கோவிலில் கிறீஸ்துவ சிப்பாய்களையும் அவர்கள் பெண்சாதி பிள்ளைகளையும் வரவழைத்து, மிக்கேல் அவர்களைப் பார்த்து, "நீங்கள் உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். நானோ கிறீஸ்துவனாகவே இருப்பேன். பூலோகத்தில் இந்த திப்பு சுல்த்தானைப்போல் எத்தனை பேர் வந்தபோதிலும் என் மரணபரியந்தம் கிறீஸ்துவனாகவே இருப்பேன்" என்று சொன்னான். அதைக்கேட்டு எல்லோரும் ஒரேமனதாகவிருந்து சத்தியவேதத்தில் பிரமாணிக்கமாய் இருப்போமென்று சத்தியம் செய்தார்கள். இரண்டாம் நாள் சிப்பாய்களைமாத்திரம் கூப்பிட்டு தங்கள் ஆயுதங்களுடன் வரும்படியாக மிக்கேல் சொன்னான். எல்லாரும் ஒன்றுசேர்ந்தபிறகு இராஜாவுக்கு ஒரு கடிதம் அனுப்பி தாங்கள் இராஜ கட்டளைக்குக் காத்திருப்பதாகவும், மூன்றாம்நாள் தங்களை அவர் வந்து பார்க்கும்படியாகவும், அப்போது தீர்மானத்தைச் சொல்லுவதாகவும், மிக்கேல் சொல்லியனுப்பினான். திப்பு சுல்த்தான் ஆச்சரியப்பட்டு, அவர்கள் தங்கள் வேதத்



தையும் கோவிலையும் காப்பாற்றச் சாகுமட்டும் யுத்தம் செய்வார்கள் என்று அறிந்து, ஒன்றும் பேசாமல் தன் மனதிலுள்ள கருத்தை நிறைவேற்றக் கூடாமல் போனான்.

---

## Indebtedness of Children to their aged Parents.

### பிள்ளைகள் தங்கள் விருத்தாப்பிய பெற்றோருக்குச் செய்யும் நன்றி

தங்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாகத் தங்களை வளர்த்து வந்த பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்யவேண்டியது என்னவெனில், அவர்களுடைய விருத்தாப்பிய காலத்தில் அவர்களுக்கு அன்னவஸ்திரம் குறைவின்றிக் கொடுத்து, அவர்கள் சாகும் தருணத்தில் தேவதிரவிய அநுமானங்களைச் சரிவரப் பெற்று நற்பதவி அடையும்படி செய்வது பிள்ளைகள்மேல் சுமந்த கடன். இதற்குமாறாய்ச் சிலர் "பாலை உண்டு விஷத்தைக் கக்கும் பாம்பு" போல பெற்றோர்க்கே பெருங் கெடுதிகளைச் செய்கிறார்கள். தாய்ப்பால் மறந்த சில காலத்திலேயே சில பிள்ளைகள் தாய் செய்த நன்றியை மறந்து தீங்கிழைக்கப் பின்வாங்குவதில்லை. சிலர் கலியாண காலம்வரையில் அமரிக்கையாய் இருந்து அக்காரியம் முடிந்ததும் பெற்றோர் செய்த நன்றியெல்லாம் மறந்துவிட்டு, மனைவியையே தாயும் தகப்பனுமாக எண்ணிக்கொண்டு தம் பெற்றோரை இரண்டாம்படியில் வைக்கின்றனர்.

ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுடைய ஒரே குமாரன் சிறுபத்திலேயே தன் தாயை இழந்துபோனான். அவன் தகப்பன் கஷ்டப்பட்டு அவனை வளர்த்துக் கலியாணமும் செய்வித்து, தன்னிடமிருந்த ஆஸ்திகளையெல்லாம் தன் மகனிடம் ஒப்புவித்துச் சொல்வான். "மகனே, இதுகாறும் உனக்கு அன்னவஸ்திரம் கொடுத்து அன்புடன் உன்னை வளர்த்து வந்தேன். இனி நீயும் உன் மனைவியும் எனக்கு வேண்டிய சவரட்சணை செய்து என்னை நற்பதவி சேர்ப்பிக்கவேண்டும்" என்று வேண்டினான்.

பொறுப்பெல்லாம் தன் வசமாகவே, பிள்ளை மிகவும் சந்தோஷப்பட்டுத் தன் தகப்பனைக் கடவுள்போல் பாவித்துத் தலைமைஸ்தானத்தில் வைத்து அறுசுவைப் போஜனம் ஊட்டி வந்தான். இப்படிச் சிலகாலம் நடந்து, "வர வர மாமி கழுதைபோலாவாள்." என்பதுபோல் அக்குமாரன் தன் மனைவியுடைய போதனைக்குட்பட்டுத் தன் தகப்பனைத் தலைமை

ஸ்தானத்தில் வைத்து உணவூட்டுவதை விடுத்து, மத்திம ஸ்தானத்தில் வைத்துக் கொஞ்சம் கவனக் குறைவாய்ப் போஷித்துவர ஆரம்பித்தான் அவ்வாறும் சிலநாள் சென்ற பிறகு, "பழுத்த கிழவனுக்கு மரியாதை ஸ்தானமும் வேண்டுமோ? பிணம்போல் இருக்கும் இக்கிழவனுக்குத் தெண்டத் தீனிபோட்டு ஏன் பளுவை யேற்றிவைக்கவேண்டும்?" என்று கடைசி ஸ்தானத்தில்வைத்து, இன்னும் அதிக குறைவாய் அன்னமிட்டு வந்தான். இப்படியும் சிலநாள் சென்றபின், தகப்பனை வேலைக்காரரோடு வைத்து உண்பித்து வந்தான். பிறகு அவ்வந்தஸ்திலும் அத்தகப்பனை வைக்க மனம் சகிக்காமல் தன் வேலைக்காரனைக்கொண்டு அக்கிழவனுக்கு ஏதாகிலும் கஞ்சி ஊற்றுங்களென்று இழிவாய்க் கூறுவான். வயது சென்ற தந்தை குளிரால் வருந்தி நடுங்கிக் கொண்டிருக்கும்பொழுது கோணியையே போர்வையாகக் கொடுப்பான். இதையெல்லாம் பார்த்த கிழவன் நான் தவமிருந்துபெற்ற அருமைக்கும், பட்ட சிரமத்துக்கும், அடைந்த செலவுக்கும், கொண்ட களிப்புக்கும் கைம்மாறு இப்படியாயிற்றேயென்று எண்ணியெண்ணி, துன்பம் சகிக்க முடியாமல் மனவருத்தத்தால் கடைசி தேவதிரவிய அநுமானங்களை முதலாய்ப் பெறக்கூடாமல் திடீரென்று மரித்தான். மரித்ததும், அவன் குமாரனுக்குப் பிறந்திருந்த ஒன்பது வயதுள்ள சிறுவன் தன் தகப்பனிடம் ஓடி, "ஐயா! பாட்டனாருக்கு நீங்கள் கொடுத்திருந்த போர்வையைப் பத்திரமாய் வைத்திருக்க என்னிடம் கொடுத்துவிடவேண்டும்," என்று கேட்டான். அதைக்கேட்ட பிதா, "அது என்னத்திற்காக உனக்கு வேண்டியது?" என்று கேட்க, மகன், "பிதாவே! பாட்டனார் போர்த்தியிருந்த கோணிப் போர்வையை தாங்கள் கிழவனாகும்போது தங்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு அது வேண்டியிருக்கிறது" என, பிதா தன் அறிவீனமான செய்கைக்காக வெட்கப்பட்டுத் துக்கித்தான். தன் தகப்பனுக்குச் செய்த தீமை தனக்கும் செய்யப்படுமென்று உணர்ந்தான்.

இதை வாசிக்கும் பிள்ளைகளே! நீங்கள் உங்கள் விருத்தாப்பிய பெற்றோருக்கு மேற்சொன்ன சரித்திரத்தின் பிரகாரம் நடத்தாமல் அவர்களுடைய அந்தியகாலத்தில் உங்களால் கூடியமட்டும் அவர்களைக் காப்பாற்றி வருவதுமல்லாமல், முக்கியமாய் அவர்கள் கடைசித் தேவதிரவிய அநுமானங்களைப் பெறும்படி செய்து அவர்களை நற்பதவி சேர்ப்பிப்பது உங்கள் மேல் சுமந்த கடமை.



நல்ல பிள்ளைகளுக்கு மோட்ச பாக்கியத்தை மாத்திரமல்ல; இவ்வுலகத்திலும்கூட சர்வேசுரன் அவர்களுக்கு நல்வாழ்வைத் தருவதாய் வாக்குக்கொடுத்திருக்கிறார். துஷ்டப் பிள்ளைகளுக்கு நரகாக்கினை மாத்திரமல்ல; இவ்வுலகத்திலே முதலாய் நிர்ப்பாக்கியமும் நிந்தையும் அவர்களுக்கு நேரிடுமென்று அவர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

---

## Catholic Bajanays and their Irregularities.
## கத்தோலிக்கருடைய பஜனைகளும், அவைகளின் ஒழுங்கீனங்களும்.

நம்முடைய இந்தியா தேசத்தில் அநேக இடங்களில் கத்தோலிக்கருடைய பஜனைகள் நடந்தேறி வருவது மிகவும் புகழத்தக்கதே. ஆனால் அவைகளில் சில சீர்கெட்ட அந்தஸ்திலிருந்தால் அது மிகவும் விசனிக்கத்தக்கதே. நம்முடைய மேற்றிராசனத்துக்கு உட்பட்ட அநேக பங்குகளில் நடைபெறும் சில பஜனைகளைப்பற்றிப் பேசப் புகுந்தால், ஐயோ எவ்வளவு கேவலம்! பஜனையென்று ஏற்பட்டபொழுது அதை முழுவதிலும் கடவுளுக்குப் பிரியப்பட நடப்பிக்க வேண்டுமே தவிர, அப்படிக்கின்றி வீண் பெருமைக்காகவும், பாடலில் தேர்ந்த வித்வானென்று பேரெடுக்கவேண்டுமென்னும் கருத்தோடும் நடத்தப்படாது.

எல்லா பஜனைகளிலும் பஜனை முக்கியஸ்தர் யாதொரு பஜனைப்பிள்ளை பஜனைக்குச் சரியாய் வருகிறதில்லையோ அல்லது மற்ற எந்தப்பிள்ளையாவது பஜனையின் சட்டத்தை மீறி நடக்கிறதோவென்று கவனித்து அப்பேர்ப்பட்டவர்களைத் தண்டிப்பார்கள். ஆனால் பஜனைப்பிள்ளைகள் எல்லோரும் கோவிலுக்கு ஒழுங்காய் வருகிறார்களா என்றாவது அடிக்கடி தேவ நன்மை வாங்குகிறார்களா என்றாவது ஒருக்காலும் கவனியார்கள். இப்படி இந்தப் பஜனையின் முக்கியஸ்தர்கள் இவ்விஷயங்களைக் கவனியாமலிருப்பதற்கு ஓர் ஒரு முக்கிய காரணமுண்டு. அஃதென்னவென்றால், இந்த முக்கியஸ்தர்களிலேயே அநேகர் விசுவாசமற்ற கிறீஸ்துவர்களாயிருக்கிறார்கள். இந்த முக்கியஸ்தர்களில் சோம்பலினால் ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குப் போகாதவர்கள் எத்தனை பேர்! வருஷத்திற்கு ஒருவிசையென்கிலும் தேவநன்மை உட்கொள்ள வேதகட்டளை யிருந்தும் அதை மீறும் உத்தமர்கள் எத்தனையோ பேர்!

அப்பபடியும் சிலர் கோவிலுக்கு வந்தாலும் பூசைக்குப்
பிறகு குருவானவர் பிரசங்கம் துடங்கினவுடன் மிகவும் படித்த
ஞானிகளைப்போல் குருவானவருடைய பிரசங்கத்தை அலட்
சியம் செய்து கோவிலிலிருந்து ஓட்டம் பிடிப்பவர் எத்தனை
பேர்! மதுபானம் அருந்திப் பஜனைக்கூடத்தில் பிரவேசிக்
கப்படாதென்று பொதுப்பட சட்டமிருந்தும், அச்சட்டத்தை
மீறி, பூராவாய் சாராயங்குடித்துப் பக்தர்களைப்போல் பஜ
னைக்கு ஆஜராகும் பெருந்தலைகள் எத்தனைபேர்! ஞாயிற்றுக்
கிழமைகளில் மாலையில் நடக்கும் திவ்விய நற்கருணை ஆசீர்
வாதத்திற்குப் போகப் போதுமான நேரமிருந்தும் சீட்டாட்
டத்திலும் சாராயக்கடைகளிலும் காலம் கழிப்பவர் எத்தனை
யோ பேர்! பஜனை முக்கியஸ்தர்களே இவ்வளவு உத்தமர்
களாயிருந்தால் அவர்களால் நடைபெறும் பஜனைகளும் அவர்
களைப் பின்தொடரும் பஜனைப் பிள்ளைகளும் எவ்வளவு நல்ல
வர்களாயிருப்பார்களென்று இதை வாசிப்போரே யூகித்துக்
கொள்ளலாம்.

சில இடங்களில் பஜனைகள் சனிக்கிழமைகளில் நடந்தேறி
வருவது வழக்கம். இது எவ்விதத்திலும் பொருந்தாததாய்
இருக்கிறது. பஜனைப்பிள்ளைகளில் அநேகர் துரை வீடுகளில்
வேலை செய்பவர்களாய் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.
இவர்கள் பஜனைக்கு ஆஜராகி இராமுழுவதும் கண்விழித்து
பிறகு கொஞ்சநேரமட்டுமே நித்திரைசெய்து விடியுமுன்னமே
சிலர் உத்தியோகத்துக்குப் போகவேண்டியவர்களாயிருக்கிறார்
கள். இதோ அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை தேவனுடைய
நாள். கோவில் மணியும் காலை பூசைக்கு வரும்படி ஆவலாய்
கிறீஸ்துவனை அழைக்கின்றது. இந்தக் கிறீஸ்துவன் இரா
முழுவதும் கண்விழித்த கஷ்டத்தால் கோவிலுக்குப் போகும்
நேரத்தைத் தூக்கத்தில் கழித்து வேலைக்குப் போகிறான்.
இது எப்பேர்ப்பட்ட பாதகம். சனிக்கிழமைகளில் பஜனை
நடத்திவருவோரே, நீங்கள் கூடுமாகில் மற்றநாட்களில் பஜனை
யை நியமியுங்கள். அப்படிக்கு முடியாவிடில் பஜனையைச் சீக்
கிரத்தில் துவக்கி சீக்கிரத்தில் முடியுங்கள். உங்களுடைய
பஜனைப்பிள்ளைகள் பஜனைக்கு வரத் தப்பிப்போவார்களேயா
கில் அது அவ்வளவு பெரிய காரியமல்ல. ஆனால் அவர்கள்
பூசைக்குத்தப்பிப்போக இடங்கொடுக்காதேயுங்கள். அவர்கள்
பஜனைக்கு ஆஜராகி சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதைப்
பார்க்கிலும, பஜனைக்கு வராமல் அதற்குத் தப்பித்தால் சுவா
மிக்கு எவ்வளவோ பிரியமாயிருக்கும. (இன்னும் வரும்)

---

கத்தோலிக்கன்.


# The St. Anthony's Messenger.

# அர்ச். அந்தோனியார் தூதன்.

**Vol. III.** **December 1917.** **No. 12.**

புத்தகம் **III.**] FIDES AC ROBUR. [நம்பர் **12.**


## Loyalty to the King.

## இராஜ பக்தி.

பெங்களூர் ஆலோசனைச் சங்கத்தில் கூடின மேற்றிராணி
மார்கள் கத்தோலிக்கரை எச்சரிக்கிறதாவது :—

"கத்தோலிக்கர் வீணான பொய் வைராக்கியத்தினால்
ஏமாந்து போகாதபடிக்கு, அவர்கள் தங்கள் பரிசுத்த வேதம்
போதிப்பதுபோல், தேசத்தை ஆண்டுவரும் இராஜ துரைத்
தனத்தாருக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாய் இருந்து வரவும்,
கத்தோலிக் திருச்சபைக்கு நல்ல பிள்ளைகளாகக் கீழ்ப்படிந்து
நடந்துவரவும் வேண்டும்." என்று முன் எச்சரிக்கை செய்கி
றார்கள்.

ஜனங்கள் தங்கள் இராஜாவுக்குச் சங்கை, கீழ்ப்படிதல்,
பிரமாணிக்கமுள்ள ஊழியம் இவை முதலிய கடமைகளைச்
செலுத்தவேண்டுமென்று திருச்சபைக் கற்பிக்கின்றது. அதி
காரமெல்லாம் சர்வேசுரனாலே கொடுக்கப்பட்டிருப்பதாலும்,
ஜனங்களுடைய பொது நன்மைக்காக இராஜசட்டம் ஏற்படுத்
தப்பட்டிருப்பதாலும் பாவமில்லாத காரியங்களில் அதிகாரிக
ளுக்குக் கீழ்ப்படியவேண்டியது. அது விஷயத்தில் அர்ச்.
சின்னப்பர் சொல்லுகிறதாவது : எந்த மனுஷனும் அதிகாரிக
ளுக்குப் பணிந்து நடக்கக்கடவான். ஏனெனில் சர்வேசுர
னாலே உண்டாயிராத அதிகாரமில்லை. ஆகையால் உண்டா
யிருக்கிற அதிகாரங்கள் சர்வேசுரனாலே ஏற்படுத்தப்பட்
டிருக்கின்றன. அப்படியிருக்க, அவ்வித அதிகாரத்தை எதிர்

த்து நிற்கிறவன் சர்வேசுரன் ஸ்தாபித்ததையே எதிர்த்து நிற்கிறான். (உரோமர். 13-ம் அதிகாரம்.)

அர்ச். இராயப்பர் சொல்வதைக் கேளுங்கள்: சர்வேசுரனைப்பற்றிச் சகல மனுஷ சிருஷ்டிக்கும் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில், இராஜாவோவென்றால் எல்லா மனிதரிலும் மேன்மைப்பட்டதினாலே அவருக்கும், அதிகாரிகளோவென்றால் துஷ்டர்களைத் தண்டிப்பதற்கும், நல்லவர்களைப் புகழ்வதற்கும், இராஜாவினால் அனுப்பப்பட்டவர்களாய் இருப்பதினால் அவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடங்கள். (அர்ச். இராயப்பர் 1-ம் நிருபம் 2-ம் அதி. 13-ம் வச.) இராஜாவுக்குச் சங்கை செய்யுங்கள். (அர்ச். இராயப்பர் 1-ம் நிருபம். 2-ம் அதி. 17-ம் வச.)

நல்ல அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல, துஷ்ட அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கக் கடனுண்டென்று அர்ச். இராயப்பர் வேறொரு இடத்தில் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவில் சில காலமாகச் சிலர் "ஹோம் ரூல்" (Home Rule) என்னும் சுய அரசாட்சி வேண்டுமென்று கண்மூடித்தனமாய் ஓடி, ஆடிக் கூவுகிறார்கள். சுய அரசாட்சி எவ்வளவு நல்லதாய் இருந்தபோதிலும் அதற்குக் காலமும், விதமும், வழியும் வேண்டுமல்லவோ? ஆனால் இவ்விந்தியாவில் ஜாதியும், மதமும், பாஷையும் பலவாறாயிருப்பதினால் அதற்குச் சுய அரசாட்சியும் ஒற்றுமையும் ஏற்படுத்துவது மிகக் கஷ்டமான காரியம். அப்படியிருப்பதால், சுய அரசாட்சி சுயபட்சத்திற்கு, அதாவது, தன்னயம் பாராட்டுவதற்கு இடமாகும். பிறகு பொது நன்மைக்கு விரோதமாகும். அப்போது சில ஜாதியார் கவுரவத்தையும், செல்வத்தையும் தேடத் தங்களையே உயர்த்திக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்த எண்ணுவார்கள்.

அப்படியிருக்க, சமுத்திரத்தில் ஒருதுளிபோல் இருக்கும் இந்திய கத்தோலிக்கர் அப்போது என்ன செய்வார்கள்? தங்கள் சுதந்தரங்களை எப்படிக் காப்பாற்றுவார்கள்? தங்களுக்கு விரோதமாக ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டால் அவர்கள் அதை எப்படித் தடுக்கமுடியும்? "அக்கரை இக்கரைக்குப் பச்சை, இக்கரை அக்கரைக்குப் பச்சை" என்பதைப்போல், சிலர் தாம் தாம் அடைந்திருக்கும் நன்மைகளின்மேல் வெறுப்புக்கொண்டு இல்லாத காரியங்களின்மேல் ஆசை வைத்துக் கனவில் கண்ட திரவியங்களை விரும்புகிறார்கள். ஒரு



கதையில் சொல்லப்பட்டிருப்பதைப்போல், நாய் தனக்குக் கிடைத்த எலும்பை விட்டுவிட்டு ஆற்று வெள்ளத்தில் தோன்றிய தன் நிழலைப் பிடித்ததுபோலாகும். ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு ஜாமான் எடுக்கும் கூலிக்காரன் தனக்குக் கொடுக்கும்படி யேற்பட்ட போதுமான கூலி 4 அணாவாயிருந்தும், அதைத் தவிர்த்து ஒரு பிரபு ஒரு ரூபாய் கொடுத்த போதிலும் திருப்தியடையாமல், "எனக்கு இது போதாது, இன்னம் ஏதாவது கொடுங்கள்" என்று கேட்பதுபோல், அநேகர் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை அறியாமல் அதிக ஆசைப்படுகிறார்கள். பிரிட்டிஷ் கவர்ன்மென்டார் பொது நன்மைக்காக இத்தேசத்தை ஆளுகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் கவர்ன்மென்டார் இன்னமும் பொது நன்மையையே நாடி ஆளுகை நடத்தினாலும் ஜனங்கள் திருப்தியடையாமல் அது போதாதென்பார்கள்.

சுய அரசாட்சியினாலே இந்திய கத்தோலிக்கருக்கு நஷ்டம் வருமேயொழிய அதனால் நன்மையொன்றும் உண்டாகாது. ஆகையால், பிரிட்டிஷ் கவர்ன்மென்ட்தான் இந்தியா தேசத்தாருக்கு அவசியமாய் வேண்டியதென்று சொன்னால், விசேஷித்தவிதமாய் இந்திய கத்தோலிக் கிறீஸ்துவர்களுக்கு அதுதான் நன்மையும் ஆதரவுமாயிருக்கும். ஆதலால் கத்தோலிக் சகோதரரே! நீங்கள் அதிக ஆசைப்பட்டு ஏமாந்து போகவேண்டாம். தேசத்தை ஆண்டுவரும் துரைத்தனத்தாருக்கு இராஜபக்தியுள்ளவர்களாக நீங்கள் இருக்கக்கடவீர்கள்.

(சத்திய நேசன்.)

---

## The Benefit of Daily Mass.

## தினந்தோறும் பூசை காண்பதினால் வரும் பிரயோசனம்.

அர்ச். இசிதோர் என்பவர் இஸ்பானியாதேசத்தில் ஒரு ஆஸ்திக்காரனிடத்தில் உழவுவேலை செய்துகொண்டு வந்தார். அவர் நாள்தோறும் கஷ்டமான வேலைசெய்து வந்த போதிலும் நாள் தவறாமல் பூசை காண்பார். மற்ற வேலைக்காரர் அவர் பேரில் காய்மகாரம்கொண்டு, தினம் அவர் பூசைக்குப் போவதினால் வேலையின்பேரில் அசட்டைத்தனமாயிருக்கிறானென்று எஜமானனிடத்தில் கோள் சொன்னார்கள். எஜமான் அதைக் கேள்விப்பட்டு இசிதோர் என்பவனைக் கண்டித்தான். அதற்கு அர்ச். இசிதோர், "ஐயா! நான் உமது

வேலைக்காரனென்று எனக்குத் தெரியும். ஆயினும் உம்மைவிட மேலான எஜமான் ஒருவர் இருக்கிறார். அவர் சர்வேசுரன்தான். அவருக்கும் நான் ஊழியம் செய்யவேண்டியது என் கடமை. ஆதலால் என் வேலைவிஷயத்தில் ஏதாவது குறை இருந்தால் அதற்குத் தக்கதுபோல் நீர் என் சம்பளத்தைக் குறைத்துக் கொடுக்கலாம்" என்று சொன்னார். அந்த எஜமான் அதைக்கேட்டுக் கோபத்தை அடக்கிக்கொண்டு பேசாமலிருந்தான். ஆனால், அவர் வேலைக்குப்போகும் நேரத்தையும், அவர் செய்யும் வேலையையும் தன் கண்ணால் பார்க்கவேண்டுமென்று அவ்வெஜமானன் ஒரு நாள் அதிகாலையில் தோட்டத்திற்குள்போய் தன்னை ஒளித்துக்கொண்டிருந்தான் அச்சமயத்தில் அர்ச். இசிதோரும், அவருக்கு உதவியாக அவரோடு அழகான இரண்டு வாலிபர்களும் இரண்டு வெள்ளை மாடுகளைக்கொண்டு உழவுவேலை செய்வதைக் கண்டான். இதனால் ஆச்சரியப்பட்டு அவன் உடனே இசிதோரைக் கூப்பிட்டு, "உனக்கு உதவிசெய்கிற வாலிபர் இருவர் யார்?" என்று கேட்டான். அதற்கு அர்ச். இசிதோர், "நான் ஒருவரையும் பார்க்கவில்லை. ஆனால், நாள்தோறும் பூசைநேரத்தில் சர்வேசுரன் ஒருவரிடத்தில்மட்டும் எனக்கு உதவிகொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று மறுமொழி சொன்னார். பிறகு எஜமான் அந்த இரண்டு வாலிபரும் சர்வேசுரனாலே அனுப்பப்பட்ட இரண்டு சம்மனசுகளென்று அறிந்து சந்தோஷப்பட்டு, அன்றுமுதல் அந்தப் பக்தியுள்ள ஊழியருக்கு நாள்தோறும் பூசைக்குப்போக யாதொரு தடையும் செய்யவில்லை.

இதினால் நாள்தோறும் பூசை காண்பதினால் வரும் பிரயோசனம் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

(ஞானி.)

---

## Duties of Parents towards their Children. *(Contd.)*

## பிள்ளைகள்மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள்.

(தொடர்ச்சி.)

தாய் தந்தையரே! பிள்ளைகள்மட்டில் உங்களுக்கு உள்ள கடமைகளைப் பொதுவாகச் சொன்னபிறகு, அவர்களைத் தக்கபடி வளர்ப்பதற்கும், மெய்யான கிறீஸ்துவர்களாக்குவதற்கும் வழிபாடுகளைச் சொல்லிக் காட்டுகிறேன். பிள்ளைகளை



வளர்ப்பதற்குப் பெற்றோருக்கு இருக்கவேண்டிய குணங்கள் என்ன? பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு என்றும் நற்படிப்பினையையே கற்றுக்கொடுக்கத்தக்க வாக்கு வல்லவர்களாகவும், அவர்களுடைய நடத்தையையும் கிரிகைகளையும் கவனிக்கக் கண்ணும் கருத்துமுள்ளவர்களாகவும், அடிப்பது ஒரு கை, அணைப்பது ஒரு கை என்றபடி, அவர்கள் தப்பிதம் செய்தபோது அவர்களைக் கிரமப்படி தண்டிக்கத் தைரியமுள்ளவர்களாகவும், தர்ம நடத்தையைக் காட்டத்தக்க புண்ணியவாளர்களாகவும் இருக்கவேண்டும்.

முந்த முந்த, தாய்தந்தையர் நற்படிப்பினையைக் கற்பிக்கத்தக்க வாக்குவல்லவர்களாக இருப்பது அவசியம். ஜென்மப்பாவதோஷத்தால் அறியாமையென்னும் கேடு நம்மெல்லோரையும் பின்தொடர்ந்து வருகின்றது. சிறுப்பம் துவக்கி இந்த அறியாமை நீங்க அநேக வருஷங்கள் செல்லும். பாருங்கள் குழந்தைகளுக்கு நிற்கவும், நடக்கவும், உண்ணவும், உடுக்கவும் பழக்குகிறீர்களல்லவா? பின்னும் வயது முதிர முதிரப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் கற்றுக்கொடுக்கிறீர்களல்லவா? பாஷைகளைப் படிக்கவும், கணிதங்களை அறியவும் கற்றுக்கொடுக்கவேண்டும். அதேமாதிரி பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்யவும் கற்றுக்கொடுக்கவேண்டும். தாய் தந்தையரே! உங்கள் பிள்ளைகளுடைய சரீரமல்ல, ஆத்துமமே பெரிது. உலக ஞானமல்ல, சொர்க்க ஞானமே பெரிது. உங்கள் பிள்ளைகள் முத்திநெறியில் ஒழுகுவதே அவசியமான காரியம். மற்றவையெல்லாம் வீண். ஆகையால் நீங்கள் முத்தி நெறியைக் கற்பிக்காவிட்டால், பிள்ளைகள் இதை அறிவது எப்படி? தாய் தந்தையராகிய நீங்கள் இந்த அறிவைப் புகட்டாவிட்டால், வேறே யார் அதைக் கவனிக்கக் கூடும்.

அறியாமையென்கிற கேடும், ஆசாபாசமென்கிற மாய்கையும் பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் செய்ய சிறுபோது உங்களுக்குத் தடையாயிருக்கவில்லையா? இப்போது உங்கள் பிள்ளைகளுக்கும் இந்தக் கேட்டை நீக்கத்தக்க வழிபாடுகளைக் கற்பிப்பது உங்கள் கடமை.

வேதாகமங்களில் சர்வேசுரன் தாய் தந்தையரைப் பார்த்துச் சொல்வதைக் கேளுங்கள்: "ஆதலால் நான் உங்களுக்கு இன்று கற்பிக்கிற கட்டளைகளுக்கு நீங்கள் பணிந்தவர்களாய், உங்கள் தேவனாகிய கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமத்தோடும் நேசித்து," "நீங்கள்

வீட்டில் இருக்கையிலும், வழியில் நடக்கையிலும், படுக்கையிலும், எழும்புகையிலும் அவற்றைத் தியானிக்கச்சொல்லி உங்கள் குமாரர்களுக்கு உபதேசியுங்கள்" என்றும், "உங்களுக்குக் குமாரத்திகள் உண்டோ? அவர்களுக்குக் கற்பித்துக்கொடுத்து இளமையிலேயே அவர்களைப் பழக்குங்கள்" என்றும் சொல்லியிருக்கிறதை நீங்கள் யோசித்துப்பாருங்கள்.

(இன்னம் வரும்.)

எதார்த்தவாதி.

---

## What the Pope has done for the war.

### யுத்த விஷயத்தில் அர்ச். பாப்பானவர் செய்த உபகாரம்.

1-வது. கோவில்களைத் தகர்ப்பதும், குழந்தைகளையும் விருத்தாப்பியரையும் கொல்வதும், அநியாயமான உபாயங்களைப் பிரயோகிப்பதுமாகிய இவை முதலிய கொடிய அக்கிரமங்களைச் செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார்.

2-வது. சண்டையில் காயம்பட்டுக் கைதிகளாய்ப் பிடிபட்டிருக்கும் வீரர்களில் அநேகர் ஒவ்வொரு இராஜாங்கத்தாரிடம் உத்தரவு பெற்று தங்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பி வரும்படி செய்திருக்கிறார்.

3-வது. சண்டையினால் நஷ்டமடைந்த பெல்ஜியம், போலண்டு, அர்மீனியா முதலிய தேசங்களுக்குத் தம்மால் கூடிய பண உதவி செய்திருக்கிறார்.

4-வது. அர்மீனியாவிலுள்ள ஜனங்களுக்குத் துருக்கியர் செய்துவந்த குரூர உபத்திரவங்கள் நீங்கும்படி செய்திருக்கிறார்.

5-வது. ஜெர்மானியர் பெல்ஜியம் தேசத்தில் செய்திருந்த ஒப்பந்தத்தை மீறி அநியாயமாய்ப் பிரவேசித்தது குற்றமென்று கூறினார்.

6-வது. ஜெர்மானியர் தங்கள் வசத்தில் பிடித்துள்ள ஊர்களிலிருக்கும் ஜனங்களுக்கு வேண்டிய சாப்பாடு முதலிய சம்ரட்சணை கிடைக்க வேண்டிய ஏற்பாடு செய்துவருகிறார்.

7-வது. இப்போது நடக்கும் இக்கொடிய யுத்தம் சீக்கிரத்தில் முடிவடையும்படியாகத் தம்மாலானமட்டும் பிரயாசைப்பட்டு, ஒவ்வொரு கட்சியாரும் சமாதானத்திற்கு வரும்படி நிருபம் எழுதிக் கேட்டிருக்கிறார்.

---



## Letter to a Friend.

### சிநேகிதனுக்கு எழுதிய கடிதம்.

பிரிய சிநேகிதா!

ஆதி மனிதனுடைய தேவதுரோகமே இப்போது மனு மக்கள் எத்தனையோ பாடுகளைப் படுவதற்கும், குறைக்ளை அநுபவிப்பதற்கும் காரணமாம். ஆத்துமத்துக்கு அரு ளப்பட்டிருந்த இஷ்டப்பிரசாதம் எடுபடவே ஞான வெளிச் சம் மங்கலாகி அஞ்ஞான அந்தகாரம் தலைப்பட்டது. சரீர ஆசாபாசங்கள் ஆத்துமத்துக்கு அடங்காமல் எழுந்து மனி தரைப் பாவ இச்சையுள்ளோர் ஆக்கிவிட்டன. சாகாமல் பர கதியை அடையவிருந்த மனுக்குலத்தார் சாவுக்கும் சகலவித நோய் சஞ்சலங்களுக்கும் உள்ளானார்கள்.

ஆதி மனிதன் பாவத்தினால் தன்னையும் தன் சந்ததியார் அனைவரையும் கெடுததுக்கொண்டபோதிலும், அளவில்லாத தயையுள்ள கடவுள் தம்மால் படைக்கப்பட்ட மனிதர் அனை வரையும் நரகில் தள்ளத் திருச்சித்தம் ஒவ்வாதவராய் அவர் களுக்கு இரங்கி, நீதிப்பிரகாரம் அவர்களுக்கு வரவேண்டிய தண்டனையை நீக்கவும், விரும்புவோருக்காவது மோட்ச சுதந் தரத்தை மறுபடியும் கொடுக்கவும் ஓர் திவ்விய மருந்தைத் தந்தருளினார். கேட்டை அநுபவிப்பதற்கல்ல, பாக்கியத் தைச் சுகிப்பதற்காகவே கடவுள் மனிதனை உண்டாக்கியருளி னாரென்பது இதினால் துலாம்பரமாயிற்று. இன்னும் ஒன்று மில்லாதிருக்கையில் மனிதனை உண்டாக்கி அவனுக்கு மோட்ச பாக்கியம் கொடுக்கச் சித்தமானதினாலே கடவுளுடைய நன் மைத்தனம் எவ்வளவாக விளங்கிற்றோ, அவ்வளவாகவும் அதற்குமேலதிகமாகவும் தன் சுய குற்றத்தினால் கெட்டுப் போன மனிதனைக் கைதூக்கி இரட்சிக்கச் சித்தமானதினால் அவருடைய தயாளம் விளங்குவதாயிற்று.

கெட்டுப்போன மனுக்குலத்தைக் கைதூக்கி ஈடேற்றக் கடவுள் ஏற்படுத்தியருளிய திவ்விய வழியேதென்றால் மனு மக்களுடைய பாவப் பழியைச் சுமந்து, அவர்களுக்காக உத் தரித்துப் பரிகாரம் செய்வதற்குத் தேவ பிதா தம்முடைய ஏக சுதனாகிய கடவுளை மனுஷ அவதாரம் செய்ய அனுப்பின தேயாம். இப்படி அனுப்புவோமென்பதாகக் கடவுள் ஆதி யிலேயே வாக்குக் கொடுத்தருளினார். "மனுக்குலத்துக்காக

உத்தரிக்கும்படி கடவுள் மனுஷாவதாரம் செய்யவேண்டிய
தேன்? மனுஷர் தாங்களே தங்கள் பாவங்களுக்காக உத்
தரிக்க முடியாதோ?" என்பாயாக்கும். இது கூடாத காரி
யம். ஏனெனில் யாதொரு குற்றத்தைச் செய்தவனுடைய
நீசத்தனத்துக்கும், அத்துரோகம் யாருக்குச் செய்யப்பட்
டதோ அவருடைய மகிமைக்கும் அளவாக அத்துரோகத்
தின் கனமிருக்கும். குடியானவன் தன்னோடொத்த குடி
யானவனுக்கு ஒரு சிறு குற்றம் செய்தால் அது சிறு துரோ
கமேயாகும். ஆனால் அச்சிறு துரோகத்தைத் தன் இராஜா
வுக்குச் செய்தாலோ அது மகா துரோகமாகும். அப்படியே
அற்பப் புழுவுக்குச் சமானமான மனிதர் அளவில்லாத மகி
மைப் பிரதாபம் பொருந்திய பரலோக பூலோக இராஜாவான
கடவுளுக்குச் செய்த துரோகம் அளவில்லாததாகும். அவ்
வளவில்லாத துரோகப் பழியை அளவுள்ள மனிதர் தீர்க்கக்
கூடுமோ? கூடாதே! பூமியிலிருந்தவர்களும், இருக்கிறவர்
களும், இருக்கப் போகிறவர்களுமான சகல மனிதர்களும்
தங்கள் ஜீவியகாலமெல்லாம் கொடிய பாடுபட்டு அருந் தவங்
களை முடித்தாலும், அது அந்தத் துரோகத்துக்குப் பரிகார
மாகாது. தேவ நீதிக்கு உத்தரிப்புமாகாது. நரகத் தீர்ப்பு
போவதுமில்லை. ஆனால் தேவ சுதன் மனுக்குலத்துக்காக
மனிதனாய்ப் பிறந்து வந்து, தம்முடைய பாடுகளின் அளவில்
லாத பலனால் அவர்களுடைய பாவத்துக்கு வேண்டியதும்
அதிகமானதுமான பரிகாரம்பண்ணும்போது, அதினால் பிதா
வுக்கு மகிமையும் மனுக்குலத்துக்கு ஈடேற்றமும் உண்டாகத்
தப்பமாட்டாது. ஆகையினால் தேவ நீதிக்கு உத்தரிப்பாக
வும், மனித ஈடேற்றத்துக்கு வழியாகவும் சுதனாகிய கடவுள் உல
கத்தில் மனித சுபாவம் எடுத்து வருவாரென்று வாக்குத்தத்
தம் செய்யப்படலாயிற்று.

பிரிய சிநேகிதா! கடவுளுடைய தேவத்துவத்துக்குப்
பொருந்தாத நீச மிருக அவதாரங்களையும், துஷ்ட மனித
அவதாரங்களையும் கற்பித்து, மனதைப் புண்படச் செய்யும்
அசுசியான கதைகளையெல்லாம் தப்பறைகளாக எண்ணி
அவைகளை மறுக்கக்கடவாய்.

இப்படிக்கு,

**உன் உத்தம நண்பன்.**

---



## Chronicle a wise woman.

### விவேகமுள்ள ஒரு ஸ்திரீயின் சரித்திரம்.

முன்காலத்தில் மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த (Rev.
Fr. Bareille.) சங். பாரேல் சுவாமியார் பின் வரும் சங்கதியை
எழுதி வைத்திருக்கிறார்.

ஒரு அஞ்ஞானப் பெண்பிள்ளை கடின வியாதியாயிருந்
தாள். அவள் என்னென்னவோ மருந்து சாப்பிட்டும் அவளு
க்குச் சௌக்கியமாகவில்லை.

ஒருநாள் வெகு நேரம் பேசாமலிருந்து பிறகு தன் புருஷ
னைக் கூப்பிட்டு, "நான் ஞானஸ்நானம்பெற்றுக் கிறீஸ்துவளாக
ஆசையாயிருக்கிறேன்" என்று சொன்னாள். அவள் புருஷன்
மிகவும் ஆச்சரியப்பட்டு, "இது உனக்கென்ன பயித்தியமா?"
என்று கேட்டான். அப்போதவள், "நான் ஞானஸ்நானம்
பெற்றால் எனக்குச் சௌக்கியமாகுமென்று நம்புகிறேன்.
பிறகு நீங்களும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் எனக்கு
வெகு சந்தோஷமுண்டாகும். ஆதலால் நான் கிறீஸ்துவளா
கும்படி எப்படியாவது நீங்கள் உத்தரவுகொடுக்கவேண்டும்"
என்று சொன்னாள். புருஷன் தன் பெண்சாதியை அவளு
டைய மரண சமயத்தில் மன வருத்தப்படுத்தக் கூடாதென்
றெண்ணி, அவள் இஷ்டப்படியே ஞானஸ்நானம் பெறலாமென
உத்தரவு கொடுத்தான். அவள் சொல்லியபடி புருஷன் ஒரு
கத்தோலிக்க உபதேசியாரைக் கூட்டிவந்து வேத சத்தியங்களைக்
கற்றுக்கொடுத்த பிறகு குருவானவர் வந்து அவளுக்கு ஞானஸ்
நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்ற சில நாளைக்குள்
அற்புதமாய் அவள் நல்ல சவுக்கியமடைந்து, தன் வீட்டு
வேலைகளைச் செய்துகொண்டு வந்தாள். தன் புருஷனுக்குத்
தன்பேரிலும், தன் வேதத்தின்பேரிலும் பிரியமுண்டாகும்
படி அவள் வீட்டு வேலை விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையா
யிருந்து, வீடு வாசல்களையும் பிள்ளைகளுடைய துணிமணிகளை
யும் சுத்தமாகவும் சீராகவும் வைத்துக்கொண்டதுமன்றிச்
சாப்பாட்டு விஷயத்தில் கல், மண் இல்லாதபடி ருசிகரமாகச்
சமைத்துக்கொண்டும், மற்றும் பலவேலைகளை ஒழுங்காகச்
செய்துகொண்டும், புருஷன் கட்டளைக்கு மதுர குணத்தோடு
கீழ்ப்படிந்துகொண்டும் வந்தாள். அவள் தான் ஞானஸ்நானம்
பெறுமுன் நடந்து வந்த நிலைமைக்கும், ஞானஸ்நானம் பெற்ற
பின் நடந்துவரும் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தைக்

கவனித்து, தன் புருஷனை ஞானஸ்நானம் பெறச் செய்யவேண்டு
மென்பதே அவள் கருத்து. இப்படி நடந்துவரும் நாளில் ஒரு
நாள் அவள் தன் புருஷனைநோக்கி: "ஒரே வீட்டில் இரண்டு
வேதம் இருப்பதும், புருஷன் பெண்சாதி வெவ்வேறு சுவாமி
யைக் கும்பிடுவதும் சரியல்லவே! இவ்வுலகத்தில் உத்தம
சமாதானமாய் வாழ்ந்து மரணத்திற்குப் பிறகு என்றென்றை
க்கும் பிரிந்திருப்போமானல் அது எவ்வளவோ பரிதாபம்!
ஆகையால் நீங்களும் சத்திய வேதத்தில் சேர்ந்து, ஞானஸ்
நானம் பெற்று உத்தம கிறீஸ்துவராய் நடந்து வந்தீர்களானல்,
நாமிருவரும் இவ்வுலகத்தில் ஆறுதலையும், மறு உலகத்தில்
நித்திய பாக்கியத்தையும் அனுபவிப்போம்" என்றுள். அவ்
வாறே அவள் புருஷன் மனந்திரும்பிச் சில நாளைக்குப் பிறகு
வேத சத்தியங்களை நன்ருய்க் கற்றறிந்து அவனும் அவனது
நாலு பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றுர்கள்.

---

## Catholic Bajanays and their Irregularities.
## கத்தோலிக்கருடைய பஜனைகளும், அவைகளின் ஒழுங்கீனங்களும்.

(தொடர்ச்சி.)

பஜனைக் கூடங்களில் வாரத்துக் கொருமுறை ஒவ்வொரு
பஜனைப்பிள்ளைக்குப் பஜனை உபயம் நியமிப்பது வழக்கம்.
அப்படிக் குறிக்கப்பட்ட பிள்ளை பஜனை உபயம் செய்வதைப்
பார்த்தாலோ, ஐயோ! அது எவ்வளவு வெட்டிச் செலவு.
கடன்பட்டாவது 5 அல்லது 6 ரூபாய்க்குக் குறையாமல்
செலவு செய்கிறுன். கஷ்டஜீவனம் செய்யும் ஒரு பஜனைப்
பிள்ளைக்குப் பஜனை உபயம் குறிக்கப்பட்டால் பரிதாபம்! அப்
பிள்ளை கடன்பட்டாவது தன் உபயத்தைச் சிறப்பிக்கத்தேடு
கிறுன். இது எப்போப்பட்ட மதியீனம்! தனது சொந்த
ஊரில் பஜனைக் கூடத்தைப்பார்க்கிலும் முக்கியமானது ஒன்று
உண்டே! அது அவனுடைய சொந்தக் கோவில் அல்லவா?
அந்தக் கோவில் எவ்வித அந்தஸ்தில் இருக்கிறதென்று இந்தப்
பஜனைப்பிள்ளை கவனித்தால் எவ்வளவோ நலமாயிருக்கும்!
பங்குக் குருவானவர் கோவில் பேர்கொண்ட திருநாளிலோ
அல்லது மற்ற விசேஷித்த காலங்களிலோ தா்ம தண்டல்
சேர்க்கிறுர். எந்தப் பஜனைப் பிள்ளையாவது முன் வந்து கோ
விலுக்கு உதவி செய்வதுண்டா? ஒருபோதுமில்லை. கோ
விலுக்கு உதவி செய்ய அவர்களுக்கு மனதில்லை. அப்படியும்



சிலர் உதவி செய்தாலும் எத்தனை சலிப்பு! குருமாரும், கோ
வில் பிள்ளைகளும் கேட்கும் வரிசை எத்தனை! வீண் பேச்சு
கள் எவ்வளவு! கிறீஸ்துவ பஜனையோரே! முதல் முதல் உங்
கள் கோவில்களையும், குருமாரையும் கவனியுங்கள். பிற்பாடு
உங்கள் பஜனையைக் கவனிக்கலாம்.

கிறீஸ்துவர்களுடைய பஜனைகளில் முதலில் ஜெபம்
செய்து, பிற்பாடு பஜனை தொடங்குவது மெத்தவும் நல்ல ஏற்
பாடுதான். பஜனையில் பாடல்கள் பாடும்பொழுது அவைகளை
ஜெபமாகப் பாவித்து நடத்துவதே ஒழுங்கு. அப்படியிருக்
கப் பஜனைகளில் அநேகமாய் அர்த்தம் விளங்காத பாடல்
களால் கடவுளைத் துதிப்பது பயித்தியனுடைய செயலுக்கு
ஒப்பாகும். ஆகையினுல் பஜனைப் பாடல்கள் யாவராலும்
எளிதில் அர்த்தம் கண்டுபிடிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும்.
பாடல் ஆக்குவோர்களும், தாங்கள் மிகவும் படிப்பில் தேர்ந்த
வித்துவான்களென்று மனிதர்களால் புகழப்படவேண்டி வீண்
கருத்துடன் யாதொரு பாடலைச் செய்யாமல் எளிதில் அர்த்
தம் விளங்கும்படியான பாடல்களைச் செய்யவேண்டியது.
இவ்வித பாடலை யாவரும் அர்த்தம் கண்டுபிடித்துப்பாடும்பொ
ழுது, பாடுவோரையும், பாடலை அமைத்துத் தந்த ஆக்கியோ
னையும் கடவுள் ஆசீர்வதிப்பார். அநேக பஜனையோர் கிறீஸ்
துவ வித்துவான்கள் இருந்தும் அவர்களைக் கேட்காமல், இந்து,
புரோட்டெஸ்டாண்ட் முதலிய வித்துவான்களைக்கொண்டு
பாடல் செய்வித்துக்கொள்வது ஒழுங்கல்ல. ஏனென்றுல்
கிறீஸ்துவேதத்தைப்பற்றியும், தேவமாதாவைப்பற்றியும்,
மற்ற அர்ச்சியசிஷ்டவர்களைப்பற்றியும் அவர்களுக்கு என்ன
தெரியும்! இவர்கள் அநேக தடவைகளில் வேதத்தில் கண்டி
ராத வர்த்தமானங்களைத் தங்கள் மனதுக்கிசைந்தவாறு பொய்
யாய்ப் புனைந்து, பாடல் அமைத்துத் தருகிறுர்கள். அப்பாடல்
கள் புறமதஸ்தர்கள் கையில் அகப்படுமானல், ஐயோ! நமது
சத்திய வேதத்தை நிந்திப்பவர் எவ்வளவு பேர்! கிறீஸ்துவ
புலவர்களே! நீங்களும் யாதொரு அர்ச்சியசிஷ்டவர்பேரில்
பாடல் இயற்றுமுன்னே, அந்த அர்ச்சியசிஷ்டவரின் சரித்திர
த்தை நன்ருய் வாசியுங்கள். பஜனைப்பாடல்களில் அநேகம்
இந்து நாடகங்களிலும், டிராமாக்களிலும் வழங்கும் சிற்றின்ப
இராகங்களால் பாடுவது கிறீஸ்துவர்களின் பஜனைக்கு ஒழுங்
கல்ல. இவ்வித சிற்றின்ப இராகங்களால் இயற்றப்பட்ட
பாடல்களால் தேவதாயையும், அர்ச்சியசிஷ்டவர்களையும்
புகழ்ந்து கொண்டாடுவதைப்பார்க்கிலும் கிறீஸ்துவ குருக்

162003



களாலும், வித்துவான்களாலும் இயற்றப்பட்டுள்ள பக்தியுள்ள பாடல்களின் இராகங்களைக்கொண்டு, பாடல் செய்து பாடுவது எவ்வளவோ உத்தமம்.

அநேக பஜனைகளில் பஜனை தொடங்கி முடியுமட்டும் வெறும் பாடல்களையே பாடுவது ஒழுங்காய்க் காணப்படவில்லை. பஜனை மத்தியில் ஞான வாசகங்கள் அடங்கிய புஸ்தகங்களிலிருந்து சிற்சில பாகங்களை வாசித்தால் இதைவிடப் பாக்கியமுள்ள பஜனை வேறொன்றும் இராது. இதுதான் நல்ல பஜனையின் ஒழுங்கு. சில பஜனையோர் குருவானவருடைய உத்தரவின்றி தாங்கள் நினைத்த நேரத்தில் சுரூபம், படம், கொடிமுதலியவைகளைக்கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றுப் பிரகாரம் போவார்கள். இது ஒழுங்கீனம். இப்பேர்ப்பட்ட சம்பவங்களில் பஜனை முக்கியஸ்தர்கள் பூராவாய் சாராயம் குடித்துவிட்டு ஒழுங்கீனமாய் ஆடிப்பாடி சண்டைசெய்து நம்முடைய பரிசுத்த வேதத்தை மற்றவர் கேலிசெய்வதற்கு ஏது வாக்குகிறார்கள். இதின் விஷயமாய்க் கிறீஸ்துவ பஜனையோர் தகுதியான கவனம் செலுத்துதல் மேலானது.

பின்வரும் ஒழுங்குகளை ஒவ்வொரு பஜனையோரும் அநுசரித்தல் மெத்த அவசியமாயிருக்கும்.

1. ஒவ்வொரு பஜனையும் பங்குக் குருவின் அனுமதி பெற்றிருப்பதும் தவிர, பஜனையின் சட்டங்களும் அவரால் அங்கீகரிக்கப்பட்டனவாயிருக்கவேண்டும்.

2. கோவிலுக்கு ஒழுங்கற்ற மெம்பர்களைப் பஜனைப் பிள்ளைகளாகச் சேர்ப்பது ஒழுங்கல்ல. முன்னமே சேர்ந்திருக்கும் ஒழுங்குள்ள பிள்ளைகளையுங்கூட அவர்களுடைய நடத்தை கோவில் விஷயத்தில் எப்பேர்ப்பட்டதென்று கவனித்து வருதல் ஒழுங்கு.

3. குருவானவரைமீறி டிராமா, நாடகம் முதலியவை நடத்துவது ஒழுங்கல்ல.

4. பஜனை முக்கியஸ்தர்கள் எல்லாவிதத்திலும் பஜனைப் பிள்ளைகளுக்கு நன்மாதிரிகை காண்பிக்கவேண்டியது.

5. மிடாக் குடியர்களையும், கோவிலுக்கு ஒழுங்கற்றவர்களையும் பஜனைக்காரியதரிசி, சட்டாம்பிள்ளை, உபாத்தியென்று தெரிந்துகொள்வது ஒழுங்கல்ல.

6. சில சமயங்களில் பஜனை ஒழுங்கற்றதாயிருக்கையில் குருமார் அதைப்பற்றிக் கண்டித்தால் அவர்களை எதிர்த்துப்